# பிஷப் கால்டுவெல்ன் பன்முகப் பணிகள்

கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை வெளியீடு
தென்னிந்தியத் திருச்சபை - சென்னைப் பேராயம்
226. கதீட்ரல் சாலை, சென்னை - 600 086.

# பிஷப் கால்டுவெல்லின் பன்முகப் பணிகள்

பதிப்பாசிரியர்கள்
பேராசிரியர் முனைவர். ப.ச.ஏசுதாசன்
முனைவர். ஏ.ஜான்சன் தங்கையா

கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை
226, கதீட்ரல் சாலை, சென்னைப் பேராயம்
சென்னை – 600 086.

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பிஷப் கால்டுவெல்லின் பன்முகப் பணிகள் |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர். ப.ச. ஏசுதாசன்<br>முனைவர். ஏ.ஜான்சன் தங்கையா |
| உரிமை | : | கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை<br>சென்னைப் பேராயம் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு 2014 |
| பொருள் | : | சமுதாயம் – வரலாறு |
| தாள் | : | மேப்லித்தோ |
| நூல் அளவு | : | டெம்மி |
| எழுத்து | : | 10.5 புள்ளிகள் |
| பக்கம் | : | 150 |
| விலை | : | ரூ.100 |
| படிகள் | : | 1200 |
| கணினி அச்சு | : | வித்யா, ப்ளசிங் கம்ப்யூட்டர்ஸ், அரக்கோணம். |
| முகப்பு வரைவு | : | வித்யா, ப்ளசிங் கம்ப்யூட்டர்ஸ், அரக்கோணம். |
| அச்சாக்கம் | : | கவிக்குயில் பிரிண்டர்ஸ்<br>திருவல்லிக்கேனி, சென்னை.<br>சென்னை– 600 005 |
| முகவரி | : | கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை<br>சென்னைப் பேராயம்<br>226 கதீட்ரல் சாலை<br>சென்னை – 600 086. |

**CHURCH OF SOUTH INDIA - DIOCESE OF MADRAS**
226, Gathedral Road, Post Box, No.4914, Chennai - 600 086, South India

The Rt. Rev. Dr. V. Devashayam
Bishop in Madras.

off. : 91- 44 - 2811 3929
Phone : 2811 3933
2811 7629
Res : 91- 44 - 2811 5804
Fax : 2811 0608

## வாழ்த்துரை

கிறித்தவ இலக்கியத் தமிழ்ப் பேரவை, பேரருள்திரு. டாக்டர். கால்டுவெல் அவர்களின் பிறப்பு 200ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பிஷப் கால்டுவெல் பன்முகப் பணிகள், என்னும் தலைப்பில் நூல் வெளியிடுவது கண்டு பெருமகிழ்வெய்துகிறேன். தமிழகத்தில் எந்த அமைப்பும், பேராயர் கால்டுவெல் அவர்களின் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவினை எடுக்க முயற்சி எடுக்காத சூழ்நிலையில், மிகவும் கவனத்தோடு இதனை மனதில் கொண்டு இந்த ஓராண்டு நிகழ்வுகள் அனைத்தையும், கால்டுவெல்லையே மையமாக வைத்து நிகழ்வுகளை நிகழ்த்தியதை நினைத்துப் பேரவையினைப் பாராட்டுகிறேன்.

சிறப்பானதோர் கருத்தரங்கினை ஒழுங்கு செய்து, பேராசிரியர்களையும், ஆயர் பெருமக்களையும் அதில் கட்டுரைகளை வழங்க வழிவகை செய்து, கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து இன்று உங்கள் கரங்களில் நூலாக தவழ விட்டிருக்கும் பேரவையினை மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

பேராயர் டாக்டர் கால்டுவெல் அவர்களின் வரலாறு நம் திருச்சபையினரின் மனதில் ஆழமாக பதிய வேண்டிய நிகழ்வாகும். நம் பின் சந்ததியினர் இதன் அழுத்தத்தையும், ஆழத்தையும் உணரப் பேரவை எடுத்த முயற்சியினைப் பாராட்டுகிறேன். கட்டுரைகளை வழங்கிய அறிஞர் பெருமக்களை வாழ்த்துகிறேன். பேரவை வளர்ச்சியில் அதிக நாட்டம் கொண்டுள்ள மதிப்புறு நெறியாளர் முனைவர் ப.ச.ஏசுதாசன் அவர்களைப் பாராட்டுகிறேன். இயக்குநர் முனைவர் ஏ.ஜான்சன் தங்கையா அவர்களை வாழ்த்துகிறேன்.

கிறித்தவ இலக்கியத் தமிழ்ப் பேரவையின் பணிகளை இறைவன் தாமே ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்
**வே.தேவசகாயம்**
பேராயர்

தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம்
கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை
226, கதீட்ரல் சாலை, சென்னை – 600 086.

பேருள் திரு. அறிவர். வே.தேவசகாயம்
பேராயர், சென்னைப் பேராயம்

முனைவர். ஏ.ஜான்சன் தங்கையா
இயக்குநர்

---

## பதிப்புரை

'பிஷப் கால்டுவெல்லின் பன்முகப் பணிகள்' என்னும் இந்நூல் சென்னைப் பேராயக் கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை நடத்திய கருத்தரங்கில், அறிஞர் பெருமக்களால் படிக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பு இந்த ஆண்டு நூலாக வெளிவருகின்றது. இக்கட்டுரைகள் பிஷப் கால்டுவெல் அவர்களின் தமிழ்ப்பணி, திருச்சபை புத்துருவாக்கம் போன்றவற்றை அடையாளம் காட்டுகின்றது.

தமிழ்க் கிறித்தவ உலகில் ஆழங்கால்பட்ட சிந்தனையாளர்கள் பிஷப் கால்டுவெல்லின் முகவரியினை முழுமையாக காட்ட முயன்றுள்ளார்கள். தமிழ்ச் சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழும் தமிழ்க் கிறித்தவர்களின் செயல்பாடுகளையும், பொறுப்புகளையும் வழிபாட்டு முறைகளையும், பிஷப் கால்டுவெல் எண்ணங்களின் மூலம் இந்நூல் வெளிக்கொணர முயன்றுள்ளது. இக்கட்டுரைத் தொகுதி உறுதியாக அனைத்து சமய அன்பர்களுக்கும் தமிழுலகிற்கும் பயன்தரும் என்பது பேரவையின் நம்பிக்கை.

தென்னிந்தியத் திருச்சபை சென்னைப் பேராயக் கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவையை உருவாக்கி, இயங்கச் செய்யும் பேராயர் பேருள்திரு. அறிவர் வே.தேவசகாயம் அவர்களின் முன்னோக்குப் பார்வைக்கு இந்நூல் ஒரு சான்றாகும். இக்கட்டுரைத் தொகுதிக்குத் தக்கதொரு வாழ்த்துரையினையும் அவர்கள் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்குப் பேரவை தனது நன்றியினை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தையும் கருத்தரங்குகளில் வாசித்தளித்த அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி. இந்நூல் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்து நூல் வடிவம் பெறுதற்குத் துணை நின்ற பேரவையின் முன்னாள் இயக்குநரும், இந்நாள் நெறிபடுத்துவோராக உள்ள முனைவர் ப.ச.ஏசுதாசன் அவர்களுக்கு நன்றி. நட்பு அடிப்படையில் பெரும் பங்காற்றிய சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் பேராசிரியர் முனைவர்.ப.டேவிட் பிரபாகரன் அவர்களுக்கும் நன்றி. நன்முறையில் அச்சிட்டு உதவிய கவிக்குயில் அச்சக உரிமையாளர் திரு. தேசிக விநாயகம் அவர்களுக்கும் நன்றி. இந்நூலைத் தமிழுலகு நன்கு பயன்படுத்திக் கொள்ளும் என நம்புகின்றோம்.

முனைவர். ஏ.ஜான்சன் தங்கையா
பதிப்பாசிரியர்

**<u>பொருளடக்கம்</u>** **<u>பக்கம்</u>**

1. பேராயர் இராபர்ட் கால்டுவெல்லின் வாழ்வியல் 7

முனைவர். யோ. ஞானசந்திர ஜாண்சன்

இணைப்பேராசிரியர் – தமிழ்த்துறை

சென்னைக் கிறித்தவக் கல்லூரி தாம்பரம்.

2. திருநெல்வேலி சரித்திரம் 29

முனைவர். ம.செ.இரபிசிங்

பேராசிரியர்

எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்

காட்டாங்களத்தூர்.

3. நற்கருணை தியான மாலை 38

அருள்திரு. இரா.செ.டென்சன் எக்டர்

பேராசிரியர்

தமிழ்நாடு இறையியல் கல்லூரி

அரசரடி மதுரை – 625 016.

4. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் 58

முனைவர். ப.டேவிட் பிரபாகரன்

இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை

சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.

5. கால்டுவெல்லின் சமுதாயப் பணி 77
முனைவர். பு.ஜார்ஜ்
இணைப் பேராசிரியர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி தாம்பரம்.

6. கால்டுவெல்லின் சமயப் பணி 97
அருள்திரு. மெ. பென்சமின் இன்பராஜ்
ஆயர். சி.எஸ்.ஐ. சென்னைப் பேராயம்.

7. திருநெல்வேலி திருமண்டல அருட்பணி. 115
அருள்திரு. குணசேகரன் கோயில் பிள்ளை
ஆயர். சி.எஸ்.ஐ. சென்னைப் பேராயம்.

8. கால்டுவெல்லின் சமுதாயக் கனவு 134
திருமதி. ஹேனா, ஜேக்கின்
சி.எஸ்.ஐ. மீட்பர் ஆலயம்,
பெரியார் நகர், சென்னை–82

9. கால்டுவெல்லின் நானூறு கல் நடைப்பயணம் 143
திருமதி. ஜே.ரெமி நவரோஜ்
சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயம்
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21.

# 1.பேராயர் இராபர்ட் கால்டுவெல்லின் வாழ்வியல்

பேராசிரியர் முனைவர் யோ.ஞான சந்திர ஜாண்சன்

தென்னிந்தியாவிற்கு வருகை புரிந்த இறைத்தொண்டர்களுள் மிகவும் புகழ் பெற்றவர் பேராயர் பேரருள்திரு. டாக்டர் இராபர்ட் கால்டுவெல் ஆவார். இவர் இறைப்பணியுடன் சமூகப் பணியும் கல்விப் பணியும் ஆற்றினார். தமிழ்மொழியை ஆழ்ந்து கற்றதனால் அதன் ஈடு இணையில்லாச் சிறப்பை உலகம் அறியச் செய்தார். வாழ்வின் பெரும்பாகத்தை இந்தியாவில் கழித்ததனால் தன்னை இந்தியன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டார். கால்டுவெல் தம்மைக் குறித்துச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> நான் அயர்லாந்து நாட்டிலே பிறந்தேன். ஸ்காட்லாந்து நாட்டிலே கல்வி பயின்றேன். ஆங்கில நாட்டுக் கிறித்தவச் சங்கத்தைச் சார்ந்தேன். ஆயினும் இந்திய நாட்டிலே நெடுங்காலமாக வாழ்ந்து, இந்தியரது வாழ்க்கையில் ஈடுபட்டமையால் நான் இந்தியருள் ஒருவனாகி விட்டேன்.

பேராயர் கால்டுவெல் **(Robert Caldwell) (1814-1881)** அயர்லாந்து நாட்டின் வட பகுதியில் கிளாடி **(Clady)** என்னும் ஆற்றங்கரையிலுள்ள அண்டிரிம் **(Antrim)** என்னும் ஊரின் அருகிலுள்ள ஷெப்பர்ட்யார்டு **(Shepherdyard)** என்னும் சிற்றூரில் 1814 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். இவரது பத்தாம் வயதில் பெற்றோர்கள் ஸ்காட்லாந்து நாட்டிலுள்ள கிளாஸ்கோ **(Glasgow)** பட்டணத்தில் சென்று வசித்தனர். இவருடைய பதினாறு வயதில் இவரது மூத்த சகோதரனுடன் டப்ளின் **(Dublin)** என்னுமிடத்தில் தங்கி ஓவியக் கலைக் கல்லூரியில் படித்தார். கால்டுவெல் டப்ளினில் தங்கியிருக்கும்போது அங்குள்ள புகழ்பெற்ற டாக்டர் உர்விச் என்னும் அருளுரையாளரின் தொடர்பும் அந்நகரத்திலுள்ள சில பக்தியுள்ள கிறித்தவர்களின் தொடர்பும் கிடைத்தது. அதனால் கிறிஸ்துவுக்காக உழைக்க வேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டது. அவ்வுணர்வே பின்னாளில் அருள்தொண்டராக மாறுவதற்கு ஊக்கமாக அமைந்தது. இவருக்கு ஓவியக் கலையில்

நாட்டமிருந்தாலும் கிறித்தவ ஊழியத்தின் பலவிதமான துன்பங்கள் ஏற்படும் எண்ணத்தாலும் இறைத்தொண்டராகப் பணி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் எழவில்லை. இச்சூழலில் ஒருநாள் இறைவன் அவரிடம் நீ இவ்வாறு நாட்களைக் கழிப்பது சரியா? அது சரியல்ல எனச் சொல்லியது போலிருந்தது. இந்த நாளை கால்டுவெல் தமது வாழ்க்கையில் முக்கியமான நாளாகக் கருதினார்.

1823 ஆம் ஆண்டு டப்ளினிலிருந்து கிளாஸ்கோவிற்குத் திரும்பிச் சென்றார். அங்கு பாதிரியார் கிரிவைல் ஈவிங்குடன் ஆலயங்களில் இறைத்தொண்டாற்றினார். அவர் இலண்டன் மிஷனெரி சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1834 ஆம் ஆண்டு கிளாஸ்கோ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பயின்றதுடன் ஒப்பியல் மொழிநூல் பயின்று 1837 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னாளில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலினை எழுதுவதற்கு ஒப்பியல் மொழிநூல் அறிவு மிகவும் உறுதுணையாக இருந்தது. அங்கு கிரேக்க மொழிப் பேராசிரியரான டானியேல் கெண்ட் சான்ட்போர்டு **(Daniel Keyte sandford)** என்பவரின் விரிவுரைகளில் தம் மனதைப் பறிகொடுத்தார். கால்டுவெல்லின் மொழிநூல் ஆர்வத்திற்குத் தூண்டுகோலாக இருந்தவர் இவரேயாவார். பின்னர், இலண்டன் மாநகரில் சமயத் தொண்டர் கழகத்தில் சேர்ந்தார். இச்சமயத் தொண்டர் கழகம் தமிழ் நாட்டில் இறைப்பணியாற்ற கால்டுவெல்லைத் தேர்ந்தெடுத்தது.

கால்டுவெல் இந்தியாவிற்குத் தமது பயணத்தை ஆரம்பிக்கையில் அவரது தாயார் மிகவும் சுகவீனமாக இருந்தார். தமது படுக்கையின் அருகில் முழங்கால்படியிட்டிருந்த தன் மகனை ஆரத்தழுவி முத்தமிட்டு "நான் உன்னை எனது முழுமனதுடன் கடவுளின் ஊழியத்திற்காக மகிழ்ச்சியுடன் அனுப்புகிறேன்" என்று சொல்லி வாழ்த்தி அனுப்பினார்கள். கால்டுவெல் 1837 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30ஆம் நாள் இங்கிலாந்து நாட்டிலிருந்து மேரி ஆன் **(Mary Ann)** என்னும் கப்பலில் பயணமானார்.

இவர் பயணம் செய்த கப்பல் வழியில் பிரெஞ்சுக் கப்பலுடன் மோதியது. அதனால் கால்டுவெல் பயணம் செய்த கப்பல் சிறிது சேதமாகியது. பின்னர் சரிசெய்யப்பட்டது. கப்பல் பயணத்தின்போது சென்னையில் சமூகப் பணியாற்றிய சி.பி.பிரௌன் (Chales Philip Brown) என்பவரின் மூலம் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். அத்துடன் தென்னாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொண்டார். கால்டுவெல் கப்பல் பயணத்தின்போது எலும்புருக்கி நோயினால் துன்பமடைந்து பின்னர் குணமடைந்தார். இங்கிலாந்திலிருந்து கப்பல் சென்னை வர நான்கு மாதங்கள் ஆனது.

**சென்னையில் கால்டுவெல்**

கால்டுவெல் 1838ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் நாள் தமது 24–வது வயதில் சென்னை வந்து சேர்ந்தார். சென்னை வந்தபின் இலண்டன் மிஷனெரி சங்கத்தைச் சார்ந்த W.H. டிரு (W.H. Drew) என்னும் ஐரோப்பியரிடம் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார். கால்டுவெல் சுமார் மூன்றரை ஆண்டுகள் சென்னையில் செலவிட்டார். சென்னையில் இறைத்தொண்டாற்றி சிறந்த தமிழ் அகராதியை எழுதிய டாக்டர் வின்சுலோ, டாக்டர் ஜி.யு. போப், சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தொடக்க நிலையிலுள்ள பள்ளியைத் தொடங்கிய அருள்திரு. ஜான் ஆண்டர்சன், ஹென்றி பவர், ஜான் டக்கர், பேராயர் ஸ்பென்சர், டாக்டர் ஸ்கட்டர், ஜென்ரல் சி.எ.பிரௌனி ஆகியோரின் நட்பினால் கால்டுவெல்லின் புலமை ஆழங்கால்பட்டது. மட்டுமன்றி இவர்களின் உரையாடல்களின் மூலம் இறையியல் பணிக்கான விரிவான தொலைநோக்குப் பார்வை அவருக்குக் கிடைத்தது. கால்டுவெல்லின் பெரும்பாலான நண்பர்கள் கிறித்தவத்தின் பிற பிரிவுகளைச் சார்ந்தவர்களாக இருந்தனர். 1841 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமது மாணவப் பருவத்திலிருந்தே உள்ள விருப்பப்படி ஆங்கிலத் திருச்சபையில் சேர்ந்தார். கால்டுவெல் 1841 ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் நாள் போதகராக சென்னைப் பேராயர் பேரருள்திரு. ஜார்ஜ் டிரிவர் ஸ்பென்சர் (George Trevor Spencer) அவர்களால் உதகமண்டலத்தில் வைத்து அருட்பொழிவு செய்யப்பட்டார். பின்னர்

1841ஆம் ஆண்டின் இறுதியில் ஆங்கிலத் திருச்சபையில் பணியாற்றுவதற்கென்று தாம் தெரிந்து கொண்ட திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்னையிலிருந்து புறப்பட்டார்.

## இடையன்குடிப் பயணம்

கால்டுவெல் சென்னையிலிருந்து இடையன்குடிக்கு நடந்தே சென்றார். இந்த 800 மைல் (1300 கி.மீ) தூர நடைப் பயணத்தின் சிறப்பு என்னவெனின், அவர் பல இடங்களையும் சுற்றிப்பார்த்து அங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் பேச்சு முறைகளையும் அறிந்து கொள்ள வாய்ப்புப் பெற்றது. சென்னையிலிருந்து புறப்பட்ட அவர் சிதம்பரம் சென்றடைந்தார். அங்குள்ள தில்லைச் சிற்றம்பலத்தின் பழமையையும் பெருமையையும் பார்த்தார். பின்னர் மாயூரம் (மயிலாடுதுறை) வழியாக கடற்கரையிலமைந்த தரங்கம்பாடி வந்தடைந்தார். 1706 ஆம் ஆண்டு சீகன்பால்கு முதல் பல்வேறு சீர்திருத்தத் திருச்சபை இறைத்தொண்டர்கள் வந்து தங்கி தமிழைக் கற்று இறைப்பணியாற்றிய இடத்தின் சிறப்பைக் கண்டு பெருமிதம் கொண்டார். கிறித்தவ வரலாற்றில் முக்கியமான தரங்கம்பாடியில் நடைபெறும் இறைப்பணியையும் தரங்கம்பாடியின் இயற்கையழகையும் இரசித்த பின்னர், கும்பகோணம் வழியாகத் தஞ்சாவூர் வந்தடைந்தார்.

தஞ்சாவூரில் அமைந்துள்ள சிறப்புமிக்க கோவிலைப் பார்த்து அதன் கட்டடக்கலையின் சிறப்பை எண்ணி வியந்தார். மேலும் சோழமன்னர்கள் கட்டிய கோட்டையையும் கண்டு வியந்தார். பின்னர் தஞ்சாவூரிலுள்ள கீர்த்தனைக் கவிஞர் வேதநாயக சாஸ்திரியாரைப் பார்த்து மகிழ்ந்து உரையாடியதுடன் கீர்த்தனைகளின் சிறப்பையும் கீர்த்தனைகள் எழுதும் முறைகளையும் கேட்டறிந்து கொண்டார். மட்டுமன்றி அவர் கீர்த்தனைகளைப்பாடக் கேட்டு பக்திப் பரவசமானார். அங்கிருந்து புறப்பட்டு திருச்சிராப்பள்ளியிலுள்ள மலையின் அழகையும் காவிரியாற்றின் வளமையையும் பார்த்து பின்னர் அருகிலுள்ள ஸ்ரீரங்கத்தின் அழகையும் கண்டு இரசித்தார். பின்னர் அங்கிருந்து நீலகிரி சென்று அருள்திரு. ஸ்பென்சர் அவர்களுடன் ஒரு மாதம்

தங்கியிருந்து மலையின் அழகைக் கண்டு அகமகிழ்ந்தார். அதன் பின்னர் கோயம்புத்தூர் வழியாக மதுரைக்குப் புறப்பட்டார். ஒரு நாள் மழை அதிகமாக வழிப்பயணத்தின் போது பெய்தது. அப்போது தங்குவதற்காகச் சத்திரத்தில் இடம் கேட்டார். அதற்குச் சத்திரக்காரர்கள் வெள்ளையர்களுக்கு இடம் இல்லை என்று கூறி விட்டனர். கால்டுவெல்லின் துயரத்தைக் கண்டு இரங்கிய சிலர் அங்குள்ள ஒரு மாட்டுத் தொழுவத்தில் தங்குவதற்கு ஆலோசனை கூறினார். இதைக் கேட்ட கால்டுவெல் மிகவும் வருந்தினார். பின்னர் ஒரு வீட்டின் திண்ணையில் இரவைப் போக்கினார். பின்னர் மதுரை வந்தடைந்தார்.

மதுரையில் வையை ஆற்றின் அழகையும் வளமையையும் கண்டு இரசித்தார். பின்னர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும் திருமலை நாயக்கரின் மாளிகையையும் பார்வையிட்டார். பின்னர் திருமங்கலத்தை அடைந்து அங்கிருந்த அமெரிக்க இறைத்தொண்டர் அறிவர் திரேசி அவர்களிடம் கலந்துரையாடினார். அதன் பின்னர் மங்கம்மாள் சாலை வழியாகத் திருநெல்வேலிக்குப் புறப்பட்டார். பின்னர் தாமிரபரணி ஆற்றினைக் கடந்து கிறித்தவக் கம்பன் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை வாழ்ந்து வந்த பாளையங்கோட்டையைச் சென்றடைந்தார். பாளையங்கோட்டையிலுள்ள கிறித்தவர்களும் இறைத்தொண்டர்களும் கால்டுவெல்லை வரவேற்றனர். சில நாட்கள் அங்கு தங்கியிருந்த பின்னர், நாசரேத் என்னும் ஊரைச் சென்றடைந்தார். அங்குள்ள ஆலயத்தில் அருளுரையாற்றினார். பின்னர் முதலூரைச் சென்றடைந்தார். ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள ஆலயத்தில் மக்களுக்கு ஓர் அருளுரை ஆற்றினார். அதன் பின்னர் இறுதியாக இடையன்குடியை வந்தடைந்தார். கால்டுவெல் இடையன்குடி ஊருக்கு அருகில் சென்றபோதும், ஊர் சிறிது தூரத்தில் உள்ளது என்பதை அறியாததால், வழி தவறி அதிக தூரம் சுற்றி, இறுதியில் இரவு நேரத்தில் அவ்வூரைச் சென்றடைந்தார். இந்த வழிநடைப் பயணம் கால்டுவெல்லிற்கு பல அனுபவங்களைக் கொடுத்தது. இந்த அனுபவங்களே பிற்காலத்தில் கிறித்தவக் கீர்த்தனை, வரலாறு, ஒப்பிலக்கணம், தியான நூல்கள் எழுதுவதற்கு துணையாக

இருந்திருக்கலாம்.

## இடையன்குடியில் இறைப்பணி

இடையன்குடியின் பழைய பெயர் வல்லிடையன் குடியிருப்பு என்பதாகும். இப்பெயரிலுள்ள வல், இருப்பு என்னும் பகுதிகள் மறைந்து இடையன்குடியிருப்பு என்று மாறியிருக்கலாம். அல்லது கால்டுவெல் தாம் பிறந்த ஷெப்பர்ட்யார்டு **(Shepherdyard)** என்னும் ஊரினை மனதில் கொண்டு இடையன்குடி என்னும் பெயரினை வழக்கில் கொண்டு வந்திருக்கலாம். அல்லது நானே நல்ல மேய்ப்பன் என இயேசு கிறிஸ்து கூறியதை ஆதாரமாகக் கொண்டு இடையன்குடி என்னும் பெயரை வழக்கத்தில் கொண்டு வந்திருக்கலாம். இவ்வூரின் தென்கிழக்கில் கடற்கரைப் பகுதியிலுள்ள குட்டம் என்னும் ஊரிலுள்ள நிலக்கிழார் குடும்பங்களுக்கு இவ்வூர் சொந்தமானதாக இருந்தது. அவர்களிடமிருந்து கால்டுவெல் 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் பணம் கொடுத்து இப்பகுதியை வாங்கினார்.

பனைமரங்கள் நிறைந்த இடையன்குடியை மக்கள் வாழ்வதற்கேற்ற இடமாக மாற்றித் தம் திருப்பணியைத் தொடங்கினார். கிணறுகள் தோண்டினார். அகலமான சாலைகள் அமைத்தார்; மரங்கள் நட்டார்; நாள்தோறும் ஒரு மரமாவது நடுவது கால்டுவெல்லின் வழக்கம். மக்கள் வாழ்வதற்காக வீடுகள் கட்டப்பட்டன. குழந்தைகளுக்காகப் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. மக்களுக்கு மருந்தகம் உருவாயிற்று. பெண்களுக்குக் கல்வியும், கைத்தொழிலும் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி வழங்கியதால் சமுதாயம் விழிப்படைந்து மேன்மையுற்றது. ஆலயத்தின் அருகில் தான் வசிக்க ஒரு வீட்டையும் கட்டினார்.

## தூய திரித்துவ ஆலயம்

1847ஆம் ஆண்டு இடையன்குடியில் ஆலயத்திற்கான அடிக்கலை நாட்டினார். ஆலயக் கட்டுமானத்திற்காக இங்கிலாந்து நாட்டிலும் தமிழ் நாட்டிலும் நிதி திரட்டினார். இவ்வாலயம் 1880 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் நாள் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டையின் போது சுமார் ஐயாயிரம் மக்கள் அங்கு குழுமியிருந்தனர். இவ்வாலயத்தின் முன்பகுதியில் உயர்ந்த கோபுரம் உள்ளது. கோபுரத்தில் உள்ள மணிகளை இங்கிலாந்திலிருந்து கால்டுவெல்லின் சகோதரர் ஜேம்ஸ் கால்டுவெல் அனுப்பிக்

கொடுத்துள்ளார். இந்த மணிகள் ஜாய் பெல் **(Joy Bell)** என அழைக்கப்படுகின்றன. இவற்றை மணிக்கூண்டில் இருந்தவாறே மேல்நாட்டு இசைக்குறிப்புகளுக்கு ஏற்ப இசைப்பர். இன்றும் இம்மணிகளை அவ்வூரிலுள்ளோர் வழி வழியாக மேல்நாட்டு இசைக்குறிப்புகளின்படி இசைத்து வருகின்றனர். இது அம்மக்களுக்கு மிகவும் பெருமையான ஒரு காரியம் ஆகும். கால்டுவெல் இரவு நேரத்தில் இடையன்குடிக்குத் திரும்பி வரும்போது பாதை மாறிவிடாமல் இருப்பதற்காக இம்மணிகளை அடிப்பது வழக்கம். இதனால் வழி தவறிவிடாமல் கால்டுவெல் இடையன்குடிக்குத் திரும்பி வந்துவிடுவார். இதில் காணப்படும் ஐந்து மணிகளுள் நான்கு மணிகள் ஆராதனை அறிவிப்பு மணிகளாகவும் ஒரு மணி ஊரிலுள்ளவர் எவரேனும் காலமானால் அதை அறிவிக்கும் துக்க மணியாகவும் பயன்படுகின்றன. இந்த மணிகளின் ஒலி சுமார் ஐந்து கி.மீ. வரையிலும் கேட்கக்கூடியதாக விளங்கியது. அன்றைய சென்னை ஆளுநர் லார்டு நேப்பியர் இவ்வாலயத்தின் அழகைப் பாராட்டி ஐந்நூறு ரூபாய் அன்பளிப்பாகக் கொடுத்தார். இந்த ஆலயம் தூய திரித்துவ ஆலயம் என்றழைக்கப்படுகிறது.

## இல்லற வாழ்க்கை

கால்டுவெல் 1844ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் நாள் தமது 29ஆவது வயதில் நாகர்கோவிலில் இறைப்பணியாற்றி வந்த இலண்டன் மிஷனைச் சார்ந்த மிஷனெரி அருள்திரு. சார்லஸ் மால்ட் **(Charles Mault)**. மார்த்தா மால்ட் தம்பதியரின் மூத்த மகள் எலிசா **(Eliza)** அம்மையாரைத் (1822 – 1899) திருமணம் செய்தார். இவர்களது திருமணம் நாகர்கோவில் கஸ்பா ஆலயத்தில் (கல் கோவில்) நடைபெற்றது. அருள்திரு சார்லஸ் மால்ட் நாகர்கோவிலில் 1819 ஆம் ஆண்டு முதல் 1855 ஆம் ஆண்டு வரையிலும் இறைப்பணியாற்றினார். எலிசா அம்மையார் சமூகப் பணிகளில் மிகவும் ஈடுபாடுடையவர்கள். இடையன்குடி பாடசாலையிலுள்ள மாணவிகளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். அங்குள்ள பெண்களுக்கு ஓய்வு நேரங்களில் தொழிற்கல்வியைக் கற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டார். கால்டுவெல்லின் இறைப்பணியிலும் இலக்கியப்பணியிலும் சமூகப்பணியிலும் எலிசா அம்மையார் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். இத்தம்பதியினருக்கு வில்லியம் **(William)** (1852), ஆடிங்டன்

**(Addington) (1857)**, ஆர்தர் (1862), இராபர்ட் சார்லஸ் என்னும் நான்கு ஆண்களும், இசபெல்லா **(Isabella) (1847)** மார்த்தா லூயிசா **(Martha Louisa) (1849)**, மேரி **(1854)** என்னும் மூன்று பெண்களும் குழந்தைகளாவர். இவர்களுள் இராபர்ட் சார்லஸ் தந்தையைப் போன்று தமிழார்வம் மிக்கவராக விளங்கினார்.

கால்டுவெல்லின் மூத்த மகள் இசபெல்லாவிற்கும் எஸ்.பி.ஜி. மிஷெனரி **J.L.** வியாட் **(J.L. Wyatt)** என்பவருக்கும் **1868**ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் **19**ஆம் நாள் இடையன்குடியில் வைத்துத் திருமணம் நடைபெற்றது. இவ்விருவரும் கால்டுவெல்லின் பணிகளுக்கு மிக்க பக்க பலமாக இருந்தனர். இரண்டாவது மகள் மார்த்தா லூயிசாவுக்கும் இராணுவப் பொறியாளர் ஷெப்பர்டுவுக்கும் **(F.S. Shepherd) 1870** ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் **9**ஆம் நாள் இடையன்குடியில் திருமணம் நடைபெற்றது. மார்த்தா லூயிசா **1872** அக்டோபர் மாதம் **8** ஆம் நாள் இடையன்குடியில் ஒரே பிரசவத்தில் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். ஆனால் இரண்டு குழந்தைகளும் தாயும் அன்றே இறந்துவிட்டனர். இவ்விழப்பு கால்டுவெல்லை மனதளவில் மிகவும் பாதித்தது. லூயிசாவுக்கு தூய திரித்துவ ஆலயத்தில் கல்வெட்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**எலிசா அம்மையாரின் பணிகள் :**

கால்டுவெல்லின் துணைவியார் தமது திருமணத்திற்கு முன்னர் தந்தையாருடன் தாம் பிறந்த ஊரான நாகர் கோவிலில் வாழும்போது கல்விப்பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டிருந்தார். நாகர்கோவிலில் பிறந்து வாழ்ந்தமையால் தமிழில் நன்கு பேசும் திறமை உடையவராக விளங்கினார். இதனால் பொதுமக்களிடம் அதிகமாகப் பழகி வந்தார். அன்றைய பெண்களுக்குக் கைத்தொழில் மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது. எனவே அவர்களின் வருமானத்திற்காக பூத்தையலை அறிமுகப்படுத்தி அதன் மூலம் அவர்களுக்கு வருவாய் கிடைக்க வழிவகை செய்தார். திருமணத்திற்குப் பின்னர் இடையன்குடிக்குச் சென்ற நிலையில், அங்குள்ள பெண்களுக்குப் பூத்தையல் பயிற்சிப் பள்ளியை நிறுவி பயிற்சி கொடுத்தார். பின்னர் பூத்தையல் வேலைப்பாடு கொண்ட லேஸ்களைத் தயாரிக்கும் தொழிற்கூடத்தையும் நிறுவினார். இடையன்குடியில் தயாரிக்கப்பட்ட பூத்தையல்கள் இந்தியாவின் பிற பகுதிகளுக்கு மட்டுமன்றி இங்கிலாந்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**படைப்புகள் :**

கால்டுவெல் பதினெட்டு மொழிகளில் புலமையுடையவராகத் திகழ்ந்தார். கால்டுவெல் எழுதிய நூல்கள் பின்வருமாறு :

1. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்
2. திருநெல்வேலி வரலாறு
3. நற்கருணைத் தியானமாலை (1853)
4. தாமரைத் தடாகம் (1871)
5. பரத கண்ட புராதனம்

என்னும் நூல்களை எழுதியுள்ளார். இவரது ஞானஸ்நானம், நற்கருணை என்னும் இரண்டு நீண்ட கட்டுரைகள் 1841 இல் ஹென்றி பவர் எழுதி வெளியிட்ட வேத அராதியில் இடம் பெற்றுள்ளன. கால்டுவெல் சில துண்டுப் பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

**1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**

கால்டுவெல்லின் படைப்புகளில் மிகவும் சிறப்பாக இன்றும் பேசப்பட்டுவருவது திராவிடமொழிகள் ஒப்பிலக்கணம் **(A Comparative Grammar of Dravidian Languages)** என்னும் நூலாகும். இந்நூலை **1856** ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். கால்டுவெல் பதினைந்து ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக இந்நூல் எழுதப்பட்டது. தென்னாட்டு மொழிகளையும் வடநாட்டு மொழிகளையும் ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டது. திராவிட மொழிகளில் தனித்தன்மை இருப்பதையும் அதன் அடிப்படையில் அவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்பதையும் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் ஆகிய பத்து மொழிகளைப் பற்றிய ஆய்வுகளின் மூலம் விவரித்து, அதை முதன்முதலாக உலகிற்கு உணர்த்தியவர் கால்டுவெல். இவ்வாராய்ச்சிக்காக கிளாஸ்கோ பல்கலைக்கழகம் கால்டுவெல்லிற்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இந்நூலின் திருந்திய விரிவான இரண்டாம் பதிப்பு **1875** ஆம் ஆண்டு வெளியானது. மீண்டும் திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு கால்டுவெல்லின் மருமகன் வியாட் அவர்களால் **1913**ஆம் ஆண்டு வெளியானது. இதனையே **1956** ஆம் ஆண்டில்

சென்னைப் பல்கலைக்கழகம் மீண்டும் வெளியிட்டுள்ளது. தற்போது இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**2. திருநெல்வேலி வரலாறு**

திருநெல்வேலி வரலாறு எனும் நூலிற்காக அன்றைய அரசு, கால்டுவெல் பேராயருக்கு ரூபாய் ஆயிரம் நன்கொடை அளித்தது. இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. தென்பகுதியிலுள்ள மாவட்டங்கள் குறித்து தெளிவாகத் தெரியாத சூழலில் கால்டுவெல்லின் நூல் வரவேற்கத்தக்கதாக அமைந்திருந்தது. ஊர்களின் பெயர்களைப் பகுத்து அவற்றின் வேர்களை ஆராய்ந்து கால்டுவெல் சில முடிவுகளுக்கு வருகின்றார். கால்டுவெல் ஏறத்தாழ நான்கு அத்தியாயங்களில் பாளையக்காரர் வரலாற்றை ஆராய்ந்துள்ளார். இந்தப் பகுதியில் கட்டப்பொம்மன் என்பது குடிப்பெயர் என்பதைக் குறிப்பிட்டு நான்கு கட்டப்பொம்மன்களைப் பற்றிச் சுட்டியுள்ளார்.

இந்நூலில் பாண்டியநாடு கடல்வளத்தால் அழகுபெற்றதையும், ரோம் நாட்டு அரசன் அகஸ்டனுக்கு பாண்டியன் தூது போன செய்தியும், கொற்கைத் துறைமுகம் மார்க்கோபோலோ காலத்தில் முத்துக்குளித் துறையாகவும் வணிகத்துறையாகவும் விளங்கியமையையும், அங்கு சீனரும் அராபியரும் வந்து வாணிகம் செய்தமையையும், காயல் துறைமுகத்தில் பாரசீகக் குதிரைகள் வந்து இறங்கியமையையும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். நெல்லை மாவட்ட மக்கள் கடுமையான பஞ்சத்தில் சிக்கித் தவித்துத் துன்பப்பட்ட நிலையினையும் கால்டுவெல் விரிவாகச் சித்திரித்துள்ளார். அக்காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்த புலவர்கள், கவிஞர்கள் ஆகியோர்களது பெயர்ப்பட்டியலை இந்நூலில் இணைத்துள்ளார்.

**3. நற்கருணைத் தியானமாலை (1890)**

நற்கருணைத் தியானமாலை **(A companion to the Holy Communion)** என்னும் நூல் 1890ஆம் ஆண்டு மே மாதம் கால்டுவெல்லால் எழுதி வெளியிடப்பட்டது. தமிழ் கிறித்தவர்கள் திருவிருந்திற்கு ஒரு வார காலத்திற்கு முன்னராவது தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டது. அழகிய தமிழ் நடையில் மேலை

நாட்டு நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஜெபங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இந்நூலில் தழுவி எழுதியச் சாயலைக் காண இயலாது. இவரது உரைநடைக்கு நற்கருணைத் தியானமாலை என்னும் நூலிலிருந்து சான்று :

ஒரு மாதத்தில் சில தியானங்களையும் அடுத்த மாதத்தில் மற்றுஞ் சில தியானங்களையும் வாசித்தால் எப்பொழுதும் எழுப்புதல் உண்டாக ஏதுவாக இருக்கும். இப்புத்தகம் உதவியேயன்றித் தடையல்ல; மாலையே யன்றி, விலக்கல்ல. இயேசு இரட்சகரின் அன்பை நினைவு கூர்ந்து கொண்டாடுவதற்குக் கிறித்தவர்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டியதால் இப்படிப்பட்ட செபத் தியானங்களை வாசிக்கச் சமயம் கிடைக்காவிட்டால் கர்த்தருடைய பந்தியில் சேராமல் இருக்கக் கூடாது.

இந்நூலின் இறுதிப்பகுதியில் நற்கருணை பெற்று இருக்கைக்குத் திரும்பிய பின்னர் செய்ய வேண்டிய ஜெபங்கள் ஆறினையும், இல்லத்திற்குத் திரும்பிய பின்னர் செய்ய வேண்டிய ஜெபங்கள் இரண்டனையும் தந்துள்ளார். கால்டுவெல் எழுதியுள்ள இந்தத் தியானங்கள், ஜெபங்கள் ஆகியனவற்றை வாசிப்பவர்கள் அவற்றை எளிதாகப் புரிந்துகொள்வதுடன் பக்தி உணர்வையும் பெற்றுக்கொள்வர் என்பது தெளிவு.

**5. தாமரை தடாகம் (1871)**

இந்நூல் கிடைக்கவில்லை.

**6. பரத கண்ட புராதனம்** (Indian Antiquities)

பரதகண்ட புராதனம் என்னும் நூல் முதன் முதலாக பாளையங்கோட்டையிலிருந்து வெளிவரும் நற்போதகம் என்னும் இதழில் தொடராக எழுதப்பட்டது. பின்னர் 1893 ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் மூலம் நூலாக வெளிவந்தது. அதன் பின்னர் இந்நூல் 2012ஆம் ஆண்டு நியூ செஞ்சுரி புக் ஹவுசிங் மூலம் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூல் நான்கு பாகங்களை உடையது. முதலாம் பாகம் சதுர்வேதத்தைப் பற்றிச் சொல்லியது என்பதாகும். இரண்டாம் பாகம் இராமாயணத்தைப் பற்றியது. இராமன்

கதையடக்கம், இராமாயணத்தைக் குறித்துக் கவனிக்கவேண்டிய விசேஷங்கள் என்னும் மூன்று தலைப்புகள் உள்ளன. மூன்றாம் பாகம் மகாபாரதத்தைப் பற்றிச் சொல்லியது, பாண்டவர் கதையடக்கம், மகாபாரதத்தைக் குறித்துக் கவனிக்க வேண்டிய விசேஷங்கள் என்னும் மூன்று பகுதிகளால் ஆனது. நான்காம் பாகம் புராணங்களைப் பற்றியது, வாயுபுராணத்தில் கண்டிருக்கிறபடி தக்ஷயாக கதையடக்கமாவது, 1841ஆம் வருஷம் சென்னப்பட்டணத்தில் இரண்டு புஸ்தகமாக அச்சு பதிப்பிக்கப்பட்ட நான்கு காண்டங்களிலுள்ள தக்ஷயாகக் கதையடக்கமாவது, மேற்கண்டிருக்கிற கதையைப் பற்றிக் கவனிக்க வேண்டிய விசேஷங்கள் என்னும் நான்கு தலைப்புகளைக் கொண்டது.

வரலாற்றுக்காலம் முழுமையிலும் இந்து மதம் ஒரே தன்மையுடையதாக இருந்ததா அல்லது கால மாற்றத்தால் பல நிலைகளைக் கடந்து இன்றைய நிலைக்கு வந்துள்ளதா என்பதை ஆய்வு நோக்கில் கால்டுவெல் விவரித்துள்ளார். வேதங்கள், இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவற்றைக் காலவரிசைப்படி ஆய்வு செய்து பல வரலாற்றுத் தகவல்களை தக்க சான்றுகளுடன் வழங்கியுள்ளார். இந்நூல் முற்கால பாரதம், இந்து மதத்தின் பண்டைய நிலை, வேதங்கள் பற்றிய முழுமையான விளக்கம் முதலியனவற்றை அறிந்துகொள்ளப் பயன்படும்.

### சொந்த நாட்டிற்குச் சென்று திரும்பியது

கால்டுவெல் இடையன்குடியில் இறைப்பணியாற்றிய காலங்களில் மூன்று முறை சொந்த நாட்டிற்குச் சென்று வந்தார். முதலாவதாக 1854ஆம் ஆண்டு முதல் 1857ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் தமது நாட்டில் தங்கியிருந்தார். இரண்டாவது முறையாக 1873ஆம் ஆண்டு முதல் 1875ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகள், மூன்றாவது முறையாக 1883 ஆம் ஆண்டு முதல் 1884 ஆம் ஆண்டுவரை ஓர் ஆண்டு தங்கியிருந்தார். தாம் தங்கியிருந்து இறைப்பணியும் இலக்கணப்பணியும் இலக்கியப்பணியும் ஆற்றிய இடையன்குடியையே சொந்த ஊராகக் கருதியதால் தமது சொந்த நாட்டிற்கு அதிகமாகச் செல்வதை அவர் விரும்பவில்லை.

**சில நிகழ்வுகள் :**

கால்டுவெல்லின் வாழ்க்கையில் ஏராளமான நிகழ்வுகள் உண்டு. சில நிகழ்வுகள் மகிழ்ச்சியான நிகழ்வுகள்; பல நிகழ்வுகள் துன்பமான நிகழ்வுகள். ஒரு சமயம் இடையன்குடி தூய திரித்துவ ஆலயத்தில் திருமணத்திற்காக மணமகன் வந்து நெடு நேரமாகியும் மணமகள் வரவில்லை. கால்டுவெல் எவ்வித சலனமும் இல்லாமல் பொறுமையின் வடிவமாகத் திருமண ஆராதனை நடத்துவதற்காகக் காத்திருந்தார். ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் மணமகள் வருகை புரிந்தார். திருமண ஆராதனையின் போது மணமகள் சொல்ல வேண்டிய வாக்குறுதிகளைக் கால்டுவெல் சொல்லி மணமகளைச் சொல்லச் சொன்னார். ஆனால் மணமகள் வாய் திறக்கவில்லை. சற்று நேரம் பொறுத்திருந்த கால்டுவெல் மீண்டும் வாக்குறுதியைச் சொல்லிச் சொல்ல சொன்னார். இவ்வாறு மூன்று முறைச் சொல்லியும் மணமகள் அமைதியாகவே நின்றிருந்தாள். மணமகளின் உற்றார் உறவினர் கூறியும் எவ்விதப் பயனும் இல்லை. அப்பொழுது கால்டுவெல் மணமகளைப் பார்த்து "இதோ பார், ஒரு முறை கூறினேன், இருமுறை கூறினேன், மும்முறையும் கூறினேன். நீ ஒன்றும் பேசாதிருக்கிறாய். இனிமேல் அவ்வாசகத்தைச் சொல்ல மாட்டேன். இன்னும் நீ பேசாதிருப்பாயானால் நானும் பேசாமல் உன்னை வீட்டுக்கு அனுப்பி விடுவேன்" என்று உறுதியாகக் கூறினார். உடனே மணப்பெண் வாக்குறுதிகளைத் திறம்பட மொழிந்தாள். கால்டுவெல் மிக்க மகிழ்வுடன் திருமணத்தை நடத்தி மணமக்களை ஆசீர்வதித்து அனுப்பினார்.

ஒரு நாள் நாசரேத் ஊரில் தம் நண்பர்களைக் காண்பதற்காகச் சென்றிருந்தார். கால்டுவெல் அங்குள்ள ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள பூந்தோட்டத்தில் ஊரிலுள்ளவர்கள் சிலருடன் நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த பணியாளர் ஒருவர் கால் தவறி கிணற்றுக்கள் விழுந்து விட்டார். இதைப் பார்த்த கால்டுவெல் தம் உடைகளைக் கழற்றி எறிந்து விட்டு உடனே கிணற்றுக்குள் குதித்து அப்பணியாளைக் காப்பாற்றினார். இதைப் பார்த்த உடனிருந்தவர் ஒருவரும் பின்னர் கிணற்றுக்குள் குதித்துக் கால்டுவெல்லிற்கு உதவி செய்தார். பின்னர் ஏணியும் கயிறும் கொண்டு வந்து மூவரையும் ஊர்மக்கள் காப்பாற்றினர்.

ஒருமுறை கால்டுவெல் ஆழ்வார் திருநகரி என்னும் ஊருக்குச் சென்றிருந்த போது கால்டுவெல்லின் திறமைகளையும் அறிவு நுட்பத்தையும் கேள்விப்பட்டிருந்த அவ்வூரிலுள்ள வைதீகப் பெரியவர் ஒருவர் தம் கோவிலில் விரிவுரை நிகழ்த்தும்படி வேண்டினார். இது கால்டுவெல்லின் புலமைக்கும் புகழுக்கும் ஒரு சான்றாக விளங்குகிறது.

ஒரு நாள் கல்கத்தாவிலிருந்து விருந்தினராக வருகை புரிந்த அருள்திரு. காட்டன் அவர்களைக் கன்னியாகுமரிக்கு அழைத்துச் சென்றார். அப்போது கடலில் நீராட காட்டன் ஆசைப்பட்டார். கால்டுவெல் காட்டனின் கைகளை இறுகப் பிடித்து வைத்திருந்தார். எனினும் ஒரு அலை வந்து காட்டனை கால்டுவெல்லிடம் இருந்து இழுத்துச் சென்று புரட்டிக் கரையில் போட்டது. கால்டுவெல் ஓடிச் சென்று காட்டனைப் பிடித்துக் காப்பாற்றினார். கால்டுவெல்லால் காப்பாற்றப்பட்ட காட்டான், கல்கத்தாவில் கங்கையாற்றில் தவறி விழுந்து காலமானர்.

கால்டுவெல் பிற இடங்களுக்குச் சென்றபோதெல்லாம் அவ்விடத்திலுள்ள மக்கள் பெருந்திரளாகக் கூடுவர். அவர்கள் மேளதாளங்கள், கொடிகள், தீவட்டிகளுடன் கால்டுவெல்லை வரவேற்று அழைத்துச் செல்வர். கால்டுவெல் தமது நீண்ட பயணத்தாலுள்ள களைப்பினையும் மறந்து வரவேற்புரைகள், சொற்பொழிவுகள், பாடல்கள் ஆகியனவற்றை ஏற்றுக்கொண்டு, அவர்கள் கேட்கும் வினாக்களுக்குப் பொறுமையாகப் பதிலளிப்பார். வாரத்தில் ஆறு நாட்களிலும் ஊர் ஊராகத்திரிந்து கொண்டு ஏழாவது நாள் இடையன்குடியில் ஆராதனை நடத்துவார்.

ஒரு நாள் இடையன்குடியிலுள்ள சிறுவர்கள் மணல் தேரியிலிருந்து சத்தமிட்டுக் கொண்டிருந்த ஒன்றை, பெரிய அளவிலான வண்டு என நினைத்து இரண்டு குச்சியின் மூலம் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்து ஒரு பானையில் மூடி வைத்தனர். மறுநாள் அதைத் திறந்து பார்க்கையில் அது ஒலி எழுப்பவில்லை. அது இறந்து விட்டது என நினைத்தனர். இதைக் கேள்விப்பட்ட கால்டுவெல் அதை எடுத்துக் கொண்டு வரச் சொன்னார். அவரிடம் கொண்டு அவர்கள் காண்பித்தவுடன் அது தனது தொலைந்து போன கடிகாரம் என்பதை அறிந்து அவர்கள் முன்னால் அதற்குச் சாவி கொடுத்து அதை இயங்க வைத்தார். மட்டுமன்றி அக்கடிகாரத்தைப் பற்றி அவர்களுக்கு

எடுத்துரைத்தார்.

ஒருமுறை கால்டுவெல் தம் குடும்பத்தினருடன் இங்கிலாந்திற்குச் சென்றிருக்கும் போது இலண்டன் மாநகரில் நடைபெற்ற பொருட்காட்சிக்குச் சென்றிருந்தனர். அப்போது கால்டுவெல்லின் இளைய மகள் லூயிசா கூட்டத்தினரிடமிருந்து பிரிந்ததால் காவல்துறையினர் அவளை அழைத்துக்கொண்டு சென்று விசாரித்தனர். அப்போது அவளிடம் உனது ஊர் எது எனக் கேட்டபோது இடையன்குடி எனக்கூறினாள். காவல்துறையினருக்கு ஒன்றும் விளங்கவில்லை. பின்னர் கால்டுவெல் அங்கு வந்து லூயிசாவை அழைத்துக் கொண்டு சென்றார்.

கால்டுவெல் இடையன்குடிக்கு அருகிலுள்ள காரிகோவில் என்னும் ஊருக்குச் செல்லும் போது அவர் செல்லும் வழிகளில் முட்களைப் போட்டு, பள்ளம் எடுத்து அதன் மேல் பனை ஓலைகளைப் போட்டிருப்பார். எனினும் தடைகளைத் தாண்டி அவ்வூருக்குச் சென்று பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுப்பார். இதற்காகப் பனை ஓலையால் வேய்ந்த ஓர் இடத்தை ஆயத்தப்படுத்தியிருந்தார். அடுத்த வாரம் அந்த இடத்திற்குச் சென்றபோது அந்த இடத்தில் அவ்வூரிலுள்ளோர் கழுதைகளை அடைத்து வைத்திருந்ததைப் பார்த்தார். அந்த ஊரில் ஓர் ஆலயம் எழுப்ப வேண்டும் என்னும் எண்ணம் கால்டுவெல்லுக்கு இருந்தது. ஆனால் அந்த எண்ணம் ஈடேறவில்லை.

### வேதாகம மொழிபெயர்ப்பில் கால்டுவெல்

விவிலிய நூலின் திருத்தமான மொழி பெயர்ப்புக் குழுவினர் பன்னிருவரில் கால்டுவெல் ஒருவராக இருந்து திறம்பட அப்பணியில் ஈடுபட்டார். இக்குழு 1858ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி, 1869ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தம் பணியை நிறைவு செய்தது. மேலும் கால்டுவெல் சில பாமாலைகளையும் ஜெபங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். “சபையின் அஸ்திபாரம் நல்மீட்பர் கிறிஸ்துவே” என்னும் ஞானப்பாடலை ஆங்கிலத்திலிருந்து **(The Church’s one foundation)** தமிழுக்கு மொழிபெயர்த்தார்.

அகழ்வாய்வு :

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கால்டுவெல் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டார். தென்கடற்கரையில் தூர்ந்து கிடந்த சிற்றூர்களையும் ஆங்காங்கு கிடைத்த பழங்காசுகளையும் ஆராய்ந்து தமிழ்நாட்டின் சிறப்பினையும் பழம்பெருமையினையும் எடுத்தியம்பினார். பழைய ஈபுரூ மொழியில் வழங்கும் துகி என்னும் சொல், தமிழ் தோகையின் சிதைவென்றும், மேலைநாட்டுச் செம்மொழிகளுட் சிறந்த கிரீக்கு மொழியில் அருசா என்று வழங்கும் சொல், தமிழ் அரிசியின் சிதைவென்றும் கால்டுவெல் உறுதி செய்தார். முற்காலத்திலுள்ள கொற்கைத் துறைமுகம் பிற்காலத்தில் அதிலிருந்து கடல் விலகிச்சென்ற காரணத்தால் அத்துறை பழம்பெருமையை இழந்ததென்று எண்ணினார். கொற்கைப் பகுதியில் சென்று கொற்கையையும் அதைச் சார்ந்த ஊர்களைப் பற்றியும் ஆராய்ந்தார். அக்கசாலை என்னும் ஊர் நாணயம் செய்யும் இடமாக அக்காலத்தில் திகழ்ந்தது என்பதனைக் கண்டுபிடித்தார்.

கொற்கையில் செய்த அகழ்வாய்வின் மூலம் ஆறடி மண்ணின் கீழ் மணற் பாறையும், அப்பாறையின் அடியில் ஓரடி ஆழத்தில் கடற்கரைக் குறுமணலும் அமைந்திருக்கக் கண்டனர். மேற்பரப்பிலுள்ள மணலின் கீழ் சங்குகளும் சிப்பிகளும் காணப்பட்டன. ஆறடி மண்ணின் கீழ் அமைந்த மணற் பாறையின் பரப்பே முற்காலத்தில் கடற்கரையாக இருந்திருக்க வேண்டும் என்றும், ஆற்று நீரில் கலந்து வந்த மண்ணும் மணலும் துறைமுகத்தில் படிந்து நாளடைவில் கடலைத் தூர்த்தன என்றும், அவ்வாறு படிந்த மண்ணால் அழுத்தப்பட்ட அடிமணல் இறுகி ஓரடிப் பாறையாக உறைந்ததென்றும் கால்டுவெல் முடிவுக்கு வந்தார். மேலும் பழைய காயல், கொற்கையை அடுத்துத் துறைமுகமாக விளங்கியதை நிரூபித்தார். பழங்காயலுக்கு புன்னைக்காயல் என்னும் பெயரும் உண்டு. இலங்கையிலுள்ள மகாவம்ச நூலை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்திற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பை விவரித்தார். விசயன் என்னும் சிங்கள மன்னன் பாண்டிய அரசனின் மகளைத் திருமணம் புரிந்து, பாண்டிய அரசனுக்கு ஆண்டுக்கு இருநூறாயிரம் ரூபாய் மதிப்புள்ள முத்தும் சங்கும் கொடுத்தான் என்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு

முன்னரே பழந்தமிழர்கள் கடல் கடந்து பிற நாடுகளில் குடியேறி செய்த வாணிபத்தைப் பற்றி கால்டுவெல் விவரித்துள்ளார்.

**சிறப்புகள் :**

பேராயர் கால்டுவெல் ராயல் ஆசியாச் சங்கம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தார். டாக்டர் கால்டுவெல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இருபத்தி இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேருரை ஆற்றினார். இவர் 1877ஆம் ஆண்டு மார்ச் மாதம் வேத விளக்கச் சங்கத்தின் சார்பாக கல்கத்தாவில் வைத்து பேராயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவர் நன்னூல், திருக்குறள், சீவகசிந்தாமணி ஆகிய நூல்களில் புலமையுடையவர்.

**கீர்த்தனை :**

வரலாற்றிலும் மொழி ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்த கால்டுவெல் கீர்த்தனை இயற்றுவதிலும் தேர்ச்சியுடையவராகக் காணப்பட்டார். கால்டுவெல் தம் நடைப் பயணத்தின்போது தஞ்சாவூருக்கும் சென்றார். அங்கு வேதநாயக சாஸ்திரியாரிடம் உரையாடினார். அவர்களது உரையாடலில் கீர்த்தனை முக்கிய இடம்பெற்றிருந்தது. இந்த உரையாடலின் தாக்கத்தினாலும் கீர்த்தனைகளை மக்கள் ஆர்வமுடன் பாடிவருவதாலும் கால்டுவெல் கீர்த்தனை இயற்றினார். அக்கீர்த்தனை பின்வருமாறு :

சங்கராபரணம் ரூபகதாளம்

**பல்லவி**

ஏசையா பிளந்த ஆதிமலையே
மோசநாளில் உன்னில் ஒளிப்பேனே

**சரணங்கள்**

**1**

மோசமுள்ள பாவ நோய் முழுதும் என்னில் தீர், ஐயா;
தோஷம் நீக்கும் இரு மருந்தாமே – சொரிந்த உதிரம் நீருமே – ஏசையா

2

இகத்தில் என்னென் செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் தீராதே – மீளாப்பாவரோகமே; – ஏசையா

3

பேரறம் அருந்தவம் பெருமிதமாய்ச் செய்திடினும்
நேரஸ்தரின் பாவம் நீங்குமோ? – நீங்காதே உன்னாலல்லால் – ஏசையா

4

வெறுங்கையோடோடி வந்து, வினை நாசன் பேரருள் கெஞ்சி,
திருச்சிலுவை தஞ்சம் புகுந்து, – தியங்கி அணைத்தே நிற்பேன் – ஏசையா

5

அருளிலிருளோன் ஆனாலும், அபயமுள்ள தன் நீதிக்கே!
கருணை ஊற்றிக் கழுவமாட்டாயோ? – கழுவாயாகிற் சாவேனே – ஏசையா

6

ஜீவனோடே தங்கிலும், தெளிகண் சாவில் மங்கிலும்,
தேவாசனமுன் அஞ்சி நிற்க – தேவலோக மேறிலும், – ஏசையா

இக்கீர்த்தனையை இன்றும் சபைகளில் பாடிவருகின்றனர். இக்கீர்த்தனைக்கு 1938 ஆம் ஆண்டுப் பதிப்பில் **Rock Ages** எனத் தலைப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கொடைக்கானலில் தூய பேதுரு ஆலயம் :**

கால்டுவெல் தமது முதுமையில் கொடைக்கானலில் தங்கியிருந்த போது வழிபடுவதற்கு ஓர் ஆலயம் கட்ட வேண்டும் என்னும் எண்ணம் எழுந்து தமது எண்ணத்தை அரசாங்க அதிகாரியான லெவிங்சு துரையிடம் தெரிவித்தார். லெவிங்சு துரை கால்டுவெல்லின் கருத்துக்கு ஆதரவு கொடுத்ததுடன் ஆலயம் கட்டுவதற்கான இடத்தையும் நன்கொடையையும் அளித்தார். கால்டுவெல்லின் மருமகன் வியாட் **(J.L. Wyatt)** அவர்களின் துணையுடன் கொடைக்கானல் மலையில் **1886** ஆம் ஆண்டு தூய பேதுரு ஆலயத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்தார். ஆலயத்தின் திருத்திறப்பு நாளில் கால்டுவெல் சிறந்ததொரு அருளுரையை ஆற்றினார்.

## இறுதிக்காலம்

ஐம்பத்து மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டில் இறைப்பணியாற்றிய பேராயர் கால்டுவெல், உடல் தளர்ச்சியுற்றதன் காரணமாக சென்னைப் பேராயரிடம் தமது நிலையினைக் கூறி, 1891 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் நாள் தம் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் இடையன்குடியிலிருந்து தமது மனைவியுடன் கொடைக்கானல் சென்றார். அப்போது கொடைக்கானலுக்கு ஒழுங்கான பாதை கிடையாது. எனினும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்து கொடைக்கானலைச் சென்றடைந்தார். அங்குள்ள தூய பேதுரு ஆலயத்தின் வழிபாடுகளில் கலந்து கொண்டார். தமது தந்தையாருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதை அறிந்த மகள் ஆடிங்டன் கொடைக்கானல் வந்து தம் தந்தையாரை நன்கு கவனித்துக் கொண்டார். அத்துடன் திருச்சியிலிருந்து கால்டுவெல்லின் மருமகன் வியட் என்பவரும் உடனிருந்தார். இறைவனின் அழைப்பின்படி கால்டுவெல் 1891ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28ஆம் நாள் கொடைக்கானலில் காலமானார்.

அவரது உடல் கொடைக்கானல் மலையிலிருந்து மலையடிவாரம் வரை பேழையில் வைத்து சுமந்து செல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து மாட்டுவண்டியின் மூலம் இரயில் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. நண்பகலில் வந்த இரயில் வண்டியில் அவரது உடலை ஏற்றினர். இரயில் மாலை நேரத்தில் திருநெல்வேலி சென்றடைந்தது. கால்டுவெல்லின் உடலை பாளையங்கோட்டையிலுள்ள ஆலயத்திற்கு எடுத்துச்சென்று இறைவேண்டுதல் செய்தனர். அன்று இரவு முழுவதும் அவரது உடல் ஆலயத்திலே வைக்கப்பட்டிருந்தது. மறுநாள் காலையில் பேழையை வண்டியிலேற்றி இடையன்குடிக்கு எடுத்துச் சென்றனர். அவ்வண்டி மறுநாள் காலையில் இடையன்குடியைச் சென்றடைந்தது. திருச்சியிலுள்ள மருமகன் இடையன்குடி வந்து கால்டுவெல்லின் அடக்கத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். கால்டுவெல்லின் உடல், அவரால் கட்டப்பட்ட தேவாலயப் பீடத்தின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது நினைவாக சென்னையிலுள்ள தூய ஜார்ஜ் ஆலயத்தில் நினைவுக்கல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கால்டுவெல்லின் கல்லறையின் மீது எழுதப்பட்டுள்ள வாக்கியங்கள் பின்வருமாறு :

## பரிசுத்த நினைவு கூருதல்

மேன்மைமிகு பேரருள் திரு. இராபர்ட் கால்டுவெல் D.D., L.L.D.,

சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினர். 53 ஆண்டுகள் தமது ஆற்றல் மிக்க திறமைகளை நற்செய்திப் பரப்புவதற்காகவும் கிறிஸ்துவின் திருச்சபையைக் கட்டி எழுப்பவும் திருநெல்வேலித் தமிழ் மக்கள் நல்வாழ்வுக்காகவும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். இறுதி 14 ஆண்டுகள் சென்னைப் பேராயருக்கு உதவிப் பேராயராகவும் பொறுப்பேற்றிருந்தார். கல்வியிற் சிறந்த மேதை. மொழியியல் அறிஞர், தமிழ் மக்களுடன் நெருங்கி அன்புடன் பழகியவர். தமிழர் தம் வரலாறு மொழிபழக்க வழக்கங்கள் நன்கறிந்தவர். தலைசிறந்த எழுத்தாளர், மக்கள் பாராட்டைப் பெற்றவர், ஊழிய அழைப்பிற்கும் வலிமைக்கும் உயர்வு சேர்த்தவர். தாய்நாட்டின் அருள்தொண்டர்களின் நலனுக்காக உழைத்தவர்.

தி இலண்டன் டைம்ஸ் என்னும் செய்தித்தாள் 1981ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் நாள் கால்டுவெல் குறித்துப் பின்வரும் செய்திகளை வெளியிட்டிருந்தது :

திருநெல்வேலிப் பேராயர் பேரருள்திரு. டாக்டர் இராபர்ட் கால்டுவெல் மறைவில் நெல்லைக் கிறித்தவ சமுதாயம் உயர்தனிச் சிறப்புகள் மிக்க தங்கள் தந்தையை இழந்து வருந்துகிறது. இந்தியக் கல்வித்துறை தனித்தன்மையுடைய புதியதொரு பாதையில் பணி செய்த கல்வியாளரை இழந்து விட்டது. சுவிஷேச ஆர்வம் கொண்ட திருச்சபைத் தலைவராக மட்டுமல்லாது, தனித்ததொரு கல்வித்துறையில் ஈடு இணையற்ற மேதையாகத் திகழ்ந்த கால்டுவெல் அவர்கள், அரை நூற்றாண்டிற்கும் மேலாக இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களில் முதன்மையான இடத்தைப் பெற்றவராக விளங்கினார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மனுக்குலத்திற்கு அவர் ஆற்றிய தொண்டுகளினால் அனைவராலும் போற்றப்படுகிறார். சென்ற மாதம் கொடைக்கானலில் நடைபெற்ற அவரது மறைவு வழிபாட்டில் திருநெல்வேலியில் கிறித்தவர்களின் எண்ணிக்கையை

ஆறாயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தியவர் கால்டுவெல் என்று புகழாரம் சூட்டப்பட்டது. தென்னிந்திய மொழிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதைக் கண்டறிந்தவர் என்னும் சிறப்பே இவர் புகழ் எங்கும் பரவச் செய்தது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் இவரது நூல் 1856 இல் வெளியிடப்பட்டது. மேலைநாட்டு மொழியியல் அறிஞர்களுக்கு அன்றும் இன்றும் இது ஒரு புதிய கண்டுபிடிப்பு. 1875இல் இந்நூலின் இரண்டாவது பதிப்பு வெளியானது. போட்டியாளரும் பின்செல்லுவாரும் இன்றி இவரே அத்துறையின் நிலையான அதிகாரம் பெற்றவராக விளங்குகிறார். இக்கால இலக்கியத் துறையில் இவரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றும் நிலையான அழியாத அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இந்த இலக்கிய முயற்சியிலும் சமயப் பணிகளிலும் சோர்வின்றிப் பணிசெய்த கால்டுவெல் அவர்களை அனைத்துப் பணிகளும் இறைவனுக்குச் செய்யும் உண்மையான சேவைகளே என்னும் நம்பிக்கை ஊக்குவித்தது. வேதாகமத் தமிழ் மொழி பெயர்ப்பைத் திருத்தியமைக்க பன்னிரெண்டாண்டுகள் உழைத்தார். அவரது இலக்கியப் பணிகளில் அவருக்கு முழு நிறைவும் மகிழ்வும் தந்த பணிகள் தமிழ் வேதாகம சீரமைப்பும் தமிழில் அனைவரும் பயன்படுத்தும் ஜெப புத்தகத்தைத் திருத்தி வெளியிட்டதும் ஆகும்.

கால்டுவெல்லின் பணிகளைப் பாராட்டி ஆங்கில நாட்டு முதலமைச்சர் கிளாட்சன் அவர்கள், மன்னரின் நிதியிலிருந்து 150 பவுன் அவரது மனைவி எலிசா அம்மையார்க்கு வழங்கினார். 1899 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள் பேராயர் கால்டுவெல்லின் மனைவி எலிசா அம்மையார் காலமானார்கள். அவரது உடல் கால்டுவெல்லின் கல்லறைக்கு அருகில் அடக்கம் பண்ணப்பட்டது.

**நினைவுச் சின்னங்கள்**

கால்டுவெல்லை நினைவுகூரும் சின்னங்களாக அவரால் கட்டப்பட்ட இடையன்குடியிலுள்ள ஆலயமும், தூத்துக்குடியில் அமைந்துள்ள கால்டுவெல் மேனிலைப் பள்ளியும், இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது சென்னைப் பேராயத்தால் வழங்கப்பட்டு தமிழக அரசால் மெரினா கடற்கரையில் நிறுவப்பட்டபேராயர் இராபர்ட்

கால்டுவெல்லின் திருவுருவச் சிலையும் உள்ளன. இத்துடன் அவரால் எழுதப்பட்டுள்ள நூல்களும் அவரது நினைவுச் சின்னங்கள் என்பதில் வியப்பில்லை.

கால்டுவெல்லின் மருமகன் எஸ்.பி.ஜி. மிஷனெரி **J.L.** வியாட் **(J.L. Wyatt)** தமது மாமனாரைப் பற்றிப் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்.

பரந்து விரிந்த அறிவுத்திறன் அமையப் பெற்றவர். மரியாதைக்குரிய ஐரோப்பியக் கல்வியாளர், தத்துவ ஞானமும் நடைமுறைச் செயலாற்றும் ஞானமும் அமையப் பெற்றவர். இவர் அரை நூற்றாண்டுக் காலம் திருநெல்வேலியின் தென்கோடிக் கிராமம் ஒன்றில் மக்களுடன் வாழ்ந்து, அம்மக்கள் நன்மைக்காக செலவிடவும், செலவிடப்படவும் தன்னை ஒப்புக்கொடுத்தார். திருநெல்வேலித் திருச்சபை அவருக்குத் திரும்பச் செலுத்த முடியாத அளவிற்கு நன்றிக்கடன்பட்டுள்ளது.

.................

# 2. ஆர். கால்டுவெல்லின் திருநெல்வேலிச்சரித்திரம்

பேராசிரியர் முனைவர் ம.செ. இரபிசிங்

**1.0 முன்னுரை :**

வணிகத்தின் பொருட்டு, மேலை நாட்டவர், குறிப்பாக ஐரோப்பிய நாட்டவர், இந்தியாவோடு தொடர்பு கொண்டு, சூழலால் அரசியலிலும் ஈடுபட்டு, ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு மேல், நாட்டையும் ஆளும் வாய்ப்பையும் பெற்றனர். கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர் தனது தனி ஆற்றலினால் இந்தியாவின் வடமேற்குப் பகுதிவரையிலும், தனது ஆட்சியின் எல்லையை விரிவுப்படுத்தினான். அதன் வாயிலாகத் தன் நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பரப்பினான் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். ஆனால், இந்தியாவுக்கு வருகை தந்த ஐரோப்பியர், குறிப்பாக ஆங்கிலேயர், தம்மொழியையும் பண்பாட்டையும், நாகரிகத்தையும் மட்டுமல்லாமல், கிறித்தவச் சமயத்தையும் பரப்ப முற்பட்டனர். அதன் காரணமாக இன்று தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்தியாவில் பெருமளவில் கிறித்தவர்கள் வாழ்வதற்கு வழிவகுத்தனர்.

உலகின் பல்வேறு பகுதிகளில், சில சமயவாதிகள், வலுக்கட்டாயம், வற்புறுத்தல், அச்சுறுத்தல், சலுகைகள் முதலிய முறைகளைக் கையாண்டு, தம் சமயங்களைப் பரப்பிய நிலைப்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டத் தன்மையில், அன்பு நெறியில், அமைதியான முறையில், அப்பழுக்கற்ற சமயத் தொண்டின் மூலமாகவும், சமூக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதின் மூலமாகவும், சமூக ஏற்றத் தாழ்வை அகற்ற முயன்றதின் வாயிலாகவும், கல்விக் கொடை வழங்கியதின் வாயிலாகவும் கிறித்தவச் சமயத்தைப் பரப்பினர்.

இந்தியாவிற்கு வருகை தந்த கிறித்தவச் சமயத் தொண்டர்களுள் பலர் பிரபத்துவச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகவும், பெரிதும் கற்றவர்களாகவும் திகழ்ந்தனர். இருப்பினும் தாம் வாழ்ந்த செழுமையான பின்புலத்தையோ, உயர்ந்த நிலையையோ, புகழ்மிக்க பல்கலைக் கழகங்களில் பெற்ற உயர்கல்விப் பட்டங்களையோ, சிறிதளவும் மனத்திற்கொள்ளாமல் சாதாரண பாமரர்களோடு பாமரராய், ஏழை எளியவர்களோடு தாமும் ஒருவராய் மிகவும் எளிய வாழ்க்கை முறையையே பின்பற்றிச் சமயத் தொண்டாற்றினர். அவர்தம்

பெருந்தொண்டால், சமயத் துறையில் மட்டுமல்லாமல், தமிழர்தம் சமூக வாழ்க்கை நெறியிலும், பண்பாட்டிலும், கல்வி மேம்பாட்டிலும் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் பெரும் மாற்றங்களையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தினர்.

மேற்குறிப்பிட்ட மேலை நாட்டுக்கிறித்தவச் சமயத்தொண்டர்களுள் பேராயர். டாக்டர். இராபர்ட் கால்டுவெல் தனித்தன்மை வாய்ந்தவர். அவர் ஒரு சிறந்த மொழியியல் அறிஞர், வரலாற்று ஆசிரியர், அகழ்வாராய்ச்சி வல்லுநர், ஆராய்ச்சியாளர், ஆற்றல்மிகு அறிஞர், சமூகத் தொண்டர். அவரது அரும்பெரும் பணிகளால், சமயத்தொண்டால், தமிழ்த் தொண்டால், தமிழும் தமிழரும் மட்டுமல்லாமல், ஏனைய திராவிட மொழிகளும், மொழி பேசும் மக்களும் பெருமை பெற்றனர். வரலாற்று ஆசிரியராகவும், சமூகவியல் அறிஞராகவும், திகழ்ந்த பேராயர் கால்டுவெல் அவர்கள், இயற்றிய திருநெல்வேலி சரித்திரம் எனும் அரிய நூலின் வாயிலாக வெளிப்படும் கருத்துக்கள் பற்றிய ஒரு மதிப்பீடே இக்கட்டுரை.

## 2.0. கருதுகோள்

டாக்டர். கால்டுவெல் எழுதிய திருநெல்வேலி சரித்திரம் ஓர் அரசியல் வரலாற்று நூலாகவும், சமூக வரலாற்று நூலாகவும், சமய வரலாற்று நூலாகவும், சமத்துவக் கோட்பாட்டு நூலாகவும், கருதப்படுகிறது. இக்கூற்றுக்கள் எந்த அளவுக்கு உண்மை என்பதை நோக்குவதே இக்கட்டுரையின் கருதுகோள்.

## 3.0. பேராயர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்

ஸ்காட்லாண்டைச் சார்ந்த பெற்றோருக்கு வடக்கு அயர்லாந்திலுள்ள கிளாடி என்ற ஊரில் பிறந்த கால்டுவெல் அவர்கள் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பட்ட வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலத்திலேயே பல மொழிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதிலும், அதைப் பற்றிய செய்திகளையும் கருத்துக்களையும் சேகரிப்பதிலும், மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். அந்த ஆர்வமே – முயற்சியே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் ஓர் அரிய நூலை எழுதும் நல்வாய்ப்பை நல்கியது.

தனது 24–வது வயதில் சமயத் தொண்டிற்காகச் சென்னைக்கு வந்த பொழுதிலிருந்தே தான் தொண்டாற்ற விழையும் நாடு அல்லது பகுதி பற்றியும் அங்கு வாழும் மக்கள் பற்றியும், அவர்கள் வாழும் சமுதாயம், பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள், பேசும் மொழி ஆகிய பின்புலங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்பினார். எனவே, தொடக்கத்திலிருந்தே, அந்த முயற்சிகளில் பெரிதும் ஈடுபட்டார்.

இன்றைய நூற்றாண்டைக் கணினி யுகம் என்று அழைக்கின்றோம். கணினியின் செயற்பாட்டால், இன்றைய உலகம் **Global Village** என்று அழைக்கப்படும் குவலயக் கிராமமாகச் சுருங்கியுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் தொடர்புகள், அவற்றின் வாயிலான கருத்துப் பரிமாற்றங்கள். அதற்குத் துணை செய்வது மொழி. கணினியின் செயல்பாடுகளுக்குத் துணை செய்வதையும் **Computer language programme language** என்று அழைக்கின்றனர். எனவே பேசும் மொழியின் இன்றியமையாமையை உணர்ந்து கிறித்தவச் சமயக் கருத்துக்களை இயேசு பெருமானின் அறவுரைகளை–அறநெறிகளை மக்களிடையே பரப்ப வந்த டாக்டர். கால்டுவெல், தாம் தொண்டாற்ற தொடர்பு கொள்ள அறக்கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டிய மக்களோடு தொடர்பு கொள்ள அவர்கள் பேசும் மொழியை முதலில் கற்கத் தொடங்கினார்.

பேசுவதற்காகக் கற்ற கால்டுவெல் முன்னரே பிற மொழிகளைக் கற்பதில் ஆர்வமுள்ள கால்டுவெல், தமிழ் கற்கும், தமிழ் மாணவர்களைப் போல, அகர வரிசையிலிருந்தே அடிப்படை இலக்கணங்களிலிருந்து ஐயந்திரிபற முழுமையாகக் கற்றார்.

மொழி கற்பதோடு அமையாமல் அம்மொழிபேசும், மக்களைப் பற்றி, அவர்கள் வாழும் சமுதாயம், அச்சமூகத்தின் அரசியல், சமூக வரலாறுகள் பற்றியும் அறிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் அவற்றைப் பற்றிய ஆய்வுகள் பல நிகழ்த்தினார். அதன் விளைவே, திருநெல்வேலி பற்றிய வரலாற்றுக் களஞ்சியம் எனும் ஓர் அரிய நூல்.

### 3.1. திருநெல்வேலி சரித்திரம்

முதன் முறையாக **1881** ஆம் ஆண்டு **“A Political and General History of the District of Tirunalveli” Madras, upto 1801** எனும்

தலைப்பில் சென்னை மாகாணத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. அதன் பின்னர், தலைப்பை மட்டும் மாற்றி 1882, 1899, 2004 ஆகிய ஆண்டுகளில் மறுபதிப்பாக, தில்லியிலுள்ள ஏசியன் கல்விப் பணிமன்றம் சார்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் வெளிவந்துள்ளது. ஏற்கெனவே **Evangelistic work among the higher classes in Tirunelvely (1876) Prince wales in Tirunelvely, Records of early history of Tirunelvely Mission.** திருநெல்வேலி சாணார்கள் என்ற தலைப்புகளிலும், திருநெல்வேலி வரலாறு தொடர்பாக வெளியிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்டவற்றோடு, திருநெல்வேலி மாவட்டத்தின் பூகோள அமைப்பு, அதன் அரசியல் வரலாறு, சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு, சமய வரலாறு, மொழி முதலிய பல செய்திகளை உள்ளடக்கிய ஒரு புதிய அரசியல் சமூக வரலாற்று நூலாகவே, திருநெல்வேலி சரித்திரம் என்ற நூலை உருவாக்கியுள்ளார்.

ஆய்வுப் பணியில் கள ஆய்வு **(field work)** என்பது முதுகெலும்பு போன்றது. கள ஆய்வே இந்நூலில் முக்கிய பங்கு வகிக்கிறது. தானே நேரடியாகச் சென்று, அகழ்வாராய்ச்சி ஆய்வாளர்களைப்போல், அகழ் ஆய்வியல் வல்லுனர்களைப்போல், சான்றுகளைத் தேடி அலைந்து சேகரித்து, அவற்றின் அடிப்படையிலேயே தம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்– நிறுவியுள்ளார்.

### 3.1.1. அரசியல் வரலாறு :

தனது சமயப் பணிக்குத் திருநெல்வேலியைத் தேர்ந்தெடுத்ததும், முதற் பணியாக அம்மாவட்டத்தின் பூகோள அமைப்பு, எல்லை, அதன் முன்னைய வரலாறு, இன்றைய நிலை ஆகியவை பற்றிய அனைத்துக் தகவல்களையும் முழுமையாகச் சேரிக்கத் தொடங்கினார். கிடைத்தத் தகவல்களின் அடிப்படையில், அதன் அரசியல் வரலாற்றைத் தெரிந்து கொள்ள முற்பட்டுள்ளார். அதற்காகப் பழைய ஓலைச் சுவடிகள், இலக்கியச் செய்திகள், வரலாற்றுச் சான்றுகள், செப்பேடுகள், திருச்செந்தூர் கோயில் கல்வெட்டு, நாணயங்கள் ஆகியவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றின் மூலமாகக் கிடைத்தத் தகவல்களைச் சான்றாதாரமாகக் கொண்டு நூலை யாத்துள்ளார். பாண்டிய மன்னர் காலத்திலிருந்து ஆற்காட்டு நவாப் காலம், நாயக்க மன்னர்கள் காலம், ஐரோப்பியர் காலம் வரையிலுமுள்ள அரசியல்

வரலாற்றில் திருநெல்வேலி பெற்றிருந்தத் தனி இடத்தைச் சான்றுகள் மூலம் நிரல்படுத்திக் குறிப்பிடுகின்றார். திருநெல்வேலியையும் உட்படுத்தித் தென்பாண்டி நாடு என்று அழைக்கப்பட்டச் செய்தியைக் குறிப்பிடும்போது, அதன் எல்லை, தாம்பிரபரணிக்கும் தெற்கு, குமரி வரையிலும், அதாவது நாஞ்சில் நாடு வரையிலும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார் கால்டுவெல்.

கி.பி. 1744–ல் ஆற்காடு நவாப் ஆட்சிக்காலத்தில் தான் திருநெல்வேலிக்குத் தனிச்சிறப்பு வந்தது என்றும், அது ஒரு மாவட்டமாக அங்கீகரிக்கப்பட்டது என்றும் குறிப்பிடுகின்றார். நாயக்கர் ஆட்சி காலத்தில் திருநெல்வேலி தமிழகத்தின் முக்கியமான நகரங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது என்று கூறுகிறார். மேலும் அவர்களது காலத்தில் பாளையங்கோட்டை பெற்றிருந்த சிறப்பினை முன்னைய ஆட்சிக்காலத்தில் திருநெல்வேலியும் பெற்றிருந்தமையைச் சான்றுகள் வாயிலாக விளக்குகிறார். யூசுப்பின் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களையும் குறிப்பாக டச்சு, போர்த்துகேசியர், ஆங்கிலேயர் ஆகியோர் வருகை வரையிலுமான அரசியல் தொடர்புகளையும், மாற்றங்களையும் புள்ளிவிவரங்களோடு மிகவும் விரிவாக குறிப்பிடுகின்றார். மேலும், திருவிதாங்கூர் மன்னர் திருநெல்வேலியையும் உட்படுத்தி ஆட்சி செய்தமையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கட்டபொம்மன் வரலாற்றையும் எடுத்துரைக்கின்றார். கட்டபொம்மன் நாயக்கன் என்றே சுட்டுகிறார். அவர் நாயக்கர் வம்சத்தைச் சார்ந்தவர் என்பதை உறுதிபடுத்துகின்றார்.

புலித்தேவனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் முழுமையாக விளக்கிக் கூறியுள்ளார்.

இவ்வாறு, திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் வரலாற்றைத் தனக்குக் கிடைத்தச் சான்றாதாரங்கள் மூலம், ஒரு சிறந்த அரசியல் வரலாற்று ஆசிரியர் போல் விரிவாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார் கால்டுவெல்.

### 3.1.2. சமூக வரலாறு

திருநெல்வேலியில் வாழ்ந்த மக்களைப் பற்றியும், அவர்கள் வாழ்ந்த, சமுதாயம் பின்புலத்தைக் குறித்தும் விரிவாக எழுதியுள்ளார். வேளாளர், சாணார், மறவர்கள், ஆதிதிராவிடர்களாகிய பள்ளர், பறையர், கடலோரப் பகுதிகளில் வாழும் பரவர் ஆகியோரைப் பற்றி ஒரு சமூக வரலாற்று நூலாகத் திருநெல்வேலி சரித்திரம் எனும் நூல் திகழ்கிறது. மேற்குறிப்பிட்ட சமூகங்களுக்கிடையே நிலவி வந்த ஏற்றத் தாழ்வுகளையும், காழ்ப்பு வெறுப்புக்களையும், மோதல்களையும் ஒரு சமூகவியல் ஆய்வாளனாக ஆய்வு செய்து விளக்கி எழுதியுள்ளார். கால்டுவெல் வேளாளர் சோழ நாட்டிலிருந்தும், சாணார் இலங்கையிலிருந்தும், மறவர் இராமநாதபுரத்திலிருந்தும் அதிக அளவில் குடிபெயர்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

பறை : “Drum” ஒலிப்பவர் பறையர் என்றும், பள்ளமான இடங்களான வயல்களில் வேலை செய்பவர்கள் பள்ளர்கள் என்றும் பயிரிடுவதற்கான வெள்ளம் – வெள்ளப் பகுதி என்பதின் அடிப்படையிலிருந்துதான் வேளாளர் என்று அழைக்கப்பட்டனர் என்றும் குறிப்பிடுகின்றார்.

செய்யும் தொழிலின் அடிப்படையில் மக்கள் அழைக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்பட்டதாகவும், குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டதாகவும் ஒரு சமூகவியல் பார்வையில் செய்திகளை விரிவாக விளக்கியுள்ளார்.

சமீந்தார் முறையில் மக்கள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதற்கு எட்டயபுரம் சமூகத்தாரைப் பற்றியச் செய்திகளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார்.

உழைக்கும் வர்க்கம் எந்த வகையில் பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ளனர் என்றும், வசதிபடைத்த மேல் மட்டத்திலுள்ள சாதியைச் சார்ந்தவர்கள் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் சுரண்டுகிறார்கள் என்றும், ஒரு பொதுவுடைமை வாதியைப் போல் கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். மேலும், தாமிரபரணி ஆற்றோரமாக வாழும் மக்களின் வாழ்க்கை முறையையும் விளக்கி எழுதியுள்ளார்.

### 3.1.3. சமய வரலாறு

போர்த்துகீசியர் வருகைக்குப் பின்னர், உரோமன் கத்தோலிக்க, பாதிரிமார்களால், கிறித்தவச் சமயம் திருநெல்வேலிப் பகுதிகளில் காலூன்றியது. திருநெல்வேலியைச் சார்ந்த பரவர் என்று அழைக்கப்படும் மீனவர்கள்தான் முதன் முதலாக 1532–இல் கொச்சியில் கிறித்துவ மதத்தைத் தழுவினர் என்றும், அதன்பின் திருநெல்வேலியிலிருந்து, தூத்துக்குடி வரையிலுமுள்ள கடலோரப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் பெருமளவில் கத்தோலிக்கக் கிறித்துவச் சமயத்தில் சேர்ந்தனர் என்றும் சான்றுகள் அடிப்படையில் கால்டுவெல் குறிப்பிடுகின்றனர்.

பிரான்சிஸ் சேவியர் கி.பி. 1542 முதல் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கடலோரப் பகுதி மக்களிடையே மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் துணையுடன் கிறித்துவ மதத்தைப் பரப்பியமையை வெளிப்படுத்துகின்றார்.

சேவியர் தமிழ் மொழியைக் கற்பதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்றும், கடைசி வரையிலும் தமிழே பேசவில்லை என்றும் குறிப்பிடும் கால்டுவெல், தமிழ் கற்பதற்குத் தாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், தமிழ் கற்றமையால் பாமர மக்களோடு உறவாடி மகிழ்ந்தமையையும் எடுத்து இயம்பியுள்ளார்.

கிறித்துவச் சமயக் கருத்துக்களையும் இயேசுவின் அறிவுரைகளையும், ஏறத்தாழ 30 கிராமங்களுக்குச்சென்று, விழாக்காலங்களில் துண்டு பிரசுரங்கள் மூலம் சேவியர் பிரச்சாரம் செய்தார். எட்டயபுரம் சமீந்தாருடைய காமய்யா நாயக்கன் பட்டியிலும் 1660–இல் இந்துக்களைக் கிறித்துவச் சமயம் தழுவச் செய்தார் சேவியர் என்ற செய்தியையும் தெரிவிக்கிறார் கால்டுவெல்.

மேலும், பெஸ்கி என்று அழைக்கப்படும் வீரமாமுனிவரின் கிறித்துவச் சமயத் தொண்டினையும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்டச் செய்திகள் முழுவதும், அவர்கள் காலத்து அவர்கள், சமயத் தொண்டாற்றிய ஆலயங்களிலுள்ள கற்களில் பொறித்த எழுத்துக்களையே சான்றாதாரங்களாகக் கொண்டு கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

கிறித்துவச் சமயத்தைப் பரப்பிய சத்தோலிக்க பாதிரிமார்கள் ஒருவர் பின் ஒருவர் இறந்த பின்னர், கோவாவிலிருந்து இந்தியர்களாகிய பாதிரிமார் திருநெல்வேலிக்கு வந்து, சமயத்தொண்டாற்றியமையையும் விளக்கி எழுதியுள்ளார்.

L.M.S. என்று அழைக்கப்படும் **London Missionary Society 1780**-ஆம் ஆண்டு, தஞ்சாவூரிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தச் செய்தியைக் குறிப்பிடுவதோடு **40** பேர் கிறித்தவர்களாக மாறினார்கள் என்று தெரிவிக்கிறார். மதம் மாறியவர்களுள், குளோரின்டா **(Clorinda)** என்ற பெண், இரண்டு ஆங்கிலேயரின் உதவியால், பாளையங்கோட்டையில் ஒரு தேவாலயத்தை நிறுவினார் என்றும், அதுதான் திருநெல்வேலி வட்டாரத்தில் அமைக்கப்பட்ட முதல் தேவாலயம் என்ற செய்தியையும் தான் நூலில் பதித்துள்ளார். இவ்வாலயம் **1785**—ஆம் ஆண்டு தான் சுவார்ட்ஸ் **(Swarts)** என்பவரால் வழிபாட்டிற்கு அனுமதிக்கப்பட்டது. இதன் பின்னர், மிகுதியானவர்கள் கிறித்தவர்களாக மாறியமையால், ஏற்பட்ட எண்ணிக்கை மிகுதியின் அடிப்படையில் தஞ்சாவூரிலிருந்து சத்தியநாதன் என்னும் போதகர் அனுப்பப்பட்டார் என்ற செய்தியையும் குறிப்பிடுகின்றார். அதன்பின்னர், நாளுக்கு நாள் எண்ணிக்கை மிகுந்தமையால் இங்கிலாந்திலிருந்தும் பாதிரிமார்கள் வரவழைக்கப்பட்டனர்.

பின்னர், திருநெல்வேலி பகுதியில் பெருமளவில் வாழ்ந்த சானார்கள் முதல் முறையாக **1797**—இல் **Protestant** கிறித்தவர்களாக மதம் மாறினர். அதன்பின்னர் படிப்படியாகச் சாணார்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் கிறித்தவ மதம் பரவியது என்று குறிப்பிடுகிறார் கால்டுவெல்.

கடலோரப் பரவர்கள் ஒட்டு மொத்தமாகக் கத்தோலிக்கக் கிறித்தவர்களாக மதம் மாறியதுபோல், கால்டுவெல்லின் அயராத உழைப்பால், இடையன் குடி, நாசரேத், இட்டமொழி, மெஞ்ஞானபுரம், திசையன்விளை ஆகிய இடங்களில் பெருமளவில் சாணார்கள் மதம் மாறினர்.

இடையன் குடியில், கால்டுவெல் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டார். கிறித்தவர்களின் சிறப்பு குடியிருப்பிற்கு இடையன்குடியை ஒரு சிறந்த முன்மாதிரியாக உருவாக்கிய பெருமை, கால்டுவெல்

அவர்களுக்குண்டு. கால்டுவெல்லால் கட்டப்பட்ட இடையன்குடி கோயிலும், கிறித்தவக் கோயில் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. அவரது கல்லறையும் இடையன் குடியில்தான் இடம்பெற்றுள்ளது.

**4.0.** முடிவுரை :

வரலாற்று ஆசிரியராகவும், சமூகவியலாளராகவும், அகழ்வாராய்ச்சி வல்லுநராகவும், மொழியியல் அறிஞராகவும் சமூகத்தொண்டராகவும், சமயத் தொண்டராகவும், தலைமைப் பேராயராகவும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் சிறப்புறத் திகழ்ந்தார் கால்டுவெல். இதற்குச் சான்று பகிர்கின்றது அவர் எழுதிய திருநெல்வேலி சரித்திரம்.

கால்டுவெல் ஐயரின் இத்தகைய சாதனைக்குப் பெருந்துணையாக அமைந்தவர், அவரது துணைவியார் எலிசபெத் மால்டன். திருவனந்தபுரத்தில் கிறித்தவச் சமயத் தொண்டாற்றிய பாதிரியாரின் மகளான எலிசபெத்திற்குத் தமிழ் நன்கு தெரியும். ஏறத்தாழ 40 ஆண்டுகளாக நாகர்கோயிலிலும் திருநெல்வேலியிலும் தமிழ் மக்களோடு இரண்டற கலந்து, கிறித்தவச் சமயக் கருத்துக்களை எடுத்துரைத்துத் தொண்டாற்றிய பெருமையும், கால்டுவெல்லின் திருநெல்வேலி சரித்திரம் என்ற நூலுக்கு ஒரு பின்புலமாக அமைந்தது எனினும் மிகையாகா.

..................

## 3.நற்கருணைத் தியான மாலை - ஒரு பார்வை

அருள்திரு. இரா.செ.டென்சன் எக்டர்

முன்னுரை :

சீர்த்திருத்தத் திருச்சபை திருவருட்சாதனங்களாக ஏற்றிருப்பவை, திருமுழுக்கும், திருவிருந்தும். இவையிரண்டுமே முறையே மீட்பர் இயேசு கிறிஸ்து பங்கேற்றது. நிறுவியது. இவற்றுள் திருவிருந்து என்கின்ற திருவருட்சாதனத்தில் ஒருவர் பங்கேற்கும் முன்பும் பங்கேற்கும் போதும், பங்கேற்ற பின்னும் எவ்வாறு அதில் நிலைத்திருக்க வேண்டும் என்பதைக் குறித்துத் தியான மாலை எனும் இந்நூலில் தெளிவாகக் கால்டுவெல் பேராயர் விளக்கியுள்ளார். எத்தகைய ஆயத்தத்தோடும் உணர்வோடும் திருவிருந்தில் பங்கேற்போர், அதில் முழுமனதுடன் ஈடுபட வேண்டுமென்பதை இந்நூலின் வழி எடுத்துக்காட்டாகத் தருகிறார்.

இக்கட்டுரையில் நூல் தரும் செய்திகள் இன்றைக்கு அவற்றின் பொருத்தம் பற்றிய திறன் ஆகியவை இடம் பெறுகின்றன. இந்நூல் முழுவதிலும் கால்டுவெல் ஐயர் மொழிபெயர்ப்பிலிருந்து தம் விவிலிய மறை மேற்கோள்களை எடுத்தாள்கிறார். அக்காலத்து மொழிநடைக்கேற்ப வடமொழிச் சொற்கள் பெருமளவு இடம்பெற்றுள்ளன.

பச்சாதாபத் தியானங்கள்

ஆண்டவரின் திருவிருந்து பரிமாறப்படுகிறதற்கு முன்னுள்ள கிழமைகளில் ஒருவர் தம்மையே ஆய்வு செய்வதற்கும், இறையன்பைப் பெருக்கிக் கொள்வதற்கும் உதவியாகத் தியானங்கள் முதலாவது அமைந்துள்ளன. இப்பகுதிக்குப் 'பச்சாதாபத் தியானங்கள்' என்பது பெயர். மொத்தம் ஐந்து தியானங்களைக் கொண்டுள்ளது. இந்த ஐந்து தியானங்களும் தொடங்கும் முன் ஓர் இறைவேண்டலும், ஐந்து தியானங்களும், முடிவில் ஓர் இறைவேண்டலும் இடம் பெற்றுள்ளன.

**ஆயத்த செபம்** : ஒருவர் தாம் உணர்வதற்குங்கூட கடவுளின் உதவியையே நாடவேண்டியுள்ளது என்கின்ற மானுடத்தின் கையறு நிலையை இந்த செபம் உணர்த்துகிறது. "நீர் என் கண்களைத் திறந்து என் இருதயத்தை இயங்கச் செய்யாவிட்டால் என் பாவங்களை

அறிந்துணருகிறதற்குத் திராணியற்றவனாயிருப்பேன்" என்பது இதனை எடுத்துரைக்கிறது. கடவுளே இந்தத் தீய நிலையிலிருந்து ஒருவரைத் தூய்மைப்படுத்திட வேண்டும் என்பதை "நீர் உம்முடைய ஆவியினாலே என்னைச் சுத்திகரியாவிட்டால் அசுத்தமும் தீவினையும் என்னில் நிலைக்கும். ஆகையால் என் தேவனே, உம்மிடத்தில் வருகிறேன். நீரே என் கண்களைத் திறந்து என் இருதயத்தை இயங்கச் செய்து எனக்கு விசுவாசந்தந்து, உம்முடைய ஆவியின் ஏவுதலால் என்னைச் சுத்திகரித்தருளும் என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒருவர் தாம் பாவநிலையிலிருப்பதை உணரவும் அதிலிருந்து வெளிவருவதற்கும் இறையுதவியை நாடி நிற்பதாக இந்த இறைவேண்டல் அமைகிறது. இந்த இறைவேண்டலுக்குப்பின் ஐந்து தியானங்கள் இடம் பெற்றுள்ளன. பச்சாதாபம் என்பதற்குத் துயரமடைதல் என்பது பொருள். கடவுளிடம் தம் நிலையுணர உதவி நாடி அதனை உணர்வதற்குதவியாக இந்தத் தியானங்கள் அமைகின்றன. திருப்பாடல்கள் 40:12, 25:11, 51:4, யோபு 29:2, 1கொரிந்தியர் 11:31 ஆகிய திருமொழிகளைத் தியானத்துக்குதவியாக எடுத்தாண்டுள்ளார். தியானங்களின் அழுத்தங்களாக சுட்டக்கூடியவை வருமாறு.

1. உமது கையிலும், உமது காலிலும் கடாவின ஆணி என் பாவமே! உமது திருச்சிரசில் சூட்டின முள்முடி என் பாவமே! உமது விலாவில் குத்துருவின ஈட்டி என் பாவமே! இயேசுவே, நீர் சிலுவையில் அறையுண்டு வதைக்கப்பட்ட நிஷ்டூரத்தை நான் பார்த்து, எந்தப் பாவத்தையும் வெறுத்து ஒழித்து விடுவேனாக.

2. நான் கிறிஸ்து இரட்சகருக்குப் பின் செல்லுகின்றவனாய் அவரை உலகத்தாருக்கு முன்பாக அறிக்கையிட்டும் நான் துன்மார்க்கனாய் நடந்தால் உலகத்தார் என் துன்மார்க்கத்தைக் கண்டு அவரைத் தூஷிப்பார்களென்று அறிந்தும், என் பாவங்களினாலே என் இரட்சகருக்கு அவ கீர்த்தியுண்டாக்கினேன்.

3. எனக்கொத்த மனிதருக்கு நேராக நடந்ததினாலே நான் குற்றமுள்ளவனாயிருக்கிறேன். ஆகிலும் தேவரீருடைய பிரமாணங்களை நான் மீறி உமக்கு விரோதியும் நன்றி கெட்டவனுமாய்ப் போனதே என் பேரில் விஷேித்த குற்றம்.

**4.** நான் குணப்பட்டு பக்தியுள்ளவனாகி கர்த்தருடைய வழிகளில் நடக்கும் ஆரம்பத்தில் எனக்குண்டான சமாதானமும், பேரின்பமும் எவ்வளவு அதிகம்?..... எங்கே போனாலும் எது நேரிட்டாலும் என் பிதாவின் அன்பை கண்டுணர்ந்து அவரைத் துதிப்பேன். அப்பொழுது ஒரு துக்கமும் ஒரு குறைவும் எனக்கில்லை.... உலக விசாரங்களும், வியாதி துன்பங்களும் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. என் பிதாவுக்குப் பிரியமாய் நடக்க வேண்டுமென்கிற கவலையே எனக்குக் கவலையாயிருந்தது. ஐயோ! என் பாவத்தினாலே இந்த நன்மைகளை இழந்து விட்டேன்.

**5.** என் தேவனே, உமக்கு விரோதமாய் நான் செய்த பாவங்கள் அனைத்தையும் உம்மிடத்தில் அறிக்கையிட்டு உம்முடைய கோபாக்கினைக்குப் பாத்திரனாயிருக்கிறேன் என்று ஒத்துக்கொண்டு நானே எண்ணி நியாயந்தீர்த்துத் தாழ்த்தி உம்முடைய பாதத்தில் விழுந்து பணிகிறேன்.

தியான முறைமைக்கேற்ப இவை ஒருவர் தம்முடனும், கடவுளுடனும் பேசுவதற்கேற்ப அமைந்துள்ளன. ஒவ்வொரு தியானத்தின் நிறைவிலும் ஒரு நம்பிக்கையின் கூற்று இடம்பெற்றுள்ளது. தியானங்களுக்கு முன்வைத்த இறைவேண்டல் பெற்றவராம் கடவுளை விளித்தும் தூய ஆவியாரின் உதவி நாடியும் கிறிஸ்துவின் வழியாகவும் ஏறெடுக்குமாறு அமைந்துள்ளது. ஐந்து தியானங்களுக்கும் பின்னமைந்துள்ள இறைவேண்டல் “அன்புள்ள இயேசுவே” என்றமைந்து மீட்பரை நோக்கியமைந்த மன்றாட்டாக உள்ளது. நீர் குணப்படுதலையும் பாவ மன்னிப்பையும் இஸ்ரவேலருக்குத் தந்தருளத்தக்கதாக, பிதாவானவர் உம்மை அதிபதியாகவும், இரட்சகராகவும் உயர்த்தினார். இந்த நன்மைகள் ஏழை அடியேனுக்குக் கிடைக்க வேண்டுமென்று இப்போது உம்மிடத்தில் வருகிறேன்” என்றமைந்து “எங்களுக்காகப் பரிந்து பேசுகிறவரே! இயேசுவே! உம்முடைய பரிசுத்த ஆவியைக் கொண்டு என்னை உமது பிதாவினிடத்தில் சேர்த்துக் கொள்ளும்” என்று தொடர்கிறது. இது ஓர் இறைவேண்டல். இயேசுவை விளித்துத் தொடங்கினும் எவ்வாறு மூவொரு கடவுளின் மீதான பற்றுறுதியை அது வெளிப்படுத்த முடியும் என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

**விசுவாசத் தியானங்கள்**

திருவிருந்தைப் பெறுவதற்கு ஆயத்தமாக ஒருவர் கடவுளின் உதவியுடன் தாம் பாவி என்பதை உணர்ந்து தாம் செய்த பாவங்களுக்காக வருந்துவதற்கு உதவியாகப் பச்சாதாபத்தியானங்கள் அமைந்தன. விசுவாசத் தியானங்கள் என்பவை கடவுளுடைய இரக்கத்தையும் இயேசு கிறிஸ்துவினுடைய மீட்பையும் அவர் நாம் ஈடேறுவதற்காகச் செய்து நிறைவேற்றிய மீட்புச் செயல்களையும் கைவிடப்பெற்ற நிலையிலிருக்கும் பாவிகளாகிய நம்மை ஏற்றுக்கொள்ளுகிற அவர் இரக்கத்தையும் பற்றியவை. இப்பிரிவில் மொத்தம் ஐந்து தியானங்கள் உள்ளன. திருப்பாடல்கள் 31:19, 42:11, 61:2, 2கொரிந்தியர் 5:21, எபிரேயர் 2:9 ஆகிய திருமொழிகளை இப்பகுதிக்காக எடுத்தாண்டுள்ளார்.

ஒருவர் திருவிருந்தில் சேருவதற்கு முன் தாம் கைவிடப்பெற்ற பாவியென்பதையுணர்கிறார். ஆனால் அவரழிந்து போக வேண்டியதில்லை. இயேசு கிறிஸ்துவில் தாம் புதுவாழ்வினைப் பெற முடியுமென்பதை நம்ப வேண்டும், ஏற்க வேண்டும். இதற்குதவியாகவே இந்த விசுவாசத் தியானங்கள் அமைகின்றன. இந்தத் தியானங்களின் அழுத்தங்களாகச் சுட்டக் கூடியவை.

**1.** தேவ அன்பு அநேக வகையாய் எனக்குக் கட்டளையிடப் பட்டிருக்கின்றது. எனக்குக் கிடைத்திருக்கிற லவுசீக சவுக்கியங்களையும், ஆத்தும நன்மைகளையும் இத்தனையென்று சொல்ல யாராலே கூடும்! நான் மரணத்துக்குப் பாத்திரனாய் இருந்தும் தேவரீருடைய பொறுமையினாலே இதுவரைக்கும் உயிரோடிருக்கிறேன்... பாவத்தையும், அசுத்தத்தையும் நீக்கும்படி திறக்கப்பட்ட ஊற்றில் சேருகிறதற்கு இன்னம் எனக்கு இடமுண்டு.

**2.** நான் செய்த திரளான பாவங்களை மாத்திரம் நினைத்துக் கொண்டு, என் பாவ நாசரை மறக்கலாமா? எந்தப் பாவங்களையும் நீக்கி என்னை விடுவிக்க இயேசு இரட்சகருக்குச் சத்துவமும், சித்தமும் உண்டே. காணாத கண்ணும், கேளாத காதும், ஊன்றாத காலும், தீராத நோயும், உயிரற்ற பிரேதமும் என் நிலைமைக்கு நிகரே! நீர் பூர்வ காலத்தில் இவ்வுலகத்திலே சஞ்சரித்த போது குறைவுள்ளவர்கள் உம்மிடத்தில் வந்து உமது கிருபையை மன்றாடின வகையாய் நானும் உம்முடைய பாதத்தில் விழுந்து மன்றாடுகிறேன்.

3. இயேசுவே நான் பாவத்தினாலே கெட்டுப்போக ஏதுவாயிருக்கும் பொழுது, உமது இரக்கத்தினாலே மோசத்துக்கு நீங்கி இரட்சிப்படைந்தேன்... இயேசுவே சோதனைகளும், துன்பங்களும் நேரிடும் போதெல்லாம், இந்த அடைக்கல ஸ்தலத்தில் என்னைக் கொண்டு வந்துவிடும். இவ்விடத்தில் மாத்திரம் மோசத்திற்கு இடமில்லை. என் இரட்சகர் மாறாதவரும் அசைவற்றவருமாமே. நேற்றும், இன்றும் என்றென்றைக்கும் ஒரே சீராயிருக்கிறார்.

4. பாவம் இவ்வளவு கொடிதென்று கிறிஸ்துவின் சிலுவை பாடுகளினாலேயே அறிந்திருக்கிறேன். பாவத்தின் இன்பத்தையும், அதினாலுண்டாகும் அற்பப் பிரயோசனங்களையும் புத்தியீனர் பார்த்து மயங்கட்டும், நானோ என் இரட்சகர் எனக்காகப் பாவமாக்கபட்டதையும் அவரடைந்து சிலுவை பாடுகளையும் பார்த்துத் தியானித்துப் பாவத்தை வெறுத்துவிடுவேன்.

5. இயேசுவே, உம்முடைய திருவிருந்தை நான் சேரும்போது எனக்காக நீர் பட்டபாடுகளையும், எனக்காக நீர் நிறைவேற்றின நீதியையும் நான் விசுவாசித்து, உம்முடைய மரணத்தையும் நீர் அடைந்த மகிமையையும் நன்றியறிதலோடே நினைத்துவரும்படி பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவி செய்வாரா. இந்த விசேஷங்களையெல்லாவற்றையும் நான் முழுப்பக்தியோடே விசுவாசித்து, பாவத்தைப் பரிகரிக்கவும், உம்முடைய சன்னிதியில் பிரவேசிக்கிறதற்கு ஆயத்தம் பண்ணிக் கொள்ளவும் தேவரீர் எனக்குக் கிருபை செய்தருளும்.

இந்த ஐந்து தியானங்களும், கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றினாலே கிடைக்கப் பெற்றிருக்கும் விலையிலா மீட்பை முழுவதும் நம்பி அவரிடம் சேர்வதற்கு உறுதுணையாக உள்ளன. ஒருவர் தாம் எந்த அளவுக்குப் பாவம் செய்து கடவுளைவிட்டு விலகி அவரிடத்தில் சேர்வதற்குத் தகுதியற்றவர் என்பதை உண்மையாக உணர வேண்டுமோ அதே நிலையில் கிறிஸ்து தம் அருளிச் செயலால் தம்மை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதையும் முழுமையாக ஐயத்திற்கிடமின்றி நம்ப வேண்டுமென்று இத்தியானங்கள் கற்பிக்கின்றன. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாக அமைகின்ற மீட்பு என்பது தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தப் பெற்றுத் திருத்தஞ் செய்யப்பெற வேண்டியது என்பதை இவற்றில் கால்டுவெல் ஐயர் உணர்த்துகிறார்.

இந்த ஐந்து தியானங்களையும் தொடர்ந்து பற்றுறுதியேற்பட ஓர் இறைவேண்டல் இடம் பெறுகின்றது. இது தந்தையாம் கடவுளை விளித்தும், இருளின் அதிகாரிகளோடே போராடத் தக்க பலம் வேண்டியும் விசுவாசத்திலே பெலன் கொண்டு உம்முடைய பரிசுத்த ஆவியின் ஒத்தாசையை எனக்குத் தாரும் என்று வேண்டியும் இயேசு கிறிஸ்துவின் பொருட்டு இந்த இறைவேண்டல் நிறைவு பெறுகிறது. பற்றுறுதியறிக்கையின் தொடர்கள் இறைவேண்டல் முழுமையும் விரிவடைவதைக் காணமுடிகிறது.

இருளின் ஆற்றல்களுடன் போர் செய்வதற்கான வலிமையை நாம் பாவிகள் என்பதை ஏற்று கிறிஸ்துவின் இரக்கம் நாடி அவருடன் சேர்ந்து திருவிருந்தில் பங்கேற்கும் போது பெறுகிறோம் என்பது பக்தி வாழ்க்கை செயல்பாட்டுக்குரியதாவதை விளக்குவதாக அமைகிறது.

**தேவ சிநேகத் தியானங்கள் :**

இப்பகுதியில் பாவங்களையுணர்ந்த ஒருவர் அதற்காக மனம் வருந்துகிறார். கிறிஸ்துவிடம் நல் மனம் பொருந்துகிறார். கிறிஸ்து அருளியிருக்கும் மீட்புக்காக அவரைப் போற்றுகிறார். அடுத்தபடியாக அவருடைய உறுப்புகளாக இருக்கும் சகோதர சகோதரிகளிடம் அன்பாயிருக்குமாறு ஏவி விடுவதற்குரிய தியானங்களாக இவை அமைகின்றன. மொத்தம் நான்கு தியானங்களும் ஒரு மன்றாட்டுமாக இப்பகுதி அமைகின்றது. இடம் பெற்றுள்ள திருமொழிகள் 1 யோவான் 3:1, 1பேதுரு 1:8, 1யோவன் 4:19, பிலிப்பியர் 2:4 தியானங்கள் சுருக்கம் வருமாறு.

**1.** தேவ நற்கருணையில் விளங்கக்காட்டியிருக்கிற இரட்சணிய அன்பையும், இரக்கங்களையும் நான் இடைவிடாமல் தியானம் பண்ணி நன்றியறிதலுள்ளவனாயிருக்க வேண்டும். என் இருதயம் எப்பொழுதும் அன்பினாலே நிறைந்திருப்பதாக. என் தேவனே, சகல ஈவுகளிலும் உத்தம ஈவாகிய அன்பை எனக்கருளச் செய்யும். தீயானது தீயை எழுப்புவதுபோல் உம்முடைய அன்பு என்னிடத்தில் அன்பை எழுப்புவதாக.

**2.** சரீரத்துக்குரிய கண்ணாலே என் இரட்சகரை நான் காணவில்லை. ஆகிலும் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்று, அவரோடே ஐக்கியமடைந்து, என் மீட்பர் உயிரோடிருக்கிறாரென்று நிச்சயமாய்

அறிந்திருக்கிறேன். நீர் பாடுபட்டு மரித்ததினாலும், நான் உம்மை நினைக்கும்படி நீர் ஏற்படுத்தின சாக்கிரமெந்தினாலும் என் ஆத்துமத்தை உருகச் செய்து அன்பினாலே நிரப்பியருளும்.

3. அன்புள்ளவர்கள் எப்பொழுதும் சந்தோஷப்படுவார்கள். சுயாதீனமுள்ளவர்களாயிருப்பார்கள். தங்கள் கடமைகளை நிறைவேற்ற உற்சாகமாக ஓடுவார்கள். சுயநலத்துக்கு மிஞ்சின கிரியைகளைச் செய்யத் துணிவார்கள். செய்யக் கூடாத காரியமில்லை யென்றெண்ணுவார்கள். உமது அன்புக்காக நான் எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையென்றும் எண்ணும்படியாகவும், என் ஆத்துமம் உம்மைத் தொடர்ந்து தரிசித்து உம்மையே அனுபவித்துக் கொள்ளும்படியாகவும், பரிசுத்த ஆவியானவர் உமது அன்பை எனக்குணர்த்தி என்னை நடத்துவராக.

4. தற்சிநேகம் என் இருதயத்தில் தரித்திருக்கிறது. ஆக, பரிசுத்த பிதாவே நான் இதுமுதல் எல்லாரிடத்திலும் அன்பாயிருக்கத்தக்கதாக என் இருதயம் அனல் கொண்டு விரியும்படி எண்ணி உமது ஆவியினாலே நிரப்பியருளும். என்னிலே நான் அன்பாயிருக்கிறது போல் பிறரிலும் அன்பாயிருக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன். இந்த விருப்பத்துக்கேற்ற பலத்தை எனக்குக் கட்டளையிட்டருளும்.

இந்த நான்கு தியானங்களைத் தொடர்ந்து வரும் இறைவேண்டல் இயேசுகிறிஸ்துவை விளித்து அமைகிறது.

என் ஆத்தும நேசரே, தேவரீர் என்னை மீட்டுக் கொள்ளும்படியாய் அடிமையின் ரூபமெடுத்து நிந்தைகளையும், விரோதங்களையும் சகித்து சிலுவையில் மரணத்தை அடையும்படி உம்மைத் தாழ்த்திக் கொண்டீரே. இதினாலே விளங்கிய சிறந்த அன்புக்காக நான் உம்மைத் துதித்து. அவ்வன்பை நன்றியறிதலோடே நினைத்துக் கொண்டாடும்படி எனக்குக் கிருபை செய்யும் என்று இயேசு கிறிஸ்துவின் இறப்பினாலே வெளிப்படுத்தப் பெற்ற அன்புக்காக நன்றி நிறைந்தவுள்ளத்தைத் தந்திடுமாறு இறைஞ்சுகிறது. இதனைத் தொடர்ந்து எல்லா மனிதரிடத்தும் அன்பு செலுத்துவதற்குரிய வேண்டலாக அமைகிறது.

கர்த்தரே தேவரீர் என்னை நேசித்துக்கொண்டதுபோல் நான் என் சகோதரிடத்திலும், எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருந்து, அவர்களை ஆதரித்து, நேசித்து வரும்படியாக என் இருதயத்தை விசாலமாக்கி, சகல ஈவுகளிலும் சிறந்த ஈவாகிய அன்பை எனக்குத் தாரும். நான் அன்பினாலே இரட்சிக்கப்பட்டவனானதால், எப்பொழுதும் அன்புள்ளவனாயிருக்கும்படி எனக்குக் கிருபை செய்தருளும்.

இப்பகுதியில் இடம்பெற்றுள்ள தியானங்கள் நான்கனுள் முதல் மூன்று தியானங்கள் கடவுளிடத்தில் அன்பாக இருக்கின்றேனா என்பதை ஆயத்தூண்டுகின்றன. நான்காவது தியானம் உடன்வாழ் மனிதருடனுள்ள என் அன்புறவு எவ்வாறாகவுள்ளது என்பதை ஆய்ந்திட உதவுகிறது. இறைவேண்டலும் கடவுளிடம் ஒருவர் அன்பு கொள்வதற்குக் கடவுளின் அருளை நாடுவதையும், உடன் மாந்தரிடம் அன்பு செய்தவற்கும் இறையுதவி தேவை என்பதை வலியுறுத்துவதையும் பார்க்க முடிகிறது. கடவுளிடத்து அன்பு செய்வது எத்துணை இன்றியமையாததோ, உடன் வாழ மனிதரிடத்து அன்பு செய்வதும் அத்துணை இன்றியமையாதது என்று நற்கருணையின் பொருளைத் தியானங்களும் மன்றாட்டுகளும் விளக்கிக் காட்டுகின்றன.

### பந்திப்பரிட்சைத் தியானங்கள்

தம் பாவங்கள் உணர்த்தப் பெறுகிறார். மனம் வருந்தி இறையுதவியை நாடுகிறார். கிறிஸ்துவுடனும் உடன் வாழ்பவருடனும் அன்பு செய்ய நாடுகிறார். இப்பந்திப்பரிட்சைத் தியானங்கள் இறையருளிலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவியலிலும் வளர்ந்திருக்கிறோமா என்று தன்னாய்வு செய்வதற்குதவியானவை. இறையுதவியுடனே கடவுளின் மீதும் மானுடர் மீதும் அன்பு செய்கின்ற செயலில் வளரும் போது, கிறிஸ்துவை வாழ்வின் மையவிடத்தினின்று விலக்கி வைத்த மானுட வலிமை மீது நம்பிக்கை வைக்க நேர்வோம் என்பதால் அதைத் தடுக்கும் ஒரு பகுதியாக இதை இங்கு வைத்திருக்கிறார். இப்பகுதியில் மூன்று தியானங்களும் ஓர் இறைவேண்டலும் உள்ளன. இடம் பெற்றுள்ளன திருமொழிகள்.

2 கொரிந்தியர் 13:5; திருப்பாடல்கள் 16:5, 2பேதுரு 3:18

**தியானங்களின் சுருக்கம் :**

1. .... என் யோசனைகளும், நினைவுகளும் ஆவிக்கேற்றவைகளே, தேவகிருபையினாலும், பரிசுத்த ஆவியின் உதவியினாலும் என் ஆத்துமா சற்று சீர்ப்பட்டிருக்கிறதாக நம்புகிறேன். ஆகிலும் நான் அடைந்த சீரினாலே எனக்கு இரட்சிப்புக் கிடைக்குமென்ற எண்ணாமல் கிறிஸ்துவினாலேயே ஆத்தும நன்மைகளும், திவ்விய குணங்களும், நித்திய இரட்சிப்பும் கிடைக்குமென்றறிந்து, இப்படியே நான் அவரையே நம்பி அவரிடத்தில் தரித்துக் கொள்வேனாக. என்னை ஆராய்ந்தறிந்து, கர்த்தருடைய சரீரத்தை விசேஷித்துக் கொண்டு, அவருடைய மாமிசத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணும்படியாகவும், அவருடைய பரிசுத்த பந்தியைச் சேரும் போது விருதாவாய்ச் சேராமல் ஆறுதலையும், பலனையும் அடையும் படியாகவும் என்னை ஆயத்தம் பண்ணிக் கொள்ளக் கடவேன்.

2. ஒருவனுடைய பொக்கிஷம் எங்கேயோ அவனுடைய இருதயமும் அங்கே இருக்கும். அப்படியானால் கர்த்தர் எனக்குப் பொக்கிஷமாகி என் இருதயத்தில் இருக்கிறார். எனக்காக மரித்த இரட்சகரை நான் இடைவிடாமல் தியானம் பண்ணி துதித்து, அவரோடே சஞ்சரித்து வருகிறேன். அவருடைய அன்பால் நான் பூமியில் விரும்புகிற சுதந்திரம். இப்படிப்பட்டக் குற்றக்குறைவுகள் எனக்குண்டு. ஆயினும் என் தேவனே! நீரே என் சுதந்திரமென்று ஏற்றுக்கொள்ளுகிறேன்.

3. மாசந்தோறும் கர்த்தருடைய பந்தியைச் சேர்ந்து வருகிறதினாலே நான் பரிசுத்தத்தையும் பரம விருப்பங்களையும் மென்மேலும் அடைந்து வருகிறேனா. உலகத்திற்கு மரித்துத் தேவனுக்குப் பிழைத்திருக்கிறேனா இந்த கேள்விக்கு எந்த உத்தரவு சொல்லுவேன். இந்தத் திவ்விய எத்தனங்களினாலே தேவபக்தி என்னிடத்தில் குறைந்து போகாமலிருக்கிறதென்று நம்பிக்கையுண்டு. ஆனாலும் அது வளர்ந்தேறி வருகிறதென்றும் சொல்லக்கூடுமா....

இந்த மூன்று தியானங்களும், திருவிருந்தில் பங்கு பெறுவதற்கு முன்பு, ஒருவர் தமக்கும், ஆண்டவருக்குமிடையிலே இருக்கிற உறவைச் சரிப்படுத்திக் கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளன. இந்தத் தியானங்களைத் தொடர்ந்து ஒரு மன்றாட்டு இடம் பெறுகின்றது. இந்த

மன்றாட்டு உலகத்தை வெறுத்து ஆண்டவரை மட்டுமே பற்றிக்கொண்டு அவருக்காக மட்டுமே அவருதவியுடன் இந்த உலகத்தில் வாழ்வதற்குக் கடவுளின் உதவியை நாடுவதாக அமைகின்றது. தந்தையாம் கடவுளை விளித்து அவரிடமே வேண்டி நிறைவு செய்வதாக இம்மன்றாட்டு அமைந்துள்ளது.

பரம தந்தையே! நான் உலகத்தை வெறுத்து உமக்கே ஊழியம் செய்ய வேண்டுமென்றும், என் சரீரத்தையும், என் ஆத்துமத்தையும் என் நினைவுகள் விருப்பங்கள் முயற்சிகளையும் உம்மிடத்தில் படைத்தொப்புவிக்க வேண்டுமென்றும், நான் கிருபை வரங்களினாலும், பரிசுத்தத்திலும் வளர்ந்தேற வேண்டுமென்றும், அடியேன் முழு ஆசையோட விரும்புகிறது தேவரீருக்குத் தெரியும் என்று ஒருவர் தம் உண்மையான விருப்பம் இன்னதென்று கடவுளிடம் அறிக்கையிடுவதாக அமைகின்றது. அதில் நிலைத்திருக்கக் கடவுளின் உதவியை இந்த இறைவேண்டல் நாடுகின்றது.

நான் பின்னானவைகளை விட்டு முன்னானவைகளைத் தேடிக்கொண்டு உமது ஆவியின் வரங்களை மென்மேலும் அடையும்படிக்கும், உம்முடையவர்களுக்கு நீர் அருளுகிற அன்பை நான் ருசித்து, அன்பிலே வேரூன்றி பத்தியில் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை ஏற்படுத்தினீரே இந்தத் திவ்விய எத்தனங்களோடே உம்முடைய ஆசீர்வாதத்தையும் தந்து, என்னை சீர்திருத்தி, உமது புண்ணியங்களினாலே என்னை அலங்கரித்தருளும் என்று நிறைவடைகின்றது. திருவிருந்தில் பங்குபெறுகின்ற ஒருவர், எத்தகையவராகக் கடவுள் முன் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இந்த இறைவேண்டல் எடுத்துரைக்கின்றது.

**ஆயத்தத் தியானங்கள் :**

நற்கருணைத் தியான மாலை என்கின்ற இந்நூலின் இரண்டாவது பெரும் பகுதியாக இப்பகுதி அமைகின்றது. முதற்பகுதியிலமைந்த தியானங்களும் மன்றாட்டுகளும் திருவிருந்து வழங்கப்பெறும் நாளுக்கு முன் அதில் பங்குபெறப்போகின்றவர் தம்மைச் சீர்த்தூக்கிப் பார்ப்பதற்கு உதவுபவை. இப்பகுதியில் செய்யப் பெற்றிருப்பவை திருவிருந்து வழங்கப்பெறும் நாளின் காலைப்பொழுதில் வழிபாட்டுக்குச் செல்வதற்கு முன் ஒருவர் தம்மை ஆயத்தமாக்கி

இறைவேண்டல் செய்வதற்கு உதவுபவை. மொத்தம் எட்டுத் தியானங்களும் நான்கு ஆயத்த இறைவேண்டல்களும் இப்பகுதியிலுள்ளன. எடுத்தாளப் பெற்றிருக்கும் விவிலியமறைப் பகுதிகளாவன மத்தேயு 22:4, திருப்பாடல் 51:17, லூக்கா 22:19, 1 கொரிந்தியர் 11:28, திருப்பாடல் 116:12, 13, யோவான் 6:63; உரோமையர் 8:23, மத்தேயு 11:28 ஆகியவை.

முதல் தியானம் :

ஆண்டவரே தம் திருமண விருந்துக்கு அழைத்திருப்பதினால் அதில் பங்குபெறத் தயங்காமல் தகுந்த ஆயத்தத்தோடு விரைந்து சென்றிட ஏவுகின்றது. திருவிருந்தில் பங்குபெறுவதினால், உன் தேவனைத் தமது வாக்குத்தத்தங்களை உனக்குறுதியாக்கி பாவமன்னிப்பை நிச்சயப்படுத்தி, "உன் மீட்பருடைய புண்ணியங்களை உனக்குப் பலிக்கச் செய்து, தேற்றரவையும் ஆத்தும பலத்தையும் தந்து, தமது கிருபையை உனக்குப் பொழிகிறதுமன்றி, தாமாய் உன்னிருதயத்தில் வந்து வாசம்பண்ணி, உன்னோடே ஒன்றியிருந்து உன்னைத் தமக்காலயமாகப் பிரதிஷ்டை செய்து, மோட்ச வாசிகளுக்குரிய ஆனந்தத்தின் அச்சாரத்தை உனக்குக் கட்டளையிடவும், சித்தமாயிருக்கிறாரே" என்று விளக்குகிறது.

எந்தத் தகுதியுமற்ற ஒருவரைத் தம் பந்திக்கு அழைத்திருக்கிற இரக்கத்தையெண்ணிப் பார்க்கவும் இந்த முதல் தியானம் அழைப்பு விடுக்கிறது. "நீர் மகிமையுள்ள பத்திராசனத்தை விட்டிறங்கி எனக்காக சிலுவையில் அறையுண்டு மரித்த கருணை போதாதா, அதோடே, அடியேனை உம்முடைய சன்னதியில் அழைத்துப் பந்தியிருத்தி, சீவ அப்பத்தை எனக்குப் பொசிக்கத்தந்ததும் கருணைப் பெருக்கமே!" என்பதில் அந்த அழைப்பு அமைகிறது. இயேசு கிறிஸ்துவின் துன்பத்தை, வேதனையை, இறப்பை எண்ணிப் பார்க்கவும், நன்றி நிறைந்த நெஞ்சத்துடன் மனமகிழ்ச்சியோடே அவருடைய பந்தியில் சேரவும் இது ஆயத்தப்படுத்துகிறது.

இரண்டாவது தியானம்

திருப்பந்தியில் சேர ஆயத்தமாகும் ஒருவர் தம் இயலாமையை அறிந்து ஆண்டவரிடம் மனந்திரும்பி வந்து தம்மையே படையலாக

ஒப்புக் கொடுப்பதற்கு உதவியாக அமைகிறது.

"பராபரனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. என் முழு இருதயத்தையும், எனக்குள்ள எல்லாவற்றையும் உமக்கே ஒப்புக்கொடுக்கின்றேன். பாவியேன் உம்மண்டை வரத் துணிந்தேன். பலவகையான துராசை இச்சைகளினாலே நொந்து வருந்தினவனாய் உம்மிடத்தில் வருகிறேன். கர்த்தாவே கலங்கின ஆவியே தேவரீருக்கு ஏற்ற பலி; நொறுங்கினதும் நருங்குண்டதுமான இருதயத்தைத் தேவரீர் புறக்கணியீர். நான் தெய்வீக சமாதானம் அடைந்த ஆவியுள்ளவனாய் இனிமேல் உமக்குத் துதி தோத்திர பலியைச் செலுத்ததக்கதாக பாவத்தினிமித்தம் கலங்கின என் ஆவியை இப்பொழுதும் உமக்குப் பலியாகச் செலுத்துகிறேன்" என்று இத்தியானம் அமைகிறது.

**மூன்றாவது தியானம்**

திருவிருந்தில் பங்குபெறுகிறவர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் இறப்பையும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதில் உம்மை நினைக்கும்படி இப்படிச் செய்யக் கட்டளையிட்டிருக்கிறீரோ? இரட்சகரே, நான் உம்மை நினையாமலிருப்பதெப்படி, நீர் எனக்காகச் சிலுவையில் அறையுண்டு பாடுபட்டும் பாடுபட்ட பொழுது நீர் என்னை அன்போடே நினைத்தும் இச்சாக்கிரமெந்தின் மூலமாய் உம்முடைய மரணப்பாடுகளை நான் கண்ணால் கண்டது போல இருந்தும் உம்மை மறக்கக்கூடுமோ என்ற வரிகள் ஆழமானவை.

**நான்காவது தியானம்**

திருப்பந்தியில் சேர விரும்பும் ஒருவர் தம்மை ஆய்ந்து பார்த்து அப்பந்தியில் சேர்வதும் எதற்காக நாம் அதில் சேர்கிறோம் என்று எண்ணிப்பார்ப்பதும் இன்றியமையாதன. இத்தியானம் இரு செய்திகளைத் தருகின்றது. "பராபரன் நமக்காகத் தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்த அன்பின் ஐசுவரியத்தையும், கிறிஸ்து தம்மை நமக்காகப் பலியிட்ட அன்பின் அதிசயத்தையும் கொண்டாடும்படிக்குச் சேர வேண்டியது" என்பது முதலாவது. இரண்டாவது "பிதாவும், சுதனும் அருளின அன்புக்காக நன்றியறிதலோடே தோத்திரஞ் செலுத்த நம்மை முற்றிலும் தேவனுடைய ஊழியத்திற்குப் படைத்தொப்புவிப்பதற்காகவும்

சேர வேண்டியது" என்பது. மூன்றாவதாகவும் ஒரு குறிப்பு இவண் இடம் பெறுகிறது. அது "கிறிஸ்துவின் அன்பிற்கு அத்தாட்சியான வரங்களையும் மென்மேலும் அடைகிறதற்காகவும் நான் கர்த்தருடைய பந்தியைச் சேர வேண்டியது" என்பது.

## ஐந்தாவது தியானம்

இந்தத் தியானத்தில் ஒருவர் தாம் ஏன் திருவிருந்தில் சேர்கிறார் என்பதைத் தமக்குத்தாமே எண்ணிப்பார்த்துக் கொள்ள உதவியாக ஐந்து குறிப்புகள் உள்ளன. இவை முறையே பெற்றவராம் கடவுளையும், மீட்பரையும், தூய ஆவியாரையும், மூவொரு கடவுளையும், கர்த்தரே என்று இயேசு கிறிஸ்துவையும் விளித்துரைப்பதாக அமைந்துள்ளன. "பரிசுத்த ஆவியே, நீர் கிறிஸ்துவின் இரட்சிப்பை எனக்குப் பலிக்கச் செய்து, விசுவாசம் அன்பு பரிசுத்தமாகிய வரங்களை எனக்குப் பொழிந்து, மற்ற விசுவாசிகளோடே நீர் என்னை ஐக்கியப்படுத்த வேண்டுமென்று விரும்பிச் சேருகிறேன்" என்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## ஆறாவது தியானம்

திருவிருந்து ஒருவரை எந்த அளவுக்கு வலுப்படுத்துகிறது என்பது குறித்தமைந்த தியானமாக இது அமைகிறது. "மனிதனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்குந் திராட்ச இரசமும், அவனுடைய சரீரத்தைப் பலப்படுத்தி ஆதரிக்கும் அப்பமும் ஆகிய புறம்பான போசனத்தினாலே எங்களுக்கு வேண்டிய ஆத்தும போசனத்தின் தன்மையையும், அதின் அருமையையும் எங்களுக்குணர்த்தினீர்" என்று இத்தியானத்தின் ஒருபகுதி அமைகிறது.

## ஏழாவது தியானம்

பற்றுறுதியுடன் இயேசு கிறிஸ்துவின் திருவுடலையும், குருதியையும் உண்ணுதல் வேண்டும். அவர் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும். இவ்வுலகில் தொடர்ந்து போராட வேண்டும் என்பனவும் இயேசு கிறிஸ்துவை நேரில் காணவேண்டும் என்கின்ற ஆசையின் வெளிப்பாடாகும். இத்தியானத்தில் உள்ளவை "பாவமே சிற்றின்பமே உலகத்தின் மாயையே அகன்று போங்கள். மாசற்ற தேவாதி தேவன் என்னைச் சந்திக்க வந்தார். அவர் தாமாய் என் இருதயத்தில் பிரவேசித்து, அதைத் தமக்குரிதாக்கி, பிரதிஷ்டை செய்து அதை

முத்திரை வைத்திருக்கிறார்" என்ற செய்தியுடன் இந்தத் தியானம் நிறைவு பெறுகிறது.

### எட்டாவது தியானம்

இத்தியானப் பகுதியில் அமைந்திருக்கும் மிக நீண்ட தியானம் இதுதான். தகுதியற்ற மனிதர் கடவுளிடம் சேர்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பதை நன்றியோடு இந்தத் தியானம் முன்வைக்கிறது.

நோயாளியாகிய நான் பரிகாரியிடமாகவும், பசியும் தாகமுள்ள நான் சீவ ஊற்றினிடமாகவும், எளியவனாகிய நான் பரலோக இராசாவினிடமாகவும், ஊழியக்காரனாகிய நான் என் நாயகனிடமாகவும், சிருட்டியாகிய நான் என் சிருட்டிகரிடமாகவும், மனம் நொந்தவனாகிய நான் தேற்றரவாளனிடமாகவும் சேருகிறேன் என்று வருகின்ற செய்தியை இத்தியானத்தின் மையக் கருத்தாகக் கொள்ளலாம்.

### ஆயத்த செபங்கள் :

இந்த எட்டுத் தியானங்களையும் தொடர்ந்து மிக நீண்ட ஆயத்த செபங்களாக நான்கு இறைவேண்டல்கள் இடம் பெற்றுள்ளன. இந்தத் தியானங்களும், மன்றாட்டுகளும் திருவிருந்து வழிபாட்டில் பங்கு பெறுவதற்குச் செல்வதற்கு முன் தனிமையில் செய்ய வேண்டியவை என்ற ஒழுங்கின் கீழ் வருபவை. இடம் பெற்றுள்ள இறைவேண்டல்கள் ஆழமானவை. ஒவ்வொரு குறிப்பையும் வைத்து விரிவான கருத்துகளை பெற முடியும். நான்கு இறைவேண்டல்களிலுமிருந்து எடுத்துக்காட்டாக சில வரிகளை முன்வைக்கலாம்.

### முதலாவது இறைவேண்டல்

“.... நான் உலக சிந்தனைகளுக்கும் சுயநீதியை நம்பும் பெருமைக்கும் இடங்கொடாமலும், அபாத்திரவிதமாய்ப் போசனபானம் பண்ணி, கிறிஸ்துவின் சரீரத்துக்கும், இரத்தத்திற்கும் குற்றமுள்ளவனாகி ஆசீர்வாதம் பெற வேண்டியதில் சாபத்தைப் பெறாமல் இருக்கும்படி எனக்குக் கிருபை செய்யும்....”

### இரண்டாவது இறைவேண்டல்

“......... பரிசுத்த ஆவியே, உயிருள்ள விசுவாசத்தையும், தாழ்ந்த சிந்தையையும், தேவபுத்திரருக்கேற்ற கீழ்ப்படிதலையும், பரிசுத்த

விருப்பங்களையும் எல்லோரையும் நேசிக்கும் அன்பையும் எனக்கு நிறைவாய்த் தாரும்......"

மூன்றாவது இறைவேண்டல்

"......... தேவரீர் என் மீட்பருடைய புண்ணியங்களினிமித்தம் எனக்கு இரங்க வேண்டுமென்றும், கார்மேகம் போலிருக்கிற என் பாவங்களின் விசாரங்களை அகற்றி, உமதன்புள்ள முகத்தின் பிரகாசத்தை எனக்குக் காண்பிக்க வேண்டுமென்றும், உம்முடைய இரக்கத்தின் ஐசுவரியத்தை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டுதல் செய்கிறேன்........"

நான்காவது இறைவேண்டல் :

எனக்குக் கிடைத்திருக்கிற இந்த இரக்கம் விலை மதியாத இரக்கமே, மகிமையணிந்த தூதர்களும், தூரமாய் நின்று வணங்க உமக்குச் சமீபமாய்ச் சேர்ந்து உம்மிடத்தில் பந்தியிருக்கிறதற்கு ஏழையேன் எம்மாத்திரம்....

இவை அங்கே இடம்பெற்றுள்ள இறைவேண்டல்களிலிருந்து எடுக்கப்பெற்ற சில பகுதிகளே, மானுடத்தின் இயலாமையையும், இயலாத நிலையில் உள்ள மானுடத்தின் மீது கடவுள் இயேசு கிறிஸ்துவின் வழியாகக் கொண்டிருக்கும் எதிர்பார்ப்பையும் இவை முன்வைக்கின்றன. திருவிருந்து வழிபாட்டுக்குச் செல்வதற்கு முன் ஏறெடுக்கக் கூடிய மிகப்பொருத்தமான இறைவேண்டல்கள் இவை.

சிறப்பு நாள்களுக்கான திருவிருந்து தியானங்கள்

இப்பகுதியில் மூன்று சிறப்பு நாள்களுக்கான தியானங்கள் இடம்பெற்றுள்ளன. கிறிஸ்து பிறந்தநாள், கிறிஸ்து உயிர்த்த நாள், தூய ஆவியார் பண்டிகை ஆகிய நாள்களுக்கான சிறப்புத் தியானங்களாக இவை அமைந்துள்ளன; கிறிஸ்து பிறந்த நாளுக்கும், கிறிஸ்து உயிர்த்த நாளுக்குமுரிய தியானங்களின் கடைசியில், ஆதலால் தூதரோடும்.... என்று தொடங்குகிற பிரிபேஷியோ ஏற் சேங்றஸ் **(Prefatio Et Sanctus)** இறைப்போற்றிக்கு முன்னதாகச் செய்கிற முகவுரையாகவும், பயன்படுத்தப்பெற குறிப்புள்ளது. தூய ஆவியாரின் பண்டிகையின்போது செய்யப்பெறுகின்ற தியானத்தின் கீழ் இந்தக் குறிப்பு இல்லை.

## வழிபாட்டு விளக்கம்

"கர்த்தருடைய இராப்போசனமாகிய தேவநற்கருணையைப் பரிமாறும் ஒழுங்கை விஸ்தரித்து விளக்கிய பிரசங்கம்" என்கின்ற தலைப்பின் கீழ் அடுத்த பகுதி அமைந்துள்ளது. திருவிருந்து வழிபாட்டு முறையில் இடம்பெற்றுள்ள கூறுபாடுகளைக் குறித்த விளக்கம் இதில் அமைந்துள்ளது. திருவிருந்து வழிபாட்டுக்குரிய உரை விளக்கம் போன்றுள்ளது. திருவிருந்து வழிபாடு மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும், அன்பையும் எழுப்பி வர்த்திக்கப்பண்ணுகிறதற் கேற்ற நல்ல எத்தனமென்று விளங்கும்" என்பதில் அதன் நோக்கம் விளக்கம் பெறுகிறது.

இப்பகுதியில் கால்டுவெல்லார் திருவிருந்துப் பொருள்களான அப்பமும், திராட்சைசாறும் குறித்த சீர்திருத்தத் திருச்சபையின் புரிந்து கொள்ளுதலை விளக்கும்போது, "கிறிஸ்து நாதரே திருவுளம் பற்றின வார்த்தைகளைப் பிரதிஷ்டை வாசகமாக வாசிக்கும் பொழுது, நற்கருணை அப்பம் இரசம் என்றிவைகளின் தன்மை மாறாமல் முன்போலவேயிருக்கும்" என்று குறிப்பிட்டுக் கூறுகிறார்.

## திருவிருந்து வழிபாட்டு முறை

பரிசுத்த நற்கருணை என்னும் கர்த்தருடைய இராப் போசனத்தைப் பரிமாறும் ஒழுங்கு என்ற தலைப்பின் கீழ் திருவிருந்து வழிபாட்டு முறை இடம்பெறுகிறது. வழிபாட்டு முறை தொடங்குவதற்கு முன் "நற்கருணை வாங்காதவர்கள் தேவாலயத்தை விட்டுப் போனதின் பின்பு, நற்கருணை வாங்கப் போகிறவர்கள் வரிசை வரிசையாயிருந்து ஆயத்தமாகிய வேளையில் அவர்கள் முழங்காற்படியிட்டுத் தனித்துச் செபிக்கத்தக்க" ஒரு தியானமும் இறைவேண்டலும் இடம்பெற்றுள்ளன.

தியானத்தின் நிறைவுப்பகுதி "ஆத்துமாவே நீ இந்தப் பரிசுத்த பந்திக்கு வந்திருக்கையில் மவுனமாயிருந்து உன்னைச் சோதித்துச் செபத்தியானம் பண்ணிக்கொண்டு தாழ்மையோடும், பயபக்தியோடும், விசுவாசத்தோடும் சேருவாயாக" என்று எந்த நிலையில் ஒருவர் திருவிருந்தில் பங்குபெற வேண்டுமென்பதை அவருக்கு நினைப்பூட்டுவதாக அமைகிறது. இத்தியானத்தைத் தொடர்ந்து வரும் இறைவேண்டலில், "........... இரட்சகர் எங்கள் நடுவிலிருக்கிறார் என்ற விசுவாசித்துக்கொண்டு சொல்லி முடியாத மகிமையால் நிறைந்த

சந்தோஷமுடையவர்களாயிருக்கும்படிக்கும், உமது சரீர இரத்தத்தோடு ஐக்கியப்பட்டு உம்மோடும் எங்கள் சகோதரரோடும் ஒன்றாயிருக்கும் படிக்கும்..... என்று தொடர்கிறது. இதில் திருவிருந்து என்பது கிறிஸ்துவுடனும் உடன் மாந்தோருடனும் கூட்டொருமையில் வாழ்ந்திடத் தூண்டுவது என்கின்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது.

திருவிருந்து வழிபாட்டில் குருவானவர் அப்பத்தையும், திராட்சைச் சாற்றையும் கொடுக்கும்போது "உனக்காக" என்று சொல்லும்போது அதைப் பெறுகிறவர் எனக்காக என்று தம்மையிடமாகத் திருப்பிச் சொல்ல வேண்டும் என்கிற குறிப்பு இங்குள்ளது. இதைத் தொடர்ந்து, "நற்கருணை சுயத்தையும், பாத்திரத்தையும் வாங்கி முன் இருந்த இடத்திற்குத் திரும்பிப் போயிருக்கும் பொழுது, முழங்காட்படியிட்டுச் செய்ய வேண்டிய செபத்தியானங்கள் திருவிருந்து வழிபாட்டு முறையினுள்ளேயே அச்சிடப்பெற்றுள்ளன. இப்பகுதியைத் தொடர்ந்து திருவிருந்து வழிபாட்டின் நிறைவுப் பகுதிகள் அமைகின்றன.

### நற்கருணைத் தியானங்கள்

இந்தப் பகுதியில் மொத்தம் பதினான்கு தியானங்கள் இடம் பெற்றுள்ளன. பதினான்கு விவிலியத் திருமொழிகளை இங்குக் கால்டுவெல்லார் எடுத்தாண்டுள்ளார். அவை :

நீதிமொழிகள் 4:26; லூக்கா 22:19; லூக்கா 22:44; ஏசாயா 53:5; யோவான் 1:29; லூக்கா 23:42; யோவான் 6:55; எசாயா 56:4; மலாக்கி 4:2; திருப்பாடல் 39:7; திருப்பாடல் 17:3; லூக்கா 23:34; 1கொரிந்தியர் 11:26.

இப்பகுதியைத் தொடர்ந்து மேலும் ஆறு தியானங்கள் அமைகின்றன. இந்தத் தியானங்களுக்குத் தரப்பெற்றுள்ள குறிப்பில் "நற்கருணை வாங்கித் தான் இருந்த இடத்திற்குத் திரும்பிப் போய் நூற்றுப் பதினோராம் பக்கமுதல் கண்டிருக்கும் தோத்திரங்களையும், செபங்களையும் செய்து, பின்பு சமயங்கிடைத்தால் இதின் அடியிற் கண்டிருக்கும் தியானங்களை வாசிக்க வேண்டியது" என்றுள்ளது. இப்பகுதியில் மொத்தம் ஆறு தியானங்கள் உள்ளன. இப்பகுதியில் இடம் பெற்றிருக்கும் திருமொழிகளாவன, இனிமைமிகு பாடல் 2:3; பிலிப்பியர் 4:4; யோபு 23:3; மீக்கா.7:18,19; யோவான் 21:15; திருப்பாடல் 17:5.

திருவிருந்தில் பங்குபெற்ற இறைமக்கள் எவ்வகையில் இறையுறவில் மானுடர்க்கிடையேயான உறவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதை இத்தியானங்கள் அனைத்தும் வலியுறுத்துகின்றன.

## இல்லத் தியானங்கள்

திருவிருந்து வழிபாட்டில் பங்கேற்று இல்லம் திரும்பியபின் செய்யவேண்டியத் தியானங்கள் இப்பகுதியில் உள்ளன. இப்பகுதிதான் இந்நூலின் நிறைவுப்பகுதி. "தேவாலயத்தை விட்டு வீட்டுக்குத் திரும்பிப் போயிருக்கும் பொழுது செய்யத்தக்க செபத்தியாணங்கள் என்கிற இந்தத் தலைப்பின் கீழ் ஒரு தியானமும், இரண்டு இறைவேண்டல்களும் இடம்பெற்றுள்ளன.

"இயேசு இரட்சகருடைய மரணப்பாடுகளை நீ எப்படிப்பட்ட மனத்தோடே நினைத்தாய்? நன்றியறிதலும், பரிசுத்த அன்பும், உண்மையான துதியுமாகிய பலிகளை அவருக்குச் செலுத்தினாயா? அவருடைய அன்புக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணித் தகாத நடக்கைகள் யாவையும் வெறுத்துத் தள்ளி உன்னை அவருக்கு ஆலயமாகும்படி பிரதிஷ்டை செய்தாயா? என்பவை இவ்வுலகில் ஒருவர் கிறிஸ்தவராக வாழ்வது எதற்காக என்பதனை எண்ணத்தைத் தூண்டும் வினாக்களாக அமைகின்றன.

நிறைவாக "எங்கள் பிரார்த்தனைக்கும் கருத்துக்கும் மேலாக மிகவும் அதிகமாய் அருளிச்செய்ய வல்லவருக்கு கிறிஸ்து இயேசு மூலமாய், சபைக்குள்ளே தலைமுறைதோறும், சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக, ஆமென்" என்கின்ற எபேசியருக்கு எழுதப்பெற்ற திருமுகம் மூன்றாம் பிரிவு, இருபது இருபத்தொன்று திருமொழிகளுடன் இந்நூல் நிறைவுபெறுகிது.

## முடிவுரை

திருச்சபையின் கண்காணியாக இருக்கும் ஒருவர் தம் பொறுப்பிலிருக்கும் இறைமக்கள் எத்தகைய பற்றுறுதியில் வளரவேண்டுமென்பதை, நடக்க வேண்டுமென்பதைக் கண்காணிக்க வேண்டியவர். அந்தக் கடமையை, பொறுப்பைப் பேராயர் கால்டுவெல் இந்நூலின் வழி நிறைவாக முழுமைப்படுத்தியிருக்கிறார் எனலாம்.

திருவிருந்து வழிபாடு என்பது ஒரு கிறிஸ்தவரின் வழியில் எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை நூல் இன்னும் வலியுறுத்துகிறது. உலகச் செல்வத்தைப் பெற்று வாழ்வதைக் குறிக்கோளாகக் கொள்வது கிறிஸ்தவ வாழ்வன்று என்பதையும், இறையுறவிலும், உடன்வாழ் மாந்தருடனான உறவிலும் ஒருவர் எவ்வாறு சீருடன் வாழவேண்டுமென்பதையும் இந்த நூலின் ஆசிரியர் தொடர்ந்து அழுத்தமாக எடுத்துரைக்கிறார்.

திருவிருந்தில் பங்கு பெறுவோரும் திருவிருந்து வழிபாட்டை நடத்துவோரும் எந்த அளவுக்கு ஆயத்தத்துடன் அதனை நிறைவேற்ற வேண்டுமென்பதை இந்த நூலில் ஆசிரியர் மிகத் தெளிவாக வலியுறுத்துகிறார்.

இன்றைக்குப் பெரும்பான்மையான திருச்சபைகளில் திருவிருந்து வழிபாட்டுக்கு முன் ஆயத்த வழிபாடு நடத்துவது என்பது வழக்கொழிந்துவிட்ட ஒன்றாகவே உள்ளது. இதனை மீண்டும் ஏற்படுத்துவது எந்த அளவுக்குப் பொருளார்ந்ததாக இருக்குமென்பதை இந்நூலை படிக்கும்போது புலப்படுகிறது.

பேராயர் கால்டுவெல் விவிலிய மறைத்திருமொழிகளை எடுத்தாண்டுள்ளார். தமிழில் அன்று மொழிபெயர்க்கப்பெற்றப் பயன்பாட்டிலிருந்த விவிலியமறையின் எந்தத் தமிழ் மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தியுள்ளார் என்பதைப் பார்க்க வேண்டும். நற்கருணைத் தியானமாலை என்கின்ற இந்த நூலின் முதற்பதிப்பு 1859 சனவரி இருபத்தேழாம் நாள் இடையன்குடியில் வெளிடப்பெற்றுள்ளது. 1850 ஆமாண்டு பீற்றர் பெர்சிவெல் திருப்புதல் வெளிவந்தது. கால்டுவெல்லார் இந்த மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தியிருக்கலாம் அல்லது 1844இல் வெளிவந்த இரேனியுஸ் (சார்லஸ் எட்வர்ட் இரேனியுஸ்) விவிலியமறை மொழிபெயர்ப்பை பயன்படுத்தியிருக்கலாம். இவ்விரு மொழிபெயர்ப்பு களையும் கால்டுவெல்லர் எடுத்தாண்டுள்ள விவிலியமறை மேற்கோள்களுடன் ஒப்புநோக்கும்போது வேறுபாடுகள் தென்படுவதால் விவிலியமறையின் எந்த மொழிபெயர்ப்பை இந்நூலில் பேராயர் எடுத்தாண்டுள்ளார் என்பதை அறுதியிட்டுக் கூறவியலவில்லை.

இந்த நூல் இன்றும் தென்னிந்தியத் திருச்சபை தூத்துக்குடி நாசரேத்துப் பேராயத்தின் இடையன்குடி குருசேகரத்தில் பயன்படுத்தப் பெற்று வருகிறது என்கின்ற செய்தி மனநிறைவளிக்கிறது. இந்த நூல் முழுவதையுமோ. சில இன்றியமையாத பகுதிகளையோ இன்றைய மொழிநடைக்குத் திருத்துவது நல்லது. திடப்படுத்தல் வகுப்புகளில் இந்நூலை அறிமுகம் செய்யலாம். இதனால் எல்லோரும் திடப்படுத்தல் வகுப்புகளின் முதன்மைத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு எளிதாகும். இக்கட்டுரை நூலறிமுகமாகவே அமைகிறது. முதலில் சற்று விரிவாகவும் பின்னர் கட்டுரையின் அளவு நீண்டுவிடக் கூடாது என்பதற்காகச் சுருக்கியும் இது அமைக்கப்பெற்றுள்ளது.

இந்நூலின் ஒவ்வொரு பகுதியுமே ஆழ்ந்த தியானத்துக்கு மட்டுமன்று ஆய்வுக்கும் உட்படக்கூடியது. திருச்சபையின் இறையுறவு, இறையன்பு, மானுட உறவு பற்றியச் செய்திகள், எண்ணங்கள் எவ்வாறிருந்தன என்பதை அறியவும் இன்றைக்கும் நாம் எங்கு நிற்கிறோம் என்பதைத் தெரியவும் அதனால் இடமுண்டு.

# 4. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம்

முனைவர் பேராசிரியர் ப.டேவிட் பிரபாகர்

தமிழ் மொழியைப் பற்றியும் தென்னிந்திய மக்கள் பற்றியும் இந்தியர்களும் அயலகத்தவரும் கொண்டிருந்த பழமையான பார்வையை முற்றிலும் மாற்றியமைத்து, உயர்வான எண்ணத்தை ஏற்படுத்திய பெருமை கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூலுக்கு உண்டு.

'இந்தியவியல்' என்றாலே 'சமஸ்கிருதவியல்' எனக் கருதிய மேனாட்டவரின் எண்ணத்தை 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூல் தகர்த்தது. இதன் வழி திராவிடம் என்னும் கருத்தியலை வழங்கியவர் கால்டுவெல். தனித்தமிழ் இயக்கம், திராவிட இயக்கம் போன்றவற்றுக்கு இக்கருத்தியல் அடிப்படையாக அமைந்தது.

இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருத மூலத்திருந்து தோன்றியவை, அகத்தியர் வடக்கிலிருந்து தமிழைக் கொண்டு வந்தார், சிவனின் உடுக்கையிலிருந்து தமிழ் பிறந்தது எனும் புனைவுகளைத் தகர்த்து, தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளின் தனித்தன்மைகளை அறிவியல் முறையில் கால்டுவெல் நிறுவினார். தமிழ் தனித்தியங்கும் ஆற்றல் கொண்டது எனவும் சமஸ்கிருதச் சார்பின்றித் தமிழ் இயங்கக்கூடியது என்பதையும் கால்டுவெல் அழுத்தமாக எடுத்துரைத்தார்.

மொழிநூல் அறிஞராக மட்டுமின்றி, கல்வியாளராகவும், வரலாற்றியல் – இனவரைவியல் அறிஞராகவும், சமயவியல் ஆய்வாளராகவும், அருட்பணியாளராகவும், விவிலிய மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கித் தம்முடைய பன்முகப் பங்களிப்பைத் தமிழுக்கு கால்டுவெல் வழங்கினார்; எளிய மக்களோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு சமுதாய சீர்திருத்தத்தை மேற்கொண்டார்; கிறிஸ்தவக் கல்லூரியின் நிறுவனர் ஜான் ஆண்டர்சன், ஜி.யு.போப், துரு, வின்சுலோ, பவர் போன்ற அறிஞர்களோடு அணுக்கமான நட்பு கொண்டு இயங்கினார்.

கால்டுவெல்லின் படைப்புகள் அனைத்தும் ஆய்வுக்கான அறிவுச் செயல்பாடாக மேற்கொள்ளப்பட்டதல்ல. மாறாக, சமஸ்கிருத மேலாதிக்கம் காரணமாக வீழ்த்தப்பட்ட தென்னிந்திய சமூகத்தை,

குறிப்பாக தமிழ்ச் சமுகத்தை எழச் செய்யும் உன்னத நோக்கு அவர் படைப்புகளில் செயல்பட்டதை உணர முடிகிறது. தமிழின் தொன்மையை, தனித்தன்மையைத் தமிழர்களின் மேம்பாட்டை உறுதிசெய்ய இவர் இடையறாது பாடுபட்டார். இக்கட்டுரை கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூலை அறிமுகப்படுத்த முற்படுகிறது.

## ஒப்பிலக்கண நூல் பதிப்பு வரலாறு

கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூலின் முதல் பதிப்பு 1856ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலின் திருந்திய இரண்டாம் பதிப்பு 1875ஆம் ஆண்டில் கால்டுவெல் காலத்தில் டர்பன் & கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. கால்டுவெல்லின் மறைவுக்குப் பிறகு இந்நூலின் மூன்றாம் பதிப்பு 1913இல் வெளிவந்தது. இப்பதிப்பில் இரண்டாம் பதிப்பில் இடம்பெற்ற தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய பகுதி, பறையர்கள் திராவிடர்களா? நீலகிரி தோடர்கள் திராவிடர்களா? போன்ற பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பதிப்பை மீண்டும் கடந்த 2008ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கும் கவிதாசரண், மேற்சுட்டிய பகுதிகள் திட்டமிட்டு நீக்கப்பட்டதற்கான காரணங்களைத் தம் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இதே நோக்கில், டாக்டர் எம்.வேதசகாயகுமார் 'மாற்று வெளி' இதழில் வெளியான தம் கட்டுரையிலும் இப்பகுதிகள் நீக்கப்பட்டிருப்பதன் காரணங்களை ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். இந்நூலினை 1956, 1961, 1976, 2000 ஆகிய ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகம் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. கவிதாசரண் பதிப்பிற்குப் பிறகு கால்டுவெல் குறித்த புதிய பார்வைகளை அறிஞர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

## நூலின் அமைப்பு :

கால்டுவெல் திருத்தி அமைத்த ஒப்பிலக்கண நூலின் இரண்டாம் பதிப்பின் (1875) அடிப்படையில் நூலின் அமைப்பு இங்கு விவரிக்கப்படுகிறது.

இந்நூல் பின்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. முன்னுரை
2. ஒப்பிலக்கணம் (இது ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது)
3. பின்னிணைப்புகள்

### முன்னுரைப் பகுதி

இந்நூலின் முன்னுரை 158 பக்கங்கள் கொண்ட விரிவான முன்னுரையாகும். இப்பகுதியில் 'திராவிடம்' எனும் சொல்லாட்சி, திராவிட மொழிகள் பற்றிய விவரிப்புகள், திராவிட மொழிகளின் தனித்தன்மை, இலக்கண அமைப்பில் சமஸ்கிருத மொழியிலிருந்து மாறுபடும் தன்மை, தனித்தியங்கவல்ல ஆற்றல், ஆரியத்துக்கு முற்பட்ட திராவிட நாகரிகம், திராவிட நாகரிகத்தோடு ஆரியம் கலந்த காலம், 'சூத்ர' என்ற சொல்லாட்சி பற்றிய விளக்கம் ஆகியன விரிவாக இடம் பெற்றுள்ளன. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள தமிழ் இலக்கிய வரலாறு குறித்த சட்டகம் பின்னர் வெளிவந்த பதிப்புகளில் தவிர்க்கப்பட்டுள்ளது.

### ஒப்பிலக்கணப் பகுதி :

இந்நூலின் ஒப்பிலக்கணப் பகுதி 500க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்டது. கால்டுவெல் ஏழு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை வரைந்துள்ளார். நூலின் ஒலிபெயர்ப்பு முறைகள் பற்றிய குறிப்புகளோடு ஒப்பிலக்கனப்பகுதி தொடங்குகிறது. முதல் பகுதியில், திராவிட மொழிகளின் நெடுங்கணக்கு, உயிர் – மெய் ஒலிகள், பல்வேறு வகையான ஒலி மாற்றங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில், திராவிட மொழிகளின் பெயர் மற்றும் வினைச் சொற்களின் வேர்கள் விளக்கப்பட்டுள்ளன. பெயரைப் பற்றிய மூன்றாம் பகுதியில் பால், எண், வேற்றுமை பற்றிய செய்திகள் விரிவாக இடம் பெற்றுள்ளன. மேலும் பெயரடைகள், பின்னுருபுகள் பற்றிய செய்திகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

நான்காம் பகுதியில், எண்ணுப் பெயர்கள், எண்ணுமுறைப் பெயர்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஐந்தாம் பகுதியில், மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர், வினாப்பெயர் போன்றவை விளக்கப்பட்டுள்ளன. பகுதி ஆறு, வினைச்சொற்கள் குறித்தும் அதன் பல்வேறு வகைகள், வினையடிகள் ஒட்டுகளை ஏற்கும் முறை, காலங்கள், வினையடியாகப் பிறக்கும் பெயர்கள் போன்றவற்றை விரிவாக விளக்குகிறது. ஏழாம் பகுதியில், இந்தோ – ஐரோப்பிய மொழிகளுடனான ஒப்புமைகள், சமஸ்கிருத ஒருமைப்பாடுகள், செமிட்டிக் மொழி மற்றும் சித்திய மொழி

ஒருமைப்பாடுகளை கால்டுவெல் விரிவாக விளக்குகிறார். இப்பகுதி கால்டுவெல்லின் பன்மொழி இலக்கண அறிவை நன்கு புலப்படுத்துவதோடு, தனித்தன்மை வாய்ந்த திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பைக் கண்டறிய துணை செய்வதாய் அமைந்துள்ளது.

**பின்னிணைப்புப் பகுதி**

தொண்ணூறுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இப்பகுதி பத்துப் பக்க அளவில் சுருக்கப்பட்டு பிந்தைய பதிப்புகளில் (மூன்றாம் பதிப்பு தொடங்கி) காணப்படுகிறது. பின்னிணைப்பின் முதல் பகுதி தோடா, கோடா, கோண்ட், கூ, பிராகுவி போன்ற திராவிட மொழிகள் பற்றிய புதிய செய்திகளை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. இப்பகுதிக்கு பின்னர் அமைந்த பகுதிகள் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகள் நீக்கப்பட்டதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. இவை எவ்வித தடயமுமின்றி வரலாற்றிலிருந்தே அழிக்கப்பட்டுள்ளன எனும் எம். வேதசகாய குமாரின் கூற்று கவனத்திற்குரியது.

இப்பகுதியில், கோவரின் நூலுக்கு தந்துள்ள பதிலுரை, சுந்தர பாண்டியன், பறையர்கள் திராவிடர்களா? நீலகிரி தோடர்கள் திராவிடர்களா? திராவிடர்களின் உடல் அமைப்பு, திராவிடர்களின் பண்டைச் சமயம் ஆகிய முக்கியமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

பறையர்கள் பழமையான திராவிடர்கள், இவர்களுக்கு அடிமையல்லாத பழமை உண்டு. சைவம் காலத்தால் பிற்பட்டது. வெறியாடுதலே திராவிட சமயம். கருமை அடிமைகளின் நிறம் அல்ல போன்ற முக்கிய கருத்தாக்கங்கள் கால்டுவெல் எழுத்துகளில் வெளிப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் விரிவாக ஆராயத்தக்கவை.

**ஒப்பிலக்கண நூலின் முன்னுரைப் பகுதி**

திராவிட மொழிகளின் பழமையான அமைப்பையும் தனித் தன்மைகளையும் கண்டறிவதற்கு, அவ்வின மொழிகளின் இலக்கண விதிகளையும் அமைப்பையும் ஒப்பு நோக்கி ஆராய்வது இந்நூலின் நோக்கம் என்பதை மிகத் தெளிவாக நூலின் தொடக்கத்திலேயே கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். மேலும் தன் முன்னுரையின் இறுதியில், 'வட மொழியை கடந்த 2000 ஆண்டுகளாக எதிர்த்து நின்று போராடி

வருவனவாய் திராவிட மொழிகள், மற்றெந்த அயல்மொழியும் தம்மிடைத் தலை சிறவாதபடி எதிர்த்து நின்று தடுத்துக் கொள்ளும் என்று எளிதில் நம்பலாம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிடம் எனும் சொல்லாட்சி

திராவிட மொழிகள் பல்வேறு பெயர்களால் சுட்டப் பெற்றிருக்கும் நிலையை எடுத்துக்காட்டும் கால்டுவெல், 'திராவிடம்' எனும் பொது பெயரால் இம்மொழிகளைக் குறிப்பிடுவதற்கான காரணங்களைத் தந்துள்ளார்.

திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் என கால்டுவெல் பகுத்துள்ளார். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு ஆகிய மொழிகளைத் திருந்திய மொழிகளாகவும், தோடா, கோடா, கோண்டு, கோண்ட், ஒராவன், இராஜ்மகால் ஆகிய மொழிகளைத் திருந்தா மொழிகள் என்றும் அவர் வகுத்துள்ளார்.

திராவிட மொழிகளுள், முதன் முதலில் திருந்திய நிலை பெற்றதும், ஐயத்திற்கும் இடமில்லாத மிகப் பழைய தொல் வடிவங்களையும், சொல் வளமும் மிக்கது என்பதால் தமிழக்குத் தலைமையிடம் அளிக்கப்பட்டுள்ளது எனவும் கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

## திராவிட மொழிகள் :

கால்டுவெல் தாம் எடுத்துக்கொண்ட 12 திராவிட மொழிகள் பற்றித் தனித்தனியே விவரித்துள்ளார். ஒவ்வொரு மொழியும் பேசப்படும் இடம், அதன் மக்கள், அது பற்றிய பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளை அவர் விரிவாகத் தந்துள்ளார்.

மெகஸ்தனிஸ், மார்க்கோபோலோ, கோல்புருக், கெர்ன், மேக்ஸ் முல்லர், தாலமி, பிளைனி, பெரிப்புளுஸ், ஹியுன் சியாஸ், குமரிலபட்டர், கெர்ன், குண்டார்ட் கர்னல் யூல், கால்பெல், எல்லிஸ், பிரசெல் பர்னல், மோகலிங், போப், ஹாட்ஜ்சன், டால்டன் போன்ற அறிஞர்களை மேற்கோள் காட்டி பல்வேறு செய்திகளைக் கால்டுவெல் தொகுத்து வழங்கியுள்ளார்.

சேர, சோழ, பாண்டியர் குறித்தும், தமிழைத் தெலுங்கர்களும், கன்னடர்களும் 'அரவம்' எனக் குறிப்பிடுவதற்கான காரணங்களையும் கால்டுவெல் விரிவாகத் தந்துள்ளார். இதுபோன்றே கோரமண்டல், மலபார் ஆகிய சொற்கள் ஆங்கிலத்தில் இடம் பெற்றதற்கான காரணங்களையும் அவர் விவாதித்துள்ளார்.

திராவிட மொழிகள் அனைத்தும் பொதுவான ஒரே மூலத்திலிருந்து தோன்றியவை. எனினும் அவற்றை ஒரு மொழியின் வேறுபட்ட வழக்காறுகளாகக் கருதாது தனித்தனி மொழிகளாகக் கருதவேண்டும் என்பதை கால்டுவெல் வற்புறுத்துகிறார்.

**சமஸ்கிருதத்தின் துணை வேண்டா திராவிடத் தன்மை**

திராவிடம் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது என்ற கருத்து அறவே அடிப்படையற்ற கட்டுக்கதையாகிவிட்டது எனக் குறிப்பிடும் கால்டுவெல், திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர்களும், பெயர் – வினை சொல்லாக்கங்களும், வாக்கிய அமைப்பு முறையும் சமஸ்கிருத மொழியிலிருந்து அறவே வேறுபட்டுள்ளன என்பதை எடுத்துரைக்கிறார். இன்றியமையாத அடிப்படைச் சொற்கள் இரு மொழிகளிலும் மாறுபட்டு விளங்குவதையும் கால்டுவெல் பட்டியலிட்டுள்ளார்.

மேலும், தமிழ்மொழி, வடசொற்களை அறவே அகற்றி தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதோடன்றி, அவற்றின் உதவியில்லாமல் மிகவும் மேம்பட்டு, வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும் எனக் குறிப்பிடுகிறார்.

குறளும் சிந்தாமணியும் முற்றிலும் வடமொழித் தொடர்பற்று விளங்குவதையும் கால்டுவெல் எடுத்துக்காட்டியுள்ளார்.

திராவிட மொழிகளின் திணை, பால் பகுப்புமுறை, பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும் முறை, அஃறிணைப் பன்மை, முன்னுருபுகள், பெயர் உரிச் சொற்கள் போன்றவற்றின் பயன்பாட்டை எடுத்துகாட்டி திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து மாறானவை எனப் பல்வேறு சான்றுகள் தந்து அவர் விளக்கியுள்ளார்.

இதுபோன்றே, திராவிட – சமஸ்கிருத மொழிகள் ஒத்துச் செல்லும் இடங்களையும் அதற்கான காரணங்களையும் குறிப்பிட கால்டுவெல் தவறவில்லை. மேலும், திராவிட – சித்திய மொழி

ஒப்புமைகளையும் கால்டுவெல் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் தமிழிலிருந்து சென்று மேலை ஆரியத்தில் வழங்கும் துகி (தோகை), அஹலிம் (அகில்), ஒருஸ (அரிசி) போன்ற சொற்களையும் வரலாற்றுப் பின்புலங்களோடு அவர் தந்துள்ளார்.

### சூத்ர என்ற சொல்லாட்சி

சூத்திரர் என்ற சொல்லாட்சி குறித்து விரிவாக ஆராய்ந்துள்ள கால்டுவெல் இச்சொல் சுட்டும் மக்கள் தென்னிந்தியாவிலும் வடஇந்தியாவிலும் வேறுவேறாக அமைவதையும் விளக்குகிறார்.

### கால்டுவெல்லின் இலக்கிய வரலாறு

திராவிட மொழி இலக்கியங்களின் தொன்மை குறித்துக் கால்டுவெல் விளக்கியுள்ளார். தெலுங்கு, கன்னடம், மலையாள மொழி இலக்கியங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்கும் கால்டுவெல் தமிழ் இலக்கியங்கள் குறித்து சுமார் 30 பக்கங்களில் விவரித்துள்ளார்.

கால்டுவெல்லின் தமிழ் இலக்கியங்களின் காலகணிப்பு விவாதத்திற்கு உரியது என்றாலும், தமிழ் இலக்கிய வரலாற்றிற்கான முன்வரைவினைக் கால்டுவெல் வழங்கியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றின் காலத்தைக் கால்டுவெல் நேர்கோடாக கணிக்கவில்லை. தனித்தனி வட்டங்களாகக் கற்பனை செய்தார் எனக் குறிப்பிடும் எம்.வேதசகாயகுமார், கால்டுவெல் காணும் இலக்கிய வட்டங்கள் குறித்து பின்வருமாறு விளக்கியுள்ளார் (மாற்றுவெளி 1, பக்.12) :

சமண வட்டம், தமிழ் இராமாயண வட்டம், புதுப்பிக்கப்பட்ட சைவ வட்டம், வைணவ வட்டம், புதுப்பிக்கப்பட்ட இலக்கிய வட்டம், எதிர்பார்ப்பனிய வட்டம், சமகாலப் படைப்பாளிகள் என ஏழு வட்டங்களாகத் தமிழ் இலக்கியப் பரப்பினை இனங்கண்டார். தமிழ் இலக்கியம் அதன் சிகரத்தை குறள், சிந்தாமணியின் மூலம் அடைந்தது என மதிப்பிடும் கால்டுவெல், இவற்றைச் சமண வட்டத்தில் இனங்காண்கின்றார். தமிழ் இராமாயணம் ஒப்பற்ற இலக்கியம் எனக் கணிக்கும் கால்டுவெல், சிந்தாமணியை மட்டுமே இதனோடு ஒப்பிட முடியும் என்கிறார். சைவ வைணவக் கவிஞர்கள் சம காலத்திலோ அல்லது தொட்டடுத்த காலத்திலோ வாழ்ந்திருந்தாலும், பொதுமையான கூறுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை. தனித்தனி வட்டங்களில்

சுழன்று கொண்டிருந்தனர் எனப் பதிவு செய்கிறார். புதுப்பிக்கப்பட்ட இலக்கிய வட்டத்தில் சிற்றிலக்கியங்களை எதிர்கொள்கிறார். எதிர்பார்ப்பனிய வட்டத்தில் சித்தர் பாடல்களை மக்கள் இலக்கியமாக இனங்காண்கின்றார்.

### தமிழ் நெடுங்கணக்கு

திராவிட மொழிகளை ஆராயப்புகுமுன் திராவிட மொழிகளின் நெடுங்கணக்கு பற்றி கால்டுவெல் விரிவாக விவாதித்துள்ளார். வடமொழி எழுத்து மரபிலிருந்து தமிழ் எழுத்துக்கள் வேறுபடும் தன்மையை அவர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். அசோகனது கல்வெட்டு, ஒரிய, பர்மிய எழுத்துமுறை, வடமொழி கிரந்தம், சிரியன் கிறித்தவர்களின் சாசனங்கள், சோழர்காலக் கல்வெட்டுகள் போன்ற எழுத்து முறைகளையும், எல்லீஸ், பீம்ஸ், எட்வர்ட் தாமஸ், பர்னல் போன்றோரது கருத்துகளின் வன்மை மென்மைகளையும் ஆராய்ந்து, தமிழ் நெடுங்கணக்கின் தனித்தன்மை குறித்து கால்டுவெல் விவரித்துள்ளார். அசோகரது கல்வெட்டுக்களில் காணப்படும் நேர்க்கோடுகளும், கோணங்களும் பின்னர் வட்டங்களாகவும் வளைவுகளாகவும் அழகுபடுத்தப்பட்டு திராவிட, சிங்கள நெடுங்கணக்கு தோன்றியிருக்க வேண்டும் என்பது கால்டுவெல் கருத்தாகும்.

தெலுங்கில் இடம்பெறும் 'அரை அனுஸ்வர' எழுத்தைப் போன்ற எழுத்துக்களும், உயிர்ப்பொலிகளும் (aspirated sounds) தமிழில் இல்லாமையை கால்டுவெல் சுட்டிக்காட்டியுள்ளார். சமஸ்கிருத விசர்கத்தை ஒத்த ஆய்த எழுத்தை தமிழ் கொண்டுள்ளதைக் குறிப்பிடும் கால்டுவெல், அது புலவர்களால் செய்யுளில் மட்டுமே பயன்படுத்தப்படும் எழுத்து என்றே இலக்கண நூலார் கருதுவதையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் – சமஸ்கிருத நெடுங்கணக்கில் வரிசை முறையை ஒப்பிட்டு இவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் அவர் நன்கு விவரிக்கிறார்.

## திராவிட மொழி ஒலிகள்

### உயிரொலிகள்

திராவிட மொழிகளின் உயிரொலிகளை ஆராயும் கால்டுவெல் அவற்றில் நேரும் மாற்றங்களையும் பகுத்து விளக்குகிறார். அகரம் சிலவிடங்களில் எகரமாதல் (பலன் > பெலன்) அகர ஈறு தமிழில் 'ஐ' யானால், கன்னடத்தில் 'எ' ஆகி, உகரம் பெற்று நிற்பதையும் 'அவ்' என்னும் சுட்டு தமிழில் 'அவை' ஆகவும், தெலுங்கில் 'அவி' எனவும் கன்னடத்தில் 'அவு' ஆகவும் வருவதையும் கால்டுவெல் சுட்டிக்காட்டியுள்ளார். செய்யுளில் ஆகாரம் ஓகாரமாக திரிதலையும் (விண்ணார் – விண்ணோர்) இது போன்றே சமஸ்கிருத ஈற்று 'ஆ' தமிழில் 'ஐ' ஆகும்.

எ.கா கங்கா – கங்கை (தமிழ்) கங்கெ (கன்னடம்)
ஆசா – ஆசை (தமிழ்) ஆசெ (கன்னடம்)

ஒலித்துணையாகக் கொள்ளப்படும் 'உ'கர ஈறு குறித்து கால்டுவெல் விளக்கியுள்ளார். சில 'பல' என்ற தமிழ்ச்சொற்கள் கன்னடத்தில் செல – வு, பல – வு என வருதலை எடுத்துக் காட்டியுள்ளார்.

சமஸ்கிருதத்தில் இல்லாத எகர, ஒகர குற்றெழுத்துக்கள் திராவிட மொழிகளில் எல்லாவற்றிலும் இடம்பெற்றுள்ள நிலை திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து மாறுபட்டவை என்பதைக் காட்டுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

மேலும், திராவிட ஐகாரம் சமஸ்கிருத ஐயைப் போல் 'அஇ' எனும் சேர்க்கையாக அமையாமல் 'எஇ' எனும் சேர்க்கையால் உண்டானது என்றும், பண்டைய திராவிட 'அ' ஒலி முதலில் 'எ' ஒலியாக மருவி, ஐயாக மாறியது எனவும் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இதுபோன்றே, ஔகாரம் தமிழ் நெடுங்கணக்கில் இடம் பெற்றிருப்பினும், திராவிட மொழிகள் எதற்கும் இது உறுப்பாக இருந்ததில்லை எனக் குறிப்பிடும் கால்டுவெல், இது சமஸ்கிருத நெடுங்கணக்கை அடியொற்றி தமிழில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மெய்யெழுத்துக்கள் :

திராவிட மொழிகளில் உள்ள வல்லினம் அதற்கு இனமாக மூக்கின மெய்களின் வருகையைத் தனித்தனியே கால்டுவெல் விளக்கியுள்ளார். திராவிட மொழிகளில் ழகரம் குறித்துப் பேசும் அவர், புதுக்கன்னடத்தில் காணப்படாத இவ்வொலி பழங்கன்னடத்தில் உண்டு எனக் குறிப்பிடுகிறார். இவ்வொலி தமிழக வட்டார வழக்குகளில் ளகர யகர ஒலிகளாய் ஒலிக்கப்படுவதையும், தெலுங்கு நெடுங்கணக்கில் இது அறவே இல்லாத ஒலியாக விளங்குவதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஸ், ஹ் போன்ற எழுத்துக்கள் சமஸ்கிருத உறவால் திராவிட மொழிகளில் படிப்படியாக நிலை பெற்றதையும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

## மெய்யொலி மாற்றங்கள் :

ககர ஒலி மாற்றம் குறித்து கால்டுவெல் விரிவாக விவரித்துள்ளார். ககர வகர மாற்றம் (தமிழ் ஆகு > தெலுங்கு 'ஆவு') ககர சகர மாற்றம் (கன்னடம் 'சின்ன' > தெலுங்கு 'சின்ன')

இதுபோன்ற டகர ஒலி ழகரமாக திரிவதையும் (சமஸ்கிருத்தில் நாடி – தமிழ் நாழி) கால்டுவெல் விளக்கியுள்ளார். பல்லின, உதட்டின மெய்கள், அரை உயிர்கள் பெறும் மாற்றத்தையும் இவர் விரிவாக விளக்கியுள்ளார்.

புணரியல் நிலையில் ஓரின மொழிகளாக மெய்கள் திரிவதையும் கால்டுவெல் விரிவாக விளக்கியுள்ளார். இம்மாற்றம் குறித்து மேலும் விவரிக்கும் அவர், தொடர்ந்து வருகிற மெய்யைத் தன்னின எழுத்தாக மாற்றிக்கொள்ளும் தமிழ்முறை, பலவிடங்களில் சமஸ்கிருதத்தை ஒத்திருப்பினும், திராவிட மொழிகளுக்கே உரிய சில சிறப்பான முறைகள் உண்டு என்பதையும் எடுத்துக்காட்டுகளுடன் நிறுவியுள்ளார்.

எ.கா. போல் +த – போன்ற

கொள் + த = கொண்ட

திராவிட மொழிகளில் மூக்கொலிப்படுத்தல் அல்லது வல்லோசை மெலிதல் குறித்து கால்டுவெல் விரிவாக ஆராய்ந்துள்ளார். இதனை மூன்று வகைப்படுத்தி கால்டுவெல் விளக்கியுள்ளார்.

1. பெயர், வினைச் சொல்லாக்க உருபுகளுக்கு முன்பாக மெல்லெழுத்தன்றி, மூக்கெழுத்து ஒன்றினை இணைத்தல்.

*(எ.கா : அட + கு = அடங்கு)*

2. மூக்கெழுத்துக்களைச் சொல்லின் ஒலியினிமை கருதிப் புகுத்துவது.

*வாழ் + த் + ஏன் > வாழ்ந்தேன்*

3. வினைச் சொல்லின் ஈற்று டகரத்திற்கு முன்னால் ணகரத்தைப் புகுத்துதல்.

*கன்னடம் கரு மூரு > தமிழ் கன்று மூன்று*

**உடம்படு மெய்**

இரண்டு உயிர்களுக்கு இடையே தோன்றும் இடைவெளியைத் தவிர்ப்பதற்காக தோன்றும் மெய்யெழுத்துக்களை இந்தோ ஐரோப்பிய மொழிகளோடும் குறிப்பாக கிரேக்க மொழியோடும் தொடர்புபடுத்தி கால்டுவெல் விளக்கியுள்ளார். கிரேக்க மொழியில் புலமை பெற்றிருந்த கால்டுவெல், உடம்படுமெய்யாகத் தமிழ் வகரத்தைப் பயன்படுத்துமிடங்களில், கிரேக்க மொழியைப் போல் தெலுங்கும் துளுவும் னகரத்தைப் பயன்படுத்துவதை எடுத்துக்காட்டியுள்ளார். தெலுங்கில் ஒலியினிமைக்காக னகரத்தின் இனமான 'னி' அல்லது 'னு' உடம்படுமெய்யாக வருவதையும் கால்டுவெல் குறித்துள்ளார்.

னரகத்திற்கு பதிலாக ஹகர உடம்படுமெய் பயன்படுத்தும் தெலுங்கு எண்ணுப்பெயர்களுடன் 'னகர' உடம்படுமெய்யோடு கூடிய தமிழ், கன்னட எண்ணுப்பெயர்களை ஒப்புநோக்கி, எளிமையும் இனிமையும் கருதியே னகரம் வந்துள்ளதை கால்டுவெல் விளக்கியுள்ளார். மேலும், இவற்றில் உள்ள 'இன்' என்பதை வேற்றுமை உருபு என குண்டர்ட் கூறுவதையும் கால்டுவெல் மறுத்துரைக்கிறார்.

| தெலுங்கு | தமிழ் | கன்னடம் |
|---|---|---|
| பதிஹேனு | பதினைந்து | ஹதினைது |
| பதிஹாரு | பதினாறு | ஹதினாறு |

**உயிரெழுத்துக்களின் இன்னோசை வரிசை**

அடுத்தடுத்து வரும் அசைகளில் முதல் அசையில் வரும் உயிர் எழுத்து, அடுத்த அசையில் ஒத்த உயிர் வருதலை விரும்புதலையும்

அதற்கேற்ப மாற்றிவிடும் இயல்பையும் 'இன்னோசை வரிசை விதி' எனக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இத்தகைய மாற்றங்கள் சிந்திய மொழியில் காணப்படுவதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த இன்னோசை விதி திராவிட மொழிகளில் தெலுங்கு மொழியில் மிகத் தெளிவாகவும் முறையாகவும் வெளிப்படுவதாக கால்டுவெல் குறித்துள்ளார்.

## அசை அமைப்பு

திராவிட மொழிகளில் அசை அமைப்பில் உள்ள எளிமையையும் கால்டுவெல் குறிப்பிடுகிறார். திராவிட மொழிகளில் காணப்படும் பல்வேறு மெய்ம்மயக்கங்கள் பற்றிக் குறிப்பிடும் அவர், மும்மெய்ம்மயக்கம் மொழி முதலில் தவிர்க்கப்படுவதை எடுத்துக்காட்டியுள்ளார்.

பிற ஐரோப்பிய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது, தமிழ்மொழி நீளமான சொற்களையுடையதாகத் தோன்றினாலும், ஒவ்வொரு அசையும் எளிமையாகவும், சிறியதாகவும் இருப்பதால் அவை வேகமாக ஒலிக்கும் பண்பானது. செறிவும் சுருக்கமும் இல்லாததால் நேரும் குறையை மறைத்துவிடும் எனவும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

## ஒலி இடம் பெயர்தல்

விரைவு, ஒலித் தெளிவு, எளிமை காரணமாக ஏற்படும் ஒலிகளின் இடப்பெயர்வையும் கால்டுவெல் விரிவாக ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

தசை > சதை
குதிரை > குரிதை
கொப்புள் > பொக்கலி (தெலுங்கு) பொக்குள் (மலையாளம்)

அவரு, இவரு > வாரு, வீரு (தெலுங்கு)
ஓரல், ரோலு > ரோறு (தெலுங்கு)

## எடுத்தலோசை

சொல்லின் இறுதியில் ஏகாரத்தைச் சேர்ப்பதால் காட்டப்படும் பொருள் அழுத்தத்தை கால்டுவெல் சுட்டியுள்ளார். திராவிட மொழிகளில் காணப்படும் எடுத்தலோசை இந்தோ, கிரேக்க மொழிகளில் உள்ளதைப்

போன்றதன்று என்று குறிப்பிடும் கால்டுவெல், தமிழ் இலக்கண நூலார் காட்டும் எடுத்தலோசையை எடுத்துக்காட்டியுள்ளார். ஓதுவான் என்பது வினைமுற்றாக வரும்போது எடுத்தலோசையை அதன் முதல் அசையில் ஏற்றியும், வினையாலணையும் பெயராக வரும்போது வினைமுற்று விகுதிகளில் ஏற்றியும் ஒலிப்பதை எடுத்துக்காட்டி கால்டுவெல் இதனை விளக்கியுள்ளார்.

ஒலியியல் முழுமையாக வளராத 19–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், திராவிட மொழிகளின் ஒலிகள், அசை அமைப்பு குறித்த கால்டுவெல்லின் பார்வை நம்மை வியக்க வைக்கிறது.

**வேர்ச்சொற்கள்**

திராவிட மொழிகளின் தனித்தன்மைகளைக் காட்ட விழையும் கால்டுவெல், திராவிட மொழிச்சொற்களின் வேர்களையும் அவை ஏற்கும் உறுப்புகள், அடையும் மாற்றங்கள் ஆகியவற்றையும் விரிவாக ஆய்வுக்குட்படுத்தியுள்ளார்.

திராவிடமொழிகளில் ஒரு சொல் வடிவம் பெயராகவும் பெயரடையாகவும் வினையாகவும் வரும் இயல்பை கால்டுவெல் எடுத்துக்காட்டியுள்ளார். சொல், தறி, முறி ஆகிய சொற்கள் தமிழில் பெயராகவும் வினையாக வருவன. ‘கடு’ என்பது பெயராகவும் ‘கடுவாய்’ என்னும்போது பெயரடையாகவும் வருவதை கால்டுவெல் எடுத்துக்காட்டுகிறார்.

தமிழில் உள்ள பழஞ்சொற்கள் வழக்கிலுள்ள வேர்ச்சொற்களிலிருந்தே பெறப்பட்டிருப்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளின் வழி கால்டுவெல் உணர்த்தியுள்ளார்.

விரி (விரிதல்) > விரல்

கட (கடந்து செல்) > கடல்

பகு (கூறுபடுத்து) > பகல்

குடை (குடைந்து குழியாக்கு) > குடல்

இது போன்ற தொடர்புடைய பின்வரும் இணைகளையும் கால்டுவெல் எடுத்துக் காட்டுகிறார்.

நில் – நிலம்

மின் – மீன்

நக்கு – நாக்கு

குதி – குதிரை

முகர் – மூக்கு

வெள் – வெள்ளி

திராவிட மொழிகளில் பெரும்பாலான பெயர்ச் சொற்கள் வினையடியாகப் பிறந்தவை எனினும் குறிப்பிட்ட அளவிலான சொற்களின் மூலம் அறிய முடியாமல் இருப்பதையும் கால்டுவெல் சுட்டியுள்ளார். இவ்வகையில் இடப்பெயர், வேற்றுமை உருபு, சாரியை ஒத்த இடைச்சொற்கள் ஆகியவற்றைச் சுட்டியுள்ளார்.

பெரும்பான்மையான வேர்ச்சொற்கள் அடிப்படையில் ஓரசைச் சொற்களாக உள்ளன.

எ.கா. ஆ > ஆகு போ > செல்

*அட் > அடங்கு அண் > அணுகு*

வேர்ச்சொற்களுடன் சேரும் சொல்லுருபுகள், தன்வினை – பிறவினை சொற்கள் அமையும் முறை ஆகியவற்றை இவர் விளக்கியுள்ளார்.

எ.கா. பெருகு > பெருக்கு

*அடங்கு > அடக்கு*

*நீங்கு > நீக்கு*

*ஓடு > ஓட்டு*

மேலும் வேர்ச்சொற்களின் உள்மாற்றங்கள் வினைச் சொற்களைத் தொழிற்பெயராக மாற்றுவதையும் கால்டுவெல் விளக்குகிறார்.

படு – பாடு

சுடு – சூடு

கெடு – கேடு

கொள் – கோள்

வேர்ச்சொல்லின் இறுதி மெய் இரட்டிக்கும் முறையையும் கால்டுவெல் எடுத்துக்காட்டியுள்ளார்.

*ஓடு – ஒட்டு*

*எழுத – எழுத்து*

*தகு – தக்க*

மேலும், 'அட்' எனும் முதலசையில் இருந்து அடு, அடங்கு, அடி, அடை, அடர், அடுக்கு முதலிய சொற்களும், 'அண்' எனும் முதலசையில் இருந்து அணு, அணி, அணுகு, அணை, அணவு, அண்ணு முதலிய சொற்களும் உருவாவதையும் இவர் விளக்குகிறார்.

**பெயர்ச்சொற்கள் :**

திராவிட மொழிகளின் பெயர்ச்சொற்கள் குறித்து ஆராய்ந்துள்ள கால்டுவெல், பால், எண், வேற்றுமை பெயரடைகள், இடப்பெயர்கள் பற்றி விரிவாக விளக்கியுள்ளார். திராவிட மொழிகளின் 'பால்' பற்றிய விதிகள் இந்தோ ஐரோப்பிய மொழிகளைக் காட்டிலும் சித்திய மொழியோடு தொடர்புடையதாக அமைந்திருப்பதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். உயர்திணை, அஃறிணைப் பகுப்பின் தன்மைகளையும் கால்டுவெல் பிற மொழிக்குடும்பங்களோடு ஒப்புநோக்கி கூறியுள்ளார்.

திராவிட மொழிகள் ஒருமை, பன்மை என்ற இரு எண்களை மட்டுமே மேற்கொண்டுள்ள நிலையினையும், இருமை இம்மொழிகள் அறியாத ஒன்று என்றும் கால்டுவெல் குறித்துள்ளார்.

திராவிட மொழிகளில் காணப்படும் ஐம்பால் விகுதிகள், வேற்றுமை உருபுகள், உருபுகளை ஏற்கும் பெயரடிகள், சாரியைகள் ஆகியன பற்றி கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் விரிவாகப் பேசுகிறது.

ஒவ்வொரு வேற்றுமை உருபையும் எடுத்துக்கொண்டு நீண்ட விவாதத்தை கால்டுவெல் தம் நூலில் நிகழ்த்தியுள்ளார். இதுபோன்றே எண்ணுப் பெயர்கள், எண்ணுமுறைப் பெயர்கள், மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர், வினாப் பெயர் ஆகியன குறித்து நுட்பமான ஆய்வினை அவர் தம் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்கள் உருபேற்கும் முறைகள், எண்ணுப்பெயர்கள், இடப்பெயர்கள் ஆகியன ஒப்பிடப்பட்டு பட்டியலாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர் குறித்த ஆய்வுகள், இம்மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது என்ற கொள்கையை உறுதியோடு எதிர்ப்பதாக அமைந்துள்ளதை கால்டுவெல் நிறுவியுள்ளார். மேலும், அவை மூலத் திராவிடச் சொற்கள் என்பதையும் அவர் நிறுவியுள்ளார். குறிப்பாக, பத்து, நூறு, ஆயிரம் போன்ற சொற்கள் குறித்த விரிவான ஆய்வினை கால்டுவெல் வழங்கியுள்ளார்.

திராவிட சுட்டு மூலங்களோடு கொண்டிருக்கும் பொதுவான ஒருமைப்பாடு, இமயமலை மொழிகளில் தெளிவாகப் புலனாகிறது. இராஜ்மகால் சுட்டு மூலங்களாகிய 'ஏஹ்' 'ஆஹ்' என்பன திராவிடச் சுட்டுக்களோடு முழு ஒருமைப்பாடு கொண்டுள்ளன எனக் குறிப்பிடும் கால்டுவெல், திராவிட இடைநிலைச் சுட்டான உகரத்திற்கும் ஒரியன், திகிமால் மொழிகளின் சுட்டாகிய ஊகாரத்திற்கும் இடையில் நிலவும் உறவு ஊன்றி உணரத்தக்கது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## வினைச்சொல்

திராவிட மொழிகளின் வினைச் சொற்கள் குறித்து நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் ஒப்பிலக்கண நூல் விரிவாக ஆராய்கிறது. இப்பகுதியில், தன்வினை, பிறவினை, இருமடிப் பிறவினை, இரட்டைக் கிளவி, செயப்பாட்டு வினை, எதிர்மறை வினை, குறிப்பு வினை, விகுதி இணையும் வகை, காலங்களின் தோற்றம், நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம், கலவைக் காலங்கள், பெயரெச்சம், வினையின் பல்வேறு நிலைகள், வினையடிப் பெயர்கள், செயற்படு வினைப்பெயர்கள், வினையடைகள் ஆகிய தலைப்பில் ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன.

திராவிட வினைச் சொல்லின் அமைப்புமுறை முற்றிலும் ஒட்டுநிலைத் தன்மை வாய்ந்ததாகும். வினையின் நிலை, அது உணர்த்தும் காலம், செயப்படுபொருள் குன்றிய தன்மை, அது குன்றாத தன்மை, தன்வினைத் தன்மை, பிறவினைத் தன்மை, எதிர்மறைத் தன்மை, உடன்பாட்டுத் தன்மை ஆகியவற்றை உணர்த்தும் சொல்லுருபுகளோடு, திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகள் அம்மூலத்தோடு இணைக்கப்படுகின்றன. அவ்வாறு இணைக்கப்பெறுங்கால் அம்மூலமோ அல்லது சொல்லுருபுகளோ எவ்வித மாறுதலும் பெறுவதில்லை. வேண்டுமாயின் ஒலித்துணையும், ஒலிநயமும்

விரும்பும் ஒரு சில மாறுதல்களே இடம் பெறும். முன்னிலை ஏவல் வினைமுற்று மட்டுமே இதற்கு விதிவிலக்கு எனக் கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

செயப்பாட்டு வினை பற்றி ஆராயும் கால்டுவெல் சமஸ்கிரும், துருக்கி, பின்னிஷ் போன்ற மொழிகளில் தனி உருபுகள் வினை மூலத்தோடு இணைவதால் செயப்பாட்டு வினைவடிவங்கள் அமைகின்றன என்றும், திராவிட மொழிகளில் எந்த ஒரு மொழியும், செயப்பாட்டு வினைச் சொல்லுருபு என்ற எதையும் பெற்றிருக்கவில்லை என்றாலும், செயப்பாட்டு வினைப்பொருள் மட்டும் பல்வேறு வழிமுறைகளால் விளங்க உணர்த்தப்படுகிறது எனக் குறிப்பிடுகிறார். மேலும், பெரும்பாலான இடங்களில், செயப்பாட்டு வினைப்பொருள் ஜப்பானிய மொழியில் உள்ளது போல் தன்வினை அல்லது செயப்படுபொருள் குன்றிய வினைகளாலேயே பெறப்படுகிறது எனவும் கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

திராவிட மொழிகளில் எதிர்மறை வினை என்பது வினைவடிவ வேறுபாட்டால் அமைவதையும் எதிர்மறைப் பொருள், மூலத்தோடு சொல்லுருபுகள் சேர்வதாலும், மூலங்கள் ஒரு சிறிது வேறுபடுவதால் அமைவதையும் கால்டுவெல் விளக்கிக் காட்டியுள்ளார்.

திராவிட மொழிகளின் குறிப்பு வினைகளை கால்டுவெல் உக்ரேனிய மொழிக் குடும்பத்தோடு தொடர்புபடுத்தி விளக்கியுள்ளார். அதன் காலம் காட்டும் தன்மை பற்றியும் அவர் விளக்கியுள்ளார்.

திராவிட மொழிகளின் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய காலங்கள் அமையும் முறையினையும் உணர்த்தப்படும் முறையினையும் கால்டுவெல் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறார்.

எச்சங்களைப் பற்றி ஆராய்ந்துள்ள கால்டுவெல் பெயரெச்சத்தைத் திராவிட மொழிகளின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பு எனக் குறிப்பிட்டுள்ளார்.

வினையடிப் பெயர்கள் குறித்து ஆராய்ந்துள்ள கால்டுவெல் அவற்றை காலங்கள் உணர்த்தும் வினையாலணையும் பெயர், வினை மூலத்திலிருந்து நேரே தோன்றிக் காலம் காட்டாது நிற்கும் தொழில்பெயர் எனப் பகுத்து விளக்கியுள்ளார்.

**முடிவுரை :**

கால்டுவெல் தம் ஒப்பிலக்கண நூலின் வாயிலாக, ஆரிய மாயையிலிருந்து தென்னிந்திய சமுதாயத்தை விடுவித்தவர். தமிழின் தொன்மையையும் பெருமையையும் மீட்டெடுத்து, அதன் செவ்வியல் தன்மையை அறிவியல் முறையில் அடையாளம் காட்டியவர் கால்டுவெல்.

போக்குவரத்து, தகவல் தொடர்பு, மொழியியல் கோட்பாடுகள் போன்றவை வளர்ச்சியுறாத காலத்தில், ஆய்வுக்கான மூலங்கள் எளிதில் கிட்டாத காலத்தில் கால்டுவெல் அரிய ஆய்வினை நிகழ்த்தியுள்ளார்.

திராவிட மொழி ஆய்வுகள், கால்டுவெல்லுக்குப் பிறகு முன்னேற்றப் படிநிலைகள் பலவற்றை எட்டியிருப்பினும், அவர் வகுத்தளித்த அடிப்படைகள்தான் இன்றைக்கும் அவற்றுக்கு ஆதாரமாக விளங்கி வருகின்றன.

**துணைநூல்கள்**


கண்ணுசாமிப் பிள்ளை காழி. சிவ.
அப்பாத்துரைப்பிள்ளை கா. (மொ.ஆ)
கால்டுவெல் ஒப்பிலக்கணம்
(கிரீயர்கள் மொழியாராய்ச்சி குறிப்புகளுடன்)
சாரதா பதிப்பகம்
சென்னை – 14
ஜூ 2010

கோவிந்தன் கா.
ரத்னம் க. (மொ.ஆ)
டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்
திருமகள் நிலையம்,
சென்னை – 17
1992 (நான்காம் பதிப்பு)

மாற்றுவெளி – 1
(கால்டுவெல் சிறப்பிதழ்)
நவம்பர், 2008

Caldwell Rober Rt. Rev. **A Comparative grammar of the Dravidian or south Indian family of languages.** (A complete and & unabridged second edition) Kavithaasaran, Chennai - 19, 2008

Caldwell Rober Rt.Rev. **A Comparative grammer of the Dravidian or south Indian family of languages.** University of Madras Chennai - 5, 2008

Reprint II Edition.

..................

""""""""""""""""""""

## 5. டாக்டர் கால்டுவெல்லின் சமுதாயப்பணி

பேராசிரியர் முனைவர். **பு. ஜார்ஜ்**

பறையர்கள், பள்ளர்கள், புலையர்கள் மற்றும் அவர்களையொத்த தென்னிந்தியத் தொல்குடிகள், அங்கு வாழும் பெரும்பான்மைச் சமூகத்திலிருந்து இனரீதியாக வேறுபட்டவர்கள் என்ற கருத்து கால்டுவெல் காலத்தில் இந்தியாவில் நிலவிவந்தது. கால்டுவெல் இதனைத் தீவிரமாகக் கேள்விகுட்படுத்தி எதிர்வினை ஆற்றியுள்ளார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலில் இடம் பெற்றுள்ள பறையர் குறித்த கட்டுரையை ஆதாரமாக்கி இதனை நிறுவமுடியும்.

இந்து என்கிற சொல் சமய அடையாளமாகக் குழப்பப்பட்டு வந்ததாகச் சுட்டும் அவர், அச்சொல் தேசிய அடையாளமாக இந்தியவாழ் மக்கள் அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்துள்ளார். எனவே, வடஇந்தியப் பார்ப்பனர் மற்றும் உயர்சாதியினர் மட்டுமே இந்துக்கள் என்று கருதப்படுவதால் அக்கருத்து வடஇந்திய ஒடுக்கபட்டோர், மலைவாழ் மக்கள் மற்றும் தென்னிந்திய ஒட்டுமொத்த திராவிடர் ஆகியோரை நாடற்றவர்களாக்கிவிடுகிறது என்பதை மறுத்து அச்சொல் அவர்களுக்கும் பொதுவானது என்றும் இந்த உரிமையை அவர்களிடமிருந்து பறிப்பது நேர்மையற்ற செயல் என்றும் கூறுகிறார். இதனடிப்படையில் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த சாணார்களை இந்துக்கள் என்று அடையாளப்படுத்தி உரிமை கோருகிறார். திருநெல்வேலி சாணார்கள் இந்துக்கள் அல்ல என்று ஐரோப்பியர்கள் கருதுவது ஒரு தவறான புரிதல் எனக்கண்டிக்கும் கால்டுவெல், சாணார்கள் இந்துக்கள் அல்லர் எனும் எண்ணம் இந்துக்களுக்கே தோன்றியதில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

பறையர்கள் பற்றிய விடயத்தில் அவர்களைச் சாதியற்றவர்களாக்கும் கருத்தை வன்மையாக எதிர்க்கிறார். அவர்களுக்குச் சாதியில்லை என்பதை வடிகட்டின பிழை என்று சாடுகிறார். பறையருக்கு சாதி உண்டு எனும் கால்டுவெல், நன்கு வரையறுக்கப்பட்ட, துல்லியமாக வேறுபடுத்தக்கூடிய பழமையான சாதியைச் சார்ந்தவர்கள் பறையர் என்கிறார். தனித்தியங்கக்கூடிய அந்த சாதிக்கேயுரிய உட்பிரிவுகள் உள்ளமையையும், பிற சாதிகளின்

(மேல்/கீழ்) ஊடுருவலுக்கெதிரான தற்காப்பு உணர்வுகள் உள்ளதையும் எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டிலே அதிக மக்கள் தொகை கொண்ட சாதி இது ஒன்றுதான் என்பதையும் தெளிவு செய்கிறார். பிரம்மாவின் இழி உறுப்பிலிருந்து பிறந்தவர்களாகக் கருதப்படும் எந்தத் தாழ்ந்த சாதிக்கட்டமைப்பைவிடவும் பறையர்கள் ஒன்றும் மிகத் தாழ்ந்த சாதியினர் அல்லர் என்று மேலும் கால்டுவெல் விளக்குகிறார். பறையர்கள் முறைகேடான ஒழுக்கத்தில் பிறந்தவர்கள் எனச்சொல்லப்படும் பொய்ப் பிரசாரத்தையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அந்தத் தகுதிக்குரியவர்கள் கோயில் தேவதாசியர் வழியினர் மட்டுமே என்பதைத் தெளிவுபடுத்துகிறார். தங்கள் சாதிக்கெதிராகப் பிழைபுரிந்து சமூகத்தால் விலக்கி வைக்கப்பட்டவர்களே சாதிகளின் அடித்தளத்தில் வைக்கப்பட்டுள்ளனர் என்ற வடஇந்தியக் கருத்தியல் முழுமையும் ஒரு கட்டுக்கதை எனும் கால்டுவெல், தென்னிந்திய சாதியமுறை இக்கட்டு கதைக்குப் பொருந்தாது என்கிறார். ஆகமொத்தத்தில் பறையர்களைக் கள்ள உறவில் பிறந்தவர்கள் என்று சொல்வதும் தாங்கள் புரிந்த குற்றங்களுக்காகச் சாதிவிலக்கம் செய்யப்பட்டவர்கள் என்று சொல்வதும் கடுமையாகக் கண்டிக்கத்தக்க பகுத்தறிவுக்கொவ்வாத அடிப்படையற்ற கனவு என்கிறார் கால்டுவெல். ஆனாலும் கால்டுவெல்லுக்குப் பின்வந்த காந்தி, அவர்களை அதே பழங்கதையின் அடிப்படையில் அடையாளப்படுத்தினார். பறையர்கள் தங்கள் குற்ற நடவடிக்கைகளுக்காகச் சாதிவிலக்கம் செய்யப்பட்டவர்கள் என்ற கருத்து பரப்பப்பட்டதன் காரணம் பற்றி கால்டுவெல் கூறுகையில், பார்ப்பனரும் மேல்சாதியினரும் பறையர்களிடம் கடைபிடித்த சகிப்புத்தன்மையற்ற, சமூக இணக்கமற்ற நடத்தைகளை நியாயப்படுத்துவதற்காகவும் ஐரோப்பியர் இதனை நம்பி ஏற்றுக்கொள்வார்கள் எனும் ஊகத்தினாலும் இப்படிச் செய்தார்கள் என்கிறார். ஆனால், இந்தக் கற்பிதமானது எதையும் ஆய்ந்தறியும் பழக்கமில்லாத இந்து மனத்தின் பிழைப்பட்ட ஊகம் என்கிறார் கால்டுவெல். பறையர்களை மேல்சாதிக்காரர்கள் நடத்தும்விதம் சந்தேகத்திற்கிடமில்லாமல் அநியாயமானது. சமாதானம் சொல்ல முடியாதது என்றும் தீர்ப்பளிக்கிறார். அதே சமயத்தில் பறையர்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதையும் அவர்களது

உணர்வின் பக்கம் நின்று எடுத்துக் காட்டுகிறார். பறையர்கள் தங்கள் சாதியின்பால் பெருமித உணர்வும் பற்றும் கொண்டவர்கள். இது மற்றவர்கள் கண்ணோட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட உணர்வு. அவர்களது சாதித் தோற்றம் பற்றிய பிறரது கற்பிதங்களைக் கேட்க நேர்ந்தால் உள்ளம் கொதித்துப் போவார்கள். கடும் சீற்றத்துக்கு உள்ளாவார்கள் என்று கால்டுவெல் கூறுவது, பறையர்கள் பற்றி அவருக்கிருந்த நியாயமான புரிதலின் சாட்சியமாய்த் திகழ்கிறது.

பறையர்கள் திராவிடர்கள்தான் என நிரூபிக்க கால்டுவெல் கூறுவன கவனிக்கத்தக்கன. பறையர்கள் திராவிடர்கள்தாம் என்பது மிகுந்த நம்பகத்தன்மையுள்ளது எனும் கால்டுவெல், திராவிடர்கள் ஆரியர்களால் முந்தப்பட்டது போல தொல்பழமையும் கடுங்கருமை நிறமும் உள்ள ஓர் இனம் திராவிடர்களால் முந்தப்பட்டிருக்கலாம் என்கிறார். வென்றெடுக்கப்பட்டு அடிமைநிலையை அவர்களுக்குப் பின் வந்தவர்கள் ஏற்படுத்தியிருக்கலாம் என்பது அவரின் முடிவு.

பறையர்களிடமுள்ள கர்ணபரம்பரைக் கதைகள், அவர்கள் உயர்நிலையில் கௌரவமானவர்களாய் இருந்ததைச் சொல்லுவனவாய் உள்ளமையை எடுத்துக்காட்டுகிறார். தங்கள் சாதியானது பழங்காலத்தில் உயர்நிலையில் இருந்தது என்று தமிழ்ப் பறையர்கள் பெருமை பேசிக்கொள்வதைச் சுட்டும் கால்டுவெல் பழங்காலத்தில் தங்கள் முன்னோர்கள் அப்போது ஆட்சி செய்த மன்னர்களிடம் செறுக்குடன் நடந்து கொண்டதால் அதற்குத் தண்டனையாகத் தாங்கள் இழிநிலைக்குத் தள்ளப்பட்டதாகச் சொல்லிக்கொள்வதையும் எடுத்துரைக்கிறார். ஏகாத்தாள் அம்மனின் கணவனாகத் தாலிகட்டும் சடங்காற்றும் சிறப்புரிமை ஒட்டுமொத்தச் சமூகத்தின் பிரதிநிதியாக பறையர் ஒருவருக்கு வழங்கப்படுவதை நினைவுபடுத்தும் கால்டுவெல், தாழ்நிலை வகுப்பாளர்களின் தெய்வங்களான அம்மன்கள், கருப்புகள் போன்றவர்களின் விழாக்களில் பறையர்களுக்குத் தரப்படும் இவ்வுரிமை மேற்கண்ட நிகழ்வில் உயர்சாதிக்காரர்கள், அவர்களுக்கு வழங்கும் நிகழ்வாய் அமைந்து, பறையர்களின் பழங்காலத்து முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதன் அடையாளமாய்த் திகழ்கிறது என்கிறார்.

இராமநுஜ ஆசாரியாரின் முக்கிய பீடமான மேலக்கோட்டையிலும், பேலூரில் உள்ள பார்ப்பனர் ஆலயத்திலும்

ஆண்டில் மூன்று நாட்கள் கோயிலில் நுழையும் உரிமையை ஹோலியர்கள் அல்லது பறையர்கள் பெறும் வகையில் அந்நாட்கள் ஒதுக்கித் தரப்படுவதையும் தஞ்சை மாவட்ட திருவாலூர் சிவன் கோவிலின் கோலாகலத் திருவிழாவில் பறையர்களின் மூப்பர் உற்சவ மூர்த்தியோடு யானை மீதேறி அமர்ந்து செங்கோல் ஏந்திச் செல்வதையும் வணிகச் சாதியினரும் விசாகப்பட்டினத்தில் பார்ப்பனரும் தாங்கள் திருமணம் செய்து கொள்வதற்குக் கீழ்நிலைச் சாதிகளிடம் சம்மதம் கேட்பதையும் மேற்கண்ட கருத்துக்கு வலுவூட்டும் வகையில் எடுத்துகாட்டுகிறார். பறையர்களின் ஆதி உயர்வின் எச்சங்களாக இவற்றை அடையாளப்படுத்துகிறார். முடிவாக, பார்ப்பன வருகையின்போது உண்மையிலேயே இம்மண்ணின் எஜமானர்களாகப் பறையர்கள் இருந்தார்கள் என்ற முடிவுக்கு வருகிறார்.

தாழ்த்தப்பட்ட சாதிகள் திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்தான் என்பதை நிரூபிக்க, தங்கள் இனமே தங்கள் இனத்தை அடிமைகளாக வைத்திருக்கும் உலக நிலைமைகளை எடுத்து விளக்குகிறார். அவை வருமாறு :

1. உருஷ்ய பண்ணை அடிமைகள் தங்கள் எஜமானர்களைப் போலவே ஸ்லவோனியர்கள்தாம்.
2. மக்கியார் அடிமைகள் மக்கியார் இனத்தவர்கள்தாம். இனரீதியாக அவர்கள் தங்கள் எஜமானர்களுக்குச் சமமானவர்கள்.
3. இந்தியத் தென்கோடி சாணார் சாதியில் பணக்கார சாணார்கள் தங்கள் சாதியை அல்லது உட்சாதியைச் சேர்ந்தவர்களையே அடிமைகளாக வேலைக்கு அமர்த்துகிறார்கள். தொழும்பர்களான இந்தச் சாணார்கள் தங்கள் எஜமானர்களால் தங்கள் சொந்தச் சாதியினர் என்றே ஒத்துக்கொள்ளப்படுகின்றனர்.
4. தென்பகுதி மறவர்களில் ஒரு பிரிவினர் பாளையக்காரர்கள் அல்லது மறவர் தலைவர்களுக்கு அடிமைகளாக இருக்கின்றனர்.
5. வெள்ளாளர்களில்கூட சில குடும்பங்கள் கோயிலுக்குத் தொழும்பர்களாக நேர்ந்துவிடப்படுகின்றனர்.

இந்த உதாரணங்கள் போன்றே திராவிடர்களால் அடிமை செய்யப்பட்ட திராவிடர்தான் பறையர் என்ற் முடிவுக்கு வருகிறார்.

வாழ்நிலை வேறுபாடுகள், இனத்தாழ்ச்சி என்பதற்கெல்லாம் மேலாகப் பறையர்களின் தாழ்நிலைக்கு, போரினால் அவர்கள் வெல்லப்பட்ட நிலைமைதான் காரணமென்கிறார். இந்தக் காரணத்தோடு வறுமை, தொழும்பர்களாக வைத்து வேலைவாங்கும் பண்ணையடிமை முறை, சமூக அமைப்பு அதாவது அடிமை வணிகமுறை ஆகியவற்றாலும் அடிமைமுறை உருவாகியிருக்கலாம் எனும் கருதுகோள் கொண்ட அவர், போரினால் வெல்லப்பட்டவர்கள் பறையர்கள் என மேற்கூறிய தமது கருத்துக்கு ஆதரவாகப் பறையர், பள்ளர், புலையர் ஆகியோர் பொதுவாக அடிமை நிலையிலிருந்து அவர்களை விடவும் மிகத் தாழ்வாக அழுத்தப்பட்ட வேறுசில சாதியினர் முற்றும் சுதந்திரவாளிகளாய் உள்ளமையை எடுத்துக்காட்டுகிறார்.

பறையர்கள் அவர்களுடைய உயர்சாதியினரிலிருந்து வேறுபட்ட இனத்தினர் எனக் கருதுவதற்கு அவர்களது உடற்கூறுகள், வடிவ அமைப்பு, தோலின் நிறம் போன்ற எதுவும் துணை செய்யவில்லை என்று உடற்கூற்று மானிடவியல் அடிப்படையில் முடிவு செய்கிறார். அவர்களின் கூடுதல் கறுப்பு நிறம் அவர்களை நீக்ரோ இனத்தவர் எனக் கருதத்தூண்டலாம். ஆனால் அப்படிப்பட்ட புனைவுகள் தேவையற்றவை எனக்கூறும் கால்டுவெல் கடும்வெய்யிலில் உழைப்பதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுவதுதான் அவர்களின் கூடுதல் கறுப்பு நிறத்துக்குக் காரணம் என்கிறார். இதுபோல் ஒரே இனமான எகிப்திய நாட்டின் பெல்லாக்கள் எனப்படும் உழைப்பாளிகள், பிடாயின்கள், அலைந்து திரியும் இடையர்கள் ஆகியோர்கள் பிற எகிப்தியர்களைவிட ஆழ்ந்த பழுப்பு நிறமுள்ளவர்கள் என்றாலும் அவர்கள் தூய இரத்தமுள்ள அரேபிர்களே என்று எண்ணப்படுவதை உதாரணம் காட்டுகிறார்கள். நிலைமை இப்படியிருக்க எகிப்தைவிட கடும்வெய்யிலில் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டவர்களின் கரிய நிறத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அவர்களைப் பிற திராவிடர்களிலிருந்து வேறுபட்ட இனம் என்று எண்ணுவது பொறுப்பற்ற செயல் என மேலும் கண்டிருக்கிறார் கால்டுவெல். உயர்சாதித் திராவிடர்களின் பொறுப்பற்ற இச்செயலால் பறையர்கள் தங்கள் வாழ்நிலையையே இழக்கும்படி நடத்தப்படும் விதங்கள் பலவிதம்

என்பதை உலகத்தார்க்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். அவை வருமாறு.

1. காலாகாலத்துக்கும் விவசாயக் கூலிகளாக அல்லது அடிமைகளாக நாட்டு மக்களிடமிருந்து அவர்களைப் பிரித்து வைத்திருப்பது.
2. எளிதான சூழல்களில்கூட அக்குடும்பங்களோடு திருமண உறவுகளைத் தடை செய்து வைத்திருப்பது.
3. மதிப்புமிக்க குடும்பங்களிலிருந்து தொலைவில் தள்ளி வைத்து, ஆக மோசமான குடிசைகளில்தன் கையே தனக்குதவியாக வாழச் செய்திருப்பது.
4. ஆண்டுக்கு இரண்டுமுறை தலைக்குமேல் சூரியன் தகிக்கும் வெப்ப நாட்டில் ஆண்டு முழுவதும் கடுமையாக உழைக்கும்படி கட்டாயப்படுத்துவது.
5. வாழ்க்கையில் உயரும் எல்லா வாய்ப்புகளையும் மறுப்பது.
6. நிழலான சூழலில் அமர்ந்து பணியாற்றும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் முற்றாகத் தடை செய்வது.
7. கல்வியை மறுப்பது.
8. செய்த வேலைக்குக் கூலி கொடுக்காமலிருப்பது.
9. வயிறு ஒட்டிப் போகுமளவிற்கே சோறிடுவது.
10. மானம் காக்க முடியாதபடிக்கு துணி கொடுப்பது.
11. சாராயம் குடிக்கவும் செத்த மாட்டைத் தின்னவும் ஊக்கப்படுத்துவது.
12. குறைந்தபட்ச வெட்கத்தை மறைக்கும்படியேனும் பெண்கள் உடுத்துவதைத் தடுப்பது.

பார்ப்பனர்களும் உயர்சாதித் திராவிடர்களும் பறையர் முதலானவர்களை நடத்தும் இந்த முறைகளிலெல்லாம் ஒருவரை நடத்துங்கள். இவ்வளவும் செய்த பிறகும் சொரசொரத்த அவர்களது வடிவமைப்பிற்கும், குன்றிய தோற்றத்திற்கும், தோலின் கறுப்புக்கும் காரணம் கண்டுபிடிக்க நீக்ரோக்களை அவர்களுடன் கலப்படம் செய்யும் கருத்தைத் திணிப்பது மோசமானது எனத் தெளிவாகக் கண்டிக்கிறார். மேற்கண்டவாறெல்லாம் ஈவு இரக்கமின்றி நடத்தப்பட்டால் எந்த உயர்சாதித் திராவிடர்களும் பறையர்களைப் போலத்தான் காணப்படுவார்கள் என்கிறார். மாறாக உயர்சாதித் திராவிடர் வாழும்

சூழலில் பறையரை வைத்தால் அவர்களுக்கிணையாக வெகுவிரைவில் ஆகிவிடுவார்கள் என்பதையும் அப்போது எல்லாரும் ஒன்றென்பது வெளிச்சமாகும் என்பதையும் தெளிவாகச் சுட்டுகிறார். இன்றைக்கு முன்னேறிய பறையர்களைப் பார்த்தால் கால்டுவெல் சொன்னது பூரண உண்மை என்பது புரிகிறது.

பறையர்கள் நடத்தப்படும் விதத்தை ஃபிடல்காஸ்ட்ரோவின் பார்வையைப் பொருத்தி இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். வறுமையாலும் அநீதியாலும் அவமதிப்பாலும் அசமத்துவத்தாலும் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட காஸ்ட்ரோ, அவர்களின் துயரங்கள் பொருள் சார்ந்தது மட்டுமல்ல நெறிசார்ந்ததும் என்பதை எடுத்துக்காட்டி மேலும் கூறுவன இங்கு நோக்கத்தக்கன.

உங்களுக்கு 3000 கலோரி தேவைப்படுகிறது. ஆனால் 1500 கலோரிதான் கிடைக்கிறது என்பதால் மட்டும் நீங்கள் துன்பப்படுவதில்லை. வேறொரு துன்பமும் இருக்கிறது. அதுதான் சமுதாய சமத்துவமின்மை.

அது உங்களை அடித்தளமே இல்லாதவராக, மனிதர் என்ற மரியாதைகூட மறுக்கப்பட்டவராக உணரச்செய்கிறது. ஏனென்றால் எவரும் உங்களைப் பற்றி எதுவும் நினைப்பதில்லை. நீங்கள் ஒரு குப்பை போல, நீங்கள் இல்லவே இல்லாதது போல நடத்தப்படுகிறீர்கள். சிலர் எல்லாமாக இருக்கிறார்கள், நீங்களோ எதுவுமேயில்லை.

(ஃபிடல் காஸ்ட்ரோ, மதம் மக்கள் புரட்சி : 180–181)

புறக்காரணிகள் ஒருபுறமிக்க தென்னாட்டிலுள்ள அனைவரது தலை அமைப்பு ஒரே மாதிரியாக அமைவதால் அனைத்துச் சாதியாரும் திராவிடரே என்று நிறுவுகிறார். இந்த நிரூபனத்திற்கு வலு சேர்க்கவே அக்கால ஆய்வு முறையாக இருந்த மொழி ஒப்பியல் ஆய்வுக்குள் கால்டுவெல் நுழைகிறார். நுழைந்து ஆராய்ந்த பின், திராவிட மொழிகள் யாதொன்றிலும் மக்கள் மொழிக்குப் புறம்பான அயல்மரபுக் கூறுகளின் தடயத்தைக் காண முடியவில்லை என்றும், திராவிட மொழிகள் அனைத்திலும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த எல்லா இலக்கணக் கூறுகளும் ஒன்றுக்குள் ஒன்றாக இயைந்து பொருந்தியுள்ளன என்றும், எல்லா திராவிடர்களின் மொழிக் கூறுகளும் அவர்கள் யாவரும்

ஓரினத்தவரே எனும் முடிவுக்கு இட்டுச் செல்கின்றன என்றும் பறையர் மற்றும் பிற அடிமைச் சாதியினர் உயர் சாதியினர் ஆகிய திராவிடர்களின் மொழிமரபுக் கூறுகளிலோ தனித்தன்மையுள்ள சொற்களிலோ பேச்சு முறையிலோ ஒரு வேறுபாடும் இல்லை என்றும் திராவிட மொழிகளின் இப்படிப்பட்ட ஒருமைத் தன்மையானது தாழ்த்தப்பட்ட சாதிகளையும் உள்ளடக்கிய இனரீதியான ஒருமைத் தன்மையை மெய்ப்பிக்கிறது என்றும் தீர்ப்பளிக்கிறார்.

தமது தென்னிந்திய நடைபயண அனுபவப் பட்டறையிலிருந்து திராவிடவியல் தத்துவத்தைப் பட்டைத் தீட்டித் தந்தார் கால்டுவெல். ஒட்டுமொத்த திராவிடச் சமூகத்துக்கு அவர் செய்த மிகப்பெரிய பணியாகும். வடஆரியத்தால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த தென்னிந்தியர்களுக்கு ஆதரவாக, அவர் இந்த திராவிடவியல் கருத்தாக்கத்தை ஆக்கித் தந்தார். அதேபோல திராவிடக் கருத்தியலைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்ட உயர்சாதிக்காரர்களால் ஒடுக்கப்பட்டவர்களுக்கு இன்னும் அதிகமான ஆதரவுக் குரலை அவரது ஆய்வு முன்வைப்பதையும் காணமுடிகிறது. இன்னொன்றையும் அவரது ஆய்வில் காண முடிகிறது. அது உயர்சாதித் திராவிடராலும் உயர்சாதித் திராவிடரால் ஒடுக்கப்பட்டவர்களாலும் சேர்ந்து வெவ்வேறு நிலையில் ஒடுக்குதலுக்குள்ளான தோல்தொழிலாளர் மற்றும் ஆடை வெளுப்போர் ஆகியோருக்கு இதைவிட அதிக அதிக ஆதரவுக் குரல். இப்படியாக மானுடத்தன்மையோடு விரிகிறது அவரது பணி. பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு ஆதரவைக் காட்டும் தாயுள்ளம் கொண்டது கால்டுவெல் மனம். ஒட்டுமொத்த திராவிடர்களுக்கும் ஒரு தாய் இருந்தால் அனைத்துப் பிள்ளைகளுக்கும் அவர் என்ன செய்வாரோ அதைத் தெளிவாகச் செய்திருக்கிறார் கால்டுவெல். கால்டுவெல்லின் இச்செயல் அம்பேத்கரை நினைவூட்டுகிறது. இயேசுவையும் இயேசுவுக்கு முன்னோடியான புத்தரையும் பின்பற்றுகிறது.

பண்பாடு, மொழிசார்ந்த தளங்களில் தென்னகத்தார் அனைவரும் திராவிடர்களே என்பதைத் துல்லியமாக நிரூபித்துக் காட்டியுள்ளார் கால்டுவெல். 1856இல் ஆங்கிலத்தில் வெளிவந்த திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், எனும் நூலில் அவர் இதனை முதன்முதலாக நிரூபித்தார். இனவெறியை விட அதிகக் கொடூரமான சாதிப்புத்தியுள்ள

திராவிடர்கள் கால்டுவெல்லின் இந்த நூலை மீண்டும் வெளியிட்டபோது, கால்டுவெல் வெளியிட்ட நூலிலிருந்த, பறையருக்கு நீதிதேடும் கட்டுரையையும் அதற்கு ஆதரவான பிறவற்றையும் வெட்டியெடுத்துவிட்டு வெளியிட்டுள்ளார்கள். அதாவது பறையர்களை இருட்டறைக்குள் தள்ளிவிட்டு கால்டுவெல்லின் ஆய்வைத் தங்களுக்குச் சாதகமாக மட்டும் பயன்படுத்தித் திராவிட தேசியத்தைக் கட்டமைத்து அரியணையைத் தமதாக்கிக் கொண்டார்கள் உயர்சாதித் திராவிடர்கள்.

தமிழன் என்பதற்குச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி (1936) பறையனொழிந்த தமிழ்ச்சாதியான் என்றே பொருளுரைக்கிறது. டார்வினைப் போல் ஆய்வு செய்த கால்டுவெல்லின் நிரூபனத்தை எந்த உயர்சாதித் திராவிடரும் முழுமையாக ஆதரிக்கவில்லை அல்லது கால்டுவெல் முன்னெடுத்த பறையர் விடயத்தை அதுவரை கண்டு கொள்ளவே இல்லை என்பதற்கு இது சான்று. போப்இரண்டாம் ஜான்பால், கலிலியோவைத் துன்புறுத்திய தமது முன்னோருக்குப் பதிலாக மன்னிப்புக் கோரிய பின்னும் (தென்) இந்தியக் கிறித்தவர்கள் இன்றும் இதனை ஒப்புக்கொள்வதாகத் தெரியவில்லை. நொறுங்குண்டவர் மீண்டெழ உதவாத ஒடுக்குவோருக்கு ஆதரவான பழங்கதைகளை மட்டுமே பெருமிதமாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தி ஏற்கனவே ஏமாந்த மக்களை மேலும் சூடுசுரணையற்றவர்களாக்குகிற இன்றைய (முதலாளித்துவ) கிறித்துவம் போலவே சாதித்திராவிடர்களின் இச்செயல்பாட்டையும் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. என்னை ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் பிதாவின் இராச்சியத்திற்குள் வந்துவிடமுடியாது என் பிதாவின் விருப்பப்படி நடப்பவர்கள்தான் அங்குச் செல்கிறார்கள் என்று இயேசு சொன்னது இப்படிப்பட்டவர்களுக்குத்தான். இயேசு வாழ்ந்து காட்டியபடி ஏழைகளுக்காக வாழாதவர்கள், மாறாக அவர்களை ஏய்த்துப் பிழைப்பவர்கள் எப்படி அவரது இராச்சியத்தில் பிரவேசிக்கமுடியும்? விடுதலை வீரரான இயேசுவை மையமிட்ட இந்தப் பார்வையிலிருந்து புரிந்து கொள்ளப்பட்ட இறையியல், இன்றைக்கு இந்தியாவில் தேவைப்படுகின்ற பொருத்தப்பாடுடைய ஒன்றாகும். இது குறித்த ஃபிடல் காஸ்ட்ரோவின் கருத்து இங்குக் கூடுதல் புரிதலை உண்டாக்க உதவக்கூடும்.

*விடுதலை இறையியல் என்பது கிறித்தவம் தனது வேர்களுக்குத் திரும்புகிற, தனது மிக அழகான, ஈர்ப்புமிக்க, வீரமிக்க, பெருமை வாய்ந்த வரலாற்றுத் திரும்புகிற செயலாகும் என்று நான் விளக்கமளிக்க முடியும். நமது காலகட்டத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சிப் போக்குகளில் ஒன்று இது என்பதை இலத்தீன் அமெரிக்காவின் இடதுசாரிகள் அனைவரும் கவனத்தில் கொண்டாக வேண்டிய கட்டாயத்தை இது ஏற்படுத்துகிறது என்பதும் முக்கியமானது. இதனை அப்படிச் சித்திரிக்கலாம். ஏனென்றால் சுரண்டல்காரர்கள், ஆக்கரிமிப்பு அடக்குமுறையாளர்கள், மற்ற நாடுகளில் குறுக்கிடுகிறவர்கள், மக்களின் செல்வங்களை கொள்ள அடிப்பவர்கள் நம்மை அறியாமையிலும் நோய் நொடியிலும் வறுமையிலும் வைத்திருப்பவர்கள் ஆகியோர். மக்களைப் குழப்புவதற்கும் ஏமாற்றவதற்கும் அந்நியப் படுத்துவதற்கும் தொடர்ந்து சுரண்டுவதற்கும் பயன்படுத்துகிற முக்கியமான ஆயுதத்தை இது அவர்களிடமிருந்து தட்டிப் பறிக்கிறது.*

(ஃபிடல் காஸ்ட்ரோ, மேலது 316)

தன்னைப்போல் பிறரை நேசி என்கிற மானுடக் கோட்பாட்டை வலியுறுத்தி அதை நிரூபிக்கத் தன்னைப் போல் போராடக் கற்றுத்தந்த மாவீரர் இயேசுவின் கொள்கைகள் யாரை நோக்கி முன்னெடுக்கப்பட்டனவோ அந்த எழைகளுக்கே உதவாத வியாபார வழிபாட்டுப் பொருளாக, ஏய்ப்போருக்கு உதவுபவையாக அவற்றை முலாம்பூசி மாற்றிவிட முடிகிறதென்றால் ஏழைகளுக்கான கால்டுவெல்லை மட்டும் எப்படி முலாம்பூசாமல் உயர்சாதித் திராவிடர்கள் அடையாளம் காட்டிவிடுவார்கள்? பிராமணர் ஒழிந்த உயர்சாதித் திராவிடர்கள் (சூத்திரர்கள்) மட்டுமே திராவிடர்கள் என்று முழங்கி, எழுச்சி பெறுவதற்கு கால்டுவெல்லைத் தங்களுக்குச் சாதகமாக, தங்களின் வியாபாரப் பொருளாக்கிக் கொண்டார்கள். சாதிக் கிறித்தவர்களும் கால்டுவெல்லைத் தங்களுக்குச் சாதகமாக, தங்களின் வியாபாரப் பொருளாக்கிக் கொண்டார்கள். சாதிக்கிறித்தவர்களும் கால்டுவெல்லைத் தங்களுக்கான வியாபாரச் சந்தையில் மதிப்புமிக்க பொருளாய் பார்க்கிறார்கள். இவர்களிடையே கிறித்தவமும் சந்தைப்பொருளாய்க கிடப்பதையே காணமுடிகிறது. இயேசுவைப்போல ஏழைகளுட்கு ஆதரவாக சாட்டையெடுக்கவும் வாளெடுக்கவும் கற்றுத்தராதவர்களுக்கும் கற்றுக் கொள்ளாதவர்களுக்கும்

கால்டுவெல்லின் ஏழைகளுக்காதரவான ஆராய்ச்சியை முழுமையாக்கி வெளியிட மனமில்லாதவர்களுக்கும் வித்தியாசம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆன்மாவைப் பற்றியே அதிகம் கவலைப்பட்டு மனிதர்களை மறந்துவிடுகின்ற இன்றைய கிறித்தவம் போலித்தனமானது.

*ஆன்மீகம் என்பது நமது ஆன்ம வாழ்க்கையைப் பற்றியது மட்டுமல்ல. ஆன்மா, உடல் இரண்டும் இணைந்த முழு மனிதனைப் பற்றியது அது. ஹீப்ரு(தொன்மையான யூத இனமரபினர்) மக்களிடையே பொருள் என்பதற்கும் ஆன்மா என்பதற்கும் இடையே இப்படிப்பட்ட வேறுபாடு எதுவும் கிடையாது. முரண்பாடாக ஒலிக்கும் ஆன்மஉடல் என்ற கருத்தைக்கூட புனித பால் முன்வைத்திருக்கிறார். பைபிளில் ஆன்மீக அறிவு என்பது அனுபவ அறிவுதான். நீங்கள் எதை அனுபவிக்கிறீர்களோ அதைத்தான் தெரிந்து வைத்திருக்க முடியும் என்பதே உண்மை. ஆன்மா—உடல் தத்துவப் பிரிவு கிரேக்கத் தத்துவப் பிரிவிலிருந்து வந்ததாகும். அது நான்காம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்துவ இறையியலில் தாக்கம் செலுத்தலானது.*

(ஃபிடல் காஸ்ட்ரோ, மேலது : 74)

இயேசுதான் முதல் பொதுவுடைமைவாதி என்கின்றனர் நவீன பொதுவுடைமைவாத மூலவர்கள். ஏழைகளுக்கு முக்கியத்துவமளிக்கும் இயேசுவின் மலைப்பிரசங்கத்தைப் படித்து அதனால் ஈர்க்கப்பட்டவராக கார்ல்மார்க்ஸ் இருந்திருக்கவேண்டும் எனும் பிடல்காஸ்ட்ரோ, இயேசுவின் பொதுமை அரசை கட்டியமைத்திருக்கிறோம்; கியூபா வந்து பாருங்கள் என்கிறார். இயேசுவின் விருப்பப்படி ஒரு அரசை உருவாக்க வேண்டுமென்று பேராயர்கள் எண்ணினால் அது எங்களுடைய அரசுபோல்தான் இருக்கும் என்கிறார். அந்த அரசு குறித்து அவர் கூறுவன நோக்கத்தக்கன.

*கிறிஸ்துவ நெறிகளின்படி ஆட்சி நடத்துகிற ஒரு அரசின்கீழ் சூதாட்டம் நடைபெறுவதை நீங்கள் நிச்சயமாக அனுமதிக்கமாட்டீர்கள். அதைத் தடுக்க உங்களால் இயன்றதையெல்லாம் செய்வீர்கள். நாங்கள் சூதாட்டத்தை ஒழித்துக் கட்டியிருக்கிறோம். உங்கள் இராச்சியத்தில் பிச்சைக்காரர்கள் இருக்கமாட்டார்கள். இலத்தீன் அமெரிக்காவிலேயே ஒரு பிச்சைக்காரர்கூட இல்லாத நாடு கியூபாதான். சிறு குழந்தைகள் கைவிடப்படுவதையோ பட்டினி கிடப்பதையோ நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள். எங்கள் நாட்டில்*

*ஒரே ஒரு குழந்தைகூட கைவிடப்படுவதில்லை. பட்டினி கிடப்பதில்லை. முதியவர்களை நீங்கள் கதியற்றவர்களாக, உதவிகள் கிடைக்காதவர்களாக விட்டுவிட மாட்டீர்கள். கியூபாவில் எல்லா முதியர்களுக்கும் ஆதரவும் உதவியும் கிடைக்கின்றன. பெரிதாக வேலையின்மை நாடாக நீங்கள் வைத்திருக்க மாட்டீர்கள். கியூபாவில் வேலையின்மை என்பதே இல்லை. போதைப் பொருள்களை நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள். எங்கள் நாட்டில் போதைக்கு அடிமையாவது ஒழிக்கப்பட்டுவிட்டது. உயிர் வாழ்வதற்காகப் பெண்கள் தங்கள் உடலை விற்க நேரிடுகிற விபசாரத்தை நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள். எங்கள் நாட்டில் விபசாரம் ஒழித்துக் கட்டப்பட்டு விட்டது. பாலினப் பாகுபாடுகள் நீக்கப்பட்டுவிட்டன. அதனால் சிறப்பான சூழல்களில் பெண்கள் பணியாற்ற முடிகிறது. வாழ முடிகிறது. சமுதாயத்தில் கூடுதலாக தலையாய பங்காற்ற முடிகிறது. ஊழல், திருட்டு, கையாடல் ஆகிய அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடியிருக்கிறோம். நாங்கள் எதையெல்லாம் எதிர்த்துப் போராடினோமோ, எந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு கண்டிருக்கிறோமோ, அவையெல்லாம் ஒருவேளை திருச்சபை தனதுகிறித்துவ நெறிகளுக்கேற்ப ஒரு அரசமைக்குமானால் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள்தான்.*

(ஃபிடல் காஸ்ட்ரோ, மேலது : 287)

கிறித்தவத்தை முன்னெடுப்பவர்களும் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்பவர்களும் ஆழமாகச் சிந்தித்துச் செயல்பட திசையை இது காட்டுகிறது.

தொழிலாளர்களுக்குக் கூலி கொடுத்தது தொடர்பாக இயேசு எடுத்துக்காட்டிய உதாரணத்தை நினைவுகூர்ந்த ஃபிடல் காஸ்ட்ரோ மேலும் கூறுகிறார்.

*நாங்கள் சோசலிசம் என்று சொல்வதற்கும் அப்பாற்பட்ட ஒரு நுட்பமான கம்யூனிசக் கோட்பாடாக அதை நான் கருதுகிறேன். ஏனென்றால், சோசலிசத்தின் கீழ் ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும். கம்யூனிசக் கோட்பாடோ ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப வழங்கப்படும் என்பதுதான். ஒருநாளில் வேலை செய்கிற ஒவ்வொருவருக்கும் ஒரு தினார் கூலி என்பது அவரவர் தேவையின் அடிப்படையில் பொருள் விநியோகம் என்பதைக் குறிக்கிறது. அது*

*ஒரு தனித்துவமான கம்யூனிசக் கோட்பாடு.*

(ஃபிடல் காஸ்ட்ரோ, மேலது : 352)

இயேசு சொன்னதையும் செய்துகாட்டியதையும் நடைமுறைப் படுத்துபவர்தானே உண்மைக் கிறித்துவர். தம்மை இப்படித்தான் நினைவுகூர இயேசு விரும்பினார். ஏழைகளுக்குத் துரோகமிழைக்கிறவர் எவரோ அவர் கிறிஸ்துவுக்குத் துரோகமிழைக்கிறார். ஏழைகளிடமிருந்து விலகுகிறவர் எவரோ அவர் கிறிஸ்துவிடமிருந்து விலகுகிறார் எனும் ஃபிடல் காஸ்ட்ரோவின் புரிதல் இங்குள்ள கிறிஸ்துவர்களாயிருக் கிறவர்களுக்கு ஏற்படவேண்டும். அப்படிப்பட்ட புரிதல் கிறித்தவர்களுக்கு ஏற்படாதவரை கிறித்துவம் உயிரற்றுக் கிடக்கும்.

இயேசுவுக்கு 6 நூற்றாண்டுகள் முற்பட்டு புத்தர் இந்தியாவில் பொதுவுடைமைச் சிந்தனைப் போக்குக்கு வித்திட்டார். அசோகர் ஆசியாவெங்கும் அதனைப் பரப்பினார். பறையர்களைப் பூர்வ பௌத்தர்கள் என்கிறார் அயோத்திதாசப் பண்டிதர். பௌத்தத்தின்மீதான வைதீக வெறுப்பே பறையர் முதலானோரை அடிமைகளாக்கியது என்கிறார் அம்பேத்கர். கால்டுவெல்லின் கருத்துக்கு அம்பேத்கர் வலுசேர்க்கிறார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. கால்டுவெல் குறிப்பிடும் முக்கியமானதொரு கருத்து இங்கு கவனிக்கத்தக்க தாயுள்ளது.

*பறையர்கள் முன்னொரு காலத்தில் கவுரவமான இடத்தைப் பெற்றிருந்தார்கள் என்னும் சம்பிரதாயப் பேச்சுக்கள் நம் கருத்தை நிறுவமாட்டா. ஒருவேளை வரலாற்று ஆதாரங்களோடு அதில் பொருந்தி நின்றால், அவர்கள் நிரூபிக்க வேண்டியது தாங்கள் வேறுபட்ட இனம் என்பதையல்ல. மாறாக, அடிமைத்தனத்தில் குறுக்கப் படுவதற்கு முன் சமூகத்தில் தாங்கள் வகித்த மரியாதைக்குரிய இடத்தையும் தாங்கள் பெற்றிருந்த தன்னுரிமையையுமே.*

(தமிழ்ச் சமூகமும் தலித்தியக் கருத்தாடலும் : 208)

கால்டுவெல்லின் இந்த விருப்பப்படி பறையர்களின் மரியாதைக்குரிய முற்கால நிலைமையைத் தக்க சான்றுகளால் நிரூபிக்க வேண்டியிருக்கிறது. இது சமூகநீதி தேடுகின்ற ஆய்வாளர்களுக்கு அவர் விதித்துச் சென்ற கடமை.

சங்க இலக்கியங்களை கால்டுவெல் பயின்றிருக்கப் பெரிதும் வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. பௌத்த சங்கத்தின் இலக்கியங்களாய் அமைந்து, உலகின் உன்னத மானுடத்தைப் பறைசாற்றுகின்றன சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களின் சாரமாக திருக்குறள் அமைந்துள்ளது. அந்த வள்ளுவப் பறையர்தான் அன்று போலவே இன்று அனைவருக்கும் ஒழுக்கத்தைக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார். சங்க இலக்கியத்தில் வரும் புலவர்களின் பெயரான சாத்தன், சாத்தி, நாகன், நாகை போன்றன இன்றும் தலித் மக்களின் பெயராய்ப் பெரும்பாலும் வைத்துக் கொண்டாடப்படுகின்றன என்பதே அவர்கள் பூர்வகால பௌத்தர்கள் என்பதற்குச் சான்று.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் கல்வெட்டு மதுரை மாங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிடைக்கும் முதல் கல்வெட்டு இதுதான். அசோகரின் காலத்தில் அவரது எழுத்துவரிவடிவில் தம்மம் என்கிற பாலிமொழிச்சொல் அதே உச்சரிப்புக்கேற்ற வரிவடிவில் அக்கல்வெட்டில் செதுக்கப்பட்டுள்ளது. நெடுஞ்செழியனும் அவரது மகனாரான பெருவழுதியும்தான் சங்க இலக்கியத்தை தொகுத்தவர்கள் எனத்தெரிகிறது. பெருவழுதி அசோகரோடு மிகநெருங்கிய நண்பராயிருந்திருக்கிறார் என்பதும் புலப்படுகிறது. பெருவழுதி முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது என்றும் திருவள்ளுவர் பெருவழுதியின் மகன் என்றும் எடுத்துக்காட்டுகிறார் அயோத்திதாசர் (அ.தா.சிந் 11:568) மேற்சுட்டிய பாண்டியன் நெடுஞ்செழியன்தான்

வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்கின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே
(புறநூறு 183 : 8–10)

என்று பாடியவர். இந்தப் பாண்டியன் அவையில் தலைமைப் புலவராக இருந்தவர் மதுரைக் காஞ்சி எனும் சங்க இலக்கிய நூலைப் பாடிய மாங்குடி மருதனார் இவர்தான்.

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியுமில்லை (புறநானூறு) 335 : 7–8)

என்று பெரும் பெருமிதம் பேசுபவர் இதே பாண்டியன் அவையில் இருந்த

மற்றொரு புலவர் நக்கீரர். இவர்தான் பொய்யுரைப்பது பௌத்த அழகியல் இல்லை என இவனை எதிர்த்தவர். பொய்யுரைக்காத சங்க இலக்கியம் பௌத்த அழகியலின் சாட்சியம்.

பறை அடிக்கிறவர்கள் என்பதால் பறையர் எனப்பெயர் பெற்றனர் எனச் சரியாகவே கால்டுவெல் புரிந்து கொண்டிருக்கிறார். பறைதல் என்றால் சொல்லுதல் என்றும் அர்த்தம். பௌத்த அறத்தை எடுத்துச் சொன்னவர்களும் அதன்படி வாழ்ந்தவர்களும் பறையர்கள். அதற்குப் பறையே சாட்சி. பௌத்தத்தில் நிலையாமைக் கொள்கை (Impermanance Theory) முக்கியமானது. தமது வாழ்வின் பிற்காலங்களில் போர்வெறி பிடித்தலைந்த தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலையாமைக் கொள்கையை எடுத்துரைக்கவே அவர்மீது மதுரைக்காஞ்சி எனும் சங்கப்பாட்டு பாடப்பட்டுள்ளது. காஞ்சித்திணை என்பது நிலையாமை புரிந்துகொள்ளப்பட்ட ஒழுக்கத்தைக் குறிக்கும் இன்னொரு சொல்லாகும்.

பாண்டியனுக்கு மாங்குடிமருதன் அறிவுறுத்திச் சொன்ன நிலையாமைக் கருத்து இதுதான். உன்னைப்போல போர்வெறி பிடித்து அலைந்து வீராதி வீரர்களின் எண்ணிக்கை கடற்கரை மணலினும் பெரிது. அதில் யாரையாவது உனக்குத் தெரியுமா? யாவரும் இப்போது இல்லாமல் போனார்கள். அதுபோலத்தான் நீயும் இதனை அறிந்து கொள். எனவே போர்வெறி பிடித்து மக்களைத் துன்பத்துக்குள் ஆழ்த்தித் தவிக்கவிடாதே! மக்களை மகிழ வாழ வைத்து நீயும் மகிழ்ந்திரு என்று ஆற்றுப்படுத்துகிறார். கலிங்கப்போருக்குப்பின் அசோகருக்கு உபகுப்தர் சொன்ன உபதேசம்போல் இதுவும் இருக்கிறது. இந்த உபதேசத்தை வள்ளுவர்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு (குறள் : 336)

என்று எடுத்துரைக்கிறார். மேலும்,

நில்லா தனவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை (குறள் : 331)

என்கிறார்.

பறையின் மூலமாகச் சொல்லப்படுவதும், இதே உபதேசம்தான். பறையடியின் அடிப்படை சொற்கட்டு வருமாறு:

டண்டண்டான் டண்ட ணக்கா

இதனையே பின்வருமாறு வாய்ப்பறை மூலமாக பறைந்து வருகிறார்கள்.

நேத்திருந்தான் இன்னக்கி செத்தான்

இந்த பௌத்தச் செய்தியை, உலக உண்மையை அனைத்துத் திராவிடர்களும் தோல்பறையின் மூலமாகவும் வாய்ப் பரப்பிக்கொண்டிருப்பவர்கள் பறையர்கள். விவசாயத் தொழிலாளர் களாயிருக்கும் இவர்கள் தொடக்க காலத்தில் செய்த பணியாலேயே அவ்வாறு ஒட்டுமொத்தமாக அழைக்கப்படுகிறார்கள் என்று கால்டுவெல் அவதானிப்பது கவனிக்கத்தக்கது.

மேற்கண்ட செய்திகள் வழி பறையர்கள் என்போர், ஆண்ட பரம்பரையினர் என்பதற்கு ஆழமான வரலாற்று தரவுகள் கிடைத்துவிட்டன. எனவே கால்டுவெல் குறிப்பிடுவது போல ஆண்ட பரம்பரைதான் அடிமையாக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. தமிழ் பௌத்த இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள வெறியாட்டு மரபு சிங்கள பௌத்தர்களிடம் காணப்படும் வெறியாட்டு மரபோடு ஒத்திருப்பதை கால்டுவெல் எடுத்துக்காட்டுகிறார். பூர்வ பௌத்தர்களாய் ஆதித் தமிழ்க்குடிகள் இருந்தமைக்கு இதுவும்(வெறியாட்டு) சான்றளிக்கிறது. உயர்சாதித் திராவிடர்கள் இனி இதனை மறைப்பதற்கு எதுவும் உதவாது. ஊர்கள்தோறும் திட்டமிட்ட சேரிகளின் வைப்பும் அமைப்பும், போரினால் வெல்லப்பட்ட ஆண்ட பரம்பரையினர் திட்டமிட்டே ஒட்டுமொத்தமாக ஒடுக்கப்பட்டவர்களை ஓரங்கட்டி, அடிமைகளாக்கித் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள் என்பதன் சாட்சியங்களாய்த் திகழ்கின்றன.

நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட பறையரே தமிழரில்லை. திராவிடரில்லை என்று இருட்டடிப்புச் செய்த, செய்ய முயல்கிற வேறு யாரும் அந்தத் தகுதியைப் பெற்றுவிட முடியாது. வரலாற்றுத் தரவுகள், பறையர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்டோரைத் தமிழராக, திராவிடராக, ஆண்ட பரம்பரையினராக அடையாளப்படுத்துவனவாயுள்ளன. எனவே,

கால்டுவெல் குறிப்பிடுவதுபோல தனித்தன்மையுள்ள பழமரபு சார்ந்த பிரிவினராக அவர்களை அடையாளங் காண முடிகிறது.

ஆதி பௌத்தமும் ஆதிகிறித்தவமும் முரண்பாடில்லாத இணைப்பாதைகள். தன்னைப்போல பிறரை நேசிக்கத்தான் இரண்டும் வழிகாட்டுகின்றன. பொதுவுடைமைத் தத்துவம் இந்த அடிப்படையைக் கொண்டதே.

புத்தரையும் கார்ல்மார்க்ஸையும் ஒப்பிட்டு அம்பேத்கர் கூறுவன இங்கு நோக்கத்தக்கன.

*ரஷ்யர்கள் தங்களுடைய பொது உடைமை பற்றிப் பெருமைப்படுகிறார்கள். ஆனால் புத்தர், சர்வாதிகாரம் இல்லாமலே பிக்கு சங்கத்தில் பொது உடைமையை நிறுவினார் என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அந்தப் பொது உடைமை சிறிய அளவில் இருந்திருக்கலாம். ஆனால் அது சர்வாதிகாரம் இல்லாத பொது உடைமை என்பது பெரிய அதிசயம். லெனின் இதைச் செய்யத் தவறிவிட்டார்.*

(அம்பேத்கர் நூல் தொகுப்பு 7 : 432)

சமத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட ரஷ்யப் புரட்சியை எடுத்துக்காட்டும் அம்பேத்கர் சமத்துவத்தை ஏற்படுத்தும்போது சகோதரத்துவத்தையும் சுதந்திரத்தையும் தியாகம் செய்துவிட முடியாது என்றும், புத்தரின் வழியைப் பின்பற்றினால் சகோதரத்துவம், சுதந்திரம், சமத்துவம் மூன்றும் சேர்ந்து இருக்க முடியும் என்றும் விளக்குகிறார்.

கிறித்துவின் கொள்கைகளை அடியொற்றி அவரது விருப்பப்படி ஒரு அரசைக்கட்டியிருப்பதாகக் கூறும் ஃபிடல்காஸ்ட்ரோவின் பொதுவுடைமைச் சமூகம் புத்தரது சமூகம் என்று கூறலாம். ஃபிடல் காஸ்ட்ரோவின் பொதுவுடைமைத் தத்துவம், லெனினது அணுகுமுறையிலிருந்து மேம்பட்ட, அம்பேத்காரும் குறைகாண முடியாத, சகோதரத்துவமும் சுதந்திரமும் கொண்ட பொதுமைச் சமூக நடைமுறைத் தத்துவம் எனலாம். தமது அரசு பற்றி ஃபிடல்காஸ்ட்ரோ கூறுவன இதற்குச் சான்று.

*இப்போதுதான் சோசலிச அமைப்பில்தான், உண்மையான, முழுமையான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் இருக்கின்றன என்று*

*நான் நம்புகிறேன். அடுத்தவரை நேசி என்று கிறித்தவம் கூறுகிற அந்த போதனை கடைபிடிக்கப்படுவது சோசலிசத்தால் உயர்த்திப் பிடிக்கப்படும் மானுட சமத்துவம், ஒருமைப்பாடு ஆகியவற்றிலும் உலகளாவிய உணர்விலும்தான் என்று நான் நினைக்கிறேன்.*

(ஃபிடல் காஸ்ட்ரோ; மதம் மக்கள் புரட்சி : 362)

காஸ்ட்ரோ மேலும் கூறுகிறார்,

*இன்றைய புரட்சியாளர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கும் தொடக்க கால கிறிஸ்துவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கும் இடையே பற்பல ஒற்றுமைகள் இருப்பதை நான் எப்போதும் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். வரலாற்றில் அன்றைய கட்டத்தைச் சார்ந்த ஒடுக்கு முறையாளர்களின் செயல்களுக்கும், இன்றைய ஒடுக்கு முறையாளர்களின் செயல்களுக்கும் இடையே, மனித சமுதாய வளர்ச்சியின் வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்தவை என்பதைத் தவிர வேறு எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் காலத்தில் வலுவாக வேரூன்றிய அந்தப் போதனை களுக்கும் எங்களது இன்றைய போதனைகளுக்கும் இடையே முரண்பாடு எதையும் நான் பார்க்கவில்லை. ஆகவேதான், அன்றைய கிறிஸ்துவர்களின் சிந்தனைகளோடும் போதனைகளோடும் எனக்கு ஒரு சக உணர்வு ஏற்படுகிறது. அவர்களுடைய செயல்களிலும் வரலாற்றிலும் பெரும் மரியாதை ஏற்படுகிறது. அவற்றோடு இன்று நம் காலத்திய கம்யூனிஸ்டுகளின் செயல்கள் ஒத்துப்போவதை நான் உள்வாங்கி யிருக்கிறேன். அந்த ஒற்றுமைகளை நான் கவனித்திருக்கிறேன். கவனித்துக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து கவனித்து கொண்டிருப்பேன்.*

(ஃபிடல் காஸ்ட்ரோ, மேலது : 356–357)

பௌத்தம் பற்றிய ஒரு தெளிவான புரிதல் ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு ஏற்பட்டிருக்குமாயின் பௌத்தத்தையும் இந்தப் புரிதலுக்குள் வைத்துப் பார்த்திருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆதி பௌத்தத்திலும் ஆதி கிறித்துவத்திலும் பெண்ணுரிமை பேணி காக்கப்பட்டது. தேரிகளும் சங்க இலக்கியத்தை எழுதிய பல்வேறு பெண்புலவர்களும் இதற்குச் சாட்சிகளாயிருக்கின்றமை போலவே, மகளிர் குறித்த விடயங்களில் இயேசுவின் செயல்பாடுகள் சாட்சிகளாயிருக்கின்றன. ஃபிடல் காஸ்ட்ரோவின் கியூபாவும் இன்றைய சாட்சியமாய்த் திகழ்கிறது.

கியூபாவில் உள்ள கிறித்துவர் ஒருவருக்காவது பாகுபாடு காட்டப் படுகிறதென்றாலும் ஒரு குடிமகனுக்காவது பாகுபாடு காட்டப்படுகிறதென்றாலும் புரட்சி ஒரு கலை வேலைப்பாடாக முழுமையடையாது என்று கூறும் ஃபிடல் காஸ்ட்ரோ, பெண்பற்றிக் கூறும் செய்தி இங்கு சுட்டத்தக்கது.

*குடிமக்களில் ஒரே ஒருவர் பெண் என்பதற்காகப் பாகுபாட்டை எதிர் கொள்வாரானால் அதற்கும் இது பொருந்தும். பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை எதிர்த்து அதிகமாகப் போராடி, அதில் அதிகமாக முன்னேற்றமும் கண்டிருக்கிற நாடு இலத்தீன் அமெரிக்காவில் கியூபாவைத் தவிர வேறெதுவும் இருக்கிறதா? (ஃபிடல் காஸ்ட்ரோ மேலது 305)*

ஆனால், தமிழ்நாட்டில் கிறித்தவர்கள் என்று கால்டுவெல்லால் ஆக்கபட்டவர்கள் எந்தத் தடை எல்லையும் இல்லாமல் 53 ஆண்டுக்காலமாக உடன்பழகி அவரால் வாழச் சொல்லித் தரப்பட்டவர்கள். மேம்பாடடைந்தவர்கள். சாதியக் கிறித்தவர்களாக சாதித்திராவிடர்களைப் போலவே மாறிப்போனார்கள் என்பது தன்னைப் போல் பிறரைநேசி என்பதற்கும், அவர்களுக்கும் தொடர்பின்றிப் போனார்கள் என்பதன் சாட்சியமாய்த் திகழ்கிறது. பறையர்கள் மட்டுமென்ன தம்மைவிடக் கீழானவர்கள் எனக் கருதப்படும் தோல் தொழிலாளர், துணிவெளுப்போர் ஆகியவரிலிருந்து விலகி நின்றால், கால்டுவெல்லின் கனவு நிறைவேறாமல் போவதுடன் சகோதரத்துவத்தை முன்னிறுத்தும் கிறித்துவமும் தனது உயிர்ப்பை இழந்து வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாய் மட்டுமே காட்சி தந்து கொண்டிருக்கும்.

கால்டுவெல் குறிப்பிடும் ஒட்டுமொத்த திராவிடக் கிறித்துவர்களும் சாதித் திராவிட இந்துக்கள் போலவே திட்டமிட்ட வன்மத்தோடு பெண்களை அடிமைத்தனத்தில் வைத்திருக்கிறார்கள். பாவத்துக்கெல்லாம் மூலகாரணமாய்ப் பெண்ணை ஆக்குவித்து பழங்கதையாம் ஏவை கதையைப் புனிதமாக்கி நியாயப்படுத்துகிறார்கள். உலகத்தின் பேர்பெற்று அடிமைத்தனங்கள் ஆண்டவன் பெயரால் இப்படித்தான் அரங்கேற்றப்பட்டன. இயேசு இப்படிப்பட்டவைகளைத்தான் நொறுக்கினார். பெண்களுக்கெதிராக மனுசாத்திரம் சொன்ன அனைத்தையும் ஏவை கதையையும் வித்தியாசப்படுத்திச் சிறப்பிக்க

ஏதுமில்லை. திராவிடர் என்று தங்களைச் சொல்லிக் கொள்வோர் போலவே, பறையர் முதலானோரும் பெண்விடயத்தில் சகோதரத்துவம் அற்று நடந்து கொள்வதிலிருந்து மீண்டு, பெண்மை போற்றி பழம் பெருமைகாக்க வேண்டும். ஃபிடல் காஸ்ட்ரோவின் மொழியில் சொல்வதென்றால், கிறித்துவம் தனது வேர்களுக்குத் திரும்புகிற, தனது மிக அழகான ஈர்ப்பு மிக்க, வீரமிக்க, பெருமைவாய்ந்த வரலாற்றுக்குத் திரும்புகிற செயல்பாடாக இறையியலும் இறையாளர்களும் இருக்க வேண்டும். கால்டுவெல்லும் அவரது மனைவியார் எலிசபெத் அம்மையாரும் ஏழைப் பெண்களுக்கு ஆற்றிய அடிப்படைப் பணியையும் சேர்த்து ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் அவர்களின் தன்னலமற்ற இறையியல் இலட்சியத்தில் சமூகத் தொண்டு முன்நிற்பதைக் காண முடிகிறது.

....................

## 6. கால்டுவெல்லின் கிறிஸ்தவமும், இந்து சமயமும் - நூல் நயம்

அருள்திரு. மெ.பென்சமின் இன்பராஜ்

### நூலின் வடிவம் :

கல்விசார் இந்து சமய பேராளர்களின் அவையில் பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் ஆற்றின விரிவுரையை, "கிறிஸ்தவமும் இந்து சமயமும்" என்ற தலைப்பில் இலண்டனில் உள்ள கிறிஸ்தவ அறிவு முன்னேற்றக் கழகத்தினர், ஆக்ஸ்போர்டு கிளாரண்டன் அச்சகத்தார் வழி வெளியிட்டனர். இந்த விரிவுரை நான்கு பகுதிகளைக் கொண்டது. இப்பகுதிகளுக்குத் தனித் தலைப்பிடப்படவில்லை என்றாலும் உள்ளடக்கத்தைக் கொண்டு அவர் ஆற்றிய விரிவுரையை கீழ்வரும் நான்கு தலைப்புகளாக வகுக்கலாம்.

| | |
|---|---|
| பகுதி 1 | இந்து சமய ஆய்வு |
| பகுதி 2 | சமய ஒப்பீட்டில் கிறிஸ்தவம் |
| பகுதி 3 | சமயமும் நன்னெறிப் புகட்டலும் |
| பகுதி 4 | சமயங்களும் இறைவெளிப்பாடும் |

ஒரு நாள் பயணத்திற்குப் படிப்பதற்கென தெரிவு செய்யக்கூடிய அளவு ஒரு சிறிய நூலாகவே இந்த உரை அச்சிடப்பட்டுள்ளது. பேராயர் கால்டுவெல் அவர்களின் ஆங்கில மொழி நடை இந்நூலில் மிக இனிமையாக வெளிப்படுகின்றது. மழுமழுப்பான கூழாங்கற்கள் மீது சலசலவென புரண்டோடும் சிறு ஊற்று நீரைப்போன்று அவர்களின் ஆங்கில மொழிநடை படிப்பதற்கு இன்பமும் மனதில் வைத்து சுவைப்பதற்கு இனிமையும் கொண்டுள்ளது. அட்டைமுதல் அட்டை வரை, கீழ்வைக்கத் தோன்றாமல் படித்து அனுபவிக்க அழைக்கும் நூல் கிறிஸ்தவமும் இந்து சமயமும் என்ற நூல்.

### ஆசிரியர் பின்புலம் :

இந்தியாவுக்கு அருட்பணியாளராக வந்து 40 ஆண்டுகள் வாழ்ந்து இம்மண்ணையும் மக்களையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்ட மாமனிதர் பேராயர் கால்டுவெல் அவர்கள், இக்கால

கட்டத்தில் அருட்பணியோடு மானுடவியல், மொழியியல், இலக்கண ஒப்பாய்வு சமயவியல், சமய ஒப்பாய்வு மற்றும் சமூகவியல் ஆய்வுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். மக்களிடையே நிலவிய பண்பாட்டு வழக்கங்கள், சமயக் கடைபிடிப்புகள், வழிபாடுகள், ஆகியவற்றை கண்டும், கேட்டும் தனது அறிவார்ந்த அனுபவத்தின் வாயிலாக பல ஆய்வுகளை செய்தார். பேராயர் கால்டுவெல் அவர்களுக்கு இந்த பரந்த நாட்டம் வருவதற்கு காரணம் அவரது பல்கலைக்கழக கல்விச் சூழலே ஆகும். ஒரு எளிய குடும்பத்தில் பிறந்து திருப்பணிக்கெனத் தன்னை அர்ப்பணித்த கால்டுவெல், இலண்டன் மிஷெனரி சங்கத்தின் (LMS) பணியாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் அருட்பணிக்கென கல்வித்தகுதிபெற கிளாஸ்கோ பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டார். இங்குதான், 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்காட்லாந்தில் எழுந்த அறிவொளி இயக்கத்தின் தாக்கத்துக்குள் வந்தார். சமய ஒப்பாய்வு மற்றும் மொழி ஒப்பாய்வுகள் மூலம் ஒரு மனித இனக்குழுவின் வரலாறு மற்றும் நாகரிகத்தை ஆய்வு செய்யும் கல்விமான்களின் நட்பும், புகட்டலும் இவருக்குக் கிட்டியது. இதன் பயனாகப் பேராயர் கால்டுவெல் அவர்களின் ஆய்வுக்குத் திராவிட இனமும் மொழியும் ஆளானதும், அதினால் விளைந்த பயன்களும் நாம் நன்கு அறிவோம். இந்த சமய ஒப்பாய்வு பணியின் ஒரு வெளிப்பாடே இந்தச் சிறிய நூல்.

## பகுதி 1 இந்து சமய ஆய்வு

இந்து சமயத்தில் மனிதத் தன்மைகளை வெளிப்படுத்தும் கூறுபாடுகளும், உயரிய இறைத்தன்மையை வெளிப்படுத்தும் கூறுபாடுகளும் மற்றும் பேய்த்தன்மைகளை வெளிப்படுத்தும் கூறுபாடுகளும் உள்ளன என இயம்பும் பேராயர் கால்டுவெல் அத்தன்மைகளை பட்டியலிட்டு விளக்க முற்படுகிறார்.

அ) இந்து சமயத்தில் மனிதத் தன்மைகளை வெளிப்படுத்தும் கூறுபாடுகள் :

- இயற்கை ஆற்றல்களைத் தெய்வீகமயப்படுத்துவது.
- காவிய நாயகன் நாயகிகளை வழிபடுவது
- கோவில் கட்டி கடவுள்களை உள்ளூரில் நிலைப்படுத்துவது

– ஒரு மானுட அரசனின், வேட்கை, விரசம் ஆகிய பண்புகளைக் கடவுளுக்குச் சாற்றிக் காவியம் படைப்பது.

– சாதிய வேறுபாடுகளைச் சமய நிலைக்கு உயர்த்துவது.

**இந்து சமயத்தின் உயரிய கூறுபாடுகள் :**

- மானுட தன்மைகளை என்றுமே எதிர்த்து, தோல்விகளுக்குகிடையேயும், போராடிக்கொண்டிருக்கும் தெய்வீகப் பண்புகள்.
- கடவுளை எல்லாவற்றிலும் – எல்லாவற்றையும் கடவுளிலும் காண்பது
- கடவுள் உண்டு என்ற நம்பிக்கை – அவற்றில் தான் அனைத்தும் தொடக்கத்தைக் கொண்டன என நம்புவது.
- கடவுளை வணங்கும் ஒரு வழிமுறையாகச் சமயம் என்ற முறையைக் கடைப்பிடிப்பது.
- பாவமுள்ள கடவுளிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்ட மானிடர் எப்படியும் அதிலிருந்து விடுபட்டுக் கடவுளிடம் ஒன்று சேர வேண்டுமென முயல்வது.
- மானுட அல்லல்கள் / அவலங்களுக்கு விளக்கம் கொடுக்கவும் அவற்றிலிருந்து விடுபட்டு இறை உறவுக்கு உயரும் வழி காண்பிக்கவும் வெளிப்பாடுகள் – வேதங்கள் உள்ளன என எதிர்ப்பார்ப்பது.
- ஆனால் இந்து வேதங்கள் மட்டும்தான் இறைவெளிபாடுகளா அல்லது வேறு காலங்களில் வேற்று இன மானிடருக்கு வேறு வெளிப்பாடுகளும் இருந்திருக்குமோ என சந்தேகப்படுவது.

இந்து சமயத்தில் காணக்கிடக்கும் இவ்வுயரிய பண்புகள் சிலவற்றுக்காகிலும் கிறிஸ்தவத் தாக்கம் மூலாதாரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்திய மனம் அல்லது சிந்தனை முன் எப்போதாகிலும் கிறிஸ்தவ தனிப்பட்ட சிந்தனைகளுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

**இந்து சமயத்தில் பேய்த்தனமான கூறுபாடுகள் :**

- கிருஷ்ணனின் பாலுணர்வு கலந்த வழிபாடுகள் தனிமனித இறைவுறவின் உச்சநிலை குறிப்பதாக இருந்தாலும் களங்கமுள்ள மனம் கொண்ட மனிதர்களிடையே – பாலுணர்வும் பேய்த்தனமும் கலந்த உலகு சார்ந்ததாகி
- அதைவிட மோசமானது – சக்தி என்ற பெண் தெய்வ வழிபாடு பேய் மற்றும் தீய ஆவியின் வழிபாடாகவே கருதப்படவேண்டும்.
- தெய்வங்களைப் பாலியல் வேட்கை, நெறிகெட்ட குணங்களை, கொடுமைகள் நிறைந்தவையாக காண்பிப்பதன் மூலம் நெறிபிறழ்பவையே சமயம் என்ற பெயரில் கற்பிக்கின்றன.
- சமய வழிபாடுகளில் நாட்டிய பெண்டிரின் பங்கினைப் பார்க்கும் மக்கள் தங்கள் கடவுளர்களின் நாட்டம் வேட்கை பற்றி என்ன புரிந்து கொள்வர் – வழிபடும் தங்கள் நடத்தைக்கு உகந்தது எது தவிர்க்கப்பட வேண்டியவை எவை என எப்படித் தீர்மானிப்பர்.

**வேதங்கள் :**

இந்து சமயத்தில் நன்மையும் தீமையும் கலந்திருப்பினும் நன்மையைவிடத் தீமையே மிகையாகவும் –தீமையே மக்களை அதிகம் தாக்கி தனது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையாகாது. இந்து சமய நூல்களின் அறநெறிப் புகட்டங்களை "இந்திய ஞானம்" என ஒரு நூலில் தொகுத்துவிடலாம். ஆனால் அதே சமய நூல்களில் "இந்தியாவின் மதிகேடு" என்று பல நூல்களைத் தொகுத்துவிடலாம். இந்திய தெய்வங்களின் நடத்தையால் ஊக்கப்படுத்தப்படா தீய செயல்கள் ஒன்றேனும் இருக்க முடியாது. புராணங்களிலேயே மிக உயர்ந்ததாகக் கருதப்படும் மகாபாரதத்தில், மேல்நிலை மற்றும் கீழ்நிலைத் தெய்வங்களின் கீழ்த்தரமான, தந்திரமான நெறிகெட்ட நடத்தைகளே வெளிப்படுகின்றன. இந்திய வேதங்களிற்கு ஒரு நெடியப் பகுதியை பல்கலைக்கழக தேர்வுகளுக்குப் பாடமாக வைக்க முடியாத அளவு அவை ஆங்காங்கு நெறிபிறழ்வுகளால் நிறைந்துள்ளன.

**வாழ்வு :**

இந்து சமயத்தைப் பற்றிய சரியான மதிப்பீடு வேண்டுமெனில் வேதங்களில் அல்ல, மாறாக மக்களின் அனுதின வாழ்வில் இந்து சமயம் எப்படிப் பரிணமிக்கிறது, அம்மக்களின் குணநலன்களை எப்படி வடித்தெடுத்துள்ளது என்பதை கவனிக்க வேண்டும். இன்று இந்நாடு அனுபவிக்கும் மோசமான தீமைகளின் தோற்றுவாயாகவும் அதின் பெருக்கமாகவும் இந்து சமயம் விளங்குகிறது. அறியாமை, மூடநம்பிக்கை, அடிமைத்தனம் ஆகியவற்றை நிலைப்படுத்தி முன்னேற்றத்துக்கு – அறிவார்ந்த, நெறிசார்ந்த, பொருளாதார – தடையாகவே உள்ளது.

**கல்விசார் இந்து சமய பேராளர்களுக்கு அழைப்பு :**

நமது மக்களுக்குப் பயனுடையவர்களாக இருக்க வேண்டுமெனில் நன்மை என்று கருதுபவைகளைப் போற்றுவதோடு மட்டும் நில்லாது, தீமைகளைக் கண்டித்து அவற்றை ஒதுக்கித்தள்ளவும் நம்மக்களுக்கு நாம் உதவ வேண்டும். நன்மை எவை என்பதை பகுத்தாய்ந்து போற்றும் அறிவாற்றல் உம்மில் பலருக்கு உண்டு. ஆனால், தீமைகளைப் பொருத்தமட்டில் தேவையற்ற சகிப்புத்தன்மை உம்மிடம் அதிகம் உள்ளது. இந்நாடு சீர்பொருத்த நெறி சார்ந்த நெஞ்சுரம் கொண்டவர்களாகத் திகழ வேண்டும் என அழைக்கிறார்.

**பகுதி– 2 சமய ஒப்பீட்டில் கிறிஸ்தவம் :**

சமய ஒப்பீட்டில் ஆய்வுகள் கிறிஸ்தவத்தை உட்படுத்துவதில் எந்தத் தடையும் இல்லை – ஆனால் அப்படி ஒப்பீடு செய்கையில் கிறிஸ்தவத்தின் தனிச்சிறப்புக்களை நாம் முன்னிறுத்தி உறுதிசெய்வதும் அவசியம்.

சமய ஒப்பீட்டில் ஒவ்வொரு சமயத்துக்கும் உள்ள தனி வேற்றுமைகளை மறைத்து – வேறுபாடுகளற்ற முரண்பாடுகளற்ற ஒப்பீடு செய்வது தகுந்த முறையல்ல.

சமய ஒப்பீட்டுக்குக் கிறிஸ்தவம் உட்படுத்தபட வேண்டுமெனில், அதன் நிகரற்ற கூறுகளான மனுவுருவேற்புடன் மற்றும் சிலுவை ஆகியவை முன்னிறுத்தப்படவேண்டும். கிறிஸ்துவின் மனுவுருவேற்பு மற்றும் சிலுவைப்பாடுகளை பற்றி பேசிடாத ஆனால் மற்ற சமங்களோடு

ஒத்துப்போகும் கருத்துக்களை மட்டுமே கணக்கிலெடுத்துக்கொள்ளும் சமய ஒப்பீடுகளை செய்யும் தவற்றினை கிறிஸ்தவ மேலைநாட்டவரே செய்கின்றனர். இது எவ்விதத் தவறு என்பதை விளக்க மனிதரை மற்ற உயிரிகளோடு ஒப்பிடுகையில் அவர்களின் அறிவுக் கூர்மை, பேச்சுத்திறன், விளக்கிசொல்லும் திறன், நெறிசார்ந்த வாழ்வு மற்றும் சமய வழிபாடு ஆகியவற்றை பற்றிப் பேசாமல் ஒப்பீடு செய்யும் தவற்றினை போன்றது. மற்ற படைப்புகளுக்கிடையே மனிதன் எவ்வாறு தனிச்சிறப்புடையவராக உள்ளனரோ அவ்விதமே சமயங்களுக்கிடையில் கிறிஸ்தவம் தன்னிகரற்ற தனித்தன்மை வாய்ந்தது.

மானிடனுடன் கடவுளின் உறவையும், பாவம் மற்றும் மீட்புப் போன்ற தெய்வீக புகட்டல்களை கொடுக்கும் கிறிஸ்தவத்துக்கு இணையான புகட்டல் எம்மதத்திலும் இல்லை.

வரலாற்றுப் பூர்வமாக நிகழ்த்தப்பட்ட மீட்புப் பற்றிய வரலாற்று விவாதங்களை முன்வைத்து கிறிஸ்தவத்தை இந்தியர்களுக்கு அறிமுகப்படுத்துகையில் சிக்கல்களும் உள்ளன. அது என்னவெனில், இந்தியர்கள் பொதுவாக மெய்யயியல் கூற்றுக்களைக் காவிய இதிகாசங்களின் வழியே கேட்டுப் பழகிப்போனவர்கள். கிறிஸ்தவத்தின் வரலாற்று உண்மைகளும், இதிகாசக் கதைகளையே கேட்டுப் பழகிப்போன இந்தியர்களின் மனதுக்கு, காவிய கற்பனைகள் போன்றே தொனிக்கின்றன. வெகுசிலரே கிறிஸ்தவத்தின் வரலாற்றுத் தன்மையை போற்றத் தகுந்தவர்களாயுள்ளனர்.

## கிறிஸ்தவமும் அறிவு புகட்டலும்

இந்து சமய தோற்றத்தையும் காலங்களுக்கிடையே அதின் சீரழிவையும் கண்ட எவரும் கிறிஸ்தவம் ஓர் அறிவார்த்த சமயம் என்று ஒத்துக்கொள்வர். சமய வழிபாடுகளின் ஒப்பீடுகளிலும் கிறிஸ்தவ அறிவார்ந்த வழிபாட்டு முறை கொண்டது என்றும் ஏற்றுக்கொள்வர். மட்டுமின்றி அறிவு புகட்டலை முறையாக முன்னேற்றும் ஒரே சமயம் கிறிஸ்தவம் என்பதும் இந்நாட்டின் நிலைமையை அறிந்த ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. எங்கெங்கெல்லாம் கிறிஸ்தவம் கால் பதிக்கிறதோ அங்கெல்லாம் மனஞ்சார்ந்த அடிமைத்தனங்கள் ஒழிகின்றன. பெண்கள் கல்விக்கு வழிபிறக்கிறது. அதுவரை ஒதுக்கிவைக்கப்பட்டு கிடந்த மக்களுக்குக் கல்வி எட்டும்

வாய்ப்பு உண்டாகிறது. சமயங்களிளெல்லாம் கிறிஸ்தவம் மட்டுமே முன்னேற்றத்தின் தோழனாக உள்ளது. அறிவே ஆற்றல் என்றும் அறிவே வெற்றி என்றும் பறைசாற்றி கண்டுபிடிப்புகளாலும், அதிசயங்களாலும் உலகை நிரப்புகிறது.

**கிறிஸ்தவமும் ஒழுங்கும் அமைதியும்**

கிறிஸ்தவத்தின் நிகரில்லா சிறப்பு, அது தான் பரவுமிடமெல்லாம் ஒழுங்கையும் அமைதியையும் நிலவச் செய்வதே ஆகும். இந்தியாவில் நிலவிடும் ஒழுங்கு மற்றும் அமைதிக்கு ஆங்கிலேய அரசின் வலிமை மட்டுமே காரணமாகச் சிலர் கருதக்கூடும். அக்கருத்தில் ஒரு பெருங்குறை உள்ளது. ஆங்கிலேயர்கள் வலிமையானவர்கள், அஞ்சாதவர்கள், இயல்பாகவே கொடூரமானவர்கள். அவர்களுக்குக் கிறிஸ்தவத்தின் தாக்கம் மட்டும் இல்லையெனில் ஒழுங்குக்கும் அமைதிக்கும் முதல் கடுமையான எதிரிகளாக ஆங்கிலேயர்களே இருப்பார்கள். இந்துக்கள் மற்றும் முகமதியர்களின் ஆட்சி காலத்தில் நிகழ்த்த கொடுந்துயரைவிட ஆங்கிலேயர்களின் கொடுமைகள் அதிகமாகியிருக்கும்.

பொது நன்மை என்பதின் மற்றுமொரு பெயரே கிறிஸ்தவம். இவ்வுலகிலும் மறுஉலகிலும் மானிடர் நலமுடன் வாழ்ந்திட விரும்பும் கடவுளிடமிருந்தே கிறிஸ்தவம் பிறந்தது என்பதற்கு இதுவே சான்று. கிறிஸ்தவம் என்ற சொல்லும், பண்பாடு என்ற சொல்லும் ஒன்றிடத்தை மற்றொன்று குறைவில்லாமல் நிரப்பும் தன்மை கொண்டவை. ஆக, கிறிஸ்தவம் ஆங்கிலேயர்களுக்கு மட்டுமல்ல, மொழி, இனம், வர்கத்தால் வேறுபட்ட உலகின் ஏந்நாட்டுக்கும் பொருந்தும் சமயம் என்பதிலேயே இது கடவுளிடமிருந்தே தோன்றும் சமயம் என்பது புலனாகிறது.

கிறிஸ்தவத்தின் இந்த உலகளாவிய பொருத்தத்தை உணர்ந்த திருச்சபை அனைவருக்கும் தனது வாயிலை திறந்து வைத்துள்ளது. அனைவரும் படித்து பயனுற கிறிஸ்தவ திருமறை எம்மொழியிலும் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்து சமயமோ இந்நாட்டின் ஒரு பகுதி மக்களை மட்டும் தன்னகத்தே தக்கவைத்து மற்றவர்களைப் பற்றிய கரிசனையற்று கிடக்கிறது. ஆனால், அனைத்தும் ஒரே தந்தையினிடத்திலிருந்து ஊற்றெடுத்தும் வருவதென்று உறுதி கொண்ட கிறிஸ்தவமோ, அனைவரின் தேவைகளுக்கும் தாம் பொருத்தமுடைய

சமயம் என்ற உணர்வோடு, இவ்வுலகு முழுவதையும் அமைதி வழியில் வெற்றிக்கொள்வதையே இலக்காகக் கொண்டுள்ளது.

### பகுதி – 3 சமயமும், நன்நெறி புகட்டலும்

**வழிபாடும் நன்நெறியும் :**

சமய ஒப்பீட்டு ஆய்வை பொருத்த மட்டில் எச்சமயம் நன்நெறி புகட்டலில் விஞ்சி நிற்கிறது என்றாய்வதே முதன்மையான ஆய்வாகும். நன்நெறி புகட்டலில் பௌத்த சமயம் உயர்வான நிலையை பெற்றுள்ளது. ஆயினும் அதன் கற்பிப்புகள் கிறிஸ்தவத்துக்கு இரண்டாம் நிலையுடைதாகவே அமைகின்றன. இந்து சமயம் நன்நெறி புகட்டலைப் பொறுத்தளவில் எவ்விதமும் கிறிஸ்தவ சமயத்துக்கு அருகில் வரக்கூடாத அளவு, நன்னெறி என்ற பேச்சுக்கே இடமில்லாத சமயமாயுள்ளது. இந்திய இலக்கியங்கள் உயரிய நன்னெறி சிந்தனைகளை பரந்த நிலையில் வெளிப்படுத்துகின்றன என்பது உண்மையே. ஆயினும், அந்நன்நெறி புகட்டல்கள் எவ்வளவேனும் சமய வழிபாட்டுடன் தொடர்பு கொண்டதில்லை. நன்னெறி இல்லங்களில் படிக்கலாம். ஆனால் இந்து சமய கோயில்களில் நன்நெறி என்பதை கேட்கவும் முடியாது. அறியவும் முடியாது. இந்துக்களைப் பொருத்தமட்டில் நன்நெறி என்பது ஒருவர் தனது சாதிய கடமைகளை முறைப்படி நிறைவேற்றுவதே.

சயங்களுக்கு உயரிய நோக்கம் வேண்டும். சில சமுதாயக் கடமைகளை நிறைவேற்றுவதும், சில புகழ்மாலைகள் பாடி, செபங்களை ஓதி, நியமங்களை நிறைவேற்றி தெய்வங்களை வழிபடுவதும், அதன்மூலம் உன்னத ஆன்மாவோடு ஒன்று கலக்கும் கடைசி விடுதலையை முயற்சிப்பது மட்டுமே சமயம் ஆகா. வாழ்வின் கடமைகளை இந்து சமயம் புகட்டுவதில்லை அல்லது அக்கடமைகளைச் சீராக நிறைவேற்ற வேண்டிய ஆற்றல் தரும்படியான எந்த செபங்களும் வழிபாடுகளில் கிடையாது. ஏன், தூய்மைக்கான செபங்களாவது இந்து சமய கோயில்களில் ஏறெடுக்கப்படுகின்றனவா? அதுவும் கவர்ச்சியான நடனப் பெண்களால் சூழ்ந்துள்ள ஒரு தெய்வத்திடம்! இப்படிபட்ட செபங்களை எப்படி செய்வது?

**சமய இலக்கியங்களும் நன்னெறியும் :**

கிறிஸ்தவ திருச்சபைகளில் ஒவ்வொரு ஞாயிறும் ஆயர் எழுந்து நின்று, களவாடாதே, பொய்சான்றளிக்காதே, கூடா ஒழுக்கத்தில் ஈடுபடாதே போன்று மனிதருக்கெதிரான ஆறு குற்றத்தையோ கடவுளுக்கெதிரான நான்கு குற்றத்தையோ செய்யாதிருக்க எச்சரிக்கிறார். ஒவ்வொரு எச்சரிப்பு பின்பும் அக்குற்றத்தை செய்யாதிருக்க மக்கள் இறைவனின் பலத்தை வேண்டுகின்றனர். ஆனால், இந்து ஆலயங்களில் ஒரு பிராமனபூசாரி எவ்வித நன்னெறி புகட்டலையும் அளிப்பதில்லை. எனவே, அங்கு சமயம் ஒரு திசையிலும் நன்னெறி வேறு திசை நோக்கியும் செல்கின்றன. இதன் விளைவாய், நெறியுள்ள வாழ்வுடைய இந்து ஒருவர் சமயத்திலிருந்து தன்னை முற்றிலும் முறித்துக்கொண்டவராய் இருப்பார். அப்படியே, நெறிபிறழ்ந்த சீர்கெட்ட வாழ்வுடைய ஒருவர் பக்தி வினயமுடைய இந்துவாகவும் இருக்க முடியும். நெறிகேட்டுக்கும் பக்திக்கும் இடையே இந்து சமயத்தில் எந்த முரண்பாடும் கிடையாது.

கிறிஸ்தவத்தில் சமயத்துக்கும் நன்னெறிக்கும் இழையறுபட கூடாத தொடர்புண்டு. அடுத்திருப்பவருக்குத் தம் கடமையை முழுமையாக நிறைவேற்றுவதே கடவுளுக்கு நாம் செய்ய வேண்டிய சிறப்பான கடமைகளில் ஒரு பகுதி. அதற்காகவே கிறிஸ்து இவ்வுலகில் வந்தார். இக்கடமைகளைச் செய்யத் தூண்டும் திருமறைப் பகுதிகள் ஒவ்வொரு ஞாயிறும் வழிபடுவோர் செவிபட படிக்கப்படுகிறது. இந்து சமயத்தில் இப்படி அவர்கள் பக்தி இலக்கியங்கள் பயன்படுவதுமில்லை. அப்படி படிக்கப்பட்டாலும் அதினால் பயன் ஏதும் இருக்கப்போவது மில்லை. ஏனெனில், இந்து சமயத்தில் எவ்வளவு அதிக பக்தியுடையதாய் இலக்கியங்கள் கருதப்படுகின்றனவோ, நன்நெறி புகட்டலுக்கான அவைகளின் பயன் அவ்வளவு குறைவானதே. அனைத்து இந்து சமய கற்பிப்புகளிலும் உயர்வானதாகக் கருதப்படும் மெய்யியல்கள் நன்னெறி புகட்டலில் வெகு தரந்தாழ்ந்தவையாகவே தென்படுகின்றன. மெய்யியல்களினால் நிறைவடிவத்தவனாய் காண்பிக்கப்படும் மனிதனும் நன்மைகளையும் தீமைகளையும் ஒரே அளவு கரிசனையற்றத் தன்மையுடனேயே அனுகுகிறான்.

## கிறிஸ்தவ திருமறையும் நன்னெறி புகட்டலும் :

கிறிஸ்தவ மறையின் முதற்பகுதியான பழைய ஏற்பாட்டை எவரொருவரிடமும் கொடுத்துப் படிக்கச் சொல்லி பின்பு அவரை அதிகம் தொட்ட தாக்கங்களைப் பற்றி வினவினால் அவர் இரண்டு கூறுகளை எடுத்துச் சொல்லக்கூடும். முதலாவது. ஓர் இறைவனைப் பற்றிய பேர் ஆர்வம். இரண்டாவது, நீதி குறித்த பேர் ஆர்வம். இவை இரண்டும் கலந்து பண்டைய கால சமயங்களில் எதிலுமே காணமுடியாத ஓர் ஒழுங்கு நெறி ஓர் இறைக்கோட்பாடு உடைய மறையாக பழைய ஏற்பாட்டைத் திகழச் செய்கிறது. திருமறையின் தொடக்க நூலில் காணப்படும் பல வரைவுகள் அக்கால பாபிலோனிய வரைவுகளிலும் காணப்படுகிறது என்றாலும், மற்ற மறைகளைப் போன்று தொடக்க நூல் மக்களை மகிழ்விப்பதே நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. இவ்வுலகை படைத்து ஆளும் கடவுள் ஒருவரே என்பதை எடுத்தியம்பி உலகிலுள்ள அனைவரையும் பாவம் செய்யாமல் தடுக்க முயல்கிறது. அதுமட்டுமின்றி தொடக்கத்திலிருந்து மீட்பர் ஒருவர் தோன்றும் வரை எவ்விதம் வழி ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது என்பதையும் தெளிவாக்குகிறது.

கிறிஸ்தவ யுகத்துக்கு முன்னாலிருந்த பாடல் தொகுப்பு திருப்பாடல் புத்தகம். வேதங்களில் பாடல்களைப் படிப்பவர்கள் அவற்றின் முற்றிலும் உலகமயம் சார்ந்த, நெறிகேடுடைய, ஆன்மிகமற்றத் தன்மைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போவர். ஆனால் திருப்பாடல்களை முதல் முறைப் படிப்பவரோ, அந்த பண்டைய காலத்திலேயே எந்த அளவு தெய்வீகமான, தூய்மையான, இனிமையான, பாடல்கள் எழுந்துள்ளன என்பதைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்துபோவர். உண்மை மீது நாட்டமும், நீதியின்மீது பற்றும், கடவுளின் மீது அன்பும் மிளிரும் அப்பாடல்களில் பழைய ஏற்பாடின்றி ஒவ்வொரு பக்கத்திலும் காணப்படும் நீதி பற்றிய ஆழமான பதிவு, பேரார்வமும் புதிய ஏற்பாட்டில் இன்னமும் அதிகமாய் ஒளிர்ந்து திகழ்கிறது. அதின் நீதி கண்டிப்பதற்காக அல்ல. மீட்பதற்காகவே மிளிருகிறது. பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாடு உயரிய நிலை சார்ந்தது.

## இயேசு கிறிஸ்துவின் மாதிரியும் நன்னெறியும் :

கிறிஸ்தவர்களுக்கு இயேசுகிறிஸ்து மூலம் கொடுக்கப்பட்ட

முன்மாதிரியே மிகப்பெரிய வரம் ஆகும். கடவுளை மகிழ்வூட்ட இவ்வுலகில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை சொல்லில் மட்டும் காட்டாது, மனிதர் எப்படி வாழவேண்டும் என்பதற்கு ஒப்பற்ற மாதிரியையும் காண்பித்தார். இயேசுவைக் கண்டவர்கள் கடவுளையே கண்ட மகிழ்வைப் பெற்றனர். தனது முன்மாதிரியின் மூலம் பற்றாளர்கள் தங்களை வருத்திக்கொண்டும் மற்றவர்களின் நலவாழ்வை முன்னேற்றவும், கருணை நிறை செயல்களில் ஈடுபடவும் ஊக்கப் படுத்துகிறார். ஒரு நற்செயலுக்காகத் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளவும், தங்களையே மறந்து மற்றவரின் நலனை நாடவும் தம் பற்றாளர்களுக்கு கற்றுத் தந்தார் இயேசு. வாழ்வின் இன்பங்களை துச்சமாய் மதித்து, மேன்மையை தாழ்வாக கருதி தனது தியாகத்தின் மூலம் உலகின் நலவாழ்வை நாடின இயேசுவின் பற்றாளர்கள் அவரின் மாதிரியைப் பின்பற்றவில்லையெனில் கிறிஸ்தவர்கள் என்ற பெயருக்கே தகுதியற்றவர்களாவர்.

### சமயமும் நாட்டு நற்குணமும் :

இந்து சமயத்தைவிட கிறிஸ்தவத்தின் உயரிய நிலையை பற்றி சொல்லப்பட்ட கருத்துக்கள் உண்மையென்று நிரூபிக்க இந்தியா மற்றும் இங்கிலாந்து மக்களின் நாடுதழுவிய குணநலன்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இங்கு தனிநபர்கள் ஒப்பீடு செய்யப்படலாகாது. ஏனெனில் இங்கிலாந்து மக்களிலும் கிறிஸ்தவத்தை நம்பாதவர்கள் உள்ளனர். கிறிஸ்தவம் பற்றாளர்களையே மீட்கிறது. எனவே, இங்கு ஒப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியது, ஒட்டுமொத்த கிறிஸ்தவ நாடுகளின் நற்குணமும் ஒட்டுமொத்த கிறிஸ்தவரல்லாத நாடுகளின் நற்குணமுமே ஆகும். இதில், வாய்மைக்கு மதிப்பும், நற்குணம் சார்ந்த உறுதிப்பாடும், நீதிக்கான பேரார்வமும், துன்பத்தில் கரிசனையும், தன்னலந் துறப்பு, பொது நன்மைக்கான ஆவல் ஆகிய நற்குணங்களைக் கருத்தில் கொண்டால் கிறிஸ்தவத்துக்கே சாதகத் தீர்ப்பு கிட்டுமென்பதை எந்த ஒரு திறந்த மனதுடைய இந்துவும் ஏற்றுக்கொள்வார்.

மேற்கூறிய கருத்துக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு இந்தியாவை அடுத்தடுத்துத் தாக்கிய மூன்று கொடிய பஞ்சங்களின்போது இங்கிலாந்து மக்களிடமிருந்து அளிக்கப்பட்ட உதவிகளே ஆகும். ஒரு

கிறிஸ்தவ அரசு இவ்விதம் மக்களைக்காக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும். இங்கிலாந்து மக்களை இந்தியாவை வெற்றிகொண்ட கொடூரமான, கருணையற்ற மக்களாகவே இந்தியர்கள் நினைக்கின்றனர். ஆனால், ஒரு அன்பே உருவான ஆண்டவரின் மீது பற்றுள்ள, அன்பின் வழி சமயப் பற்றாளர்களாகவே கிறிஸ்தவர்களாகவே அவர்கள் இந்த உயிர்காக்கும் உதவிகள் செய்தார்கள் எனக் காணத்தவறக்கூடாது. நமது உலகில் மிக உன்னதமானதும் மிக மென்மையானதுமான சமயம் கிறிஸ்துவின் சமயமே.

எங்கிருந்து கிறிஸ்தவ சமயம் தோன்றியிருக்கும்? தனது தூய தன்மையினால் மக்களிடமுள்ள குறைகளை வெளிப்படுத்தி நாணமுறச் செய்கிற ஒரு சமயத்தை தோற்றுவிக்க மனிதர்களுக்கு மனமுமிராது. பலமும் இராது. நாம் உயர்வென்று கருதுபவை அனைத்தையும் விட கிறிஸ்தவம் உயர்வானது. நம்மிடையே நல்லவை என்று கருதுபவை அனைத்தையும் விட நல்லது. எனவே நமது இயல்புகள் மற்றும் சூழல் அனைத்தையும் கடந்த மிக உன்னத தோற்றம் இச்சமயத்துக்கு இருக்கவேண்டும் என்பதில் நமக்கு ஐயமிராது. நன்மையானவை எவையும், நிறைவானவை எவையும் ஈவாக இறங்கிவரும் நமது விண்ணகத் தந்தையிடமிருந்தே கிறிஸ்தவம் இறங்கி வருகிறது.

மேற்சொல்லப்பட்ட கருத்துகளினால் இந்தியாவின் பூர்வீகத்தன்மை தவிர வேறல்ல என கருத வேண்டியதல்ல. இந்தியாவின் சமய நாட்டம், வெறிகுடித்துறப்பு, தகைமை, தொலை உறவுகளின்மீதும் கரிசனை, தொன்மை வாய்ந்த நாட்டுப்புற குடியமைப்பு போன்றவை இரசிக்கத்தக்கவை. எனினும் கிறிஸ்தவத்தால் மட்டுமே மெருகூட்டப்படும் தனிநபர் மற்றும் நாட்டு நற்பண்புகள் தம்மை மேற்கொள்ள இந்தியா அனுமதிக்கவேண்டும்.

## பகுதி–4 சமயங்களும், இறைவெளிப்பாடும் :

### சமயங்களின் உயரிய நோக்கம் கடவுளைக் கண்டுகொள்வது:

ஒருவர் கிறிஸ்தவராகும் போது அவரது முதலாவது கண்டுபிடிப்பு, அதுவும் அதிசயமான கண்டுபிடிப்பு, கடவுள் ஒருவர் உள்ளார் என்பதே. அதற்கு முன்பு அவர்கள் பலதேவர்களின் பெயர்களை உச்சரித்திருந்தாலும் "இவ்வுலகில் கடவுளற்றவர்களாகவே" வாழ்ந்தனர்.

இந்தியாவின் தெய்வங்கள் கடவுளை அவர்கள் காணவொட்டாமல் மறைத்துவிட்டன. பிரம்மனே உலகத்தைப் படைத்தவன் எனக் கருதப்பட்டாலும் பிரம்மன் வழிபடப்படுவதில்லை. முதன்மை தெய்வத்திலிருந்து தோன்றின சிவன் மற்றும் விஷ்ணுவை அவர்கள் வழிபடுகின்றனர். முதன்மை தெய்வம் சில கருத்து சித்தாந்தங்களாலேயே விளக்கப்படுகிறது. அவனுக்கு கோயிலுமில்லை, வழிபாடுமில்லை. அவனுக்குச் செபங்களும் புகழ்மாலையும் சாற்ற இந்துக்கள் கூடி வருவதுமில்லை. பல உருவங்களுக்கும் உயிரிகளுக்கும் எடுக்கப்படும் வழிபாடு முதன்மை தெய்வத்துக்கில்லை. அவனைப் பற்றிய கற்பிப்புகளும் இல்லாமையால் மக்கள் அவனைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. உயிர்களுக்கெல்லாம் மூலவனாக கருதப்படும் அவனை இந்து சமயம் உலகிலிருந்தே கடத்தி விட்டது. இந்து ஆன்மா தனது தோற்ற மூலத்தை அறியும் ஆறுதலும் இல்லை.

கிறிஸ்தவத்தின் மேன்மை என்னவெனில், கடவுளின் அளப்பரிய மாண்பினை புரிந்து வெளிப்படுத்த முயலும் அதே வேளையில் அவர்தம் பிள்ளைகளுக்கு அவரை அன்பொழுகும் வாழும் கடவுளாக அருகில் கொணர்ந்து உறவு நிலைப்படுத்தவும் முயல்வதே கடவுள் அன்பானவர் என்ற அந்த ஒரே கருத்தின் மூலம், கிறிஸ்தவ திருமறையில் மட்டுமே அல்லது அதனிடமிருந்து கடன்பட்ட மற்ற இலக்கியங்களில் மட்டுமே காணப்படும் அக்கருத்தின் மூலம், கடவுளை முற்றிலும் புதிய ஒளியில் ஆன்மாவின் முன் கொண்டுவந்து காண்பிக்கிறது. மனதில் இருக்கும் அத்துணை அய்யங்களையும், அச்சங்களையும் பகலவனைக்கண்ட பனிபோல் கரைந்துப்போகச் செய்கிறது.

## இந்து சமய அவதாரங்களும் கிறிஸ்துவின் மனுவுருவேற்பும் :

இந்து தெய்வ அவதாரங்களையும் கிறிஸ்துவின் மனுவுருவேற்பையும் ஒப்பீடு செய்வதிலேயே கிறிஸ்தவம் இந்து சமயத்தை விட எவ்வளவு உயர்வானது என்பதை நாம் விளக்க இயலும். விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் முக்கியமானவை இராமனும் கிருஷ்ணனும். மற்ற அவதாரங்களனைத்தும் தோற்றங்கள் போன்றவையே. அனைவருக்கும் மாதிரியான கதாநாயகன் இராமன் பல நற்பண்புகளுடையவனாகத் திகழ்ந்தாலும். தெய்வீக தன்மையற்ற மற்ற கதாபாத்திரங்கள் அவனது சகோதரர் இலஷ்மணன் மற்றும் பரதன்

அவனது நற்பண்பை, விஞ்சி விடுகிறார்கள். இந்து காவிய சிந்தனையின் அற்புத படைப்பாகிய சீதை நற்பண்புகளில் இராமனைவிட வெகுவாக உயர்ந்து நிற்கிறாள். இந்து சமய பற்றாளரிடத்தில் அதிகம் தெரிந்த அவதாரம் கிருஷ்ணன். எனினும், நன்நெறியைப் பொருத்தமட்டில் அவனது தெய்வீகத்தன்மை மிகவும் கேள்விக் குறியாகிறது. கிருஷ்ணனின் செயல்கள் ஒரு தெய்வத்தின் செயல்களானபடியால் அவன் வாழ்வில் காணப்பட்ட தூய்மையற்ற செயல்களை மக்கள் பின்பற்றக் கூடாது எனக் கீதையும், புராணங்களும் சொல்லும். இந்து சமய பற்றாளர்களும் சொல்வர். ஆக, கிருஷ்ணனின் வழி செல்பவர்கள் அழிவை நோக்கி செல்வர் என்பதை அவர்கள் வேதங்களே ஏற்றுக்கொள்கின்றன. அவை இந்து இளைஞர்களின் சிந்தனைகளையும் நற்குணங்களையும் களங்கப்படுத்தவே பயன்படுகின்றன.

கிறிஸ்துவின் மனுவுருவேற்பை நாம் பார்க்கையில் மூன்று விதங்களில் அதின் மேன்மையை நாம் உணர்ந்துக்கொள்ள இயலும், முதலாவது, நற்செய்தி நூல்களில் பதிவுச் செய்யப்பட்ட மற்ற நபர்களின் வாழ்வைக் காட்டிலும் கிறிஸ்துவின் தகைமை தூய்மையிலும், நன்மையிலும் அருளிலும் மிகையாகவே மிளிருகிறது என்பதைக் காணலாம்.

இரண்டாவதாக, மானிடருக்கு நன்னெறி மாதிரியை காண்பிக்கவும், பாவமுள்ள மனிதரைத் தூய கடவுளோடு ஒப்புரவாக்கவும் எடுக்கப்பட்ட மனுவுருவேற்பின் நோக்கு மிக உயரிய தல்லவா? மூன்றாவதாக, கிறிஸ்துவின் வாழ்வும், சித்தாந்தமும், மரணமும், கிறிஸ்தவர்கள் மீது அவற்றின் தாக்கமும் இவ்வுலகில் காணப்படும் உன்னத நலன்கள், நன்நெறிகள் மற்றும் ஆன்மிகம் ஆகியவற்றுக்கு ஊற்றுக்கண்ணாய் உள்ளது.

**கிறிஸ்தவ மற்றும் இந்து சமயங்களில் பலிகள் :**

உலகின் அனைத்து இனங்களும் இரத்தம் சிந்தும் பலிகளைப் படைத்ததாகத் தெரிகிறது. பண்டைய இந்தியாவின் பலிகளிளெல்லாம் குதிரையைப் பலியிடுவதே உயர்ந்த பலியாகக் கருதப்படுகிறது. இரத்த பலிகள் இன்னமும் ஒய்ந்தபாடில்லை, பிராமணரிடையேயும் அது

தொடர்கிறது. இன்று அரிசி பழங்கள் முதலானவை பலிகளாக படைக்கப் ப்டுகின்றன. பலிக்கான நோக்கத்தை அறிய இந்திய இலக்கியங்களை ஆராய்ந்ததில் பெறப்படும் பதில்கள் நம்மை வெகுவாக மனநிறைவு அடையச் செய்யவில்லை. சிறு தெய்வங்களின் கோபங்களை தணிக்கவும் பெருந்தெய்வங்களின் பசியாற்றவுமே பலிகள் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பலியிடப்படும் உயிரியின் இரத்தத்தைக் குடிக்க வேட்கையுடைய, கொடுமைகளில் களிக்கும் தெய்வங்களாக சிறு தெய்வங்கள் காண்பிக்கப்படுகின்றன. பெருந்தெய்வங்ளோ படைக்கப்படும் பலி பொருட்களை உண்மையிலேயே உண்ணுவது போலும், பலிகள் படைக்கப்பட வில்லையென்றால் பட்டினிக் கிடப்பதைப் போலும் காண்பிக்கப்படுகின்றன.

பலிகள் தோன்றினதற்கான வரலாற்றையும் பலிகள் செலுத்தப்படுவதன் அவசியத்தையும் தெளிவாக எடுத்துக்கூறும் ஒரே சமயம் கிறிஸ்தவம் ஆகும். முதலாவது மனிதர் பாவம் செய்யக் கூடியவர். பாவத்தின் சம்பளம் மரணம். இந்த பாவத்தின் பரிகாரமாக பலியிடுவதின் மூலம் எதிர்காலத்தில் மீட்பின் வாய்ப்பு உண்டு என கிறிஸ்தவம் புரிந்துகொண்டது. இரண்டாவது, கிறிஸ்து அனைத்து பாவங்களுக்காகத் தானே அனைத்துப் பலிகளின் ஆண்டவராக சிலுவையில் அர்ப்பணித்ததால் இனி வருங்காலங்களில் பலியிடுவதற்கான அவசியமும் இல்லை எனவும் விளக்குகிறது.

**பாவம் மற்றும் மீட்பு குறித்துக் கிறிஸ்தவ இந்து சமயங்களின் விளக்கங்கள் :**

இந்து சமயம் மனிதரின் பாவத்தைக் குறித்துப் பேசினாலும் அதனை விளக்கம் சொல்லி மட்டுப்படுத்திவிடுகிறது. மக்களின் பொதுவான புரிந்து கொள்ளலில் தெய்வமே பாவத்தின் மூலக்காரணம். பாவம் மனிதரின் மீறுதலாக விளக்கப்படுவதில்லை. அது மனிதரின் அவப்பேறு எனவே புரிந்து கொள்ளப்படுகிறது. அதுவும் அவருடைய முந்திய பிறப்பின் தாக்கங்களாகவும் விளக்கப்படுகிறது. எந்த இந்திய சமயப் புகட்டல்களும் பாவம் என்பது நன்மையைத் தவிர்த்து தீமையை தெரிந்துக்கொள்ளும் மனித தன் விருப்பத்தேர்வின் இயல்பே காரணம் என்று கற்பிப்பதில்லை.

இந்து சமயம் பாவத்தைப் பற்றிய விளக்கங்களில் மிகவும் முக்கியமான சில கூறுகளை விளக்கத் தவறுகிறது. முதலாவது, பாவம் என்பது மனித படைப்பின் நோக்கங்களுக்கு முரணானதாகவும், உள்ளுணர்வை களங்கப்படுத்துவதாகவும், அனைத்து மீறுதலாகவும் காண்பிப்பதில்லை. இரண்டாவதாக, பாவ மன்னிப்பின் மூலம், இறை நீதிக்கு எக்களங்கமும் நேரிடாமல், மீண்டும் இறை சட்டங்கள் கொடுத்தவரின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதில்லை. மூன்றாவதாக, பாவ மன்னிப்பு பற்றி இந்து சமயத்துக்கு எதுவும் தெரியாது, எதுவும் கற்றும் தராது. நான்காவதாக, தூய்மையளித்திடும் இறையருளைப் பற்றி பேசாததால் நோயுற்ற ஆன்மாவுக்கு எவ்விதமும் சுகமளிப்பதில்லை. ஐந்தாவதாக, இவ்வுலகில் தொடங்கி மறு உலகில் முழுமையடையும் புதுபிறப்பை மீட்பாக அறிவிக்காமல், மீண்டும், மீண்டும் பிறப்பதிலிருந்து விடுதலையையே மீட்பாக அறிவிக்கிறது.

மனிதர் பெரும் இயந்திரங்களல்ல என்றும் தங்கள் சிந்தனை, சொல் மற்றும் செயலுக்கு கடவுளுக்குப் பொறுப்புடையவன் என்பதை கிறிஸ்தவம் விளக்கிச் சொல்கிறது. தீமை என்பது நமது மனித இயல்பிலிருந்து விளைவ்து எனக்கூறாமல், மனதில் இயல்பின் உயரிய தன்மைகளான அகஉணர்வும், நமக்குள் ஒலிக்கும் கடவுளின் குரல், நம்முள் குடிகொண்டிருக்கும் கடவுளின் சந்ததி ஆகியவற்றுக்கு எதிரான கிளர்ச்சி என்றே கிறிஸ்தவம் கற்பிக்கிறது. தீமையைப் பாவம் என அழைத்து நமக்கு எதிரானதும் சமுகத்துக்கு எதிரானது மட்டுமல்ல, பாவமென்பது கடவுளின் அதிகாரத்துக்கும் சட்டத்துக்கும் எதிரிடையானது என்கிறது. மானிடர் அனைவரையும் குற்றப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல, மனிதனிடம் அன்பு கொண்டதாலும் அவர்களை மகிழ்வாக வைத்திருக்க வேண்டுமென்பதாலும் மனிதரின் பாவங்களை உணர்த்திக் காட்டுகிறது. காயப்படுத்தி பின் மீட்பின் நற்செய்தியினால் களிப்பூட்டி குணப்படுத்தி மனிதரின் நாவுகளை இறைபுகழ்ச்சியால் நிரப்புகிறது.

மற்ற சமயங்களும் பாவம் மீட்பு இவைகளைப் பற்றிக் கற்பிப்பதாகக் காணப்பட்டாலும், கிறிஸ்தவம் மட்டுமே பாவம் என்பது ஒரு கருத்தல்ல. மாறாக உண்மையில் தீய செயல்களே எனக் கற்பித்து அதற்கான உண்மையான தீர்வையும் கொடுக்கிறது. இத்தீர்வு கிறிஸ்துவின் சிலுவையினால் ஒருவருக்குக் கிட்டுகிறது. கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிக் கொண்ட ஒருவருக்கு அனைத்து தீய

குணங்களைக் களைந்திடும் வாய்ப்பினையும், தூய்மையடைந்த மனம், புதிய அன்பு, புதுவாழ்வையும் வழங்குகிறது. ஆக, முதலில் பாவத்தின் உண்மைத் தன்மையை உணர்த்தி, அதிலிருந்து மன்னிப்புப் பெறவேண்டிய தேவையை உண்டுபண்ணி, கிறிஸ்துவின் நிறைவால் அத்தேவையையும் சந்திக்கிறது கிறிஸ்தவம். இதன் பெயரே நற்செய்தி.

## இந்துக்களுக்கு ஓர் அழைப்பு :

மேற்கூறிய அனைத்து வாதங்களையும் கேட்ட ஓர் இந்து, ஒப்பீட்டளவில் இந்து சமயத்தைக் காட்டிலும் கிறிஸ்தவம் மேன்மையானதே என ஏற்றுக்கொள்வார். ஆயினும், ஓர் தவறிழைக்கும் வாய்ப்பும் உண்டு. இவ்வாதங்களை ஏற்றுக்கொள்ளும் ஓர் இந்து தான் கிறிஸ்தவராக வேண்டியதில்லை என நினைப்பார். வாழ்வில் சிறந்ததைத் தேர்ந்துக்கொள்ளும் அறிவாற்றலைக் கடவுள் நமக்குத் தந்துள்ளார். ஐரோப்பிய அறிவியல் பூர்வமான மருத்துவம் சிறந்ததெனக் கருதி அச்சிகிச்சைகளை நாம் ஏற்றுக்கொள்வதில்லையா? அது போன்றுதான் சமயமும். சிறந்த சமயம் எது என்பதைக் கடவுள் தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறார். கிறிஸ்துவின் வழியை நெருங்கி வரும் எவரையும் கடவுள் தள்ளிவிடுவதில்லை. சிறந்தது எனச் சுட்டிக்காட்டப்பட்ட கிறிஸ்து சமயத்தை ஏற்றுக்கொள்வதே சாலச்சிறந்தது.

## முடிவாக :

## நூலின் சிறுமையும் கருத்தின் செறிவும் :

நூல் சிறியதாயினும் இச்சிறிய நூலுக்குள் அடக்கம் பெற்றுள்ள கருத்துக்கள் ஆழ்ந்த செறிவுடையவை. ஒரு சமய ஒப்பாய்வு எப்படி இருக்கும் என்ற கேள்விக்குப் பதிலாக இந்நூல் முன்வைக்கப்படலாம். நமக்குப் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன பல சமய வழக்கங்களின் மீது, புதிய கோணத்தில் வெளிச்சம் வீசி, அவற்றை விமர்சனங்களுக்கு உட்படுத்துகின்றார் பேராயர் கால்டுவெல். இந்து சமயத்தையும் கிறிஸ்தவத்தையும் பல கோணங்களிலிருந்து ஆய்கிறார். இந்த ஒப்பாய்வுக்கு மறை நூல்களை மட்டுமல்ல, மக்களையும், சமய சடங்குகள், நம்பிக்கைகள், அதினால் விளையும் பயன்கள் ஆகிய அனைத்தையும் ஆய்வுக்குக் கொண்டுவருகிறார். சமய ஒப்பீட்டு மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இது சிறந்த ஒரு கைநூலாக இருக்கும்.

## நூல் குறித்து ஆய்வாளர் கருத்து

இந்த நூல் மிக இனிமையான ஆங்கில மொழி நடையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இனிமை ஆயினும் அச்சேற்றுவதற்கான நல்ல ஆங்கில நடை அல்ல. இது பேராயர் கால்டுவெல் அவர்களின் விரிவுரை பேச்சு மொழி நடை அப்படியே அச்சேற்றப்பட்டுள்ளது. தற்கால ஆங்கிலப் பதிப்பாளர்கள் இம்மொழி நடையை அச்சேற்றத் தயங்குவர். எனினும் பேராயர் அவர்களின் ஆங்கில மொழிநடையின் இனிமையை மறுப்பதற்கில்லை. மொழி இனிதாயினும் அதன் மூலம் வெளியிடப்படும் கருத்துக்களில் ஆங்கிலேய ஆணவத் தொனி நம்மைத் தவறாமல் வந்தெட்டுகின்றது. தன் எதிர் அமர்ந்திருக்கும் கேட்போர் கூட்டத்தினை உணர்வுகளைச் சலனப் படுத்துவதைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காத ஒரு பேச்சு இது. இப்படிப்பட்ட பேச்சு இன்று இந்தியாவில் பேசப்படக் கூடாது. அப்படி பேசினால் பிரச்சனைகளை வலிந்து இழுக்கும் செயலாகிப்போகும். இன்றைய இந்தியாவின் சமய நல்லிணக்க நிலை அப்படி நூலிழையில் உயிர்பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

...............

## 7.கால்டுவெல்லின் திருநெல்வேலி திருமண்டில அருட்பணி

அருள்திரு. R.குணசேகரன் கோயில் பிள்ளை

அருட்பணி என்ற சொல்லுக்கு இலக்கணமாய் திகழ்ந்தவர் பேராயர் இராபர்ட் கால்டுவெல். பேராயர்களுக்கெல்லாம் பெருமை தேடித் தந்தவர், மக்கள் பேராயர் என்றும் இவரை அழைக்கலாம். சிறந்த சிந்தனையாளர். தான் ஆற்ற எண்ணின அருட்பணியைத் தனது கூர்மையான சிந்தனையாற்றலோடு இணைத்துச் சிறப்பாக வடிவமைத்து செயல்படுத்தியவர் இராபர்ட் கால்டுவெல்.

இன்றும் அவரை இடையன்குடி கிராமத்தின் மக்கள் மறக்கவில்லை. அவர்களின் நினைவும் பேச்சும் எப்போதும் பேராயர் மேல் உண்டு. அவர் மக்களை நேசித்தார், மக்களோடு வாழ்ந்தார், மக்களுக்காக வாழ்ந்தார். அவர் மறைந்தாலும், இடையன்குடியின் இன்றைய தலைமுறையினரும் பேராயரோடு பாசத்தோடும் கனத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரை நினைக்காத நாட்களில்லை.

ஒருமுறை இடையன்குடியைச் சேர்ந்த வாலிபர் ஒருவரிடம் ஒரு தனிசபை ஊழியர் முழுக்கு ஞானஸ்நானம் இல்லை என்று வாதிட்டார். முழுக்கு ஞானஸ்நானம் இல்லை என்றால் பேராயர் என்ன, யாரும் மோட்சம் போக முடியாது என வாதிட்டார். அப்பொழுது அந்த வாலிபர் அவரைப் பார்த்து "ஐயா எங்கள் பேராயரே! அங்கு செல்ல முடியாது என்றால், அவர் போகாத இடத்திற்கு நாங்களும் செல்ல விரும்பவில்லை. ஆளை விடுங்கள்," என்று கூறி அனுப்பி விட்டார். வேடிக்கை தான். ஆனால் மக்கள் அவ்வளவாய் பேராயரை இன்றும் நேசிக்கிறார்கள் என்பதனை இச்சிறிய நிகழ்வு மூலம் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவிற்குக் கப்பலில் புறப்பட்டபோதே தனது அருட்பணியைக் குறித்துத் தீர்க்கமாய் யோசித்து திட்டமிட்டார். கப்பலில் இதற்குரிய பல புத்தகங்களைப் படித்தார். மொழி சார்ந்த கல்வியில் தேர்ந்தவரான **CP** பிரெளன் அவரோடு கப்பலில் பயணித்ததை அறிந்து அவரோடு நட்பு கொண்டு இந்திய மொழிகளைக் குறித்துக் கற்றறிந்து கொண்டார். **CP** பிரெளன் தெலுங்கு புலமை பெற்றவர். அவரிடமிருந்து சமஸ்கிருதம் மற்றும் தமிழ் உச்சரிப்பு முதலியவைகளைக் கற்றறிந்தார்.

## சென்னையில் கால்டுவெல் :

1838ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி, கால்டுவெல் சென்னை வந்தடைந்தார். அப்போது அவருக்கு வயது 24. மூன்றரை ஆண்டு காலம் சென்னையில் தங்கியிருந்தார். தன்னை அருட்பணிக்கென ஆயத்தம் செய்து கொள்ள இக்காலத்தை பயன்படுத்திக்கொண்டார். சென்னையில் அநேகரைச் சந்தித்து தனது நண்பர்களாக்கிக் கொண்டார். பிரபல அருட்பணியாளர்கள், தமிழ்ப்பேரறிஞர்கள், கல்வியாளர்கள், அரசு அதிகாரிகள், ஆகியோரிடம் தமது நட்பை வளர்த்துக்கொண்டார். அவர்களுள் முக்கியமானவர்கள் ஜான் ஆண்டர்சன், ஜான் டக்கர், பேராயர் ஸ்பென்சர், ஆல்ஃபிரட் ரெட்போர்ட், சைமாண்ட் Dr.வின்ஸ்லோ, Dr.ஸ்கடர், ஆர்ச் டீக்கன், ஹார்ப்பர் கார்ட்ரில்.

ஜெனரல் C.A. பிரெளன் மற்றும் ஹென்றி பவர் ஆகியோர், இவர்களோடு பழகினபோது இவர்களது பல்வேறு அருட்பணிக்கான செயல் திட்டங்களை அறிந்து கொள்ள முடிந்தது. குறிப்பாக இவர்கள் ஆங்கிலக் கல்வியின் மூலம் உயர் சாதியினர் என கருதப்பட்டவர்களைக் கவர்ந்து அதன் மூலம் கிறிஸ்தவத்தைப் பரப்பிட எண்ணிக் கொண்டிருந்தனர். கால்டுவெல்லின் மனம் இதற்கு ஒத்துப் போகவில்லை.

குறுகிய கால சென்னை வாழ்வில், நற்செய்திப் பணிக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் வண்ணமாக மொழியைக் கற்றுக்கொள்ளுதல், அதில் புலமை பெறுதல், பல்வேறு அருட்பணி முறைகள், செயல்திட்டங்கள் போன்றவற்றைக் கற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றில் தனது நேரத்தைச் செலவிட்டார். ஆங்கிலிக்கன் திருச்சபையின் பல்வேறு அருட்பணியகங்களான LMS, CMS மற்றும் SPG ஆகிய அமைப்புகளின் அருட்பணியாளர்களோடு அதிகத் தொடர்பு கொண்டிருந்தார்.

LMS அருட்பணியாளராக வந்த இவர் CMS மற்றும் SPG ஆகிய இரு நிறுவனங்களையும் அலசி ஆராய்ந்து இவைகளில் SPG யே தனது ஊழிய முறைக்கு ஏற்றது என தீர்மானித்தவராய் தன்னை SPGயின் அருட்பணியாளராக இணைத்துக்கொண்டார். மட்டுமல்ல தான் பணி செய்யப் போகும் இடத்தையும் தீர்மானித்தார். எதையும் காரண காரியங்கள் அறிந்து ஏற்றுக்கொள்ளுதல், சென்னை நகர வாசிகளை

விட்டு, எளிய சிந்தையுடனும் கற்றுக்கொள்ளும் பாங்குடனும் பின்பற்றிச் செல்லும் ஆவலுடனும் திகழ்கின்ற திருநெல்வேலி மாவட்டக் கிராமத்து மக்களிடமே தான் செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தார்.

## இடையன்குடி நோக்கிப் பயணம்

SPGல் தன்னை இணைத்துக் கொண்ட கால்டுவெல் சென்னை ஆங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் ஸ்பென்சர் அவர்களை உதகமண்டலத்திற்குச் சென்று சந்தித்துப் பேசினார். சென்னையிலிருந்து மாட்டுவண்டி அல்லது பல்லக்கு மூலமாக பயண முறையைத் தவிர்த்து கால்டுவெல் நடந்தே பயணம் செய்தார். பாண்டிச்சேரி, தரங்கம்பாடி, சிதம்பரம், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய பகுதிகளின் வழியாக கடந்து சென்றார். இவ்விதமாகப் பயணம் செய்வதின் மூலம் கிராமங்களைக் குறித்தும் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களைக் குறித்தும் அவரால் அதிகம் அறிந்து கொள்ள முடிந்தது. பேராயர் ஸ்பென்சர் அவர்களால் 1841ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள் இராபர்ட் கால்டுவெல் அருட்பொழிவு செய்யப்பட்டார்.

அதன்பின் உதகமண்டலத்திலிருந்து புறப்பட்ட கால்டுவெல் கோயம்புத்தூர், மதுரை வழியாகத் திருநெல்வேலி வந்தடைந்தார். தாமிரபரணி ஆற்றினைக் கடந்து பாளயங்கோட்டை வந்து சேர்ந்தார். அங்கிருந்து நாசரேத் மற்றும் முதலூர் ஆகிய கிறிஸ்தவ கிராமங்களைக் கடந்து இடையன்குடியை வந்தடைந்தார். அவரது இந்த பயணத்தின் முடிவில் அவர் மிகவும் சிரமத்திற்குள்ளானார். முதலூரைக் கடந்து இடையன்குடி வரும் வழி முழுவதும் தேரி என்றழைக்கப்படக்கூடிய சிவப்பு மணலினால் சூழப்பட்ட பாலைவனம் போன்ற பகுதியாகும். செம்மணல் அவரது காலை வறுத்தெடுத்தது. பாதங்கள் முழுவதும் கொப்பளமாகிப்போனது. அனல் வீசும் வெப்பக்காற்று, கொதிக்கும் மணல், வெட்டவெளி, சில இடங்களில் நிழலற்ற பனைமரக் கூட்டம் வேறு சில இடங்களில் ஓடை என்று சொல்லப்படும் முள்மரங்கள். இப்படிப்பட்ட கடினமான பகுதிகளுக்குள்ளாய் நடந்து துன்பம் ஏற்படினும், கிராமங்களில் மேல் அவர் கொண்டிருந்த அளவுகடந்த அன்பினால், துயர்களை தூக்கி எறிந்து இடையன்குடியைச் சேர்ந்தார்.

## திருநெல்வேலி மாவட்டம் குறித்த குறிப்பு :

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு மற்றும் அதன்

சிற்றாறுகள் பாய்கின்ற பகுதிகள் செழிப்பான இடங்கள். ஆற்றுப் படுகைகளில் வாழை, நெல் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. முதலூர், மெஞ்ஞானபுரம், சாயர்புரம், சாத்தான்குளம், இடையன்குடி ஆகிய பகுதிகளில் வெப்பம் மிகவும் அதிகம். சாதாரணமாகவே 72 முதல் 96 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் இங்கு நிலவும். வடகிழக்குப் பருவகாலங்களில் மழைமிகவும் குறைவாகவே பெய்யும். இந்த நீரைக் குளங்களில் தேக்கிவைத்து விவசாயம் நடைபெற்று வந்தது. பாளையங்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகியவை முக்கியமான பெரிய நகரங்கள். தூத்துக்குடி கடற்கரை நகரம். உப்பளத் தொழில் இங்கே பிரசித்தம் பெற்றது. மேலும் பஞ்சு நூல் உற்பத்தி, பஞ்சாலைத் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தன.

செழிப்பான ஆற்றோரப் பகுதிகள், கோவில்கள் இருக்கின்ற பகுதிகளான ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய சிறு நகரங்களில் பிராமணர்கள் வசித்து வந்தனர். எண்ணிக்கையில் குறைவானவர்களாயிருப்பினும் செல்வத்தில் மிஞ்சியவர்கள்.

பிற இடங்களில் வெள்ளாளர், ரெட்டி, மறவர், நாயுடு, செட்டியார், பணிக்கர், இடையர், கடையர், கம்மாழ்வர், சாணர், பள்ளர், பரவர் மற்றும் தலித் மக்கள் வாழ்ந்து வந்தனர். சாதி அடிப்படையில் சாணர்கள் வெள்ளாளர் இனத்தை விடத் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்பட்டாலும் தலித்துகளை விடச் சற்று கூடியவர்கள் என அழைத்துக்கொண்டனர். கடற்கரைப் பகுதியில் பரவர் இனமக்கள் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். இவர்கள் தவிர துணி வெளுப்போர் முடிதிருத்துவோர், தச்சர், குயவர் போன்ற இன மக்களும் மிகக் குறைவான அளவில் வாழ்ந்து வந்தனர்.

கி.பி.15ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் திருநெல்வேலி மாவட்டத்தின் மீனவ கிராமங்களைச் சென்றடைந்தது. மீனவர்கள் கூட்டம் கூட்டமாகக் கிறித்தவத்தை ஏற்றுக்கொண்டனர். சீர்திருத்தக் கிறித்தவம் தரங்கம்பாடியில் பணி செய்த அருட்பணியாளர் சுவார்ட்ஸ் வழியாகத் திருநெல்வேலிக்கு 1778ஆம் ஆண்டில் தனது தடத்தைப் பதித்தது. இதனைத் தொடர்ந்து கிறித்தவம் பல்வேறு எதிர்ப்புகளின் மத்தியில், தீவிரமாகப் பரவிட துவங்கியது. ஆங்கிலிக்கன்

திருச்சபையின் அருட்பணியகங்களான CMS மற்றும் SPG முறையே 1820ஆம் ஆண்டிலும், 1829ஆம் ஆண்டிலும் தனது அருட்பணியினைத் திருநெல்வேலி மாவட்டத்தில் தனித்தனியே தொடங்கிச் செயல்பட்டு தங்களுக்குள் நல்லுறவுடன் இயங்கி வந்தன. இதன் முக்கியமான அருட்பணியாளர்கள் C.F. சுவார்ட்ஸ், ஜேனிக், கிறிஸ்டியன் வில்ஹம் ஜெரிக், ஜேம்ஸ் ஹக், CPE ரேனியஸ் மற்றும் ஜார்ஜ் பெட்டிட் ஆகியோர் SPG அருட்பணியகம் டேவிட்ரோகன் என்பவரைக் கண்காணிப்பாளராக நியமித்தது. அவர் திருநெல்வேலிப் பகுதியை உக்கிரன்கோட்டை, நாசரேத், முதலூர் மற்றும் இடையன்குடி என நான்கு அருட்பணி மாவட்டங்களாகப் பிரித்தார்.

A.F.கேமரர் (1838–58) 20 வருடங்கள் நாசரேத்திலும், G.U. போப் (1843–1850) 7 ஆண்டுகளில் சாயர்புரத்திலும், G.Y. ஹெய்னி மற்றும் C.S. கோஹப் (1839–1845) ஆகியோர் காலங்களில் முதலூரிலும், பணி செய்தனர். இடையன்குடி பகுதியில் பணிசெய்ய அருட்பணியாளர் இல்லை. அருட்பணியாளர் இல்லாத காரணத்தினாலும், கொள்ளை நோய் போன்ற இயற்கைச் சீற்றத்தினாலும், உயர் சாதியினர் என அழைக்கப்பட்டவர்களின் அச்சுறுத்தல்களினாலும், இப்பகுதியில் கிறித்தவம் சரிவடையத் தொடங்கியது.

## இரவு சென்று போயிற்று பகல் சமீபமாயிற்று :

இத்தகைய சூழலில், கால்டுவெல் இடையன்குடி அருட்பணி மாவட்டத்தின் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டார். இடையன்குடியில் பொறுப்பேற்க வரும் வழியில் நாசரேத்தில் 1841ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் தேதி அட்வெந்து முதல் ஞாயிறன்று நாசரேத்தில் தனது முதல் அருளுரையை ஆற்றினார். அவரது பிரசங்கம் ரோமர் 13:12 'இரவு சென்று போயிற்று; பகல் சமீபமாயிற்று' வசனத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. இயேசுவானவரின் அருட்பணியில் நாசரேத்தூர் அறிக்கை போல் கால்டுவெல்லின் இந்த அருளுரை அவரது அருட்பணி விளக்கம் எனக் கூறலாம்.

இடையன்குடி கிராமத்திற்கு முதல் முறையாக நியமிக்கப்பட்ட அருட்பணியாளர் கால்டுவெல். இந்த கிராமம் திருநெல்வேலியிலிருந்து 35 மைல்கள், தூத்துக்குடியிலிருந்து 45 மைல்கள், கன்னியாகுமரியிலிருந்து 30 மைல்கள் மற்றும் கடலிலிருந்து 3 மைல்கள்

தூரத்தில் அமைந்துள்ளது. இதன் முந்தைய பெயர் இடையன் குடியிருப்பு என்பதாகும். இதில் குடியிருப்பை ஏற்படுத்திய இடையர்கள் தற்போது அங்கே இல்லை. ஆனால் கால்டுவெல்லுக்கு இந்தப் பெயர் மிகவும் பிடித்துப் போனது. இடையன்குடி அருட்பணி மாவட்டம் முதலூர் அருட்பணி மாவட்டத்திற்குத் தென்கிழக்கு பகுதியாகும். சராசரியாக 20 மைல் நீளம் மற்றும் 58 மைல் அகலம் கொண்ட இப்பகுதியில் வாழும் மக்கள் யாவரும் சாணார் இனத்தவர். பனை மரங்களையே நம்பி வாழ்கின்றவர்கள். பதநீர் இறக்கி அதை காய்ச்சி வெல்லமாக்கி (கருப்பட்டி) விற்பனை செய்து வந்தனர். பனைமரத்தினை கற்பக விருட்சம் என்று கூறுவார். பனைமரத்தின் அனைத்துப் பகுதிகளும் பயன் தரும். பனைமரம் தான் இவர்களின் வாழ்வாதாரம்.

கால்டுவெல் பொறுப்பேற்ற சமயத்தில் இடையன்குடியில் சாணார்களே மிகுந்து காணப்பட்டனர். ஒருசில பிற இனத்தவர் வாழ்ந்தனர். மொத்த தொகை 300 பேர் மட்டுமே. இதில் 200 பேர் புற மதத்தவர். அங்கே மிகச்சிறிய ஆலயம் ஒன்று இருந்தது. ஒரே அறையைக் கொண்ட அருட்பணியாளரின் குடிசை வீடு இருந்தது. கிராமத்தில் தெருக்கள் இல்லை. ஒழுங்கற்ற முறையில் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள வீடுகள், சுகாதாரமற்ற சூழலில் காற்றோட்டம் இல்லாத நிலையில் குடியிருப்புகள் அமைந்திருந்தன. ஆலய வழிபாட்டிலும் ஒழுங்கின்மை காணப்பட்டது. பள்ளிச் செயல் இழந்து நின்றது. பெண்களுக்குக் கல்வி வசதி இல்லை. கொள்ளை நோயினால் அநேகர் மரித்து போன சூழல் நிலவியது. ஆதிக்கவாசிகளின் அக்கிரமம் மிகுந்து காணப்பட்டது. கிறித்தவம் ஏளனமாகப் பேசப்பட்டது. நொடிந்து போன நிலையில், சோர்வுற்று நம்பிக்கையிழந்த சூழலில் கிறித்தவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

கால்டுவெல் அக்கிராமத்தில் தங்கியிருந்து அதனைச் சுற்றியுள்ள மற்ற இனத்தவரையும் சந்தித்தார். அக்கிராமத்தை வளப்படுத்த என்ன செய்யமுடியும் என்பதைக் குறித்து யோசிக்க ஆரம்பித்தார். 1841 டிசம்பர் மாதம் இடையன்குடியில் பொறுப்பேற்ற கால்டுவெல் 1843ஆம் ஆண்டு வரை ஈராண்டுகள் சிந்தித்து – சிந்தனைகளுக்கு வரிவடிவம் கொடுத்து, அவைகளைச் சிற்பங்களாய்ச் செதுக்கி, செயல்படுத்த தொடங்கினார். ஈராண்டுகள் இறைவனின் துணையோடு அவர் கற்றுக்கொண்டவை ஏராளம்.

## இடையன்குடி – மாதிரி கிராமம்

இக்கிராமத்தின் மக்கள் கிறித்தவர்களாயிருந்தாலும், மூடநம்பிக்கைகளில் ஊறிப் போனவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஏனெனில் இவர்கள் விட்டுவந்த இந்து மதத்தில் பேய்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேய்களை வழிபட்டு அவைகளைக் கடவுளாக்கினர். ஆடி மாதம் சேவல் மற்றும் கடாக்களை வெட்டி பேய்களுக்குப் பலி செலுத்தி விழாக் கொண்டாடினவர்கள். பிராமணீயத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட கடவுள் வழிபாட்டைக் கொண்டவர்கள். இவர்களை இந்தச் சூழலிருந்து வேறுபடுத்தி புதிய சூழலில் குடியமர்த்தினால் மட்டுமே இவர்கள் சிந்தனை மாற்றம் அடையும். புதிய சமுதாயத்தை இவர்களால் உருவாக்க முடியும் என உணர்ந்தார் கால்டுவெல். எனவே இந்த மூடப்பழக்க வழக்கம் கொண்ட பின்தங்கிய சூழல் நிறைந்த கிராமத்தை மாற்றவேண்டும் எனத் தீர்மானித்த கால்டுவெல் அதை செயல்படுத்தவும் தொடங்கினார்.

பல்வேறு எதிர்ப்புகளின் மத்தியில் முழு கிராமத்தை 40 பவுண்டுகள் விலை கொடுத்து வாங்கினார். அதனை அழகு கிராமமாக வடிவமைத்தார். நேரான தெருக்கள், அகன்ற சாலைகள், சாலையின் இரு பக்கத்திலும் மரங்கள், கிராமத்தின் நடுவில் ஆலயம், அருட்பணியாளர் பங்களா, பள்ளி என்று சிறப்பாக வடிவமைத்து சில வீடுகளைத் தெரிந்தெடுத்து புதிய தோற்றங்களில் கட்டினார். கிராமத்தினர் முதலில் சற்றுத் தயங்கினாலும் இப்புதிய வடிவமைப்பினால் மனம் ஈர்க்கப்பட்டு தாங்களே தங்கள் செலவில் நேர்த்தியான வீடுகளை, புதிய பொலிவான தோற்றத்தோடு கட்டிக் கொண்டனர். குடியேறினார்கள். ஒரு மாற்றம் பிறந்தது. கிராமத்தின் அமைப்பில் மட்டும் அல்ல, மக்களின் உள்ளத்திலும் தான். இன்றும் கால்டுவெல்லுக்கு சாட்சியாக இக்கிராமம் தலை நிமிர்ந்து நிற்கிறது. தெருக்களின் அமைப்புகள் மனம் சிலிர்க்க வைக்கின்றது. தமிழக அரசினால் 15–08–2004 அன்று கிராம முழுச் சுகாதார இயக்கம் சார்பில் சிறந்த சுகாதார கிராமம் என்ற விருது வழங்கப்பட்டது. மற்றும் 30–03–2006ஆம் ஆண்டு மத்திய அரசின் நிர்மல் கிராம பிரஸ்தார் விருது குடியரசு தலைவர் மூலமாக வழங்கப்பட்டது. மட்டுமல்ல 01–05–2009 அன்று தன்னிறைவு பெற்ற ஊராட்சி என்ற முறையில் உத்தமர் காந்தி விருது பெற்றுள்ளது.

## நற்செய்திப் பணி – திருச்சபைச் சீரமைப்பு

கிராமத்தைச் சீர்படுத்திவிட்டார். இப்போது தரமுள்ள கிறிஸ்தவர்களை உருவாக்கவேண்டும் என்பதில் மிகவும் கவனம் செலுத்தினார் கால்டுவெல். அவர் இவ்விதமாய்க் கூறினார்:

நாங்கள் மீன்களைப் பிடிப்பவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே கிராமங்கள் தோறும் மீன்பிடிக்கச் செல்லுகிறேன். ஆனால் அதிக எண்ணிக்கையில் அல்ல, 153 பெரிய மீன்கள் என்ற அளவில் அல்ல, குறைந்த அளவில். ஆனால் சிறந்த தரத்தில் வேண்டும். தனிமையாக்கப்பட்ட மீன்கள் உண்டு. பல்வேறு சூழல்களில் காணப்படுபவைகள் உண்டு. இவைகளைச் சரியாக பகுத்தறிந்து நல்விதமாக அதை வளரச் செய்தல் அவசியம். பாதி மீன், மீதி பாம்பு என்ற நிலையில் அல்ல. நித்திய கரையில் தூதர்கள் அமர்ந்து கொண்டிருக்கும் வேளையில், நல்லவை, தீயவை எனப் பிரிக்கும் வேளையில் அவைகள் தள்ளப்படாதவைகளாய் அமைய வேண்டும்.

கரிசனையோடு தனது பணிகளைத் தொடர்ந்தார் கால்டுவெல். மிகுந்த கவனத்தோடு திருச்சபை பராமரிக்கப்படவும் வளர்ச்சியின் பாதையில் கொண்டு செல்லப்படவும் வேண்டும் என்பதில் கால்டுவெல் உறுதியாக இருந்தார். எண்ணிக்கையில் வளர்ச்சியைக் காட்டுதல் அல்ல. தரத்தில் வளர்ச்சியைக் காட்டுதல் வேண்டும். வீழ்ந்து கிடந்த இடையன்குடி அருட்பணித் தளத்தை மறு சீரமைத்து உயிர் மீட்சி அடையச் செய்வதற்கான முயற்சியில் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்டார். வெற்றியும் கண்டார்.

நற்செய்திப் பணி அத்தனை எளிதல்ல. கால்டுவெல் இடையன்குடி கிராமத்தில் குடியேறியபோது 1811ஆம் ஆண்டில் நிலவிய கடுமையான கொள்ளை நோய் அப்பகுதி கிராமங்கள் அனைத்தையும் சூறையாடியிருந்தது. கிராமங்களில் ஜனக் கூட்டமே இல்லை. இவர்களைக் கண்காணிக்க ஐரோப்பிய அருட்பணியாளர்கள் இல்லை. ஜெபிக்க சபை ஊழியர்கள் இல்லை. அவர்களில் பலரும் நோயினால் மாண்டுபோனார்கள். அநேகர் பழைய மதத்திற்கே மாறிவிட்டனர். கால்டுவெல் இவ்விதமாய்க் கூறுகிறார்.

“வனாந்திரத்தில் கஷ்டப்பட்டு கட்டிச் சேர்க்கப்பட்ட மந்தை, மேய்ப்பவர்கள் இல்லாதபடியினால் ஓநாய்களின் வசம் சிக்குண்டு அழிந்து கொண்டிருந்தது.”

கால்டுவெல் நற்செய்தியைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்ல மிகக் கடினமான முயற்சியினை மேற்கொண்டார். ஓய்வு என்பது அவரது சரித்திரத்தில் இல்லை. இடையன்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களை ஒழுங்காகச் சந்தித்து நற்செய்தியை அறிவித்து வந்தார். பலர் கேலியும் கிண்டலும் செய்தனர். இருப்பினும் தனது முயற்சியைத் தளரவிடவில்லை. அங்கெல்லாம் திருச்சபையைத் தொடங்கினார். நான்கு ஆண்டுகள் கடின உழைப்பிற்குப் பின் கால்டுவெல் இவ்விதமாய்க் குறிப்பிடுகின்றார்.

"நான் இப்போது நொறுக்கப்பட்டு மீதமான புராதன திருச்சபையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். உடைந்து போன துண்டுகளை ஒன்றாக இணைக்கப் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். இப்போது 3000 ஆத்துமாக்கள் திருச்சபைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன."

கடினமாய் உழைத்தார் கால்டுவெல். கிறித்தவ வாழ்விற்குள் மக்களை வழி நடத்த முயலும் போது அவர் நான்கு விதமான பிரச்சனைகளை சந்தித்தார்.

முதலாவதாக, மக்கள் மத்தியில் காணப்பட்ட மூடநம்பிக்கை சார்ந்த பயம். கிறித்தவ போதனா முறையில் மக்கள் நம்பிக்கை வைப்பதைக் காட்டிலும் பேய், பிசாசுகளின் மேல் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். இதை முறியடிக்க கால்டுவெல் மக்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் கிராமங்களில் இருந்த புளியமரங்களில் எல்லாம் ஆணியடித்து, நான் ஆணியடித்து விட்டேன் இனிப் பேய்கள் ஊருக்குள் வராது என்று சொல்லித் தைரியப்படுத்துவார். இது முன்னோர்கள் சொல்லுகின்ற செவி வழிச் செய்தி.

இரண்டாவதாக, கல்வி கற்க முன்வராத நிலை, கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இல்லாமல் தங்களது தொழிலுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து வந்த நிலையும் முன்னேற்றத்திற்கு தடைகல்லாகவே இருந்தது.

மூன்றாவதாக, பின்மாற்றம் அடைந்த மக்களின் எண்ணிக்கை, கிறித்தவத்துக்குள் நுழைய எண்ணும் மக்களுக்கு சவாலாகவே இருந்தது. பின் மாற்றம் அடைந்தவர்கள் கூறும் அதைரியப்படுத்தும் வார்த்தைகள் அதிகமாய் சோர்வுறச் செய்தது.

நான்காவதாக மனமாற்றம் அடைந்தவர்களுக்குள் காணப்படும் சண்டை சச்சரவுகள், நற்செய்திப் பணிக்குத் தடையாகவே இருந்தது. சாட்சி இல்லா வாழ்வு நிச்சயம் ஒரு தடைதான். இன்றையத் திருச்சபையின் வளர்ச்சிக்கும் இவைகள் தடைகளாகவே உள்ளன.

இருப்பினும் கால்டுவெல் உறுதியாக இருந்தார். புதிய விசுவாசிகள் கிறித்தவ அறிவிலும், ஆவிக்குரிய வாழ்விலும் தேர்ந்தவர்களாவது அவசியம். எனவே, வாரந்தோறும் வேதபாட வகுப்புகளை ஒழுங்காக நடத்தினார். பெரியவர்களுக்கும் ஞாயிறுபள்ளி வகுப்புகள் நடத்திக் கிறித்தவ அடிப்படைக் கொள்கைகள், விசுவாசப் பிரமாணம் ஆகியவற்றைப் போதித்தார். எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு மனப்பாடம் செய்ய கற்றுக் கொடுக்கப்பட்டது. இதனை அந்நாளைய சென்னைப் பேராயக் கமிட்டியின் செயலாளர் A.R.சைமாண்ட் பாராட்டியிருக்கின்றார்.

1845ஆம் ஆண்டில் கால்டுவெல்லின் அருட்பணியைப் பார்வையிட இடையன்குடி வந்திருந்த பேராயர் ஸ்பென்சர், "மூன்று ஆண்டுகளில் நான்கு பெரிய மற்றும் மூன்று சிறிய ஆலயங்கள், சுமார் 2940 நபர்கள் வழிபடும் வகையில் கட்டப்பட்டுள்ளன. மேலும் 680 மாணவ மாணவியர் பயிலும் வகையில் 4 மத்திய மற்றும் 10 கிராம பள்ளியும் கட்டப்பட்டுள்ளன" எனக்குறிப்பிடுகின்றார்.

1851ஆம் ஆண்டில் SPG அருட்பணியகம் கொடுத்த அறிக்கையில் கால்டுவெல்லைப் "பாராட்டி நேர்த்தியான வளர்ச்சி" என்றும், கால்டுவெல்லின் உழைப்பு "சிறந்த ஆசீர்வாதம்" எனக் குறிப்பிட்டுள்ளது. கால்டுவெல்லின் அறிக்கையில் "ஜூலை 1852 முதல் டிசம்பர் 1853க்குள் 600க்கும் மேற்பட்டவர்கள் மனமாற்றம் அடைந்துள்ளனர். ஒரே நாளில் 64 பேர் திருமுழுக்குப் பெற்றுள்ளனர், 90 பேர் திடப்படுத்தல் பெற்று திருவிருந்தில் சேர்க்கப்பட்டனர்" எனக் குறிப்பிடுகின்றனர்.

விக்டோரியாவின் பேராயர் 1853ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா வந்திருந்தபோது இரண்டு நாட்கள் இடையன் குடிக்கு வந்து, கால்டுவெல்லோடு தங்கியிருந்தபோது, மிகுந்த ஆச்சரியப்பட்டவராய் 11 ஆண்டுகளுக்கு முன் வனாந்தரமாய் யாரும் தங்கியிராத பகுதியாய் இருந்த இக்கிராமம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. கால்டுவெல் ஒரு

ஆயராக, மருத்துவராக, நீதிபதியாக, ஆலோசகராக செயல்படுவதில் பெருமிதம் கொள்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலம் காலமாக சமுதாயத்தின் அடிமைத்தனத்தில் சிக்குண்டு, பிறரால் தாழ்த்தப்பட்டவர்களாய்க் கருதப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மக்கள், தங்கள் மதத்திலிருந்து வெளியேறி புதிய மார்க்கத்தைத் தழுவியிருக்கிற சூழலில் அவர்களை சமுதாயப் பார்வையில் உயர்ந்த இடத்தில் அமரவைக்க வேண்டும் என்பது கால்டுவெல்லின் சிந்தனையாக இருந்தது. எனவே, பிறர் இவர்களைக் காணும்போதெல்லாம் உயர்ந்த மதிப்பீட்டின் அடையாளங்கள் இவர்களுக்குத் தேவை என்பதனை உணர்ந்த இவர், மேற்கத்தியக் கிறித்தவக் கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தினார். கிறித்தவக் கோயில்களை மேற்கத்திய வடிவமைப்பில் கட்டினார். இதுமட்டுமல்ல, கிறித்தவர்களின் கோயில்களின் கோபுரங்கள் திருச்செந்தூர் மற்றும் திருவில்லிப்புத்தூரில் காணப்படும் இந்துக் கோயில்களின் கோபுரங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகக் கட்டினார். இங்கே கோபுரங்களை உயர்த்தும்போது, பிறரால் தாழ்த்தப்பட்டவன் என அழைக்கப்படும் கிறித்தவன் தலை நிமிர்ந்து நின்று தான் வணங்கும் கடவுள் இவர்களின் கடவுள்களைக் காட்டிலும் மேலானவர் என மார்தட்டி கொள்ள இயலும். அங்கே கோவிலுக்குள் செல்ல அனுமதி இல்லை. இங்கே மிக உயர்ந்த கோயிலுக்குள் சென்று வழிபட உரிமை. மேலும் தன்னம்பிக்கை, தற்சார்பு இவைகளையும் கற்று கொடுத்தார். இம்மக்கள் தங்களுக்கென ஆலயத்தைக் கட்டிக்கொள்ள தாங்களே முன்வந்தனர். 1844ஆம் ஆண்டு ஆலய கட்டட சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். கிராம ஆலயங்கள் கட்டுவதற்காக ஒரு நாள் வருமான காணிக்கை திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஏழைகள் நிதி என்ற நிதியமைப்பை ஏற்படுத்தினார். மட்டுமல்ல தங்களது ஆலயத்தை தாங்களே கட்டிக்கொள்ள வேண்டும் என்ற உணர்வை அவர்களுக்கு ஊட்டினார். அருட்பணியினைப் பிறரை சார்ந்திராமல் தாங்களே அருட்பணியில் ஈடுபட இயலும் என்பதனை உணரவைத்தார். தன்னாதரவு, தன்னாட்சி மற்றும் தன்விரிவாக்கம் ஆகிய கொள்கைகள் இந்தியத் திருச்சபையில் இவர் மூலமாய் வித்திட்டன.

15 ஆண்டுகள் கால்டுவெல்லின் பணி நிறைவுற்ற வேளையில் 627 கிராம திருச்சபைகள், 11 உள்நாட்டு ஆயர்கள், 45,000

கிறித்தவர்கள், 5000 திருவிருந்து பெற்றவர், 10,000 பள்ளிச் சிறார்கள் மற்றும் நற்செய்தி விரிவாக்கச் சங்கங்கள் என ஒரு மகத்தான வளர்ச்சியைக் காண முடிந்தது.

இரவு சென்று போயிற்று பகல் சமீபமாயிற்று – எத்தனை தீர்க்கமான திருமறையின் வார்த்தை. ஆண்டவருக்கே நன்றி செலுத்துவோம்.

**சபை ஊழியர்கள்**

இன்றைய சபை ஊழியர்கள் கால்டுவெல்லிடம் பயிற்சி பெற்றிருந்தால் சபைகளின் வளர்ச்சி நேர்த்தியாக அமைந்திருக்கும் என்பது உண்மை.

சபைகளின் வளர்ச்சி சபை ஊழியர்களைச் சார்ந்தது.

1875 ஆம் ஆண்டில் திருநெல்வேலி SPG அருட்பணியகத்திற்கு 151 சபை ஊழியர்களும், ஆசிரியர்களும், 300 கிராம திருச்சபைகளில் பணியாற்றி வந்தனர். கால்டுவெல் பணியாற்றிய இடையன்குடி அருட்பணி மாவட்டத்தில் 26 பள்ளிகள், 47 திருச்சபைகள் பரவிக்கிடந்தன. சபை ஊழியர் இல்லையேல் எதுவும் செய்ய இயலாது. எனவே இவர்களுக்குத் தகுந்த முறையில் பயிற்சி அளித்துப் பயன்படுத்தினால் சிறந்த பலன் கிடைக்கும் என்பதனை உணர்ந்த அவர், கடினமான பயிற்சிக்குள்ளாக அவர்களை ஈடுபடுத்தினார். இதற்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் சபை ஊழியர்களை இடையன்குடிக்கு வரவழைத்தார். கூட்டம் நடத்தினார். அதில் ஒவ்வொரு சபை ஊழியரும் தங்களது கடந்த வார அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். கால்டுவெல் அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான பிரசங்கத்தின் குறிப்பினைப் பகிர்ந்து கொள்வார். ஒவ்வொரு குறிப்பினையும் சபை ஊழியர்கள் விரிவாக்கம் செய்து விளக்க வேண்டும்.

மட்டுமல்ல, சபை ஊழியர்களுக்கு வருடத்திற்கு இருமுறை திருமறைத் தேர்வு நடத்தினார். பிரசங்கிமார்களின் பிரசங்கத் திறனை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு கற்றுக்கொடுத்தார். இவைகளுக்கு மேலாகக் கிறிஸ்தவ நன்னடத்தையில் ஒவ்வொரு சபை ஊழியர்களும் சிறந்திருத்தல் வேண்டும் என்பதனைக் கால்டுவெல்

வலியுறுத்தினார். அதில் கண்டிப்பாகவும் செயல்பட்டார். சிறந்த சபை ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அருட்பொழிவு கொடுத்து அவர்களை உள்நாட்டு ஆயர்களாகவும் உயர்த்தினார். இவ்விதமான அருட்பொழிவு, அவர்களுக்குத் தங்களது ஊழியத்தினைக் குறித்த உயர்ந்த சிந்தனை, உயர்ந்த கடமையுணர்வு மற்றும் உயர்ந்த பொறுப்புணர்வினை ஏற்படுத்தியது. மட்டுமல்ல அவர்களது திறனும் அர்ப்பணிப்பும் அதிகரித்தன. பல தலைவர்கள் சபை ஊழியர்களைக் குறைத்து மதிப்பீடு செய்தாலும், கால்டுவெல் மேலான மதிப்பினை இவர்கள்மேல் கொண்டிருந்தார். காலங்கள் செல்ல, திருச்சபையார், சபை ஊழியர்களை உள்நாட்டு ஆயர்களைத் தாங்க வேண்டும், அவர்களின் சம்பளத்தின் பாதியைக் கொடுத்தாக வேண்டும் என்பதனைக் கற்றுக் கொடுத்தார் கால்டுவெல். மிகச்சிறந்த அளவில் உள்நாட்டு ஆயர்கள் மற்றும் திருச்சபை ஊழியர்கள், இடையன்குடி அருட்பணி மாவட்டத்தில் பணிபுரிந்தனர். திருச்சபையின் வளர்ச்சிக்கு இதுவே ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

## தூய திரித்துவ ஆலயம்

கால்டுவெல்லின் மனதில் இடையன்குடியில் ஒரு பெரிய ஆலயம் கட்டவேண்டும் என்பது நீண்டகால நினைவாக இருந்தது. தனது எண்ணங்களையெல்லாம் மனதிலே வடிவமைத்து கோதிக் கட்டிடக்கலை முறையில் இதனை வடிவமைத்தார். கற்களினால் இவ்வாலயத்தை கட்டத் தீர்மானித்தார். நார்தம்டன்ஷா என்ற இடத்தில் தான் பார்த்துப் பரவசமடைந்த ஆலயத்தின் வரைபடத்தைப் பெற்று இவ்வாலயத்தை அதன் வடிவில் கட்டினார். இவ்வாலயத்தை ஆவிக்குரிய ஆலயம் என்றழைத்தார். மட்டுமல்ல இவ்வாலயம் இடையன்குடி அருட்பணி மாவட்டத்தின் 40 திருச்சபைகளின் தாய் திருச்சபை. எனவே இவ்வாலயம் நேர்த்தியாய் வடிவமைக்கப்பட்டது. இவ்வாலயம் கட்டச் சுமார் ரூ.400/–ம் கொடுக்கப்பட்டது. இப்பணத்தில் அத்திருச்சபையின் ஏழை சபை மக்களால் ரூ.250/–சபை ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைத்து ரூ.200/– மற்ற மக்களால் ரூ.450/–ம் கொடுக்கப்பட்டது. மேலும் இந்தியாவில் வாழும் ஐரோப்பியர்களால் ரூ.550/– வழங்கப்பட்டது. இவை அனைத்தும் இணைந்து ரூ.100/– ஆகும். மீதமுள்ள தொகை கால்டுவெல்லின் கடினமான முயற்சியால்

பெறப்பட்டவை ஆகும். 1200 பேர் இவ்வாலயத்தில் அமர்ந்து ஆண்டவரைத் தொழுதுகொள்ள இயலும். இவ்வாலயத்தின் சன்னல், கதவுகள் போன்ற மரவேலைப்பாடுகள் அனைத்தும் களிமண்ணினால் கால்டுவெல் வடிவமைத்து கொடுத்த மாதிரிகளைக் கொண்டு அங்குள்ள கட்டிடக் கலைஞர்கள் மற்றும் தச்சர்கள் செய்து முடித்தனர். மேலும் இவ்வாலயத்தின் மற்றமொரு சிறப்பம்சம் என்னவெனில் இவ்வாலயத்தில் நான்கு மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவைகளைக் கொண்டு பாடல்களுக்கான இசையினை இனிமையாக மீட்ட இயலும்.

இன்றும் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**பள்ளிகள் சீரமைப்பு பணி**

கால்டுவெல் மந்த நிலையில் இயங்கிக் கொண்டிருந்த அனைத்துப் பள்ளிகளையும் சீரமைத்தார். பெண் குழந்தைகளுக்கென்று புதிய பள்ளியைத் திறந்தார். கீழ் சாதியினர் என அழைக்கப்பட்ட மக்களின் குழந்தைகளுக்குக் கல்வி அவசியமா! எனப் பலர் முகம் சுளித்தனர். இடையன்குடிக்கு வந்திருந்த ஒரு சார்பதிவாளர், கால்டுவெல்லைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார். இந்தப் பையன்களைப் படிக்க வைக்கிறீர்களே பனைமரம் ஏற இந்தக் கல்வி பயன்படுமா? இந்தப் பெண் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கிறீர்களே, பஞ்சு நூல் சுற்றி எடுக்க இது பயன்படுமா? எனக் கிண்டல் அடித்தார். பிள்ளைகளின் பெற்றோர்களும் கல்வியைக் காட்டிலும் தொழிலுக்கு முக்கியம் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி வைக்க தயங்கினர். கால்டுவெல்லோ, பிள்ளைகளுக்குப் பொரிகடலையும் வெல்லமும் தினமும் பள்ளிக்கு வரும் பிள்ளைகளுக்கு கொடுத்து ஊக்கப்படுத்தினார். நாளடைவில் பிள்ளைகளின் எண்ணிக்கை உயர்ந்தது. கால்டுவெல் பொறுப்பேற்ற பின்பு 49 ஆக இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 135 ஆக உயர்ந்தது. 1844 ஆம் ஆண்டு 508ஆக உயர்ந்தது. இதில் 162 பேர் பெண் குழந்தைகள்.

கால்டுவெல் கல்விக்கெனக் கடினமான முயற்சிகள் மேற்கொண்டார். தரம் வாய்ந்த கல்வி வழங்கவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார். பாடத்திட்டங்களை வகுத்தல், ஆசிரியர்களைத் தயார்படுத்துதல், புதிய போதனா முறைகளை அறிமுகப்படுத்துதல் எனக் கால்டுவெல் சாதுரியமாகச் செயல்பட்டார். கிராமப் பள்ளிகளில் தாய்

மொழியில் போதுமான கல்வி பெறவேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு, வாசித்தல், எழுதுதல், மனக்கணக்கு போன்ற பாடங்களைக் கற்றுக் கொடுத்தார். திருமறைக் கல்வி, புவியியல் மற்றும் தமிழ்ச் செய்யுள் ஆகியனவும் கால்டுவெல்லின் பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்பட்டன. எழுத்துக்கள் தரையில் மணலில் எழுதப்பட்டு கற்றுக்கொடுக்கப்பட்டன. ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்தி சிறப்பாகக் கற்றுக்கொடுத்து தேர்ச்சி அடையச் செய்தல் வேண்டும். மாதம் ஒருமுறை தேர்வு நடத்தப்படும். மாணவன் ஒருவன் தேர்வில் தோல்வியுற்றால் அவன் தேர்ச்சி பெறும்வரை ஆசிரியர் 1 அணா நாணயம் அபராதமாக மாதந்தோறும் கட்டவேண்டும்.

ஆசிரியர்களுக்கு வாரம் ஒருமுறை சிறப்பு கூட்டங்கள் நடத்தி அவர்களைத் தகுதிப்படுத்தினார். 1860 ஆண்டில் கால்டுவெல்லின் கீழ் 27 தொடக்கப்பள்ளிகள் செயல்பட்டு வந்தன.

### ஆங்கிலமும் தமிழும் இணைந்த பள்ளிகள்

1858ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள SPG நிர்வாகத்தினர் ஆங்கிலம் இணைந்த பள்ளியை அரசு நிதி உதவியுடன் துவக்கினர். சென்னைப் பேராயர் பிரடரிக் ஜெல் அவர்களின் கட்டளைப்படி கால்டுவெல் இத்தகைய பள்ளிகளை தொடங்கினார். குறிப்பாக இந்தப்பள்ளிகள் உயர் சாதியினர் என தங்களை அழைத்துக் கொண்டவர்களை மையப்படுத்தி தொடங்கப்பட்டன. எனவே இந்தப்பள்ளிகள் தருவை, இராதாபுரம், சமூகரெங்கபுரம், குலசேகரப்பட்டினம், தென்திருப்பேரை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் கால்டுவெல்லால் தொடங்கப்பட்டன. பிராமணர்கள் இதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

### தங்கியிருந்து படிக்கும் பள்ளிகள்

சுற்றுப்புறக் கிராமங்களில் வசிக்கும் பிள்ளைகளின் கல்வியைக் கருத்தில் கொண்டு இந்தப்பள்ளிகள் நடத்தப்பட்டன. இடையன்குடி அருட்பணி மாவட்டத்தின் தலைமையகம் என்பதினால் அங்கு மாணவர்களுக்கென்றும் மாணவிகளுக்கென்றும் தனித்தனியே நடத்தப்பட்டன. மேலும் கிறிஸ்தியாநகரம் (உடன்குடி), நாகலாபுரம், புதியம்புத்தூர், கூடன்குளம் மற்றும் குட்டம் ஆகிய இடங்களிலும்

இத்தகைய பள்ளிகள் தொடங்கப்பட்டன.

இது தவிர 1859ஆம் ஆண்டு கால்டுவெல் மாணவர்களுக்கென்று ஒரு பள்ளியைத் தொடங்கினார். சாயர்புரம் இறையியல் கல்லூரியின் போதனா முறையின் அடிப்படையில் பாடங்கள் நடத்தப்பட்டன. இப்பள்ளியில் படிப்பை முடித்தவர்களை கால்டுவெல் சாயர்புரத்திற்கு சபை ஊழியம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக்காக அனுப்பி வைத்தார்.

## சாதீயமும் கால்டுவெல்லும்

சாதீயம் இந்திய மண்ணில் புதைந்து கிடக்கும் விஷ விதை. எத்தனை கால்டுவெல்கள் வந்தாலும் அதை அழிக்க முடியாது என்பதுதான் மிகவும் வேதனையான உண்மை.

தாழ்த்தப்பட்டவர்கள் என அழைக்கப்பட்ட சாணார் இன மக்களைக் கிறித்தவர்களாக்கி, மூட நம்பிக்கையை அவர்களிடமிருந்து அகற்ற முடிந்தது. நாகரிகம் மற்றும் சிறந்த கலாச்சாரப் பண்புகளைக் கற்றுக்கொடுக்க முடிந்தது. கல்வியையும் அவர்களுக்குச் சிறப்பாக வழங்க முடிந்தது. ஆனால் சாதீய உணர்வை மட்டும் அவர்களிடமிருந்து எடுத்துப்போட இயலவில்லை.

சாதீய உணர்வை விட்டொழிக்க கால்டுவெல் அதிகமாய் கற்றுக்கொடுத்தார். பல்வேறு ஜெபக்கூட்டங்களில் அனைவரும் சேர்ந்து உணவு உண்ணுதல் என்பதை கட்டாயப்படுத்தினார். குறிப்பாகச் சபை ஊழியர் கூட்டங்களில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் இருந்தபடியால் அவர்களை ஒன்றாக அமரச் செய்து தாழ்ந்த சாதியினர் என அழைக்கப்பட்டவர்கள் தயாரித்த உணவை உண்ணக் கட்டாயப்படுத்தினார்.

இருப்பினும் சாதீய உணர்வினைக் கட்டுப்படுத்த இயலவில்லை. எனவே, அருட்பணியகத்தில் பணிபுரிபவர்கள் சாதீய உணர்வோடு செயல்பட்டால் அவர்களைப் பணியிலிருந்து முழுமையாய் நீக்கும்படி உத்தரவிட்டார். கடைசியாகக் கலப்புத் திருமணத்தையும் ஊக்கப்படுத்தினார். இருப்பினும் சாதி ஒழிந்தபாடில்லை.

காலங்கள் செல்ல, சாணார் இன மக்கள் மத்தியில், கிறிஸ்தவர் மற்றும் இந்துக்களிடையே பெரிதான வேறுபாடுகள் இல்லை. இரு

குழுவினருக்குள்ளும் கலாச்சார வேறுபாடுகள் இல்லை. உறவுகளில் விரிசல் இல்லை. எனவே, திருமணங்கள் இரு குழுவினருக்குள்ளும் சாதீய அடிப்படையில் நடைபெற்று வந்தன. கிறித்தவராக மதம் மாற தயார். ஆனால், சாதீய உணர்வை விட்டுக்கொடுக்க முன்வரவில்லை.

கால்டுவெல்லுக்கே விரோதமாகச் செல்லும் போக்கு அதிகரித்தது. இந்நிகழ்வுகள் கால்டுவெல்லுக்கு அதிகமான மன வருத்தத்தையும் மன உளைச்சலையும் கொடுத்தன.

### பேராயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட கால்டுவெல்

சென்னையில் 1838ல் கால் பதித்து, 1841ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடையன்குடியில் அருட்பணி பொறுப்பேற்று 36 ஆண்டுகளாக அருட்பணி ஆயராக பணியாற்றிய கால்டுவெல் 11ஆம் தேதி மார்ச் 1877 அன்று கொல்கத்தாவில் உள்ள தூய பவுல் கத்தீட்ரலில் பேராயராக திருநிலைப்படுத்தப்பட்டார். இருப்பினும் அவர் தனது பணியினை இடையன்குடியில் தங்கியிருந்தே செய்தார்.

பேராயர் பொறுப்பினை ஏற்ற பின்னும் தனது அருட்பணியினைத் தொடர்ந்தார். 1876ஆம் ஆண்டில் உயர் சாதியினர் என அழைக்கப்பட்டவர்களிடம் நற்செய்திப் பணியினைத் தொடர்ந்தார். ஆழ்வார்திருநகரி, குலசேகரப்பட்டணம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களுக்கு தனது குழுவினரோடு சென்றார். அங்கு கூடாரம் அமைத்து அங்குள்ள திருச்சபை போதகரை அழைத்து அவர்கள் ஒத்துழைப்புடன் கூட்டங்களை நடத்தினார். காலை வேலைகளில் பள்ளிக்குச் சென்று கிறித்தவரல்லாத பிள்ளைகளுக்கு செய்தி அளித்துவந்தார். இரவு நேரத்தில் கீதப்பிரசங்கம் மூலமாக செய்தியளிப்பது வழக்கம். இல்லையேல் வேத புராண சாத்திரங்களைக் குறித்த தெளிவான அறிவோடு சொற்பொழிவாற்றினார். இந்துக்கள் பலர் இவரது அறிவுக் கூர்மையைக் கேட்டு வியந்திருக்கிறார்கள்.

### கொடிய பஞ்சம்

ஜூலை 1877 முதல் ஜூன் 1878 ஆகிய ஓராண்டில் தென்னிந்தியா முழுவதும் மிகக் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. குறிப்பாக திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டன. CMS மற்றும் SPG அருட்பணியகங்கள்

இக்காலங்களில் மீட்புப் பணியில் முழுமையாக தங்களை ஈடுபடுத்தினர். கால்டுவெல் இச்சூழலில் இங்கிலாந்து மற்றும் சென்னைப் பேராயக் கமிட்டி மற்றும் பல்வேறு இடங்களை அணுகி உதவி கேட்டார். யாவரும் மிகவும் தாராளமாய் பணம் கொடுத்து உதவினர். சுமார் ரூ.18,000 சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட 96,600 பேருக்கு வழங்கிடவும், அனாதைகளாக்கப்பட்ட 100 பேருக்கு 8 ஆண்டுகள் உதவிகள் செய்திடவும் பயன்படுத்தப்பட்டது. கால்டுவெல் மேலும் ரூ.9,435 சேகரித்து, புதிதாகத் திருச்சபையில் இணைந்த 23,000 பேருக்கு உதவிட பயன்படுத்தினார்.

இக்காலங்களில் திருச்சபை துன்பத்திலிருந்து மக்களுக்கு செய்த உதவியைக் கண்டு 21,786 பேர் மனமாற்றம் பெற்று கிறிஸ்தவர்களாக மாறினர். ஆனால் பஞ்சத்திற்குப் பின்பு பலர் மீண்டும் தங்கள் பழைய மதத்திற்கு திரும்பினார்கள். இதற்கிடையில் பலர் திருச்சபை செய்த உதவிகள் மனமாற்றம் அடைந்த திரள் கூட்ட மக்கள் குறித்துக் குறை நோக்கோடு கருத்துத் தெரிவிக்க ஆரம்பித்தனர். குறிப்பாகக் கால்டுவெல் மேலும் இக்குற்றம் சாட்டப்பட்டது. பணத்திற்காக, உணவிற்காக மதம் மாறியிருக்கலாம். சொந்த மதத்தில் கிடைக்காத பாதுகாப்பு கிறிஸ்தவத்தில் அவர்களுக்குக் கிடைத்தது உண்மை. காலப்போக்கில் அவர்கள் கிறித்தவத்தின் முழுமைத்தன்மையைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது நிச்சயம் எனக் கால்டுவெல் அவர்களுக்குப் பதிலளித்தார்.

## புதிய தலைமையகம்

SPG அருட்பணியகத்தின் மெட்ரோபாலிட்டன் பிஷப் ஜான்சன் அவர்களின் அறிவுரையின்படி பேராயர் கால்டுவெல் தனது தலைமையகத்தை 1882 ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடிக்கு மாற்றினார். 40 ஆண்டுகள் இடையன்குடியில் தங்கிப் பணியாற்றி தான் உருவாக்கிய கிராமத்தை விட்டுச்செல்ல மன விருப்பம் இல்லை என்றாலும் மேலிடத்தின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து புதிய இடத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## கால்டுவெல் கல்லூரி

1883 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் கால்டுவெல் தனது பெயரில் கல்லூரியைத் தொடங்கினார். இதற்காக ரூ.20,000 செலவில் இடம் ஒன்றினை வாங்க ரூ.200 செலவில் அதை சீர் செய்து மேலும் பல்வேறு காரியங்களை நிறைவேற்றினார். SPG அருட்பணியகத்தில் ரூ.1200 கடன் வாங்கி மிகவும் அரும்பாடுபட்டு கல்லூரியை உருவாக்கினார். இக்கல்லூரி தொடங்கப்பட்டது முதல் பல்வேறுவிதமான பிரச்சனைகள் ஏற்பட்டன. மேலும் இவரை முதுமை அதிகமாய் பலவீனப்படுத்தியது. மேலும் CMS ல் அருட்பணியகத்தின் பேராயர் எட்வர்ட் சார்ஜன் 1889 ஆம் ஆண்டு மறைந்ததை ஒட்டி அவரது பணிகளும் இவருக்குக் கூடுதலாக வழங்கப்பட்டன. தனது உடல் சுகவீனத்தின் நிமித்தம் ஜனவரி 31, 1891 ஆம் ஆண்டு பேராயர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார்.

கொடைக்கானலுக்குச் சென்று அங்கே ஓய்வு காலங்களைக் கழித்த அவர் சுகவீனமாகி, ஆகஸ்ட் 28, 1891 அன்று நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

அவரது உடல் அவரது விருப்பத்தின்படியே அவர் நேசிக்கும் இடையன்குடி மண்ணிற்கே கொண்டுவரப்பட்டு அவர் மிகவும் பிரியமாய்க் கட்டிய தூய திரித்துவ ஆலயத்தின் ஆல்டரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## துணை நின்ற நூல்கள்

Kumaradoss Vicent. Y. Rober Coldwell : A.scholar - Missionary in Colonial South India, Delhi I.S.P.C.K. 2008

Muthuraj Joseph, G.We Began at Tranquebar, Vol I The origin and Development of Anglican - CSI Episcopaly in India (1813 - 1947) Delhi. I.S.P.C.K. 2010.

VCD MAHAAN. The Life story of Bishop Cardwell Released by the Holy Trinity Church. Idayankudi.

............

## 8. கால்டுவெல்லின் சமுதாயக் கனவு

ஹேனா ஜேக்கின்

கீழ் நெல்லை அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்ட பேராயர் கால்டுவெல் அவர்கள் (கீர்த்திபெற்ற 100 கிறிஸ்தவர்கள் – பக்கம் 109) சிறந்த தொல்லியல் ஆய்வாளர், சிறந்த வரலாற்று ஆசிரியர், மொழி ஆராய்ச்சியாளர். ஆக இவர் சகலகலா வல்லவர். இத்தனை சிறப்புமிக்க இவர் வாழ்ந்த வாழ்க்கையோ மிகவும் எளிமையானது. தம்முடைய ஆன்மபலம், மக்கள் மீது அவருக்கு இருந்த கரிசனம், ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள்பால் அவர் காட்டிய கனிவான அணுகுமுறை, தியாகம் ஆகியவற்றால் ஆயிரக்கணக்கானவர்களை ஆண்டவர்பால் ஈர்த்தார். எனவே மிகச் சொற்பமாக இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை, இவரது காலத்தில் ஒரு லட்சமாக உயர்ந்தது.

நம்முடைய ஆண்டவர் இவ்வுலகத்தில் இருந்தபொழுது எப்படி கிராமங்கள்தோரும் நன்மைகள் செய்து சுற்றித்திரிந்தாரோ, அவ்வாறே கால்டு வெல்லும் காலை முதல், மாலை வரை மண் மேடுகளும், பள்ளங்களும் நிறைந்த ஊர்கள்தோரும் சுற்றித்திரிந்து தொண்டாற்றித் தாம் கர்த்தரின் உண்மையான சீடன் என நிரூபித்தார். இரவு நேரத்தில் அவர் ஊர் திரும்பும் போது அவருக்கு வழிகாட்டியாக இருந்தவை, ஆலயமணி ஓசையும் ஊர் மக்கள் ஏற்றிவைத்த தீப்பந்தங்களுமே. அரை நூற்றாண்டுக்கு மேல் இந்தியாவில் வாழ்ந்த கால்டுவெல் மூன்று முறை மட்டுமே தம் தாய்நாட்டுக்குச் சென்றார்.

### இடையன்குடி சமூகச் சூழல் :

இறைப்பணி செய்வதற்காக கால்டுவெல் இடையன் குடிக்கு வந்தபொழுது, அக்கிராமம், பனைமரக்காடுகளால் சூழப்பட்டிருந்தது. தெருக்கள் ஒழுங்கற்றும் வறுமை, சுகாதாரமின்மை, கல்லாமை சாதிச்சச்சரவுகள், சாதிக் கொடுமைகள், மூடப்பழக்கவழக்கங்கள் என ஒட்டு மொத்த சமூகமே தறிகெட்டுக் கிடந்தது.

மக்களின் இந்நிலையைக் கண்டு கால்டுவெல் வேதனை அடைந்தார். அக்காலத்தில் இடையன் குடிமக்கள் "குட்டம்" நிலக்கிழார்களுக்கு குடியிருப்புவரி கட்டி வந்தனர். அதோடு அவர்கள் குடும்பங்களில் நடக்கும் மங்கல மற்றும் அமங்கல நிகழ்வுகளுக்கும்

கூட கல்யாண வரி, "பூப்பு வரி" என்ற வரிகளையும் செலுத்தினர். வரி செலுத்த இயலாதவர்கள் ஊர் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது எனக் கொடுமைபடுத்தப்பட்டனர். இத்தருணத்தில் ஏற்றத்தாழ்வுகள், சாதி வேறுபாடுகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதே தம் கனவு என்பதை மனதில் உறுதி செய்து கொண்டு, பின் அயராது பாடுபட்டார் பேராயர் கால்டுவெல்.

**வல்லான் வகுத்த சட்டமும் கால்டுவெல்லின் துணிவும் :**

முதலாவதாக குட்டம் நிலக்கிழார்களிடமிருந்து இடையன் குடியை 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து, குத்தகைப்பணம் முழுவதையும் மொத்தமாகச் செலுத்தினார். மேலும், குத்தகைப்பணம் முழுவதும் செலுத்தப்பட்டுவிட்டதால் மக்கள் எந்த வரியையும் கட்டத் தேவையில்லை என்று திட்டவட்டமாகக் கூறினார். ஆனால் நிலக்கிழார்களோ, குடியிருப்பு வரியை கட்டத் தேவையில்லை. ஆனால் கலியாணவரி, "பூப்வரி" ஆகியவற்றை கட்டித்தான் ஆகவேண்டும் என வாதிட்டனர்.

மேலும் மக்கள் கிணற்றில் நீர் எடுப்பதை தடை செய்ய, கிணற்றைச் சுற்றிலும் உடைமரத்து முட்களை மிகுதியாய் குவித்தனர். கால்டுவெல்லோ புதிய கிணறு ஒன்றை வெட்டி மக்கள் தண்ணீர் எடுக்க வழிசெய்தார். அதுவரை மக்களை சுரண்டிப்பிழைத்த நிலக்கிழார்கள் ஆத்திரமடைந்தனர். கால்டுவெல்லின் ஊழியப்பணிகளுக்கு இடையூறு விளைவித்தனர். அவரால் குட்டத்தில் கட்டப்பட்ட சிற்றாலயத்தை இடித்துத் தள்ளினர்.

ஆனால் கால்டுவெல்லோ சோதனைகளை சாதனைகளாக்க உறுதி பூண்டார். வீடுகளை வரிசையாக அமைக்கச் செய்தார். சுகாதாரத்தை மேம்படுத்தினார். சாலையோரங்களில் நிழல் தரும் மரங்களை நட்டார். தம் வீட்டுக்குமுன் "புட்டாமரம்" என்னும் அபூர்வ மரத்தை நட்டார். மேலும் தங்கள் வீட்டிற்கு முன் இருக்கும் பொது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தோடு வேலி அமைத்தவர்களை உடனே எச்சரித்தார். நேர்த்தியான ஆலயம் கட்டினார். அதில், ஆங்கில இசைக் குறியீடுகளுக்கு ஏற்ப ஒலி எழுப்பும் மணியையும் பொருத்தினார். அது மட்டுமா? ஆதிக்கவர்க்கத்தின் அடக்குமுறை, மற்றும் சாதியின்

பெயரால் அரங்கேற்றப்படும் அவலங்கள் ஆகியவற்றை வெற்றிகொள்ள எளியவருக்கு உகந்த வழி கல்வியே என்பதை நன்குணர்ந்த கால்டுவெல், கல்விச்சாலைகளை அமைத்து, அதில் தரமான கல்வியை தாழ்த்தப்பட்டவர்கள் பெறும்படி வழி செய்தார். மேலும் பாடத்திட்டங்களைத் தாமே வடிவமைத்தார். சமுதாயத்தால் ஓரங்கட்டப்பட்டவர்களின் முன்னேற்றத்தை முடக்குவதில் மூடநம்பிக்கைகளுக்கும் பங்கு இருப்பதால், அந்நம்பிக்கைகள் அபத்தம் என்பதை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

## சாதி எனும் தீ

கி.பி.16 முதல் 19ம் நூற்றாண்டு வரை இருந்த காலம் இந்து மதத்தின் 'இருண்டகாலம்' எனக்கருதலாம் எனவும், அச்சமயத்தில் தான் சாதி அமைப்பு வன்கடுமையாய் இருந்ததாகவும் தீண்டாமை மிகப்பரவலாக இருந்ததாகவும் (அ ஹிஸ்டாரிகல் ஓவர் வியு ஆப்த இன்டியன் ரிலிஜன்ஸ்) என்ற புத்தகத்தில் பேராசிரியர் மனாசே என்பர் தெரிவித்திருக்கிறார்.

அந்த வகையில் பள்ளர், பறையர் ஆகிய தாழ்த்தப்பட்ட, தற்காலத்தில் தலித் இன மக்கள் எனச் சொல்லப்படுபவர்கள் சொல்லொண்ணா கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். இவர்கள் இன்ன உணவுகளைத்தான் உண்ணவேண்டும். பொன் அணிகலன்கள் அணியக்கூடாது, வெண்கலம் மற்றும் செம்பாலான பாத்திரங்களை பயன்படுத்தக் கூடாது, மண் பாண்டங்களையே பயன்படுத்த வேண்டும், மேல் சாதியாரைத் தொடக்கூடாது, பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மேலும் தாழ்த்தப்பட்டவர்களுடைய கிணற்றை மற்றவர்கள் அடையாளம் காண வேண்டும் என்பதற்காக அக்கிணற்றை சுற்றிலும் எலும்புகளைப் போடவைத்தனர்.

இதையும் தாண்டி, ஒரு காலகட்டத்தில் பள்ளர், பறையர், வலையர் முதலியவர்கள் அடிமைகளாக விற்கப்பட்டதாகவும், அஃறிணைப் பொருளாகக் கருதப்பட்டனர் என்ற செய்தி (கான்ட்ரி பியூஷன் ஆப் தமிழ் கல்சர் டு தி டிவென்டிஃபர்ஸ்ட் செஞ்சரி என்ற நூல்–பக்கம் 415ல்) பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக உள்ள செப்பேட்டு குறிப்பு கீழ்வருமாறு :

நஞ்சை புஞ்சை ஏந்தல் குட்டம் மாவடை பட்டம் படுகை
திட்டு திடல் மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறு நீரும்
பாசியும் குடி பள்ளும் பறை இது முதலாகிய

(சேதுபதி செப்பேடுகள் 1992 : 165)

இவ்வாறு ஆண்டாண்டு காலம் இந்து சமயத்தால் சஞ்சலத்தையே அனுபவித்த தாழ்த்தப்பட்டவர்கள் கிறிஸ்துவர்களாக மாறினார். தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலானவர்கள் விழாக்கள், திருமணம், மரண ஊர்வலம் போன்ற நிகழ்வுகளிலும், மேலும் அரசாங்க மற்றும் வணிகம் சார்ந்த அறிவிப்புகளை மக்களுக்குத் தெரியப்படுத்தும் போதும் முரசடிப்பவர்களாக (பறை அடிப்பவர்களாக) இருந்ததால் கால்டுவெல் அவர்களை பறையர் என அழைத்தார். சோனெட் என்பவர் எழுதிய (வாயேஜ் டு ஈஸ்ட் இன்டீஸ், 1774 ஆண்டு 1781) என்ற புத்தகத்தில் பறையர்கள் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்ததாக எழுதியுள்ளார். எம்.ஜே.வால்ஹவுஸ் என்பவர், தஞ்சாவூரில் நடக்கும் திருவிழாவில் பறையரின் தலைவன் யானைமீது உட்காரவைக்கப்படுவது அன்றைய வழக்கம் என்று கூறியுள்ளார். இதைப்போல, சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் "ஏகாத்தா" எனும் பெண் தெய்வத்திற்கு விழா எடுக்கும்போது, அச்சிலைக்கு தாலி கட்டும் சடங்கை செய்தவற்கு பறையர் இனத்தை சேர்ந்தவரையே தேர்ந்தெடுப்பார்களாம். (காஸ்ட்ஸ் அண்டு டிரைப்ஸ் ஆப் சதர்ன் இன்டியா–பாகம் 6–எட்கார் தர்ஸ்டன், கே.ரங்காச்சாரி). மேலும் மற்ற சமூகத்தினரைக் காட்டிலும், பறையர்களுக்கு நிலத்தை குறித்த அறிவும் தொடர்பும் அதிகம் இருந்ததால், அவர்கள் நில அளவை செய்யும் அதிகாரிகளுக்கும் பேருதவியாய் இருந்திருக்கிறார்கள். இச்சமூகத்தினர் வள்ளுவன் என்றழைக்கப்பட்ட பூசாரிகளாகவும், சிலர் நெசவாளர்களாகவும் தொழில் புரிந்துவந்தனர்.

இதே நூலில், தொன்மை வாய்ந்த சிறப்புமிக்க இந்த இனம் தங்கள் நிலத்தை இழந்து, இனச்சிதைவு அடைய ஆரம்பித்தது. வெள்ளாளர் இன மக்கள் தொண்டை மண்டலத்தில் குடியேறிய காலத்திற்கு பின் இருக்கக்கூடும் எனக் கூறப்பட்டுள்ளது. வெள்ளாளன் என்பது வெள்ளம் (தண்ணீர்+மேலாண்மை) என்பதாகும். இவர்கள் பெரிய உழவர் சமூகத்தினர்.

கிறிஸ்துவர்களாக மாறிய பின்பும் தாழ்த்தப்பட்டவர்கள் தொடர்ந்து சாதிக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். பிற இனக் கிறிஸ்துவர்களால் தாழ்த்தப்பட்டவர்கள் ஒடுக்கப்படுவதைக் கண்டு கால்டுவெல், ஏற்றத் தாழ்வு அற்ற சாதி வேறுபாடுகள் அற்ற சமூகம் அமைப்பது என்ற தம்முடைய கனவு மெய்ப்படாதோ என்று ஆதங்கப்பட்டதுடன் ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாய் இருந்தார்.

இது இப்படி இருக்க, பார்ப்பனர் சமூகத்தின் உச்சியில் இருப்பதைப் போலவே தாங்களும் இருக்க வேண்டும் என எண்ணிய சிலர் தங்கள் சாதிகளைத் தோற்றரவுத் (அவதாரம்) தொல்கதைகளோடு இணைத்துக் கொண்டும், பார்ப்பனரைப்போலவே பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டனர். அந்த வகையில் "சாணார்" (சாறு–கள்) இறக்குபவர்கள், "நாடார்" என்று மாற்றிக் கொண்டு தங்கள் சாதிகளை உயர்த்திக் கொண்டனர். சாணார்கள் தாங்கள் சத்ரிய குலத்தவர் என்றும், பாண்டிய மன்னர்களின் பரம்பரையாகிய அரசகுலத்தை சேர்ந்தவர் என்றும் உரிமை கோரி வாதாடினர். (1898 கமுதி ஆலய வழக்கில்) சென்னை உயர்நீதிமன்றம் சாணார்கள் சத்ரிய குலத்தையோ அல்லது சேர, சோழ பாண்டிய மன்னர்களின் வழிவந்தவர் என்பதற்கான ஆதாரமோ சாத்தியக் கூறுகளோ இல்லை என்று உத்தரவிட்டது. மேலும், "சாணார்" "நாடார்" என்ற சொற்களுக்கிடையே குறிப்பிடத்தக்க எந்த வேறுபாடும் இல்லை எனவும், நாடார் என்ற சொல் வெறும் பட்டப்பெயரே என அறிவுறுத்தியதாக (காஸ்ட்ஸ் அண்டு ரைப்ஸ் ஆப் சதர்ன் இண்டியா) என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

வடக்கன் குளம் கத்தோலிக்க தேவாலயம் தொடர்பாக வெள்ளாளர் தொடுத்த வழக்கு எண்.62/1910

இவ்வழக்கு தொடர்பாக ஜார்ஜ் பிள்ளை என்பவர் தாக்கல் செய்த தன்னிலை விளக்கம் :

"..... இந்த ஆலயத்தின் தெற்குப் பகுதியில் உயர் குலத்தவராகிய பிள்ளைமார் மற்றும் முதலியார்கள் மட்டுமே அமர்வார்கள். வடக்குப் பகுதியில் சாணார் மற்றும் இதர கீழ்சாதி மக்கள் அமர்வார்கள்..."

இதே வழக்கில் மிராசு மைக்கேல் பிள்ளை அளித்த விளக்கம் :

"..... இந்த ஆலயத்தின் சாவி பிள்ளைமார் உபதேசியாரிடம் இருக்கும். நாடார்கள் பீடத்திற்கு போகமுடியாது. பிள்ளைமார் மட்டுமே ஆயருக்கு உதவியாக இருக்க முடியும்....."

<u>சூசை மரியான் பிள்ளையின் விளக்கம் :</u>

".... பிள்ளைமார்கள் ஆலயத்தின் முன்பகுதியில் உட்கார்ந்திருந்தனர். நாடார்கள் அவர்களுக்குப் பின்னால், கீழ்மட்டத்தில் உட்கார்ந்திருந்தனர்..... திரு முழுக்குத் தொட்டி இருவருக்கும் பொதுவானது. அது வடக்கில் அமைந்துள்ளது. ஏனெனில் நாடார்கள் தென்பகுதிக்கு வரமுடியாது....."

(கிறித்துவமும் சாதியும் – ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிய புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. பக்கங்கள் 166–169 வரை).

இவ்விளக்கங்களிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன?

1. ஆதிக்க சமூகத்தினர் மதம் மாறினார்களே தவிர அவர்கள் மனம் (ரோமர் 12:3ன் படி), மறுரூபமடையவில்லை.

2. சாணார் என்கிற நாடார்களும் தீட்டானவர்களாய் கருதப்பட்டனர்.

இவ்வாறு தாங்கள் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்ட பறையர்களைப் போலவே, தீண்டத்தகாதவர்களாய் கருதப்பட்ட சாணார்கள். பறையர்களைத் தீண்டத்தகாதவர்களாகக்கருதி, ஓரங்கட்டினர். தாங்கள் உற்பத்தி செய்யும் கள்ளை ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்கு கொண்டு செல்லப் பறையர்களைப் பயன்படுத்தினர்.

கால்டுவெல்லின் அருட்பணியின் மூலம் கிறிஸ்தவர்களாய் மாறிய சாணார்கள், கள் இறக்கும் தொழிலைக் கைவிட்டு பனைவெல்லம் தயாரித்தனர். கால்டுவெல் மூலம் பெற்றக் கல்வியால் அரசாங்கப் பணியாளர்கள், ஆசிரியர், ஆயர் போன்ற வேலைகளையும் பெற்றனர். சாணார்கள் தங்கள் மதத்தை மாற்றிக் கொண்டார்களே தவிர தங்கள் சாதி வைராக்கியத்தை விட்டுக் கொடுக்கவில்லை. ஆனால் கால்டுவெல்லோ சாதி என்பது கிறிஸ்தவத்துக்கு விரோதமானது என்று உறுதியாகக் கூறினார். சாதிப்பாகுபாடு எந்த உருவில் வந்தாலும் அதை

ஒழிப்பதே தன் கனவு எனத் தீர்மானித்து அதற்கு எதிராக பல்முனை தாக்குதலை நடத்தினார். மேலும் இப்பிரச்சனை மூடநம்பிக்கையைவிட மிக மோசமானது எனத் தெரிவித்தார். மேலும் சாணார்கள் மத்தியில் காணப்பட்ட கடுமையான சாதி உணர்வைப்பற்றிக் குறிப்பிடுகையில்.... இந்த விஷயத்தில், அவர்களுடைய போக்கிலேயே அவர்களை விட்டுவிடுவதென்பது, காலப்போக்கில் நமக்கு எதிராகக் திரும்பக் கூடிய ஒரு பெரிய பாம்பை ஊட்டி வளர்ப்பது போலாகும் என்று கூறியுள்ளார். (ராபர்ட் கால்டுவெல்–எ ஸ்காலர் – மிஷினெரி இன் கலோனியல் சவுத் இந்தியா–ஒய். வின்செண்ட் குமாராஸ்).

ஏற்றத்தாழ்வற்ற சமூதாயம் எனும் தம் கனவை நனவாக்க எதிர்ப்புகளின் மத்தியிலும் அயராது பாடுபட்டார். பள்ளிக் குழந்தைகள் மத்தியில் சாதி வேறுபாடு காணப்படக் கூடாது என்பதற்காக உறைவிடப்பள்ளி மாணவர்கள் உண்ணும் உணவை தாழ்த்தப்பட்டவர் சமைக்கும்படி செய்தார். இதன் மூலம் பறையர் சமைத்த உணவு சுத்தமானதே என்ற கருத்தை அவர்கள் உள்ளங்களில் பதியும்படி செய்தார்.

மாணவர்களுக்கு மாதிரிகளாய் இருக்கக்கூடிய ஆசிரியரிடையே சாதிப்பாகுபாடு இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு சமபந்தி விருந்துகளை நடத்தினார்.

திருச்சபையில் நடத்திய சமபந்தி விருந்துகளில் பறையர்களால் சமைக்கப்பட்ட உணவை அனைத்து சமூகத்தினரும் அருந்தும்படி செய்தார்.

கலப்புத் திருமணங்களை ஊக்குவித்தார்.

எனினும் அவருடைய அனைத்து முயற்சிகளும் முற்றிலுமாக வெற்றிபெறவில்லை. சாணார்களுடைய சாதி வைராக்கியம் கால்டுவெல்லின் சீர்திருத்தச் செயல்களை எதிர்த்துக் கொண்டே இருந்தது. இதனால் மனம் கசந்த கால்டுவெல் “.......... இப்பிரச்சனையை நாம் வெற்றிகொள்வதற்கு ஆயிரம் வருடங்கள் ஆகும்” என்றும், மேலும் அந்த யுத்தம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சாணார்களைப் பொருத்தவரையில் சுவிசேஷம் என்பது அவர்களுடைய துயரங்களைப் போக்குவதற்கும், அவர்களுடைய

அவமதிப்பை அழிப்பதற்கும், மற்றும் அவர்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே இருந்து வந்தது. அவர்களுடைய இந்த மனோபாவத்தின் வெளிப்பாடாக, திருச்சபையில் நடக்கும் எந்த ஒரு நிகழ்வும் தங்கள் சாதியின் மதிப்பைக் குறைக்கக் கூடும் என்று உணரும் பட்சத்தில், அந்நிகழ்ச்சிக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அல்லது பின்வாங்கினர்.

சாணார்களின் ஆதிக்கப் போக்கின் உச்சகட்டமாக, தங்கள் ஏற்றத்திற்கு ஏணியாய் இருந்த கால்டுவெல்லையே உதறித்தள்ளினர். எப்படி எனில், சாணார் சமூகத்தின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் ஆகியவற்றைக்குறித்த உண்மையான தகவல்களை வெளியிட்டதால், உயர் குலத்தவராகிய தம்மை அவர் இழிவு படுத்திவிட்டார் என்று குற்றம் சாட்டி, அவரைப் பற்றி காண்ட்ர் பெரி. பேராயரிடம் புகார் செய்தனர். ஆனால் அவரோ இம்மனுக்களை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

கால்டுவெல்லின் கடின உழைப்பினால் மிகப்பெரிய அளவில் பயனடைந்த சாணார்கள், தமிழகத்தில் எங்கெல்லாம் ஆலயங்கள் உருவாக்கப்பட்டனவோ அங்கெல்லாம் சென்று ஆலயத்தின் முக்கியப் பொறுப்புகளைக் கைப்பற்றிக் கொண்டனர். திருச்சபையிலும் மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்களிலும் முக்கியப் பொறுப்புகளை "திருநல்வேலி நாடார்" என்கிற ஒரே சாதியினரே வகித்துள்ளனர் என்று பேராயர் வெஸ்லி நியுபிகின் கூறியிருக்கிறார். மேலும், திருச்சபையின் அனைத்து முக்கியப் பொறுப்புகளையும் வகுப்பதற்கு இவர்களுக்கு மட்டுமே தகுதி இருப்பதாகவும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் இன்னமும் அத்தகுதியைப் பெறவில்லை என்ற அபிப்பிராயத்தை சமூகத்தில் உருவாக்கிவிட்டதாகவும் கூறியுள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 1871 ஆவணத்தில் சர்ஜன் மேஜர் டபுள்யு ஆர். கோர்நிஷ் என்பவர் இவ்வாறு கூறியுள்ளார். "பறையர்கள் கடுமையான உழைப்பாளிகள் மற்றும் எளிமையானவர்கள் என்றும், அவர்களுடைய சமூக மேம்பாட்டுக்காக அருட்பணியாளர்கள் தங்களை தியாகம் செய்தனர்" என்றும் கூறியுள்ளார். அந்த அருட்பணியாளர் பட்டியலில் நிச்சயம் கால்டு வெல்லுக்கு சிறப்பான இடம் கொடுப்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாப்ப்பில்லை எனக்

கருதுகிறேன். அவர் சென்னையில் இருந்தபொழுது ஏழைப் பறையர்கள் மத்தியில்தான் தம்முடைய ஊழியத்தை துவங்கினார். மேலும் அப்பணி தமக்கு மிகுந்த திருப்தியை அளித்ததாகவும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**திருச்சபையில் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களின் இன்றைய நிலை :**

தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் பிற சாதிக் கிறிஸ்தவர்களுக்குச் சமமாக நடத்தப்படுவதில்லை என்று (சோஷியாலஜி ஆப் இன்டியன் சொசைடி) என்ற நூலில் என் ஷங்கர் ராவ் என்பவர் தெரிவித்துள்ளார். ஆக, சமத்துவத்தை போதிக்கும் கிறிஸ்தவ சபைகளிலும் சாதீயம் புகுந்திருப்பதை யாரும் மறுக்க இயலாது. பல நேரங்களில் இன்றைக்கும் தாழ்தப்பட்ட (தலீத்) மக்கள் வெள்ளாளர், சாணார் என்கிற ஆதிக்க சமூகத்தினரால் புறக்கணிப்படுகின்றனர் என்பது நிதர்சனமான, உரக்கப்பேசப்படாத உண்மை. இதனடிப்படையில் பார்த்தால் கால்டுவெல்லின் கனவு முற்றிலும் மெய்ப்படவில்லை என்று உறுதியாக கூறலாம்.

....................

## 9.கால்டுவெல்லின் நானூறு கல் நடைப்பயணம் (1814-1891)

(ஒரு கற்பனை நிகழ்வு)

ஜே.ரெமி நவரோஜ்

வாங்கய்யா, வாங்க என்று கரம் குவித்து, சிரம் தாழ்த்தி தனது ஆபரணங்களும் தலைப்பாகையும் மின்னிட வரவேற்றார். தஞ்சை வேதநாயகம் சாத்திரியர். அவரது வரவேற்பை புன்னகையுடன் ஏற்று தலையசைத்ததோடு, அவரது கைகளைப் பற்றிக் கொண்டு, கைகுலுக்கினார், இருபத்து நான்கு வயது இளைஞனான கால்டுவெல். எடுப்பான தோற்றத்துடனும், சிவந்த நிறத்துடனும், பூனைக் கண்களுடனும், வியர்வையால் நனைத்திருந்த ஆடையுடனும் வந்து நின்ற அந்த ஸ்காட்லாந்து நாட்டு இளைஞனை மீண்டும் கட்டியணைத்தார் வேதநாயகம் சாத்திரியார்.

"ஐயா, இன்று அரசவைக்குச் செல்லாமல், என்னுடைய வருகைக்காகக் காத்திருந்தமைக்கு எனது பணிவான வணக்கங்கள் என்றவாறே மீண்டும் கைகுலுக்கினார் கால்டுவெல். "தம்பிக்கு சூடாக வெந்நீர் வைத்துக் கொடு. மதராசு பட்டணத்திலிருந்து நமது தஞ்சாவூர் வரைக்கும் நடந்தே வந்திருக்கிறார். நன்றாக அலுப்பு தீரக் குளிக்கட்டும்" என்றவாறே மனைவியை நோக்கினார், சாத்திரியார்.

"தம்பி, முதலில் இந்த மோரைக் குடியுங்கள்" என்று செம்பு ஒன்றை பணிந்து நீட்டினார் சாத்திரியாரின் மனைவியான வரோதயம் அம்மாள். அதை வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, "நன்றி, அம்மா" என்றார் கால்டுவெல்.

"எங்கள் தமிழ்நாட்டிற்கு நற்செய்தி கூற, நீங்கள் அயல் நாட்டிலிருந்து பெற்றோரையும், உற்றாரையும், உங்கள் தேசத்தையும் விட்டுவிட்டு வருகிறீர்கள் என்று கேள்விப்பட்டதும், உங்களைக் காண மிகவும் ஆசையாயிருந்தேன். இப்போது உங்களை நேரில் பார்ப்பது, எனக்கு ஒரு தேவதூதனைப் பார்ப்பது போல இருக்கிறது. உங்களுக்கு என்னென்ன தேவைகள் உண்டோ, அவற்றைத் தயங்காமல் என்னிடம் சொல்லுங்கள். என்னையும், ஐயாவையும் உங்கள் சொந்த பெற்றோராக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு தொண்டு செய்வதை எங்கள் பாக்கியமாகக் கருதுகிறோம்" என்று அன்பொழுக கூறினார் அம்மையார்.

"என்னம்மா, பெரிய பெரிய வார்த்தைகளையெல்லாம் சொல்லுகிறீர்கள். நானோ சின்னப் பையன். தயவுசெய்து மரியாதை கொடுத்து என்னை கூப்பிடாதீர்கள். என்னைக் கால்டுவெல் என்று பேர் சொல்லி உரிமையோடு கூப்பிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டார் கால்டுவெல்.

"சரி, கால்டுவெல்" என்று ஒருமித்த குரலில் இருவரும் அழைத்தனர். சற்று நேர ஓய்விற்குப் பின், வேதநாயகம் சாத்திரியார், கால்டுவெல்லை தனது நண்பரான சரபோஜி மன்னரின் அரசவைக்கு அழைத்துச் சென்றார். மன்னரோடு சிறிதுநேரம் உறவாடியபின், அவரை தஞ்சை பெரிய கோயில் என்றழைக்கப்படும் பிரகதீசுவரர் கோயிலுக்கு அழைத்துச் சென்று, கோயில் முழுவதையும் சுற்றிக் காட்டினார்.

"ஐயா, இவ்வளவு பெரிய, உயரமான, சிற்பங்கள் நிறைந்த கோயிலை இதுவரை நான் பார்த்ததே இல்லை. இந்த தோரண நுழைவு வாயில்கள், வழியிலிருக்கும் நந்தி, கணக்கிலடங்கா சிற்பங்கள் – இவற்றையெல்லாம் பார்க்க பார்க்க ஆச்சரியமாகவும், பிரமிப்பாகவும் இருக்கிறது. ஒவ்வொரு சிற்பமும் எவ்வளவு கலை நயத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பிரம்மாண்டமான கோயிலை யார் கட்டினார்கள்?" என்று வியப்புடன் புருவங்களை உயர்த்தியபடி கேட்டார் கால்டுவெல்.

"அருண் மொழி வர்மன் என்னும் இயற்பெயர் கொண்ட இராஜராஜ சோழன் என்ற சோழ மன்னன், சிவன் என்னும் தெய்வத்திற்காக கட்டினான். அவன் வீராதி வீரனாயிருந்து, இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாயிருந்தான்" என்றார் சாத்திரியார்.

அப்படியா.... அம்மன்னனின் காலத்தில் கை தேர்ந்த சிற்பாசாரிகளும், ஓவியர்களும் இருந்திருக்க வேண்டும். பாருங்கள், இந்த சுவரில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் நம்மோடு நேருக்கு நேர் பேசுவதுபோல எவ்வளவு உயிரோட்டமுள்ள சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. தூண்களில்தான் எத்தனை அழகு வடிவங்கள், ஒவ்வொரு சிற்பத்திலும் எவ்வளவு நளினம்! அற்புதம்! அற்புதம்!!" என்று வியந்து புகழ்ந்தார், கால்டுவெல்.

"இந்த கோவிலைக் கட்டி சுமார் 800 ஆண்டுகளாகிவிட்டன. பழமையான இக்கோவிலின் சிறப்பம்சம் யாதெனில், இந்தக் கோபுரத்தின் நிழல் கீழே விழாது என்பதுதான். இதைக் கட்ட ஒரு லட்சம் டன் எடையுள்ள கற்பாறைகள் செலவாகியிருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்," என்று மேலும் பல தகவல்களைக் கொடுத்தார் சாத்திரியார்.

"என்னது, 800 ஆண்டுகள் பழமையானதா?" என்று ஆச்சரியத்தோடு வினவிய கால்டுவெல், "இதைக் கட்ட எத்தனை ஆயிரம் பேர் பாடுபட்டார்களோ?" என்று அடுத்த கேள்வியை எழுப்பினார்.

"மனிதர்களை மட்டுமல்ல, யானைகளையும் பயன்படுத்தினார்களாம். கோயிலுக்கு ஆறு கல் தூரத்திலிருந்து கோபுரத்தின் உயரத்திற்கு ஏற்றாற்போல் சாய்தளங்களை அமைத்து, அதன்மேல் யானைகளைக் கொண்டு கற்பாறைகளை நகர்த்திச் சென்று கோபுரங்களை அமைத்தாகச் சொல்லுகிறார்கள். இந்தக் கோயில் திராவிடர்களின் கட்டிடக் கலைக்கு ஒரு உன்னதமான சான்று. தென்னிந்திய கோயில்களெல்லாம் இதே கலை நுட்பத்துடன்தான் கட்டப்பட்டுள்ளன" என்று கூறி முடித்தார் சாத்திரியார்.

இவையெல்லாவற்றையும் ஆர்வமுடன் கேட்ட கால்டுவெல் ஒரு நொடிப் பொழுது சிந்தித்தபின் ஐயா, இந்த இராசராச சோழ மன்னனுக்கு கிறிஸ்துவின் நற்செய்தி கூறப்பட்டு அவன் இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும். அவன் இதே இடத்தில் நமது வேதாகமத்தின் பழைய ஏற்பாடு சரித்திரத்தையும், இயேசுவின் பிறப்பு, அவர் செய்த அற்புத அடையாளங்கள், அவரது பாடு, மரணம், உயிர்த்தெழுதல் எல்லாவற்றையும் எவ்வளவு அழகாய் கல்லிலே சமைத்து இதை ஒரு "நற்செய்தி ஆலயமாக கட்டியிருப்பான்" என்றுகூறி பெருமூச்செறிந்தார்.

அவரது ஆத்தும பாரத்தின் ஆழத்தைக் கண்டு வியந்தார் வேதநாயகம் சாத்திரியார். பின்னர் இருவரும் ராஜவீதி வழியாக அவரது இல்லத்தை அடைந்தனர். இரவுப்பொழுதிலே, அம்மையார் இருவருக்கும் சுடச்சுட உணவு பறிமாறினார்கள்.

தஞ்சாவூர் உணவை ரசித்து ருசித்த பின்னர், கால்டுவெல் அந்த ஊர் மக்களைப் பற்றி விசாரித்தார். தஞ்சாவூர் காவிரி ஆற்றின் செழிப்பான வண்டல் மண் படிவதால், தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமாய் விளங்குகிறது எனவும், அங்கு அந்தணர்கள் கல்வியறிவு பெற்று இறைவழிபாடு செய்யும் உயர்குலத்தினராகவும், நெல் பயிரிடும் விவசாயிகள் ஒடுக்கப்பட்டோராயும், தாழ்த்தப்பட்டோராயும், கல்வியறிவற்றவர்களாயும், அவர்களில் பலர் கொத்தடிமைகளாய் வேலை செய்து வருகிறார்கள் என்பதையும் வேதநாயகம் சாத்திரிகள் கூற, தெரிந்து கொண்டார் கால்டுவெல்.

இரவில் நன்றாக தூங்கி அதிகாலையில் விழித்த கால்டுவெல், ஒடுக்கப்பட்ட மக்களைத் தேடி வயல்வெளிக்குச் சென்றார். அங்கு நாற்று நடும் பெண்களிடமும், உழவு செய்யும் ஆண்களிடமும் பேசிப் பழக ஆரம்பித்தார். பின்னர் வயல்வெளியை ஒட்டியுள்ள கிராமங்களுக்குச் சென்று, நமது பாவங்களுக்காக தன் உயிரையே ஈந்த அன்பான இயேசுவே மெய்யான தெய்வம் என்றும், அவரை ஏற்றுக்கொண்டால் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளலாம் என்று நற்செய்தி கூறி அறிவித்ததோடு, மனுஷர் கைவேலையான விக்கிரகத்தை வழிபடவேண்டாம் என்றும் வேண்டிக்கேட்டுக்கொண்டார்.

சில காலம் தஞ்சாவூரில் தங்கிய கால்டுவெல், வேதநாயகம் சாத்திரியாரிடமிருந்து பனை ஓலைச் சுவடிகளை வாசித்து, தமிழின் தொன்மையையும் அறிந்து, விருப்பத்தோடு பல தமிழ் இலக்கியங்களைக் கற்றார். ஒருநாள் சாத்திரியாரிடம் தன்னுடைய பணித்தளமாகிய இடையன்குடிக்கு போகும் வழியைக் கூறுமாறு கேட்டார், கால்டுவெல்.

“இங்கிருந்து திருச்சி, மதுரை வழியாக திருநெல்வேலி சென்று அங்கிருந்து இடையன்குடி செல்லவேண்டும். கோயம்புத்தூர் அருகில் மலை வாசஸ்தலமான உதகமண்டலம் உள்ளதால், அங்கு சென்று இயற்கை அழகை அள்ளிப் பருகுவதோடு உங்கள் சொந்த நாட்டின் குளிர்ச்சியையும் அங்கே அநுபவித்துச் செல்லலாம்” என்றார் சாத்திரியார்.

“இந்த ஊர் மக்கள் விக்கிரக வணக்கம் செய்பவர்களாய் உள்ளார்கள். நீங்கள் சொன்ன மற்ற ஊர்களில் உள்ள மக்கள் எப்படிப்பட்டவர்கள்?” என வினவினார் கால்டுவெல். “கால்டுவெல்,

திருச்சியில் ரெங்கநாத சுவாமி கோயில், மலைக்கோட்டையில் உச்சி பிள்ளையார் கோயில், கோயம்புத்தூரில் பட்டீஸ்வரன் கோயில், மருதமலையில் முருகன் கோயில், மதுரையில் மீனாட்சி அம்மன் கோயில், திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் – இப்படி ஊருக்கு ஊர் ஒவ்வொரு சாமி இருக்கும். அவற்றிற்கும் இதே மாதிரி கோயில்கள் இருக்கும்" என்று சொல்லிக்கொண்டே போனார் சாத்திரியார்.

அவரை இடைமறித்த கால்டுவெல் "என்னது, ஊருக்கு ஊர் வேறு வேறு சாமிகளா? அப்படியானால், எத்தனை சாமிகளைத் தான் இவர்கள் கும்பிடுவார்கள்?" என ஏக்கத்துடன் கேட்டார்.

"இங்கு, ஊருக்கு ஒரு சாமி, கிராமத்துக்கு ஒரு சாமி, குலத்துக்கு ஒரு சாமி என்று கணக்கற்ற சாமிகளை கும்பிடுவார்கள். அது குறித்து கேட்டால், எங்களுக்கு முப்பத்து முக்கோடி தெய்வங்கள் உண்டு என்று சந்தோஷமாகச் சொல்லுவார்கள், இந்த அறியாத ஜனங்கள்" என்றார் சாத்திரியார்.

"அது சரி... தஞ்சாவூரில் இருக்கும் உங்களுக்கு மற்ற ஊர்களைப் பற்றி எப்படி தெரிய வந்தது?" என்று கேட்டார் கால்டுவெல்.

"எனது பூர்வீகமே திருநெல்வேலி தான். அங்கு சிறுவயதில் ஒரு மிஷனெரி பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது கிளாரிந்தா என்ற அம்மையார் என்னைத் தேர்ந்தெடுத்து இங்குள்ள சுவார்ட்சு ஐயரிடம் அனுப்பி படிக்க வைத்தார்கள். அவரிடம் கற்று, என் தமிழறிவை வளர்த்துக்கொண்டேன். எனது புலமையைக் கேள்வியுற்ற இந்த அரசரும் என்னை அரசவைப் புலவராக்கி விட்டார். அரசரின் வேலையாக நான் அவ்வப்போது பல ஊர்களுக்கு சென்று வருவதால், தமிழ்நாட்டு ஊர்களைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும்" என்றார் சாத்திரியார்.

"அப்படியானால், நான் செல்ல வேண்டிய இடையன்குடி ஊரைப் பற்றியும் சொல்லுங்களேன்" என்றார் ஆவலாக.

"இடையன்குடி, இந்த தஞ்சாவூரைப் போல செழிப்பான இடம் அல்ல. அது ஒரு வனாந்தமரமான இடம். விளைச்சல் ஏதுமிருக்காது. பனைமரங்கள் தான் இருக்கும். ஒரே தேரிக்காடு. வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். படிப்பறிவில்லாத ஜனங்கள். பனைமரத்திலிருந்து

பதநீர் இறக்கி, அதைக் காய்ச்சி, கருப்புக்கட்டி செய்யும் ஒரே தொழில்தான் அவர்களுக்குத் தெரியும். நீ அங்குபோய் வேலை செய்வது கஷ்டமான காரியம் என நான் நினைக்கிறேன்" என்று கூறக்கேட்ட கால்டுவெல்லின் முகத்தில் சோகம் படர்ந்து.

மறுநாள் காலையில் தனது பெட்டி படுக்கைகளுடன் புறப்படத் தயாரானார் கால்டுவெல்.

"கால்டுவெல், ஏன் கவலையாய் இருக்கிறாய், உங்க அம்மா அப்பாவை நினைத்து விட்டாயா?" என்று காலை உணவை பரிமாறிக் கொண்டே கேட்டார் வரோதயம் அம்மையார்.

"எங்க, அப்பா வில்லியம், அம்மா இசபெல்லா, என் சகோதர சகோதரிகள், என் நண்பர்கள், அயர்லாந்தில் நான் பிறந்த பெல்ஃபாஸ்ட் கிராமம், நான் படித்த ஸ்காட்லேண்டு நாட்டின் கிளாஸ்கோ பட்டணம் எல்லாவற்றையும் தினம் தினம் நினைத்துக்கொண்டேதான் இருக்கிறேன். குறிப்பாக, என் அம்மா, என்னை வழியனுப்பும்போது, உன்னைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி ஊழியத்துக்கென்று அனுப்பவும் சம்மதித்தேன். ஆனால் நீ கண்காணாத இந்திய தேசத்துக்கு போகிறேன் என்று சொல்லுகிறாய். உன்னை நான் மறுபடியும் பார்ப்பேன் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை என்று சொல்லி அழுதது என் கண் முன்னாலேயே நிற்கிறது என்று சொல்லும் போதே கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

"இப்படியெல்லாம் தியாகம் செய்து வந்த நீ கவலைப்படலாமா?" என்றார் அருகில் நின்ற சாத்திரியார். இருப்பினும் அவரது கண்களிலும் ஈரம் கசிந்தது.

"என்னுடைய கவலை அவர்கள் மேல் இல்லை, அய்யா. அவர்களையெல்லாம் நான் ஒருநாள் நித்தியத்திலே முகமுகமாய்ப் பார்ப்பேன் என்ற விசுவாசம் எனக்கு இருக்கிறது. ஆனால் இந்த தமிழ்நாட்டு மக்கள் இயேசுவை அறியாமல் எரி நரகத்தில் விழுகிறார்களே என்ற எண்ணம்தான் என்னை மிகவும் வாட்டுகிறது. என்னை வழி அனுப்புங்கள், அய்யா" என்றார் கால்டுவெல். "அப்படியே செய்கிறேன். நீ புறப்படுவதற்கு நானும் ஏற்கனவே அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்திருக்கிறேன். நீ பல்லக்கில் செல்வதற்கு,

பல்லக்கு தூக்கிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றார் சாத்திரியார்.

"என்னது, பல்லக்கா? பல்லக்கில் ஏறும் அளவுக்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. நான் இயேசுவை சுமக்கும் ஒரு கழுதையாகத்தான் வந்திருக்கிறேன்" என்றார் தாழ்மையாக. "சரி பல்லக்கு வேண்டாம் என்றால், இரண்டு குதிரை வீரர்களை அனுப்புகிறேன். அதையாவது மறுக்காதே, கால்டுவெல்" என்று கெஞ்சினார்.

"ஐயா, உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இருந்தாலும் நான் என் பணித்தளமான இடையன்குடி வரைக்கும் நடந்தே சென்று, தமிழரோடு தமிழனாக ஐக்கியமாகி, என் நடை பயணத்தை முடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கும் என்னுடைய ஆவலையும் விருப்பத்தையும் தயவுசெய்து உங்கள் அன்பினால் தடை செய்ய வேண்டாம்" என்று பணிவோடு கூறினார் கால்டுவெல்"

வேதநாயகம் சாத்திரியாரும், அவரது மனைவியாரும், ஜெபித்து அவரை வழியனுப்ப, கால்டுவெல் அங்கிருந்து நடந்து வந்து திருச்சிராப்பள்ளியை அடைந்தார். பின்னர் கொள்ளிடம் வழியாக திருவரங்கம் சென்றார். அங்கிருந்து உதகமண்டலம் சென்று, ஸ்பென்சர் ஆயருடன் ஒரு மாதம் தங்கி, இயற்கை அழகை ரசித்து, அம்மலை நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளை தெரிந்து கொண்டார். பின்னர் கோயம்புத்தூர் வழியாகச் சங்கத் தமிழ் வளர்த்த மதுரையை அடைந்தார். அங்கிருந்து திருநெல்வேலிக்கு புறப்பட்டு, பாளையங்கோட்டையை அடைந்து, இறுதியாக இடையன்குடி அடைந்தார்.

மதராசு பட்டணத்திலிருந்து இடையன்குடி வரையிலான தூரத்தையும் நடந்தே வந்த கால்டுவெல் பல இன்னல்களைச் சந்தித்தார். அவர் தன்னந்தனியனாய், ஊருக்கு அப்பால், மணலில் படுத்து உறங்கிய நாட்கள் பல. பசியோடும், தாகத்தோடும் தள்ளாடி நடந்த நாட்கள் பல. கொளுத்தும் வெயிலின் தாக்கத்தால் சுருண்டு விழுந்த நாட்கள் பல. கன மழையின்போது மரத்தடியில் நனைந்து, விரைத்து நின்ற நாட்கள் பல. அந்நாட்களில் அவர் சந்தித்த இன்னல்களும், தமிழ்நாட்டு

மக்களிடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட பட்டறிவும், இடையன்குடியில் பணியாற்றியபோது அவருக்கு பெரிதும் உதவின.

இடையன்குடியில் மட்டுமல்லாது, சாயர்புரம், நாசரேத், தூத்துக்குடி ஆகிய ஊர்களிலும், அதைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் பல கிளை சபைகளை உருவாக்கினார். தம்மிடம் கல்வி பயின்ற மாணவர்களில் 35 பேருக்கு இறையியல் பாடங்களை நடத்தி, அவர்களை உபதேசியார்களாக்கி, கிளை சபைகளிலுள்ள மக்கள் விசுவாசத்தில் வளரும்படி அவர்களை பணியமர்த்தினார். 50 வருடங்களுக்கும் மேலாக அங்கேயே தங்கி ஆத்தும ஆதாயப் பணியில் ஈடுபட்டார்.

"எந்த மக்களுக்காக நான் வாழ்ந்தேனோ, அவர்கள் மத்தியிலேயே இறக்க விரும்புகிறேன்" என்று விரும்பிய கால்டுவெல்லின் ஆசையின்படியே அவர் இறந்தபின், அவரது சரீரம் இடையன்குடியில் அவர் கட்டிய ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. தமிழ்மொழிக்கு அவர் ஆற்றிய பணிகளைப் போற்றும் வண்ணமாக 80 ஆண்டுகள் கழித்து, சென்னை மெரினா கடற்கரையில் அந்தத் தமிழ் மாணவனுக்கு சிலை அமைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு கி.பி.2010–ல் அன்னாரின் நினைவாக அஞ்சல் தலை ஒன்றை வெளியிட்டும், கி.பி.2011–ல் அவர் வாழ்ந்து மறைந்த இல்லத்தை புதுப்பித்து நினைவு இல்லமாக மாற்றியும், அங்கு அவரின் மார்பளவு வெண்கலச் சிலை ஒன்றையும் நிறுவி, அவரை கௌரவித்துள்ளது.

ஒரு ஆயிரத்திற்கும் குறைவாயிருந்த தென்தமிழ் கிறிஸ்தவர்களை தமது அர்ப்பணிப்பு வாழ்க்கையால் ஒரு இலட்சமாக மாற்றிக் காட்டிய கால்டுவெல்லின் முன்மாதிரி வாழ்க்கையை நாமும் பின்பற்றுவோம். இந்தியர் அனைவரும் இயேசுவை அறிந்து கொள்ள இன்றே நம்மை அர்ப்பணிப்போம்.

.....................

## பேரவை வெளியீடுகள் :

| | | |
|---|---|---|
| 1. | தமிழும் கிறித்தவமும் | ரூ. 75/- |
| 2. | நற்செய்திப் பாவலர்கள் | ரூ. 10/- |
| 3. | கிறித்தவ எழுத்தாளர்கள் 20 பேர் அறிமுகம் | ரூ. 10/- |
| 4. | பிழையின்றித் தமிழ் பேச, எழுத | ரூ. 5/- |
| 5. | தமிழ் மொழி அடிப்படை இலக்கணம் | ரூ. 10/- |
| 6. | தமிழ் வளர்ச்சியில் கிறித்தவச் சான்றோர் | ரூ. 75/- |
| 7. | அருள் தொண்டர் திருப்பணி - தொகுதி - 1 | ரூ. 60/- |
| 8. | அருள் தொண்டர் திருப்பணி - தொகுதி - 2 | ரூ. 60/- |
| 9. | நீல விழிகளில் | ரூ. 65/- |
| 10. | கீர்த்தனை முத்துக்கள் | ரூ. 15/- |
| 11. | தமிழ்க் கிறித்தவ இலக்கிய வகைகள் (மரபிலக்கியம்) | ரூ. 120/- |
| 12. | தமிழ்க் கிறித்தவ இலக்கிய வகைகள் (புத்திலக்கியம்) | ரூ. 120/- |
| 13. | வாழும் தமிழ்க் கிறித்தவ இலக்கியத் தொண்டர்கள் | ரூ. 60/- |
| 14. | சாஸ்திரக்கும்மி உரை | ரூ. 120/- |
| 15. | இரட்சணிய யாத்திரிகச் செய்தி | ரூ. 50/- |
| 16. | தமிழும் கிறித்தவமும் (இரண்டாம் பதிப்பு) | ரூ. 75/- |
| 17. | அருள்தொண்டர் திருப்பணி தொகுதி-1 (இரண்டாம் பதிப்பு) | ரூ. 75/- |
| 18. | விடுதலைப் பயணம் குறுந்தகடு | ரூ, 75/- |

தொடர்பிற்கு :

கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை

தென்னிந்தியத் திருச்சபை - சென்னைப் பேராயம்

226, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086.